இருக்கின்றன. *1984-85*ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.*2.5* இலட்சம் ஒதுக்கப்பட்டது. மாவட்ட டூரிஸ்ட் மையத்திற்கு. அதற்குப் பிறகு ரூபாய் ஒதுக்கவில்லை. இந்த ரூபாய் முள் வெட்டகூட பத்தாது. அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து போகிறார்கள். அரசு முத்திரைச் சின்னமான கோபுரத்தை உடைய ஸ்ரீ ஆண்டாள் கோவில் அங்கே இருக்கிறது. அங்கே வந்துவிட்டு, நேரே டேமுக்குத்தான் போகிறார்கள். ஆகவே, இந்த மாவட்டச் சுற்றுலா மையத்தை மாநிலச் சுற்றுலா மையமாக்குவதற்கும், கலை அழகுள்ள சிற்பங்களை அதிகமாக வைப்பதற்கும், பூந்தோட்டம், ஓட்டல் இன்னும் தங்கும் விடுதி அமைப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க தமிழக அரசு சிபாரிசு செய்து, மத்திய அரசிடமிருந்து நிதியை வாங்கி, தமிழக அரசும் மத்திய அரசும் அதிகமாக ரூபாய் ஒதுக்கீடு செய்து, இதை மேம்படுத்த அரசு திட்டம் வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், நமது அன்னை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றபின்புதான் இப்படிப்பட்ட மாவட்ட உலா ஸ்தலங்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலமும், மாவட்ட போக்குவரத்துக்கழகம் மூலமும், சுற்றுலாத்துறை *2* இலட்சம் கொடுத்து, அந்த அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கிறது. எனவே *1984-85*ஆம் ஆண்டு அங்கே *2* இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்து கொடுத்திருக்கிறார். இங்கே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் அதை மாநிலச் சுற்றுலா மையமாக அறிவிக்க முடியுமா என்று கேட்டார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணையைப் பொறுத்தவரையில் வார விடுமுறை நாட்களில்தான் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். எனவே, அங்கே வருகிற சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கோடு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் கடந்த காலத்திலே ஒதுக்கப்பட்ட சுற்றுலாத்துறை நிதிக்கும் அதிகமாக இப்போது சிறப்பு நிதியாக *1* லட்சம் ரூபாயை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளை அந்த மாவட்ட நிர்வாகம் மூலம் மேற்கொள்ள சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[*1995* மே *3*

முற்பகல் *11-05*

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சுற்றுலா மையத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு அந்த அணையில் படகுகள் இல்லை. ஏற்கெனவே அந்த இரண்டு அணைகளிலும் விசைப்படகுகள் இருந்தன. இப்போது இல்லை. ஆனால் சுற்றுலாப் பயணிகளிடம் பணம் வசூலிக்கிறார்கள். அந்த வசூலை வைத்தாவது அங்கே பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளலாம். ஒன்றுமே செய்யமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, ஒரு லட்சம் ரூபாய் எப்படிப் போதும்? மத்திய சர்க்காரிடம் கேட்டு மாநில சர்க்கார் அதிக ரூபாயைப் பெற்று அங்கே சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்துகிற அளவில் நீங்கள் செய்யவேண்டும். இப்போது பி.ஆர்.சி. கழகத்தில் சிலவற்றைச் செய்கிறார்கள். ஏ.பி.டி.யும் உதவி செய்கிறார்கள். பொதுப்பணித்துறையிலிருந்து பராமரிக்கிறார்கள். பொதுப்பணித்துறையில் ரோடு சரியில்லை என்று *8* லட்சத்தில் எஸ்டிமேட் போட்டு வைத்திருக்கிறார்கள். கலெக்டரேட் மட்டும் அவர்கள் நிதியை வைத்து செய்கிறார்கள். சுற்றுலாத் துறையிலிருந்து மாநில சர்க்கார் செய்யவேண்டும். அதைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துவக்கவேண்டும். தேக்கடி மாதிரி அந்த இடத்தில் யானைக் கூட்டம், மான் கூட்டம், கரு மந்திக் கூட்டம் எல்லாம் இருக்கின்றன. ஆகவே அங்கே *2* விசைப் படகுகளை விட ஏற்பாடுகளை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளவைக்கல் அணையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே *1984-85*ல் அரசு *2* லட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறது. அங்கே வார விடுமுறை நாட்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தால் சிறப்பு நேர்வாகக் கருதி, சுற்றுலாத்துறை மேலும் *1* லட்ச ரூபாயும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட நிர்வாகம், மற்றும் மாவட்ட போக்குவரத்துக் கழகம் மூலம் ஏனைய வசதிகளுக்காக அதிகப் பணமும் ஒதுக்கப்படுகிறது. எதிர்காலத்தில், அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க துறை நடவடிக்கை எடுக்கும். பிளவைக்கல்லைப் பொறுத்தவரையில் சுற்றுலாத்துறை மூலம் அங்கே படகுக் குழாம் இல்லை. எனவே அதுபோன்ற வாய்ப்பு இருக்குமானால், அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதை எதிர்காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

1995 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 540, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

540—

பனைமரங்களில் ஏறுவதற்கு கருவி வழங்குதல்

38759*—திரு. ஆர்.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைமரங்களில் எளிமையாக ஏறுவதற்கு ஹைடிராலிக் முறையில் இயங்கும் கருவி கண்டுபிடிக்க அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், அக்கருவிகளை மான்ய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பனைமரங்களில் எளிமையாக ஏறுவதற்கு "ஹைட்ராலிக்" முறையிலான முயற்சிகளுக்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. ஆதலால் புதிய மாற்று முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழுக்கும் அப்பால் தற்போது நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் காணும் நம்முடைய இதயதெய்வம் பொற்கால ஆட்சியில் மனித சக்தியை விரயமாக்கிக் கொண்டு, கற்காலத்தில் வாழ்ந்த மனிதனைப் போன்று, கயிற்றின் மூலம் மரம் ஏறுகின்றபோது, உடலில் ஒருவித காய்ப்பு ஏற்பட்டு, கற்கால மனிதன் போன்று தோன்றுகிற அளவுக்கு, அந்தத் தொழிலைச் செய்கின்ற தொழிலாளர்கள் இந்த பழைய முறைப்படி ஏறுகிறபோது பல அவஸ்தைகளுக்கு உள்ளாகிறார்கள். ஒரு நாளைக்கு ஒருவர் 100, 150 மரங்கள் ஏறுகிறபோது, அதன் காரணமாக உடல் நலம் குன்றி வாழ்நாளில் அதிககாலம் வீணாகின்றது. எனவே இந்த அறிவியல் காலத்தில் மரம் ஏறுவதற்கு எளிமையான முறையில், ஹைட்ராலிக் கருவியைக் கண்டுபிடித்து அதன்மூலம் மரம் ஏற அரசு வழிவகை செய்யுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று நலிந்து கொண்டிருக்கிற

1995 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 540, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

540—

பனைமரங்களில் ஏறுவதற்கு கருவி வழங்குதல்

*38759—**திரு. ஆர்.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைமரங்களில் எளிமையாக ஏறுவதற்கு ஹைடிராலிக் முறையில் இயங்கும் கருவி கண்டுபிடிக்க அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், அக்கருவிகளை மான்ய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பனைமரங்களில் எளிமையாக ஏறுவதற்கு "ஹைட்ராலிக்" முறையிலான முயற்சிகளுக்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. ஆதலால் புதிய மாற்று முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழுக்கும் அப்பால் தற்போது நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் காணும் நம்முடைய இதயதெய்வம் பொற்கால ஆட்சியில் மனித சக்தியை விரயமாக்கிக் கொண்டு, கற்காலத்தில் வாழ்ந்த மனிதனைப் போன்று, கயிற்றின் மூலம் மரம் ஏறுகின்றபோது, உடலில் ஒருவித காய்ப்பு ஏற்பட்டு, கற்கால மனிதன் போன்று தோன்றுகிற அளவுக்கு, அந்தத் தொழிலைச் செய்கின்ற தொழிலாளர்கள் இந்த பழைய முறைப்படி ஏறுகிறபோது பல அவஸ்தைகளுக்கு உள்ளாகிறார்கள். ஒரு நாளைக்கு ஒருவர் 100, 150 மரங்கள் ஏறுகிறபோது, அதன் காரணமாக உடல் நலம் குன்றி வாழ்நாளில் அதிககாலம் வீணாகின்றது. எனவே இந்த அறிவியல் காலத்தில் மரம் ஏறுவதற்கு எளிமையான முறையில், ஹைட்ராலிக் கருவியைக் கண்டுபிடித்து அதன்மூலம் மரம் ஏற அரசு வழிவகை செய்யுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று நலிந்து கொண்டிருக்கிற

பனைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்கு, எந்த ஒரு மாநில முதல்வரின் சிந்தனையிலும் உதிக்காத அளவிற்கு ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி ·அவர்களுடைய எண்ணத்திலே உதித்து, இன்றைக்கு பனைத்தொழில் வாரியம் அமைத்து, பனைத் தொழிலில் வளர்ச்சியை செய்யக்கூடிய இந்த நேரத்திலே, இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அண்டை மாநிலமான கேரளாவிலே தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் மிக எளிய முறையில் கையால் இயக்கக்கூடிய ஒரு கருவியை இப்போது அறிமுகம் செய்திருக்கிறார்கள். அந்தக் கருவியின் விலை ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆயிரம் ரூபாய் விலையில் பெற்று ஆயிரம் நபர்களுக்கு முழுவதும் இலவசமாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு, ஹைட்ராலிக் முறையில் மரம் ஏறுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-10*

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த முறையிலாவது இந்தத் தொழிலை எளிமையாக்குவது தான் என்னுடைய கேள்வியின் நோக்கம். ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் அவர்களின் ஆட்சியில் அந்த ஹைட்ராலிக் முறைக்கு பதிலாக வேறு எளிமையான ஒரு கருவியைக் கண்டுபிடித்து, அதையும் இலவசமாகக் கொடுப்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே அந்தத் துறையைக் கையாளுகிற அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, இதய தெய்வம் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

523—

பின்னத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

33529*—செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பனைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்கு, எந்த ஒரு மாநில முதல்வரின் சிந்தனையிலும் உதிக்காத அளவிற்கு ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணத்திலே உதித்து, இன்றைக்கு பனைத்தொழில் வாரியம் அமைத்து, பனைத் தொழிலில் வளர்ச்சியை செய்யக்கூடிய இந்த நேரத்திலே, இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அண்டை மாநிலமான கேரளாவிலே தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் மிக எளிய முறையில் கையால் இயக்கக்கூடிய ஒரு கருவியை இப்போது அறிமுகம் செய்திருக்கிறார்கள். அந்தக் கருவியின் விலை ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆயிரம் ரூபாய் விலையில் பெற்று ஆயிரம் நபர்களுக்கு முழுவதும் இலவசமாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு, ஹைட்ராலிக் முறையில் மரம் ஏறுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-10*

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த முறையிலாவது இந்தத் தொழிலை எளிமையாக்குவது தான் என்னுடைய கேள்வியின் நோக்கம். ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் அவர்களின் ஆட்சியில் அந்த ஹைட்ராலிக் முறைக்கு பதிலாக வேறு எளிமையான ஒரு கருவியைக் கண்டுபிடித்து, அதையும் இலவசமாகக் கொடுப்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே அந்தத் துறையைக் கையாளுகிற அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, இதய தெய்வம் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

523—

பின்னத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

33529*—செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மே 3]

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பின்னத்தூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

529—

வயலூர் ஊராட்சியில் குழந்தைகள் நல மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

25093*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள குழந்தைகள் நல மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றால் அரசு ஆவன செய்யும்.

530—

மணலூர்ப் பேட்டையில் விசைத்தறிக் கூடம் அமைத்தல்

37135*—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மே 3]

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பின்னத்தூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

529—

வயலூர் ஊராட்சியில் குழந்தைகள் நல மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

25093*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள குழந்தைகள் நல மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றால் அரசு ஆவன செய்யும்.

530—

மணலூர்ப் பேட்டையில் விசைத்தறிக் கூடம் அமைத்தல்

37135*—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மே 3]

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பின்னத்தூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

529—

வயலூர் ஊராட்சியில் குழந்தைகள் நல மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

25093*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள குழந்தைகள் நல மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றால் அரசு ஆவன செய்யும்.

530—

மணலூர்ப் பேட்டையில் விசைத்தறிக் கூடம் அமைத்தல்

37135*—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1995 மே 3

முகையூர் தொகுதி, மணலூர்ப்பேட்டையில் விசைத்தறிக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி மணலூர்ப்பேட்டையில் 1984-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதால், அங்கு விசைத்தறிக்கூடம் அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பதினைந்தாம் பட்டியல்)

1—

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் வழங்கப்பட்ட சிறுசேமிப்பு பரிசு விவரம்.

வினா எண் 46860—**திரு ஏ.கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்பு மூலம் 1993-94ம் ஆண்டு வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் வழங்கிய ஊக்கப் பரிசுகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

1993-94 ஆம் ஆண்டு வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான பரிசுகளோடு இணைந்த சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் 1,739 பரிசுகள் வழங்கப்பட்டன.

வரிசை எண். (1)	பரிசுப் பொருள் (2)	எண்ணிக்கை (3)
1.	மாருதி கார்	6
2.	ஸ்கூட்டர்	2
3.	வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி	12
4.	குளிர் சாதனப்பெட்டி	12

முகையூர் தொகுதி, மணலூர்ப்பேட்டையில் விசைத்தறிக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி மணலூர்ப்பேட்டையில் 1984-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதால், அங்கு விசைத்தறிக்கூடம் அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பதினைந்தாம் பட்டியல்)

1—

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் வழங்கப்பட்ட சிறுசேமிப்பு பரிசு விவரம்.

வினா எண் 46860—திரு ஏ.கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்பு மூலம் 1993-94ம் ஆண்டு வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் வழங்கிய ஊக்கப் பரிசுகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

1993-94 ஆம் ஆண்டு வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான பரிசுகளோடு இணைந்த சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் 1,739 பரிசுகள் வழங்கப்பட்டன.

வரிசை எண். (1)	பரிசுப் பொருள் (2)	எண்ணிக்கை (3)
1.	மாருதி கார்	6
2.	ஸ்கூட்டர்	2
3.	வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி	12
4.	குளிர் சாதனப்பெட்டி	12

1995 மே 3]

(1)	(2)	(3)
5.	தங்க நாணயம் (4 கிராம்)	9
6.	தையல் இயந்திரம்	53
7.	கைக் கடிகாரம்	49
8.	அழுத்தச் சமைப்பான் (Presssure Cooker)	71
9.	சுவர் கடிகாரம்	448
10.	இந்திராவிகாஸ் பத்திரம் (ரூ. 100/-)	1077
	மொத்தம் ..	1739

2—

கரூர் வட்டத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்குதல்

வினா எண் *33064*—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், சின்னதாராபுரம் சரகம், கூடலூர் கீழ்பாகம் கிராமம், கரூர்-தாராபுரம் முதன்மைச் சாலையிலுள்ள எம்.ஜி.ஆர். நகரில் குடியிருப்போர்க்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

கரூர் வட்டம், சின்னதாராபுரம் பகுதியைச் சார்ந்த கூடலூர் கீழ்பாகம் கிராமத்தைச் சார்ந்த எம்.ஜி.ஆர். நகரில் குடியிருப்போருக்கு *8-1-1995*-ல் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

3—

ஒத்தமாந்துறையில் வீட்டு மனைப்பட்டா வழங்குதல்

35096—**திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர் வட்டம், கூடலூர் கீழ்பாகம் கிராமம், ஒத்தமாந்துறையில் வசிப்போருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

கரூர் வட்டம், கூடலூர் கீழ்பாகம் கிராமம், மஜீரா ஒத்தமாந்துறை, புல எண் *1868* மற்றும் மேற்படி கிராமம் மஜீரா ரெங்கபாளையம், புல எண் *1857/2* ஆகிய நிலங்கள் ஒப்படை செய்ய தடை செய்யப்பட்ட மந்தை வெளிப் புறம் போக்கு நிலமாக இருப்பதால் மேற்படி நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது.

4—

சேலம் மாவட்டத்தில் விட்டு மனைப்பட்டா வழங்குதல்

வினா எண் *39679*—**திரு. கே. கந்தசாமி** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம், கிழக்கு ராஜபாளையம் நத்தக்காடு, ச.எண். *81*ல் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்.

(அ) மற்றும் *(ஆ)* : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கிழக்கு ராஜபாளையம் நத்தங்காடு புல எண். *81*ல் வீடு கட்டிக் குடியிருந்து வரும் நிலம், தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்காக இருப்பதால், இதில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது..

5—

நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *36737*—**திரு. எஸ். ஆசைமணி** : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1995 மே 3]

குத்தாலம் தொகுதி, குடவாசல் தாலுகா 18-புதுக்குடி கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

1994-95ஆம் நிதியாண்டில் குடவாசல் ஒன்றியம், புதுக்குடி கிராமத்தில் நிரந்தர நேரடி கொள்முதல் நிலையம் கட்ட அரசு முடிவெடுத்திருந்தது. இருப்பினும் அக்கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க தேர்வு செய்த நிலத்தை நிலச் சொந்தக்காரர் குடும்ப பிரச்சினை மற்றும் வழக்கு காரணமாக தற்சமயம் ஒப்படைக்க மறுப்பதால் நிலத்தை கையகப்படுத்த முடியவில்லை. மேலும் மாற்று இடம் இல்லாததால், அதற்குப் பதிலாக திருவிடைமருதூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

6—

மத்திய தொகுப்பிலிருந்து அரிசி வழங்குதல்

வினா எண் 37055—திரு செ.து. வரதராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நடப்பு ஆண்டில் தமிழகத்துக்கு மத்திய தொகுப்பிலிருந்து எவ்வளவு டன் அரிசி வழங்கப்படும் என்ற விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

1994-ம் ஆண்டில் தமிழகத்துக்கு மத்திய தொகுப்பிலிருந்து ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 70,800 டன்கள் அரிசியும், மார்ச் 1994 முதல் மார்ச் 1995 முடிய மாதம் ஒன்றுக்கு 1 இலட்சம் டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் டன்கள் அரிசி வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏப்ரல் 1995-ம் மாதத்திற்கு 1.25 இலட்சம் டன்கள் அரிசியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

7—

டாப் செங்காட்டுப்பட்டியில் மருத்துவர் தங்க நடவடிக்கை

வின்ா எண் 22067—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பச்சமலை டாப்செங்காட்டுப்பட்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் தங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பச்சமலை டாப் செங்காட்டுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் தங்குவதற்கு மின்வசதியுடன் கூடிய குடியிருப்பு வசதி உள்ளது. தற்சமயம் மின் மோட்டார் இல்லாத காரணத்தால் இங்கு தண்ணீர் வசதி போதுமானதாக இல்லாத நிலை உள்ளது. இங்கு மோட்டார் பொருத்துவதற்கு பொதுப்பணித்துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் தண்ணீர் வசதி செய்யப்பட்டு இம்மருத்துவமனையின் குடியிருப்புகளில் மருத்துவர் தங்கி செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் குறைகளை போக்குதல்

வினா எண் 33129--திரு. டி. சாத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையின் கட்டிடங்களின் பல பகுதிகள் பழுதுபட்டும், கட்டிடங்களைச் சுற்றிக் காடுகள் போல் செடிகள் முட்செடிகள் வளர்ந்தும், மின்விளக்குகள் எரியாமல் இருள் சூழ்ந்து இருப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைகளைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1995 மே 3]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இராஜபாளையம் அரசு மருத்துவமனை கட்டிடங்களில் உள்ள பழுதுகள் பொதுப்பணித்துறையினரால் பழுது நீக்கப்பட்டு வருகின்றது. மருத்துவமனை கட்டிடங்களைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள செடிகள் மற்றும் முட்செடிகள் யாவற்றையும் அவ்வப்போது வெட்டி சுத்தமாக வைத்திருக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் அவ்வப்போது இராஜபாளையம் பள்ளி, கல்லூரி மாணவர்களின் தேசிய தொண்டு அணியைக் கொண்டு (NSS) முள்செடிகளை அகற்றி சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவமனையைச் சுற்றி 10 குழாய் விளக்குகள், 2 மெர்குரி விளக்குகள் ரோட்டரி சங்க மகளிர் பிரிவினால் நன்கொடையாக அளிக்கப்பட்டு அவை நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

9—

திருப்பத்தூர் மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 44777—**திரு. ஏ.கே. சி. சுந்தரவேல் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு, அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை மற்றும் இருதய சிகிச்சை பிரிவிற்கு தனிக் கட்டிடம் கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

10—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு தண்ணீர் வசதி

வினா எண் 45687—**திரு. ஏ.கே. சி. சுந்தரவேல் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*1995 மே 3*

வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா அரசு மருத்துவமனைக்கு தண்ணீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூர் தாலுக்கா அரசினர் மருத்துவமனையில் தண்ணீர் வசதி ஏற்படுத்த ஒரு ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு ரூ. 79,200/–க்கான மதிப்பீடு பொதுப்பணித்துறையினரால் தயார் செய்யப்பட்டுள்ளது. வருகின்ற 1995–96 நிதியாண்டில் இத்திட்டத்தை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

11—

இடையாத்தி தாய்சேய் நல விடுதிக்கு மருத்துவர் நியமித்தல்

வினா எண் 47228—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியிலுள்ள தாய்சேய் நல விடுதிக்கு மருத்துவர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்பொழுது நடைமுறையிலிருக்கும் இந்திய அரசின் நெறிமுறைகளின்படி தாய்சேய் நல விடுதிக்கென்று தனி மருத்துவர் நியமிக்க வகை செய்யப்படவில்லை. எனவே, பேராவூரணி ஒன்றியம் இடையாத்தியிலுள்ள தாய் சேய் நலவிடுதிக்கு தனியே ஒரு மருத்துவரை நியமிக்க இயலவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

12—

செங்கம் தொகுதியில் தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் *16705*—டாக்டர் பெ. **வீரபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கம் தொகுதியில், பரமநந்தல் கிராமத்தில் இருந்து மேல்பட்டு வழியாக ஜமுனாமரத்தூர் வரை தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், *1992-93* ஆம் நிதியாண்டில் பணி துவங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

13—

சங்ககிரி தொகுதியில் தரிசு நிலங்களை சீர் செய்தல்

வினா எண் *23351*—டாக்டர் வெ. **சரோஜா :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரி தொகுதி-தேவூர் பேரூராட்சி தேவண்ண கவுண்டனூர் பஞ்சாயத்து, எடப்பாடி ஆகிய பகுதிகளிலுள்ள பல ஹெக்டேர் நிலங்கள் தரிசாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இந்நிலங்களை சமூக நலக்காடுகள் திட்டத்தின் கீழ் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ) சங்ககிரி தொகுதி-தேவூர் பேரூராட்சி தேவண்ணக் கவுண்டனூர் ஊராட்சி, எடப்பாடி ஆகிய பகுதிகளில் சமூகக்காடுகள் ஏற்படுத்த தகுதி வாய்ந்த தரிசுநிலங்கள் ஏதும் உள்ளதாக அறியப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை

14—

வனத்துறை மரங்களை ஊராட்சிகளுக்கு விற்பனை செய்தல்

வினா எண் *38532*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத்துறை வளர்த்துள்ள யூக்கலிப்டஸ் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு குறைந்த விலைக்கு விற்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

வனத்துறையினர் வளர்த்துள்ள யூக்கலிப்டஸ் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு குறைந்த விலையில் விற்க அரசிடம் நடப்பாண்டில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

15—

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கை அவைமுன் வைத்தல்

வினா எண் *19952*—**பி. திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கைகளை அவைமுன் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

1995 மே 3]

ஆம். தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் 1989–90 மற்றும் 1990–91 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை அவைமுன் வைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

16—

ஜோலார்பேட்டை கால்நடை மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றுதல்

வினா எண் 40504—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு** கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் **கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா**—

ஜோலார்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றி, அதனை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஜோலார்பேட்டையில் ஒரு கால்நடை மருந்தகம் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பகுதி–2 திட்டத்தின் கீழ் தகுதியின் அடிப்படையில் கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. பொதுவாக கால்நடை மருந்தகத்தினை கால்நடை மருத்துவமனையாக உயர்த்த வேண்டுமானால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

1. அது வாடகையில்லா அரசு கட்டிடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

2. கால்நடைகளை தங்கவைத்து வைத்தியம் செய்ய, கொட்டகை கட்டிட, போதிய இடவசதி இருத்தல் வேண்டும்.

3. போதிய தண்ணீர் வசதியும் இருத்தல் வேண்டும்.

4. தினசரி வருகை 50க்கு மேல் இருக்க வேண்டும்.

கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்த அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அரசால் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*1995 மே 3*

ஜோலார்பேட்டையில் கால்நடை மருந்தகத்தினை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. மேலும் கால்நடை மருந்தகத்தை வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசமில்லை.

17—

தமிழ்நாட்டிற்குத் தேவையான வெள்ளாடுகள் வாங்குதல்

வினா எண் *44544*—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரப்பிரதேச மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு தேவையான வெள்ளாடுகள் வாங்கப்பட இருக்கிறதா?

(ஆ) வெள்ளாடுகள் நேரடியாக மாநிலத்தின் மூலமாக வாங்கப்படுகிறதா அல்லது தனியார் வழியாக வாங்கப்படுகிறதா?

(இ) வாங்கப்படும் வெள்ளாடுகளின் விலை என்ன?

(ஈ) எதன் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டிற்குத் தேவையான வெள்ளாடுகள் உத்திரப்பிரதேச மாநில கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து நேரடியாக வாங்கப்பட இருக்கிறது. இது குறித்து உத்திரப்பிரதேச மாநில அரசுச் செயலர் அவர்களுக்கு ஜமுனாபாரி இன ஆடுகள் விற்பதற்கு தடையினை தளர்த்தி, தமிழ்நாட்டிற்கு ஜமுனாபாரி இன ஆடுகள் வாங்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

(இ) வெள்ளாடுகள் வாங்கப்படும் சமயங்களில் அந்த மாநிலத்தில் விலை நிர்ணயம் செய்யப்படும்.

(ஈ) வெள்ளாடுகள் விற்பனை விலை நிர்ணயித்தலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலமே தீர்மானிக்கிறது.

1995 மே 3]

18—

கோயம்புத்தூரில் செயற்பொறியாளர் அலுவலகம்

வினா எண் *44828*--**திரு. கே. செல்வராஜ் :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலத்தில் உள்ள வீட்டு வசதி வாரியத் தலைமைச் செயற்பொறியாளர் அலுவலகம் கோயம்புத்தூருக்கு மாற்றப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் மற்றும் சத்தியமங்கலம் முதலிய நகரங்களில் உள்ள மக்களின் வீட்டு வசதி தேவைகளையும், சேலம் இரும்பாலை அமைக்கப்பட்டதால் எழும் வீட்டு வசதித் தேவைகளையும் பூர்த்தி செய்ய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் ஒன்று சேலத்தில் தொடங்கப்பட்டது. கோயம்புத்தூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்காக கோயம்புத்தூர் கோட்டம், கோயம்புத்தூர் சிறப்புக் கோட்டம், கோயம்புத்தூர் (TNUDP) கோட்டம் ஆகிய மூன்று கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், சேலத்தில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தை கோயம்புத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதுவும் இல்லை.

19—

வாழைப்பழங்கள் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி

வினா எண் *46078*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வியாபார ரீதியில் வாழைப்பழங்கள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா?

(ஆ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வாழைப்பழங்கள் வெளிநாடுகளுக்கு கேரளா மாநிலத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

20—

குரிசிலாப்பட்டில் விவசாய கிடங்கு அமைத்தல்

வினா எண் *46847*—திரு ஏ.கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, குரிசிலாப்பட்டில் விவசாய கிடங்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

21—

சிதம்பரனார் மாவட்டத்தில் பால் ஒன்றியம் அமைத்தல்

வினா எண் *36467*—திரு. வி. பி. ஆர். ரமேஷ் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிதம்பரனார் மாவட்டத்திற்கு என தனியாக 'ஆவின்' பால் ஒன்றியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

சிதம்பரனார் மாவட்டத்தில் பால் உற்பத்தி குறைவாக இருப்பதால் சிதம்பரனார் மாவட்டத்திற்கு என தனியாக 'ஆவின்' பால் ஒன்றியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

22—

மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட தனி கவனம்

வினா எண் *38277* --டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

(அ) மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக நடைபெற அரசு தனி கவனம் செலுத்தியுள்ளதா?

(ஆ) என்னென்ன நடவடிக்கைகள் அரசு எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம். ஆண்டு தோறும் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க குறியீடுகள் நிர்ணயம் செய்து அந்த குறியீடுகள் எய்தப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 1184 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் மகளிர்களே நிர்வகிக்கக்கூடிய அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் சிறப்பான முறையில் நடைபெற சங்க உறுப்பினர்களுக்கு தாட்கோ, ஐ.ஆர்.டி.பி. திட்டங்கள் மூலமாக கறவை மாட்டுக் கடன்கள் வழங்கவும் மற்றும் மானியமில்லா கடன்கள் வங்கிகள் மூலம் முன்னுரிமை கொடுத்து வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

23—

சங்கரன்கோவில் அண்ணா கைத்தறி சங்கத்தை விரிவுபடுத்துதல்:

வினா எண் *43585*—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் டி.என். எச். 139 அண்ணா விசைத்தறி சங்கத்தை விரிவுபடுத்த, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

டி.என்.எச். 139 சங்கரன்கோவில் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினை விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு நினைவு மண்டபம் கட்டுதல்.

வினா எண் 44275—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு நினைவு மண்டபம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இல்லை.

25—

உமறுப்புலவர் நினைவு மண்டபம் கட்டுதல்

வினா எண் 45951—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி உமறுப்புலவர் நினைவு மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

1995 மே 3]

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இல்லை.

26—

தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு அதிகாரம் வழங்குதல்

வினா எண் *12125*—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்விக்கு என தனி இயக்ககம், முழு அதிகாரத்துடன் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?"

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசாணை எண் 538, கல்வி, நாள் 21-4-86-ன்படி தொடக்கக் கல்வி இயக்ககம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தவிர, தொடக்கக் கல்வி குறித்த சார்நிலை அலுவல்கள் எல்லாம், தொடக்கக் கல்வி இயக்குநரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

27—

இரண்டு ஆசிரியர் பள்ளிகள்

வினா எண் *12726*--**திரு சி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கெண்டயன் தெருவில் இருக்கும் ஓராசிரியர் பள்ளியை இரண்டு ஆசிரியர் பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஏற்கனவே இப்பள்ளி ஈராசிரியர் பள்ளியாக உயர்த்தப்பட்டுவிட்டது.

[1995 மே 3

28—

வானக்கண்காட்டு ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் *12728*—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வாணக்கண்காட்டில் இருக்கும் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

துவக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு அரசு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. மேற்கண்ட நிபந்தனைகளை ஆலங்குடி தொகுதி, வானக்கண்காட்டில் இருக்கும் துவக்கப் பள்ளி பூர்த்தி செய்தால் முன்னுரிமையின் அடிப்படையில் வரும் கல்வி ஆண்டில் அதனை நிதிநிலைக்கேற்ப நடுநிலைப்பள்ளியாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்க இயலும்.

29—

பரவாக்கரை ஊராட்சி ஒன்றிய பள்ளியில் ஆசிரியர் நியமனம்

வினா எண் *25137*—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், பரவாக்கரை கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர்களை நியமித்திட அரசு ஆவன செய்யுமா?.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

1995 மே 3]

30—

பேராவூரணி தொகுதியில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் *34779*—திரு. ஆர். சிங்காரம் : *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பேராவூரணி தொகுதி, நடுவிக்கோட்டை, களத்தூர், பைங்கால், நாடியம் ஆகிய ஊர்களிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் குருவிக்கரம்பை அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கும் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசாணை எண் 580, கல்வி, நாள் 14-7-1994-ன்படி பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்தின் கீழ் அரசினர் உயர்நிலைப் பள்ளி களத்தூர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, பைங்கால் ஆகிய பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்ட, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாடியம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு சொந்த நிலம் இல்லாத காரணத்தால் இப்பள்ளிக்கு நிலம் பெறுவது குறித்து பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசினர் மேல்நிலைப் பள்ளி, குருவிக்கரம்பை மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளி, நடுவிக்கோட்டை ஆகியவை மாவட்ட விரிவாக்கத் திட்டத்தின கீழ் முறையே ரூ. 1.44 இலட்சம், 2.00 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

31—

கழனிவாசல் நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் *34826*—திரு. ஆர். சிங்காரம் : *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

32—

நயினார் கோயிலில் உதவி கல்வி அலுவலர் அலுவலகம் ஆரம்பித்தல்

வினா எண் 36715—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோயில் ஒன்றியத்தில் உதவி கல்வி அலுவலர் அலுவலகம் ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோயில் ஒன்றியத்தில் உதவி கல்வி அலுவலர் அலுவலகம் ஆரம்பிக்க அரசாணை எண் 1228, நாள் 30-12-1994-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

33—

கல்வி அறிவியலில் பரிசு பெற்றோர் விவரம்

வினா எண் 37811—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் கல்வி அறிவியலில் 1993-94-இல் பரிசு பெற்றோர் எத்தனை பேர்?

(ஆ) இதற்கு அரசு வழங்கிடும் விருதுகள் யாவை?

1995 மே 3]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் 1993-94 ஆம் ஆண்டில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வில் அறிவியலில் முறையே 5 மற்றும் 20 மாணவர்கள் ஆக மொத்தம் 25 மாணவர்கள் பரிசு பெற்றுள்ளனர்.

(ஆ) எஸ். எஸ். எல்.சி. தேர்வினைப் பொறுத்தமட்டில் அறிவியல் பாடத்தில் முதல் நிலை பெற்ற இரண்டு மாணவர்களுக்கு ரூ. 3,000/-மும் இரண்டாவது நிலை பெற்ற ஒரு மாணவருக்கு ரூ. 2,000/- வீதமும் மற்றும் மூன்றாம் நிலை பெற்ற இரண்டு மாணவர்களுக்கு ரூ. 1,000/-மும் வழங்கப்பட்டது. இது போன்றே மேல்நிலைப் பொதுத் தேர்வில் அறிவியல் பாடங்களான (1) இயற்பியல், (2) வேதியல், (3) உயிரியல் (4) தாவரவியல், (5) அடிப்படை அறிவியல் மற்றும் (6) விலங்கியல் ஆகிய பிரிவுகளில் முதல் மூன்று நிலை பெற்ற மாணவர்களுக்கு ரூ. 3,000/- ரூ. 2,000/- மற்றும் ரூ. 1,000/- வீதம் ஒவ்வொரு பாடப்பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டது.

34—

பரமக்குடி நகராட்சியில் நூலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 38013—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகராட்சியில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நூலகக் கட்டிடம் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

[1995 மே 3

35—

சத்திரக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *39075*—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி தொகுதி, சத்திரக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுப்புற சுவர் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆம். அரசாணை எண் *581*, கல்வி, நாள் *14-9-1994*-ன்படி பள்ளியைச் சுற்றி உயிர்வேலி அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

36—

செங்கம் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *39265*—**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

செங்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

37—

கீழ்ப் பெண்ணாத்தூர் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *41389*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கீழ்ப் பெண்ணாத்தூர் ஒன்றியம், வேட்டனூர் கீழ்ப் பெண்ணாத்தூர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

38—

மதுக்கூர் ஒன்றியத்தில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *41543*—**திரு. ஆர். சிங்காரம்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், காசங்காடு மற்றும் ஆலத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் *42598*—**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், வடசேரி, பரவாக்கோட்டை, நன்னிலம், திருமருகல் பேரளத்திலுள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

40—

கீழக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *43528*—**திரு. ஆர். சிங்காரம்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், கீழக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

41—

பெரியகோட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *43546*—**திரு. ஆர். சிங்காரம்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், பெரியகோட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஆம். பெரியகோட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கொண்ட கட்டிடம் கட்ட ரூ. *2,59,000/-* அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் பெற்றோர்-ஆசிரியர்

1995 மே 3]

கழகம் தன் பங்கான ரூ. 1,29,500/-ல் ரூ. 62,500/- செலுத்தியுள்ளது. மீதமுள்ள தொகை முழுவதுமாக செலுத்தப்பட்டபின் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

42—

வாண்டையார் இருப்பு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

வினா எண் 43600—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் வட்டம், வாண்டையார் இருப்பு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

வல்லம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் 43611—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் வட்டம், வல்லத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

44—

கோவை இசைக் கல்லூரி கட்டிட வேலை விவரம்

வினா எண் 44386—**திரு. வி. கே. லட்சுமணன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[1995 மே 3

கோவை ராம் நகரில் அமைய உள்ள இசைக் கல்லூரியில் கட்டிட வேலைகள் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கோவை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்குப் புதிதாகக் கட்டிடம் கட்டுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

45—

பேராவூரணி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைப்பு வழங்குதல்

வினா எண் 3173—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரியநாயகிபுரம் வடக்கு சிவந்தான் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். சிவநாத குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின்னிணைப்பு பெற்று, இத்திட்டம் ஊராட்சி ஒன்றியத்தின் வசம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

46—

ஆதிதிராவிட நெசவாளர்களுக்கு கடனுதவி அளித்தல்

வினா எண் 34210—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--.

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், எலவனூர் கிராம ஆதிதிராவிட நெசவாளர்கள் சொந்தமாக கைத்தறி நெசவுத் தொழில் செய்வதற்கு கடனுதவி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 மே 3]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தில் தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு எந்த தொழில் துவங்கினாலும், ஐந்து லட்சம் வரை மான்ய உதவியுடன் கூடிய கடன் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் இயங்கும் பிரதம மற்றும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ள அனைத்து நெசவாளர்களுக்கும் கைத்தறி (ம) துணிநூல் துறையின் மூலம் அமுல்படுத்தப்படும் அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களிலும் (கீழ்க் குறிப்பிட்டுள்ள திட்டங்களில்) பயன்பெற்று வருகிறார்கள். இதில் ஆதிதிராவிட நெசவாளர்களும் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆதிதிராவிடர் நெசவாளர்களுக்கென தனிப்பட்ட முறையில் 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு நல்லமுறையில் நடந்தும் வருகின்றன.

1. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்.
2. நெசவாளர் வீடு கட்டும் திட்டம்
3. நல்வாழ்வுத் திட்டம் (Health Package scheme)
4. ஓய்வூதியத் திட்டம்.
5. கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச்சாலை
6. செறிவுத்திட்டம் (Project Package Scheme)

க. பரமத்தி பகுதியில் சுமார் 2,000 கைத்தறிகள் உள்ளன. நான்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் சுமார் 1,118 உறுப்பினர்கள் உள்ளனர். இப்பகுதியில் சுமார் 500 ஆதிதிராவிடர் நெசவாளர்கள் உள்ளனர். இந்த நெசவாளர்கள் அருகில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் மூலம் பயன்பெற வாய்ப்புகள் உள்ளது. ஆதிதிராவிட நெசவாளர்கள் சொந்தமாக நெசவுத் தொழில் செய்ய தாட்கோ மற்றும் ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு பயனடையக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

[1995 மே 3

47—

மாராடி ஆரம்பப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 34447—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, மாராடி ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, மாராடி ஆதிதிராவிடர் நல துவக்கப் பள்ளிக்கு இரண்டு அரசு கட்டிடங்கள் உள்ளன. இப்பள்ளியில் மொத்தம் 106 மாணவர்கள் உள்ளதால் தற்போதுள்ள கட்டிடங்களே போதுமானதாக உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

48—

தஞ்சாவூர் மாவட்டத்தில் குடிமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 7012—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--.

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி ஊராட்சி, எழுத்தாணி வயலில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இடத்தில் சுமார் 50 ஆண்டுகாலம் வசித்து வரும் மிகவும் பின்தங்கிய முத்திரையர் இன மக்களுக்கு குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 மே 3]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த எழுத்தாணி வயல் கிராமத்தில், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான நிலங்களில் குடியிருந்து வந்த 74 நபர்கள் குடியிருப்பு மனைப்பட்டா கோரியதின் பேரில், அவர்கள் குடியிருந்துவரும் இடத்திற்கு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர் பட்டா வழங்கி ஆணையிட்டுள்ளார்.

49—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவில்களுக்கு திருப்பணி செய்தல்

வினா எண் *29671*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமயஅறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், திருக்கோளம் அருள்மிகு பிடாரி செல்லியம்மன் கோயில், சொக்கநாதன்பட்டி திருமலையாண்டி வாகவசல் அரங்கநாயகியம்மன் ஆலயம், ஆனக்கோட்டை அன்னதான சத்திரம், புத்தாம்பூர் உலகினைக்காத்த, அய்யனார் கோவில், புதுக்கோட்டை நகர் காமாட்சியம்மன் கோவில், வடவாளம் பிள்ளையார் கோவில், பாக வாசல் கைலாசநாதர் கோவில், பரசுரை நத்தம் பண்ணை சிறுமடை கருப்பர் செம்பாட்டூர் திருவாதினமுடையார் கோவில், சொக்கநாதம் பட்டி அடைக்கலம் காத்தவர், மாரியம்மன் கோவில் ஆகிய கோவில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

[1995 மே 3

50—

தருமபுரி மாவட்டத்தில் மீன்வளர்ப்பு

வினா எண் *39450*—**திரு. கா. பூ. முனுசாமி** : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மீன் வளர்ப்பு முகமையில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஏரிகளில் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) இவற்றை மேலும் விரிவாக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:

(அ) தர்மபுரி மாவட்டத்தில் மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏரிகளின் எண்ணிக்கை 173.

(ஆ) கூடுதலாக குளங்கள்/ஏரிகள் போன்றவை மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமையின் மூலம் ஊராட்சி/பேரூராட்சி ஒன்றியங்களிடம் இருந்து நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்று மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1995 மே 3]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) பாரதப் பிரதமர் உருவ பொம்மை எரிக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் ஒரு (குறுக்கீடு) விசாரணைக் கைதி...

திரு. எஸ். டேனியல்ராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமரின் கொடும்பாவியை எரித்திருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நான் இன்னொரு பிரச்சினையை எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) உங்கள் பிரச்சினையைத் தான் எடுக்க வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன சொல்கிறீர்கள், சொல்லுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே, மாதம் 1-ஆம் தேதி சிதம்பரனார் மாவட்டத்தினுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடைபெற்ற மே தின விழா ஊர்வலத்தினுடைய முடிவில் பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களுடைய கொடும்பாவி அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், சிதம்பரனார் மாவட்டச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுடைய முன்னிலையில் அந்தக் கொடும்பாவி எரிக்கப்பட்டது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்புக் கொடுத்தது, தமிழ்நாடு முழுவதும் எரிக்கிறார்கள் என்று கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் ஒரு இடத்தில் எரித்திருக்கிறார்கள் என்றாவது கொடுத்து இருக்கவேண்டுமே? (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்தது, தமிழ்நாடு முழுவதும் எரித்திருக்கிறார்கள் என்று கொடுத்திருக்கிறீர்கள். நான் விசாரித்த அளவுக்கு அந்த அளவுக்கு இல்லை. அதற்கும் மீறி ...

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் கொடுத்திருப்பது "தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாரதப் பிரதமர் மாண்புமிகு நரசிம்மராவ் அவர்களுடைய கொடும்பாவியைக் கொளுத்துவதால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் குறித்து" என்று கொடுத்திருக்கிறீர்கள். அந்த மாதிரி நடக்கிறதா என்று நான் விசாரித்தேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஒரு இடத்தில் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது ஒரு இடத்தில் நடந்தது என்கிறீர்கள். (குறுக்கீடு) அதுவும்கூட, இதைப்போல கொடும்பாவி எரிக்கிறார்கள் என்றால் காவல் துறையினர் ஆங்காங்கே நடவடிக்கை எடுக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களுடைய கொடும்பாவி எரிக்கப்பட்டதாக எந்தத் தகவலும் அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை. இல்லாததை இருப்பதாகச் சொல்கிறார்கள். நடக்காததை நடந்து கொண்டிருப்பதாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கு ஆளுநரின் கொடும்பாவியும், சுப்பிரமணியன் சுவாமியின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. எங்கெல்லாம் அத்தகைய கொடும்பாவி எரிப்பு நடந்துள்ளதோ அங்கெல்லாம் காவல் துறையினர் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து, சட்டப்படி தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரதமரின் கொடும்பாவி எரிக்கப்பட்டதாக எந்தத் தகவலும் இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. அது தூத்துக்குடி ஆகட்டும் அல்லது தமிழகம் முழுவதிலும் ஆகட்டும், பிரதமரின் கொடும்பாவி எரிக்கப்பட்டதாக எந்தச் செய்தியும் வரவில்லை. பொதுவாக, தீவிரமாக, வேகமாகச் செயல்படுபவர்கள் மீது தான் மக்களுக்கு கோபமும், ஆத்திரமும் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தலைவருடைய கொடும்பாவியை பொதுமக்கள் எரிக்க வேண்டுமென்றால், அந்த அளவுக்கு ஆத்திரத்தை, ஆவேசத்தை, கோபத்தைத் தூண்டுகிற வகையில் அந்தத் தலைவரின் செயல்பாடுகள் அமைய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய கோபம்

1995 மே 3] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தமிழக மக்களுக்கு ஆளுநரின் மீது ஏற்பட்டிருக்கிறது, சுப்பிரமணியன் சுவாமியின் மீதும் ஏற்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிரதமர் என்றால் அவர் யார்? இந்த நாட்டு நடப்புகளை எல்லாம் உன்னிப்பாகக் கவனித்து, தக்க நடவடிக்கையை தக்க சமயத்தில் எடுப்பவர்தான் பிரதமர். ஆனால், இப்போது நாட்டில் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, தமிழக மக்களுக்கு பிரதமர் ஒருவர் இருக்கிறாரா என்ற சந்தேகமே ஏற்பட்டு இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நாட்டிலுள்ள பிற மாநிலங்களைப் பற்றி நான் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழக மக்களுக்கு ஒரு ஆழமான சந்தேகம் ஏற்பட்டு இருக்கிறது. மத்தியிலே ஒரு பிரதமர் இருக்கிறாரா, தமிழ்நாட்டில் நடக்கும் நடப்புகளை எல்லாம் அவர் தெரிந்து கொண்டிருக்கிறாரா, அவர் கவனிக்கிறாரா, இதைப்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கிறாரா என்றால், இன்றைய சூழ்நிலையில் அப்படி யாருமே இல்லை என்றுதான் தமிழக மக்கள் எண்ண வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, செயலற்று இருக்கும் ஒரு பிரதமரைப் பற்றி, தமிழக மக்கள் சிந்திக்கவில்லை. *(குறுக்கீடு)* அவருடைய கொடும்பாவியை எரிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடும்பாவியை எரிக்கவில்லை, எரிக்க வேண்டிய சூழ்நிலை இல்லை என்று சொல்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இதிலே ஏன் இவ்வளவு உறுப்பினர்கள் எழுந்திருக்க வேண்டும்? *(குறுக்கீடுகள்)* இவ்வளவு உறுப்பினர்களுக்கு இதிலே என்ன இருக்கிறது ? *(குறுக்கீடுகள்)* எந்தவிதத்திலேயும் இதைப்பற்றி அவர் கவனிக்கவே இல்லை என்பதைச் சொல்கிறார்கள். அப்படியிருக்கிறபோது, இதிலே ஏன் உங்களுக்கு ஆத்திரம் வருகிறது? *(குறுக்கீடுகள்)* தமிழ்நாட்டில் நடக்கிற நடப்புகளை பிரதமர் என்று ஒருவர் இருந்து உன்னிப்பாகக் கவனிக்கிறாரா என்கிற சந்தேகம் வந்துவிட்டது என்று சொன்னால், இத்தனை பேர்கள் ஏன் எழுந்து இருக்க வேண்டும்? *(குறுக்கீடுகள்)* இத்தனை பேர்கள் இதற்கு ஏன் எழுந்து இருக்கவேண்டும்? *(குறுக்கீடுகள்)* என்ன, சொல்லுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே செயலற்று இருக்கும் பிரதமர் என்று அவர்கள் பாரதத்தினுடைய பிரதமரைப் *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இங்கே ஒரு *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரங்கநாதன், உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* குமாரதாஸ் *(கூச்சல்-குழப்பம்)* குமாரதாஸ் *(கூச்சல்-குழப்பம்)* ரங்கநாதன், குமாரதாஸ் உங்கள் இருப்பிடத்திலேயிருந்து எழுந்து ஏன் போகிறீர்கள்.? *(கூச்சல்-குழப்பம்)* உறுப்பினர் ஆறுமுகம் மைக்கை உடைத்திருக்கிறீர்கள். காவலர்கள் குமாரதாசை அப்புறப்படுத்தவும். *(கூச்சல்-குழப்பம்)* குமாரதாசை அவையிலிருந்து அப்புறப்படுத்தவும். *(கூச்சல்-குழப்பம்)* ஞானசேகரன், உட்காருங்கள். ஞானசேகரன் இது முறையல்ல, *(கூச்சல்-குழப்பம்)* ஞானசேகரனை காவலர்கள் அப்புறப்படுத்தவும். தன் இருக்கையிலேயிருந்து எழுந்து சென்று, உறுப்பினர் திரு ரமேஷைத் தாக்குகிற ஞானசேகரனை அப்புறப்படுத்தவும். *(கூச்சல்-குழப்பம்)* குமாரதாசை அப்புறப்புடுத்தவும். *(கூச்சல்-குழப்பம்)* ரங்கநாதன், இது முறையல்ல.

(உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்)

ரங்கநாதன் மைக்கை உடைத்து கையிலே எடுத்துச் சென்று இருப்பது தவறு. கண்டிக்கத்தக்கது. இத்தகைய ஒரு அசம்பாவிதத்தை உண்டாக்கவேண்டும் என்று வந்திருக்கிறீர்கள். *(கூச்சல்-குழப்பம்)* இங்கேயிருந்து ஓடிச்சென்று, *(கூச்சல்-குழப்பம்)* உங்களுடைய இருக்கை இங்கே இருக்கிறது. நீங்கள் எங்கே சென்றீர்கள்? முறைகேடாக நடக்கிறீர்கள். *(கூச்சல்-குழப்பம்)* மைக்கை உடைத்துச் சென்று இருப்பது கண்டிக்கத்தக்கது. *(கூச்சல்-குழப்பம்)* திண்டிவனம் பன்னீர்செல்வம், அவருடைய மைக்கையும் உடைத்து எடுத்திருக்கிறார். இது கண்டனத்திற்குரியது. திண்டிவனம் பன்னீர்செல்வத்தை அவையிலிருந்து அப்புறப்படுத்த காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். *(கூச்சல்-குழப்பம்)* அவையில் முறைகேடாக நடக்கிற உறுப்பினர்களை நான் அனுமதிக்க முடியாது. *(கூச்சல்-குழப்பம்)*

(உறுப்பினர் திரு.சா. பன்னீர்செல்வம் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

ஞானசேகரன், தன் இருக்கையிலேயிருந்து, நான்காவது பிளாக்கிற்குச் சென்று உறுப்பினர்களைத் தாக்கினால் எப்படி அனுமதிக்க முடியும்? *(குறுக்கீடுகள்)* இங்கேயிருந்து அங்கே இருக்கிற உறுப்பினரைத் தாக்க

ஓடுவது எப்படி நியாயமாகும்? (குறுக்கீடுகள்) ஓடிச் சென்று, அங்கேயிருக்கிற உறுப்பினரைத் தாக்குவது, (குறுக்கீடுகள்) ரமேஷ் என்கிற உறுப்பினரை, தன்னுடைய இருக்கையிலிருந்து அங்கே சென்று அடித்தால் இந்த உறுப்பினர்கள் எப்படி தாங்கிக் கொண்டிருப்பார்கள்? இது முறையல்ல. (குறுக்கீடுகள்) ஞானசேகரன் இருந்த இடம் எங்கே? அவர் எங்கே போய் அடித்தார்? நான் கண்ணாரப் பார்க்கிறபோது, நான்காம் பிளாக்கிற்குள்ளே சென்று, உறுப்பினர்களை அடிப்பதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-20

எப்படியேனும் ஒரு அசம்பாவிதத்தை இந்தப் பேரவையில் தோற்றுவிக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வருகிற உறுப்பினர்களை நான் அனுமதிக்கமுடியாது. (குறுக்கீடு) இதை நான் எப்படி அனுமதிக்கமுடியும்? இங்கே மைக்கைப் பிடுங்கி அங்கே போய் ஒரு உறுப்பினரை அடித்ததால் அவ்வளவு உறுப்பினர்களும் அவரைத் தடுத்தார்கள். தடுத்து அவரைக் காப்பாற்றியிருக்கிறார்கள். 10 உறுப்பினர்கள் கூடி அவர்களுடைய இருக்கையிலே இருந்து ஏன் அங்கே சென்றார்கள்? அவர் இருக்கையிலே இருந்து இன்னொரு பிளாக்கிற்கு ஏன் சென்றார்? இதை நான் அனுமதிக்க முடியாது. இவர்கள், திட்டமிட்டு கேள்வி நேரத்திலே வருவதில்லை. மானியக் கோரிக்கைகளின் போதெல்லாம் வந்து கலந்துகொள்வதில்லை. கேள்வி நேரம் முடிந்தவுடன் 'சீரோ ஹவரில்' வந்து தேவையற்ற பிரச்சினைகளை எழுப்பி உறுப்பினர்களைத் தாக்குவது, அடிப்பது என்பதை நான் அனுமதிக்கமுடியாது. அந்த அளவில் பேரவையில் இத்தகைய முறைகேட்டை எல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

ஆறாம் பிளாக்கிலே இருக்கிற ரங்கநாதனுக்கு நான்காம் பிளாக்கில் என்ன வேலை? அதைப்போல உறுப்பினர்களுடைய மைக்குகளையெல்லாம் உடைத்து நொறுக்கி இருக்கிறவர்களை எப்படி அனுமதிக்கமுடியும்? எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் கேட்டீர்கள், கேட்டதற்கு முதலமைச்சர் பதில் சொன்னார்கள். பதில் சொன்னதற்குப் பிறகு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தேன். அதற்குப் பின்னரும் உங்களுடைய உறுப்பினர்கள் இபபடி முறைகேடாக நடக்கிறார்கள் என்று சொன்னால், எப்படி நான் இதை அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) உங்களுக்கு நான் அனுமதி மறுத்த பிரச்சினையிலேகூட நீங்கள் எழுந்து பேசினீர்கள். துணைத் தலைவர் என்ற முறையில் பேசினீர்கள். அதற்கு முதலமைச்சர் பதில்

சொன்னார்கள். முதலமைச்சர் பதிலுக்குப் பிறகு உங்களையும் பேச அனுமதித்தேன். அதற்குப் பின்னரும் இப்படித் திட்டமிட்டு ஒரு கலவரச் சூழ்நிலையைப் பேரவையில் உண்டாக்க வேண்டுமென்று திட்டமிட்டு வருகிற இத்தகைய கலவரச் சூழ்நிலை உண்டாக்குவதை நான் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஒரு உறுப்பினரிடம் சென்று, இன்னொரு உறுப்பினர் தாக்குவது என்பதை, மைக்கைப் பிடுங்கி அடிப்பது என்பதை இந்தப் பேரவையில் என்றைக்கும் அனுமதிக்க முடியாது. இதே ஞானசேகரன் பலமுறை அந்த பிளாக்கிலே இருக்கிற உறுப்பினர்களைத் தாக்கச் சென்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன. ஆனால் இன்றைக்கு கண்ணுக்கு எதிரே, நான் துணைத் தலைவரைப் பேச அழைத்ததற்குப் பிறகும், தன்னுடைய இருக்கையிலேயிருந்து தாறுமாறாகப் பேசுவது, அதைக் கண்டிக்கிற உறுப்பினர்களைத் தாவிச் சென்று அடிப்பது என்றால் அதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? அடித்த உறுப்பினர்கள் மீது நான் நடவடிக்கை எடுத்துத்தான் தீருவேன். நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது. முறைகேடாக, முறை தவறி, இந்தப் பேரவையினுடைய மாண்பைக் கெடுக்க வேண்டும். இதுபற்றி வெளியிலே தவறான செய்திகளைப் பரப்ப வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்து ஈடுபடுகிற எந்தச் செயலையும் இந்தப் பேரவையில் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஓடிச் சென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. ஆர். ரமேஷ் அவர்களை அடித்ததை, தாக்கியதை நான் கண்ணால் பார்த்தேன். இந்தப் பக்கம் உட்கார்ந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பார்த்தார்கள். அதற்குமேல் சட்டமன்ற உறுப்பினர் திண்டிவனம் பன்னீர்செல்வம் அவர்கள் மைக்கைப் பிடுங்கிக்கொண்டு அந்தப் பக்கமாக ஓடித் தாக்கச் சென்றதை அனைவரும் பார்த்தோம். இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நியாயப்படுத்துகிறார்களா? எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதை நியாயப்படுத்துகிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடைத்துப் போட்டு விட்டுப் போயிருக்கிறார். அவர் இருக்கையில் இருக்கிற மைக்கைத்தான் உடைத்துப் போட்டுவிட்டு போயிருக்கிறார் இங்கிருந்து எடுத்து அங்கே போய் போட்டால் இந்த மைக்கை யார் வந்து உடைத்தது? திண்டிவனம் பன்னீர்செல்வம் மைக்கை யார் சென்று உடைத்தது, அவர்களா வந்து

உடைத்தார்கள்? எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இதற்கு என்ன சொல்கிறார்கள்? ஞானசேகரன் தாக்கியதற்கு என்ன சொல்கிறார்கள்?

திரு. எஸ். டேனியல்ராஜ்: *கடந்த வெள்ளிக்கிழமையன்று இதே சட்டமன்றத்தில் உறுப்பினர் பொன்னம்மாள் அவர்களை நோக்கி உறுப்பினர் கவிநிலவு தர்மராஜ்...(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் என்னுடைய இருக்கைக்கு வந்தார். (குறுக்கீடு) இன்றைக்குத் தாக்கியதற்கு என்ன சொல்கிறீர்கள்? அன்றைக்கு அந்த உறுப்பினர் என்னுடைய இருக்கைக்கு வந்தார். அவரை உடனே திரும்பச் செல்லவேண்டும் என்றேன். அவர் திரும்பச் சென்றுவிட்டார். ஞானசேகரன் இருக்கைக்குச் செல்ல வேண்டும், செல்ல வேண்டும் என்று 10 முறை கேட்டேனே திரும்பினாரா? இல்லை. அவர் தாக்கியதை கண்ணார இத்தனை பேர்கள் பார்த்திருக்கிறார்கள். நான் பார்த்திருக்கிறேன். இங்கே வந்திருக்கிற அத்தனை பத்திரிகையாளர்களும் பார்த்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் இதை நியாயப்படுத்தாதீர்கள். இந்தப் பேரவை, ஜனநாயக ரீதியில் வாதப்பிரதிவாதங்கள் நடக்க வேண்டிய இடம். இங்கே கலவரத்தை உண்டாக்க அனுமதிக்கமுடியாது.*

முற்பகல் 11–25

திரு. எஸ். டேனியல்ராஜ்: *நடவடிக்கை எல்லோர் மீதும் எடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நடவடிக்கை எல்லோர் மீதும் தான் எடுக்கிறேன். எல்லோர்மீதும் எடுக்கிறேன். இப்படி மைக்கை பிடுங்கிக் கொண்டு அடிப்பது என்பது....*

மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் கவிநிலவு அவர்கள் உங்களிடத்திலே சில தகவல்களைச் சொல்ல வந்தபிறகு (குறுக்கீடு) தகவல்களைச் சொல்ல வந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கட்டளைக்கு இணங்க இருப்பிடத்திற்குச் சென்றார் என்பதையும், இன்றைக்கு ஞானசேகரன் அத்து மீறி தாவித்தாவி அடித்ததும், ரங்கநாதன் ஓடி வந்தார், இப்போது அடித்தார் கண்ணால் பார்த்தோம். முறைகேடாகவே நடக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் மைக் உடைக்கப்பட்டது அங்கே இருக்கிறது. இங்குள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் பார்த்தோம். ஆனால் கவிநிலவு அவர்கள் வந்தார்கள், தகவல் சொல்ல. நீங்கள் கட்டளை இட்டீர்கள், திரும்பச் சென்றார்கள். அதற்கும் இதற்கும் எப்படி ஒப்பிடுவது?*

[1995 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கு கவிநிலவு இந்த இடத்திற்கு வந்த பிறகு இருகரமும் கூப்பிக்கொண்டே என்னிடத்தில் சொன்னார் நடவடிக்கை எடுங்கள், நடவடிக்கை எடுங்கள் என்று. இருகரமும் கூப்பிய கைகளை எடுக்கவே இல்லை. அது எப்படி தாக்கியதாக அர்த்தம் ஆகும்? யாராவது கை கூப்பிக்கொண்டே தாக்குவார்களா? இங்கே வந்து என்னிடத்திலே முறையிட்டதை எப்படித் தவறு என்று சொல்ல முடியும்? அதைக் கூட உங்களுடைய இருக்கையிலே இருந்துதான் சொல்ல வேண்டும், உடனடியாகத் திரும்பிச் செல்லுங்கள் என்று நான் அறிவித்தவுடன் போய்விட்டார்கள். இன்றைக்கு ஞானசேகரன் ரமேஷைத் தாக்கியது எப்படி நியாயம் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரைக் கேட்டால் அதற்குப் பதில் சொல்லாமல் ஓடி ஒளிவது ஏன்? ஞானசேகரன், ரமேஷை இன்றைக்குத் தாக்கியது எப்படி நியாயம் ஆகும்?

திரு. எஸ். டேனியல்ராஜ்: தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாக்கியவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். அதேபோல தன்னுடைய மைக்கைப் பிடுங்கிக் கொண்டு ஓடிய திண்டிவனம் பன்னீர்செல்வத்தின் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதேபோலத்தான் அவையை விட்டு வெளியேற்றி வைத்திருக்கிற குமாரதாசும் ஆறுமுகம் மைக்கைப் பிடுங்கிக் கொண்டு அடிக்கச் சென்று ஓடியிருக்கிறார்கள். இவையெல்லாம் திட்டமிட்ட காரியங்கள் இல்லையா? நான் சொல்லுகிற இந்த உறுப்பினர்கள் எல்லாம் தொடர்ந்து பேரவையில் முறைகேடாக நடந்திருக்கிறார்களா இல்லையா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் உடைத்திருக்கிறார். நாங்கள் கண்ணாரப் பார்த்தோம். அதற்கு என்ன நடவடிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுக்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரங்கநாதன் மீதும் நடவடிக்கை எடுக்கத்தான் போகிறேன். (குறுக்கீடு) ரங்கநாதன் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டிதான் வரும் (குறுக்கீடு) நான் கண்ணாரப் பார்த்தது (குறுக்கீடு) மூவரை அவையை விட்டு வெளியேற்றி இருக்கிறேன். (குறுக்கீடு) ரங்கநாதன், இது முறையல்ல (குறுக்கீடு) ரங்கநாதன் பேரவைத் தலைவரையும் உறுப்பினர்களையும் ஒருமையில் பேசுவதை அனுமதிக்க

முடியாது. ஒருமையில் பேசிக் கொண்டே போவதை அனுமதிக்க முடியாது. ரங்கநாதன் அவையை விட்டு வெளியேற வேண்டும். ரங்கநாதன் ஏற்கெனவே மைக்கை உடைத்த குற்றத்திற்காகவும், பேரவைத் தலைவரைப் பார்த்தும் உறுப்பினர்களைப் பார்த்தும் ஒருமையில் பேசிக் கொண்டே இருக்கிற காரணத்தினாலேயும் அவையினை விட்டு அவரை அப்புறப்படுத்த காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

(திரு. ரங்கநாதன் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

திரு. ரங்கநாதன் பேசிய வார்த்தைகளை இங்கே பேரவையிலே சொல்ல முடியாது. இங்கே சொல்ல முடியாத வார்த்தைகளைப் பேசியிருக்கிறார். அன்றைக்கு கைகூப்பி வணங்கியதற்கும் இன்றைக்கு அடித்ததற்கும் எப்படி இணைத்துப் பேசுகிறீர்கள்?

(திருவாளர்கள் போளூர் வரதன், கே. செல்வராஜ், சஞ்சய் ராமசாமி, ஆர். சிங்காரம், அப்பு நடேசன், திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரைத் தவிர மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினர்)

முறைகேட்டினுடைய மொத்த உருவங்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்று காட்டி விட்டார்கள். இன்றைக்கு நடந்த நிலவரத்திற்குப் பிறகு, இந்தியாவிலேயே எந்தப் பகுதியிலேயும் நீங்கள் இனிமேல் ஜனநாயகவாதிகள் என்று பேசிக் கொள்ள முடியாது.

திரு. போளூர் வரதன்: இந்தியாவிலேயே காங்கிரஸ்காரர்களை ஜனநாயகவாதி இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஜனநாயகம் காங்கிரசால்தான் உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு நீங்கள் நடந்து கொண்ட செயலுக்கு எப்படி உங்களை மதிப்பார்கள்? இன்றைக்குச் சட்டமன்றப் பேரவையில் இப்படி நடந்து கொண்டதற்குப் பிறகு உங்களை எப்படி மதிப்பார்கள் நாட்டு மக்கள்? மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த ஒரு மாத காலமாகவே திட்டமிட்டு தினசரி சட்டப் பேரவைக்கு வருவதும், இங்கு கேள்வி நேரத்திலே எந்த உறுப்பினரும் வருவது

இல்லை, கேள்வி நேரம் முடிந்தவுடனே இதே மாதிரி ஒவ்வொரு முறையும் கலகங்களை உண்டாக்கி வெளிநடப்புச் செய்து கொண்டு இருந்தார்கள்; இந்தச் சபையினுடைய நேரத்தை வீணடித்தார்கள். சபையை அவமதித்தார்கள். பேரவைத் தலைவரைக் கைகாட்டி, எதிர்த்துப் பேசி, தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி, கீழ்த்தரமான வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இன்று அவைகளையெல்லாம் மீறி, கட்டுக்கு அடங்காத அளவுக்கு, இங்கு ஒரு ரத்தக்களரியை உருவாக்க வேண்டும், அதன் மூலம் இந்த சட்டப்பேரவை மீது மைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், எதை நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நேற்று சொன்னார்களோ, அதை 4-ஆம் தேதிக்கு முன்பே இன்று நிறைவேற்ற வேண்டும் என்கின்ற சதித் திட்டத்துடன், இன்றைக்கு வந்து நம்முடைய உறுப்பினர்களைத் தாக்கி, அதன்மூலம் நம் உறுப்பினர்கள் அவர்களைத் திருப்பித் தாக்கினால், அதை வைத்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற தீய எண்ணத்தோடு இங்கு வந்திருக்கிறார்கள். வந்ததோடு மட்டும் அல்ல. 3,4 உறுப்பினர்கள் மைக்குகளை உடைத்து இங்கே உறுப்பினர்களைத் தாக்க முயற்சி செய்திருக்கின்றார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கை நீங்கள் எடுக்கின்ற அதே நேரத்திலே கிரிமினல் நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது, இந்திய நாட்டினுடைய மிக உயர்ந்த பதவியில் இருக்கின்ற பிரதமரை..... (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே ஒன்றும் கிடையாது. நீங்கள் கொடுத்த ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையப் பிரச்சினையைப் பேசுவதாக இருந்தால், பேசலாம். அதற்குத்தான் உங்களை முன்னாலே அழைத்தேன். இப்போது உங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவரைக் கேட்டதுபோல் உங்களைக் கேட்கிறேன். அவர்களையெல்லாம் தாக்கியதற்கு யார் பதில் சொல்வது? (கூச்சல்-குழப்பம்) திரு. கே. செல்வராஜ்.

1995 மே 3]

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் உட்காருங்கள். திரு. செல்வராஜ் (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டரா? திரு. தா. வேடியப்பன்.

***திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசும்பொழுது, பிரதமர் அமைதியாக இருக்கிறார் என்று சொன்னால், தமிழகத்திலுள்ள அத்தனை மக்களுடைய ஒட்டுமொத்தமாக தீர்மானம் இயற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்திற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் மதிப்புக் கொடுக்கவில்லை என்றால், மக்களை மதிக்கவில்லை என்ற கருத்தைத்தான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் முன்னால் இருக்கின்ற இந்த மைக்கையும் உடைத்ததோடு மட்டும் அல்லாமல் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து ஒருமையான வார்த்தைகளால் பேசியதும், உங்களைப் பார்த்து, கையை நீட்டிப் பேசியதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் அவையில் சொல்ல முடியாத பல வார்த்தைகளைப் பயன்படுத்தியதையும் நீங்கள் அவை உரிமைப் பிரச்சினையாக அந்தப் பிரச்சினையை எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்த மைக்கை உடைத்ததற்கு நீங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை இன்று வெளியேற்றி இருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு இதுபோல் எந்த உறுப்பினர்களும் நடக்காத இந்த நடவடிக்கையைச் செய்த அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து இந்த அவையிலிருந்து ஒதுக்குவதோடு, அத்தனை பேர் மீதும் உரிமைப் பிரச்சினையாக, கிரிமினல் பிரச்சினையாக நீங்கள் நடவடிக்கை எடுத்து, இந்த அவையினுடைய ஜனநாயகத்தைக் காக்கின்ற நீங்கள், தொடர்ந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அவர் இதை உரிமைப் பிரச்சினையாக எடுக்க வேண்டும் என்கிறார். திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லை. பதில் சொல்ல முடியவில்லை. அதனால்தான், அவர்கள் மீது தப்பு இருக்கின்ற

காரணத்தினால்தான் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். தினந்தோறும் அவர்கள் தப்பு செய்கிறார்கள். வேறு வழியில்லாமல் அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, உங்கள் பிரச்சினைக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இன்னொரு பிரச்சினையை எடுக்க இருக்கிறேன். எனவே, இதை உரிமைப் பிரச்சினையாக எடுப்பது பற்றி என்னுடைய முடிவைப் பின்னர் அறிவிக்கிறேன். உட்காருங்கள்.

(ஆ) ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கைதி மரணமுற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கைதி ஒருவர் மர்மமான முறையில் மரணம் அடைந்தது குறித்த ஒரு பிரச்சினையை திரு. போளூர் வரதன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் இரண்டு உறுப்பினர்கள் *(இருக்கையில் இல்லை)* நேற்றைய தினம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்கள். இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்திருந்தேன். இப்போது அந்தப் பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திரு. போளூர் வரதன்.

முற்பகல் 11–35

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30–4–1995 அன்று மாலை 7.30 மணி அளவிலே ஸ்ரீபெரும்புதூரிலே 36, பெரியதெரு கடம்பத்தூரரைச் சேர்ந்தவர் நடராஜ நாயக்கருடைய குமாரர் தங்கமணி என்பவரை 203 ரூபாய் கொள்ளை அடித்தார் என்பதற்காக காவல் நிலையத்திலே பிடித்துக் கொடுத்ததாகவும் அதன் மீது விசாரணை நடத்துகின்றபோது அன்று இரவே 2 மணிக்கு அவர் தூக்கு போட்டுக்கொண்டதாகவும் இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? பொது மக்கள் மத்தியிலே 2 மணிக்கு அங்கே காவல்துறையைச் சேர்ந்தவர்களால் அவர் அடித்து கொல்லப்பட்டிருக்கிறார் என்று பேசப்படுகிறது. அதுமட்டுமல்ல, அந்த காவல்துறையினுடைய தாழ்வாரங்கள் ஏழு அடி உயரம்தான் இருக்கிறது. ஏழு அடி உயரத்திலே ஒரு மனிதன் தூக்கு போட்டுக் கொள்ள

காரணத்தினால்தான் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். தினந்தோறும் அவர்கள் தப்பு செய்கிறார்கள். வேறு வழியில்லாமல் அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, உங்கள் பிரச்சினைக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இன்னொரு பிரச்சினையை எடுக்க இருக்கிறேன். எனவே, இதை உரிமைப் பிரச்சினையாக எடுப்பது பற்றி என்னுடைய முடிவைப் பின்னர் அறிவிக்கிறேன். உட்காருங்கள்.

(ஆ) ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கைதி மரணமுற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கைதி ஒருவர் மர்மமான முறையில் மரணம் அடைந்தது குறித்த ஒரு பிரச்சினையை திரு. போளூர் வரதன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் இரண்டு உறுப்பினர்கள் (இருக்கையில் இல்லை) நேற்றைய தினம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்கள். இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்திருந்தேன். இப்போது அந்தப் பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திரு. போளூர் வரதன்.

முற்பகல் 11–35

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30–4–1995 அன்று மாலை 7.30 மணி அளவிலே ஸ்ரீபெரும்புதூரிலே 36, பெரியதெரு கடம்பத்தூரைச் சேர்ந்தவர் நடராஜ நாயக்கருடைய குமாரர் தங்கமணி என்பவரை 203 ரூபாய் கொள்ளை அடித்தார் என்பதற்காக காவல் நிலையத்திலே பிடித்துக் கொடுத்ததாகவும் அதன் மீது விசாரணை நடத்துகின்றபோது அன்று இரவே 2 மணிக்கு அவர் தூக்கு போட்டுக்கொண்டதாகவும் இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? பொது மக்கள் மத்தியிலே 2 மணிக்கு அங்கே காவல்துறையைச் சேர்ந்தவர்களால் அவர் அடித்து கொல்லப்பட்டிருக்கிறார் என்று பேசப்படுகிறது. அதுமட்டுமல்ல, அந்த காவல்துறையினுடைய தாழ்வாரங்கள் ஏழு அடி உயரம்தான் இருக்கிறது. ஏழு அடி உயரத்திலே ஒரு மனிதன் தூக்கு போட்டுக் கொள்ள

முடியுமா என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, ஒரு சாதாரண திருடன் செல்லுகின்றபோது தூக்கு போட்டுக்கொள்வதற்கு கயிறையும் கூட எடுத்துச் செல்ல முடியாது. நைலான் கயிறிலே தூக்குப்போட்டுக் கொண்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் நடந்த நிலையைப் பார்க்கின்றபோது அந்த நைலான் கயிறுக்கு மெல்லிசான கயிறுக்கு ஒரு மனிதனை தாங்கக்கூடிய சக்தி இருக்குமா என்பதையும் நீங்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டும் அல்ல. அவர் தூக்கிலே இருந்தார் என்று சொல்லுகிறார்களே தவிர அவர் கீழே இருந்திருக்கிறார். தூக்கிலேயிருந்து கீழே அறுந்து விழப்பட்டிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். 1-ந்தேதி காலை 8 மணிக்குத்தான் அவரைப் பார்த்ததாகவும் அதற்குப் பின்னால் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுகின்ற வழியிலேயே இறந்துவிட்டதாகவும் சொல்கிறார்கள். நான் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வதெல்லாம் ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்திலே அதற்கு முந்தைய நாள் 29-ந்தேதி மாலை எம்.எம். ஜோசப், ஹெட்மாஸ்டர் பஞ்சாயத்து யூனியன் மிடில் ஸ்கூலிலே தண்டலம் என்ற கிராமத்தில் இருக்கின்ற அந்த பள்ளி ஆசிரியர் சம்பளமாக வாங்கிச் சென்ற 23,000 ரூபாயை அதே ஸ்ரீபெரும்புதூரிலே கொள்ளையடித்து இருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து அந்தப் பணத்தை பிடித்துக் கொண்டு போய் காவல்நிலையத்திலே வைத்திருக்கிறார்கள். ஆனால் கொள்ளையடித்தவரை அன்றைக்கு விட்டுவிட்டார்கள். அடுத்த நாள் 203 ரூபாயை கொள்ளையடித்தவரை பிடித்துக்கொண்டுபோய் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். நேற்றையதினம் இங்கே நான் அவையிலே எழுப்புவேன் என்பதை புரிந்து கொண்ட பின்னாலே அந்த 23,000 ரூபாயையும் கொள்ளையடித்தவரையும் பிடித்துக்கொண்டுபோய் வைத்து இருக்கிறார்கள். ரிமாண்டிலே ஒரு காவல் கைதி தூக்கு போடுகிறார் என்று சொன்னால் காவல்நிலையத்திலே சிலர் இருந்திருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னாலும் 23,000 ரூபாயை கொள்ளை அடித்தவர் அந்த ரிமாண்டிலேதான் இருந்ததாகச் சொல்கிறார்கள். நேற்றைய தினம் இருந்திருக்கிறார். அப்படி ஒருவர் இருக்கும்போது வேறு ஒருவர் தூக்கு போடக்கூடிய அவசியம் தேவையற்றது. 203 ரூபாய்க்காக ஒருவர் தூக்கு போடுகின்ற சூழ்நிலை இந்த நாட்டிலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இறந்தவர் குற்றவாளியாகவே இருக்கட்டும், நான் இல்லை என்று சொல்லவில்லை. அவர் குற்றம் செய்திருக்கலாம். குற்றவாளிகளை தண்டிப்பதற்கு நீதிமன்றங்கள்

இருக்கின்றன. காவல் நிலையங்களிலே தூக்கு தண்டனை நிறைவேற்றினால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல. ஸ்ரீபெரும்புதூரிலே பல்வேறு காலகட்டங்களிலே ஸ்ரீபெரும்புதூர் காவல்நிலையத்தைச் சேர்ந்தவர்கள் பல குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று நான் இங்கே பேசுகின்றபோது சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. போளூர் வரதன்: இறந்த அந்த தங்கமணி என்பவர் 2 குழந்தைகளுக்கு தந்தை. இரண்டு குழந்தைகளும் சிறிய குழந்தைகள். ஏழ்மை குடும்பத்தைச் சார்ந்தவர் என்று சொல்கிறார்கள். அவர் காவல்துறையைச் சார்ந்தவர்களால் அடித்து கொல்லப்பட்டது உண்மை என்று பொதுமக்கள் பேசுகிறார்கள். தமிழக அரசும் விரைவாக அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தற்காலிக பணி நீக்கம் செய்திருக்கிறார்களே. அப்படியிருந்தும்கூட பொதுமக்கள் அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கச் சென்றால் யார் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களோ அதே அதிகாரிகள் நேற்றைக்கு அங்கேயிருக்கின்ற பொதுமக்களை விரட்டி அடிக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்திலே ஒரு புகார் கொடுக்கச் சென்றாலும்கூட அந்த புகார் மீது அந்த காவல்துறையைச் சார்ந்தவர்கள் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. வடலூரிலே 100 பேருக்கு மேலே விபத்திலே இறந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த நகைகளை கேட்கச் சென்றவர்களுக்கு அந்த நகைகள் பிணத்தோடு எரிந்துவிட்டது என்று பொய் சொல்லி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு வேறு பிரச்சினைக்கு எல்லாம் போனால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல முடியாது. நீங்கள் இதையெல்லாம் காவல் துறை மானியத்திலே பேச வேண்டும்.

திரு. போளூர் வரதன்: தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள் செய்திருக்கின்ற கடந்தகால நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லாப் பிரச்சினைகளையும் பேச முடியாது. இந்தப் பிரச்சினையில் மட்டும் பேசுங்கள்.

1995 மே 3]

திரு. போளூர் வரதன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நான் சொல்ல வருவது அந்த காவல் நிலையத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்தமாக காவல் துறையைச் சார்ந்தவர்கள் அத்தனை பேரும் சமூக விரோதிகளுக்கு கடந்த காலங்களிலும் சரி, இந்த நாளிலும் சரி உறுதுணையாக இருந்துகொண்டு இப்படிப்பட்ட செயல்களைச் செய்கிறார்கள். இப்படி தேவையற்ற முறையில் ஒரு ரிமாண்டு கைதியை அடித்துக் கொன்று இருக்கிறார்கள். அவர்களை பணி நீக்கம் செய்தால் மட்டும் போதாது. அவர்கள் மீது 302 செக்ஷன்படி அவர்களையும் கைது செய்யவேண்டும். அந்த தங்கமணி குடும்பத்தினுடைய சூழ்நிலையைக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு—2 குழந்தைகளும், தாயும், பெற்றோர்களும் இருக்கிறார்கள்—அந்தக் குடும்பத்திற்கு ஏதேனும் நிதி உதவி தந்து அந்தக் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்று உங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அந்தத் தொகுதி,–அந்த ஊர், சட்டமன்ற உறுப்பினர் சொல்லிவிட்டார், போதும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) அவர் விரிவாகச் சொல்லிவிட்டார், அதற்கு மேல் வேண்டாம். (குறுக்கீடு) இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சின்ன கருத்தைச் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம். உட்காருங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள கடம்பத்தூர் என்ற ஊரைச் சேர்ந்த தங்கமணி என்ற இளைஞர் சிறிய திருட்டுகளில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிகின்றது. 30.4.1995 அன்று மாலை 7.30 மணியளவில் ஸ்ரீபெரும்புதூரைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் செட்டியார் என்பவரின் சட்டைப் பையில் இருந்து 203 ரூபாயை

தங்கமணி திருடியபோது, கையும் களவுமாக பிடிக்கப்பட்டு ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்த குற்ற நிகழ்வு குறித்து, ஒரு புகாரும் ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர், அந்த புகாரின் அடிப்படையில், அக்காவல் நிலைய குற்ற எண் 479/95-இல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379-ன் கீழ் வழக்கு ஒன்றினை தங்கமணி மீது பதிவு செய்து அடுத்த நாளான 1.5.1995 அன்று தங்கமணியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் எண்ணத்துடன் அவரைக் காவல் நிலையத்தில் உள்ள Lock-up--இல் வைத்திருந்ததாகத் தெரிகிறது. அப்போது ஸ்ரீபெரும்புதூர் காவல்நிலைய காவலர்கள், நேரு மற்றும் கண்ணப்பன் ஆகியோர் காவல் நிலைய பாதுகாப்புப் பணியில் இருந்துள்ளனர்.

1.5.1995 அன்று காலை 6.30 மணியளவில் காவலர் கண்ணப்பன் காவல் நிலையத்தில் உள்ள தாழ்வாரத்தில் தங்கமணி ஒரு முனை துண்டிக்கப்பட்ட தூக்குக் கயிறு கழுத்தில் சுற்றிக் கிடந்த நிலையில் தரையில் விழுந்து கிடந்ததைப் பார்த்துள்ளார். உடன் தகவலை காவல் நிலைய ஆய்வாளருக்கு தெரிவித்துள்ளார். ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலைய ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்து கைதி தங்கமணியை உடனடியாக ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார். அங்கு கைதி தங்கமணியை சோதனை செய்த மருத்துவர் அவர் இறந்த விட்டதாகத் தெரிவித்துள்ளார். பின்னர் காவல் துறையினர் குற்ற எண் 481/95-இல், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 174-ன் கீழ், வழக்கு ஒன்றினைப் பதிவு செய்துள்ளனர். அதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவர் சம்பவ இடத்திற்குச் சென்று பிரேத விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

கைதி தங்கமணியை பாதுகாக்க வேண்டிய கடமையிலிருந்து தவறியதோடு, சந்தேகத்திற்குரிய முறையில் தங்கமணி இறந்து கிடந்ததற்கு ஒரு வகையில் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களான, உதவி ஆய்வாளர் திரு. அங்கப்பன், காவலர்கள் நேரு மற்றும் கண்ணப்பன் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மேற்கு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும். செங்கல்பட்டு சரக காவல் துறை துணைத் தலைவரும் ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

1995 மே 3] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

காவல் நிலையத்தில் காவலர்களின் கண்காணிப்பில் இருந்த ஒரு கைதி, சந்தேகமான முறையில் மரணமடைந்து கிடந்ததால், இந்தச் சம்பவம் குறித்து, காவல் நிலையாணை அதாவது Police Standing Order பிரிவு *145*–இன் கீழ் Magisterial விசாரணையை மேற்கொள்ள செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவர் இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை மேற்கொண்டு, தனது இறுதி அறிக்கையை அனுப்பி வைத்த பின்பு அதன் மீது தேவையான மேல் நடவடிக்கையை தமிழக அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வே. தம்புசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த.. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ராஜபாளையத்தில் மே தினம் *1* ஆம் தேதி அன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜபாளையத்தில் முன்னறிவிப்பு நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டு இருப்பதுபற்றிக் கொடுத்து இருக்கிறீர்கள். நேற்றையதினம் இதேபோன்ற பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதே காரணத்திற்காக உங்களுக்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன்.

முற்பகல் *11–45*

திரு. ஜி. பழனிசாமி: யாரை வேண்டுமானாலும் கைது செய்யுங்கள். கைது செய்கிற அதிகாரம் உங்களிடத்தில் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். (கூச்சல்-குழப்பம்) பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்பொழுது-பொதுக் கூட்டத்திலே மே தினப் ,பொதுக் கூட்டத்திலே-பேசிக் கொண்டிருக்கிறேன். அந்தப்

1995 மே 3] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

காவல் நிலையத்தில் காவலர்களின் கண்காணிப்பில் இருந்த ஒரு கைதி, சந்தேகமான முறையில் மரணமடைந்து கிடந்ததால், இந்தச் சம்பவம் குறித்து, காவல் நிலையாணை அதாவது Police Standing Order பிரிவு *145*-இன் கீழ் Magisterial விசாரணையை மேற்கொள்ள செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவர் இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை மேற்கொண்டு, தனது இறுதி அறிக்கையை அனுப்பி வைத்த பின்பு அதன் மீது தேவையான மேல் நடவடிக்கையை தமிழக அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வே. தம்புசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த.. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ராஜபாளையத்தில் மே தினம் *1* ஆம் தேதி அன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜபாளையத்தில் முன்னறிவிப்பு நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டு இருப்பதுபற்றிக் கொடுத்து இருக்கிறீர்கள். நேற்றையதினம் இதேபோன்ற பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதே காரணத்திற்காக உங்களுக்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன்.

முற்பகல் *11–45*

திரு. ஜி. பழனிசாமி: யாரை வேண்டுமானாலும் கைது செய்யுங்கள். கைது செய்கிற அதிகாரம் உங்களிடத்தில் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். (கூச்சல்-குழப்பம்) பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்பொழுது-பொதுக் கூட்டத்திலே மே தினப் ,பொதுக் கூட்டத்திலே-பேசிக் கொண்டிருக்கிறேன். அந்தப்

பொதுக் கூட்டத்திலே வந்து காவல் துறையினர் தான்தோன்றித் தனமாகப் புகுந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி மறுத்த பிரச்சினை. அதற்கு மீறியும் நீங்கள் பேசுகின்றபொழுது (குறுக்கீடு) அந்தப் பொதுக் கூட்டத்திலே இருந்தவர்கள் கைது செய்யப்படவில்லை எனபதற்கு நீங்களே உதாரணம். உங்களை அவர்கள் கைது செய்யவில்லை. அந்தப் பொதுக் கூட்டத்திலே இருந்தவர்களை, தலைவர்களைக் கைது செய்யவில்லை என்பதற்கு நீங்களே எடுத்துக்காட்டு. (குறுக்கீடு) நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். எனவே, அது தவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆங்காங்கே கைது செய்வது என்பது அரசாங்கம் எடுக்கிற ஒரு நடவடிக்கைதான். அது காலம் காலமாக இருந்து வருகிற நடவடிக்கை. (குறுக்கீடு) பொதுக்கூட்டம் நடக்கிறபொழுது கைது செய்யவில்லை எனபதற்கு நீங்களே எடுத்துக்காட்டு. நீங்கள் இங்கே வந்து விட்டீர்கள். ஆகவேதான் நான் அனுமதி மறுத்தேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மே தின வாழ்த்தெல்லாம் தெரிவிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பிரச்சினை அல்ல. முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது இந்த இடத்திலே இருந்துதான் எடுக்க வேண்டுமென்பது அல்ல. அங்கே இருந்தவர்கள் சிலருடைய நடவடிக்கைகூட அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று காவல் துறை சந்தேகித்ததால் அவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யலாம். (குறுக்கீடு) உங்களைக் கைது செய்யவில்லை (குறுக்கீடு) ஆகவேதான் அந்தப் பொதுக்கூட்டத்திலே கைது செய்யவில்லை. பொதுக் கூட்டத்திலே கலந்து கொண்டவர்களைக் கைது செய்யவில்லை என்பதற்கு நீங்கள் எடுத்துக்காட்டு. (குறுக்கீடு) இல்லை. நீங்களே எடுத்துக்காட்டு. ஆகவேதான் நான் அனுமதி மறுத்தேன்.

திரு. ஜி. பழனிசாமி: மே தின விழாவிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னெச்சரிக்கையாக (குறுக்கீடு) கைது செய்வதற்கு அதிகாரம்... (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மே தினப் பொதுக் கூட்டமோ, ஊர்வலமோ

நடைபெறும்போது யாரும் எங்கேயும் தமிழ்நாட்டில் கைது செய்யப்படவில்லை. ஆனால் இந்த மே தினப் பொதுக்கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒரு காரணமாகப் பயன்படுத்தி, பொதுக்கூட்டம் முடிந்த பின்னரும், ஊர்வலம் முடிந்த பின்னரும் அதற்காகத் திரண்டவர்களை ஓரிடத்தில் கூட்டி வைத்து இந்த பந்த் நடைபெறும் போது என்னென்ன வன்முறைகளில் ஈடுபடலாம் என்று அவர்களுக்குச் சிலர் ஆலோசனைகள் வழங்கிக் கொண்டிருந்தபோது இவர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதற்காகத்தான் காவல் துறையினர் ஆங்காங்கே சிலரைக் கைது செய்திருக்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் நேற்றையதினமே இங்கே தெரிவித்த பிரச்சினை. *(குறுக்கீடு)*

திரு. ஜி. பழனிசாமி: இதைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறேன். முதலமைச்சரவர்கள் இப்படிச் சொன்னார்கள் என்றால் என்ன பண்ணுவது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது எடுக்கப்படுவதுதான். மாண்புமிகு அமைச்சர். *(குறுக்கீடு)* காலம் காலமாக எடுக்கும் நடவடிக்கைதான்.

திரு. ஜி. பழனிசாமி: மே தினத்திலே போய் எப்படித் திட்டமிடமுடியும்? மே தினத்திலேயா திட்டம் போடுவார்கள்? இந்த மாதிரியெல்லாம் பண்ணாதீர்கள்.

(திரு. ஜி. பழனிசாமி வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அதைத் தவறாகப் புரிந்துகொண்டு அவர்கள் போகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், இது போல எங்கே திட்டம் இடுகிறார்களோ அவர்களைத்தான் கைது செய்வார்கள் என்று. அவர் நேரடியாகச் சொல்லலாம், எங்கள் கட்சியிலே அப்படி யாரும் திட்டம் இடவில்லை என்று. அவர் இப்பொழுதும்கூடச் சொன்னார், நாங்கள் பஸ்ஸை மறிக்கவில்லை; போய் நாளைக்கு வன்முறையிலே ஈடுபட வேண்டும் என்று முடிவெடுக்கவில்லை; இப்படியெல்லாம் சிந்திக்கவில்லை; அப்படியெல்லாம் ஆலோசிக்கவில்லை என்று சொல்கிறார். எனவே,

நாம் என்ன எதிர்பார்க்கிறோம்? 4-ஆம் தேதி பொதுமக்களுக்காக, அவர்கள் விருப்பம்போல தங்களுடைய அன்றாடப் பணியைச் செய்வதற்குத் தடையில்லாமல் இந்தக் கட்சிகள் இருக்கும் என்று அவர் நம்பிக்கையை இங்கே தெரிவித்து விட்டால் இதிலே பிரச்சினையே இல்லை. எனவே, இப்பொழுது வந்திருக்கிற பிரச்சினையே 4-ஆம் தேதி பந்த் என்ற பெயரிலே போய் பொதுமக்களுக்குத் தேவையில்லாத இடையூறுகளை வன்முறையின் மூலமாக ஏற்படுத்திவிடுவார்கள் என்பதைத் தடுப்பதற்காகவும், பொதுமக்களுக்கு முழுமையான பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகவும்தான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த நடவடிக்கையையெல்லாம் எடுப்பதற்கு உரிய உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அதிலே எங்கள் கட்சிக்குச் சம்பந்தம் இல்லை; நாங்கள் பந்த் அறிவித்திருக்கிறோம்; அதுதான் நியாயம்; அதுதான் தர்மம். ஆனால் 4-ஆம் தேதி யாரும் வீதிக்குப் போய் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் நாங்கள் கொடுக்கப் போவதில்லை என்று எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தலைவர்கள் சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். எனவே, அதை விட்டுவிட்டு இப்படி நடவடிக்கை எடுக்கலாமா, அப்படி நடவடிக்கை எடுக்கலாமா என்று சொன்னால் சரியாக இருக்காது. திரு. பழனிசாமி இருந்து அந்தக் கருத்தைச் சொல்லியிருந்தால் அவர்கள் நியாயமாகச் செய்கிறார்கள் என்று ஏற்றுக் கொண்டிருக்க முடியும். இப்பொழுது திரு. தம்புசாமி கூட இங்கே இருக்கிறார்கள், அவர்கள் சொன்னால்கூட ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, சாதாரணமாக இந்த மாதிரி அரசியல் கட்சிகள் 'பந்த்'-களை அறிவிக்கின்ற நேரத்தில் காவல் துறையினர் 151 செக்ஷனிலே கைது செய்கின்றபொழுது அதில் எல்லோருமே, தான் கைது செய்யப்பட வேண்டுமென்று விரும்புவார்கள். சிறைச்சாலைக்குச் செல்வதன் மூலம் தன்னுடைய கட்சிக்கு ஒரு தியாகத்தைச் செய்ததாக எண்ணுவார்கள். ஆனால், இப்பொழுது எதிர்க்கட்சிகள் எல்லோருமே கைது செய்யக்கூடாது, கூடாது என்று சொல்வதைப் பார்த்தால், கைது செய்யாமல் விட்டு, 4-ஆம் தேதி அவர்கள் கலகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் கைது செய்யக்கூடாது என்று வாதாடுகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

1995 மே 3]

முற்பகல் 11–50

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நாகப்பட்டினம் -காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுக்கச் சென்றபோது, விவசாயிகள் மீது காவல் துறையினர் தாக்கியது குறித்த ஒரு பிரச்சினையை கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பதிலுரையை வாங்கிய பிறகு எடுத்துக் கொள்கிறேன். கொடுத்தது தாமதம், அதனால் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

4. உரிமைப் பிரச்சினை

காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து (பேரவைப் பணிகளினின்றும் அவர்கள் எஞ்சிய கூட்ட நாட்களுக்கு தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல் உள்பட)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு திட்டமிட்டு அவையில் கலகம் செய்ய வேண்டுமென்கிற நோக்கோடு நடந்துகொண்ட உறுப்பினர்களை நான் பேரவையைவிட்டு வெளியேற்றியிருக்கிறேன். அவர்களில், திரு. தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. சா. பன்னீர்செல்வம், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் இன்று இரண்டாவது முறையும் அத்துமீறி நடந்து கொண்டமைக்காகவும், பேரவையின் இதர அலுவல்கள் அத்துணையுயைம் பாதிக்கின்ற அளவுக்கு, குந்தகம் ஏற்படுகிற வகையில் தொடர்ந்து இரண்டாவது முறையும் இன்றைக்கு நடந்த காரணத்தால், அவர்கள் பேரவையின், கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் பேரவைக்கு வரலாகாது என்று அறிவிக்கப்படுகிறார்கள். இதில், திரு. குமாரதாஸ் பிளாக் 4–லே இருக்கக்கூடிய ஆறுமுகம் மைக்கை உடைத்ததும், திண்டிவனம் பன்னீர்செல்வம், ஞானசேகரன், ஆகியோர் தங்களுடைய மைக்குகளை உடைத்ததும், உறுப்பினர் ரமேஷ் மீது தாக்குதல் நடத்தியதும் மற்றும் ரங்கநாதன், உறுப்பினர் கோவை செல்வராஜ் இருக்கையிலேயிருந்த மைக்கை உடைத்ததும்*, இழிவான வார்த்தையை, நாகூசுகிற வார்த்தைகளை இங்கே உச்சரித்தமையும், அவையின் உரிமை மீறிய செயல்களாகப் பார்த்த பார்வையிலேயே, எடுத்த எடுப்பிலேயே தெரிகிற

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

1995 மே 3]

முற்பகல் 11–50

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நாகப்பட்டினம் -காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுக்கச் சென்றபோது, விவசாயிகள் மீது காவல் துறையினர் தாக்கியது குறித்த ஒரு பிரச்சினையை கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பதிலுரையை வாங்கிய பிறகு எடுத்துக் கொள்கிறேன். கொடுத்தது தாமதம், அதனால் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

4. உரிமைப் பிரச்சினை

காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து (பேரவைப் பணிகளினின்றும் அவர்கள் எஞ்சிய கூட்ட நாட்களுக்கு தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல் உள்பட)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு திட்டமிட்டு அவையில் கலகம் செய்ய வேண்டுமென்கிற நோக்கோடு நடந்துகொண்ட உறுப்பினர்களை நான் பேரவையைவிட்டு வெளியேற்றியிருக்கிறேன். அவர்களில், திரு. தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. சா. பன்னீர்செல்வம், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் இன்று இரண்டாவது முறையும் அத்துமீறி நடந்து கொண்டமைக்காகவும், பேரவையின் இதர அலுவல்கள் அத்துணையுமயம் பாதிக்கின்ற அளவுக்கு, குந்தகம் ஏற்படுகிற வகையில் தொடர்ந்து இரண்டாவது முறையும் இன்றைக்கு நடந்த காரணத்தால், அவர்கள் பேரவையின், கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் பேரவைக்கு வரலாகாது என்று அறிவிக்கப்படுகிறார்கள். இதில், திரு. குமாரதாஸ் பிளாக் 4–லே இருக்கக்கூடிய ஆறுமுகம் மைக்கை உடைத்ததும், திண்டிவனம் பன்னீர்செல்வம், ஞானசேகரன், ஆகியோர் தங்களுடைய மைக்குகளை உடைத்ததும், உறுப்பினர் ரமேஷ் மீது தாக்குதல் நடத்தியதும் மற்றும் ரங்கநாதன், உறுப்பினர் கோவை செல்வராஜ் இருக்கையிலேயிருந்த மைக்கை உடைத்ததும்*, இழிவான வார்த்தையை, நாகூசுகிற வார்த்தைகளை இங்கே உச்சரித்தமையும், அவையின் உரிமை மீறிய செயல்களாகப் பார்த்த பார்வையிலேயே, எடுத்த எடுப்பிலேயே தெரிகிற

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

காரணத்தினால், அது அவை உரிமை மீறல் பிரச்சினைதான் என்று மேலெழுந்தவாரியாக உறுதி செய்ய வேண்டிருக்கிற காரணத்தால், அவர்கள் நால்வரையும் பேரவையின் உரிமைக்குழு விசாரித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற அறிக்கையைத் தருமாறு கேட்டு, பேரவையின் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) திருவாரூர் குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம் பழுதடைந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு வே. தம்புசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் நகரத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்றம் பழுதடைந்து இடியும் அபாய நிலையில் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்ட நீதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, திருவாரூரில் தற்பொழுது வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நீதித்துறை நடுவர் மன்றத்தை, திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் ஆகியோருக்கு 17-3-1995 நாளிட்ட தனது கடிதத்தில் ஏற்கெனவே சென்னை உயர்நீதிமன்றம் உரிய ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2. திருவாரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கெனத் தனியாக

காரணத்தினால், அது அவை உரிமை மீறல் பிரச்சினைதான் என்று மேலெழுந்தவாரியாக உறுதி செய்ய வேண்டிருக்கிற காரணத்தால், அவர்கள் நால்வரையும் பேரவையின் உரிமைக்குழு விசாரித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற அறிக்கையைத் தருமாறு கேட்டு, பேரவையின் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) திருவாரூர் குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம் பழுதடைந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு வே. தம்புசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் நகரத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்றம் பழுதடைந்து இடியும் அபாய நிலையில் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்ட நீதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, திருவாரூரில் தற்பொழுது வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நீதித்துறை நடுவர் மன்றத்தை, திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் ஆகியோருக்கு 17-3-1995 நாளிட்ட தனது கடிதத்தில் ஏற்கெனவே சென்னை உயர்நீதிமன்றம் உரிய ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2. திருவாரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கெனத் தனியாக

புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டால் கனிவோடு பரிசீலித்து, நிதி நிலைக்கேற்றவாறு அரசு உரிய முடிவினை மேற்கொள்ளும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் நகரத்தில் இருக்கின்ற நடுவர் நீதிமன்றம் ஒரு தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அந்தத் தனியார் கட்டிடம் இடியும் அபாய நிலையில் உள்ளது. அந்தக் கட்டிடத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்பதுதான் தீர்மானம். ஆனால், விவர அறிக்கையிலே அந்த நடுவர் மன்றம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே இப்போது அறிவித்திருப்பதில் ரங்கநாதன் உடைத்த மைக் என்பது செல்வராஜ் இருக்கையிலே இருந்த மைக்கை என்று மாற்றப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி: திருவாரூரிலே இருக்கின்ற நடுவர் நீதிமன்றத்தை திருவாரூர் நகரத்தில் இருக்கின்ற குற்றவியல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டதாக விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் கிடையாது. திருவாரூர் நகரத்தில் வருவாய்த்துறைக்குச் சொந்தமான பழைய வட்டாட்சியர் அலுவலகம் ஒரு பெரிய இடம். ஏறத்தாழ, 50, 60 வழக்கறிஞர்கள் உட்காரக்கூடிய இடம். பாதுகாப்பான இடம். தனி வளாகம். அதோடு சேர்ந்து சிறைச்சாலையும் இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தில் மாற்றினாலே போதுமானது. ஆனாலும், குற்றவியல் நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதித்த பிறகு கட்டப்படும் என்று அந்த விவர அறிக்கையிலே இருக்கிறது. புதிய கட்டிடம் தேவையில்லை. எந்தச் செலவும் அரசுக்குத் தேவையில்லை. அந்தக் கட்டிடத்தில் மாற்றிக் கொடுத்தாலே சிறப்பாக அந்த நீதிமன்றம் செயல்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. அதை மாற்றுவதற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விரைவிலே நடவடிக்கை எடுத்து, மாற்றிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் ஒரு முடிவெடுத்து தகுந்த இடத்திற்கு மாற்றி இருக்கிறது. மேலும் அந்த வளாகத்திலே அரசுக்குச் சொந்தமான ஒரு இடம் இருக்கிறது என்ற தகவலை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். அந்த கருத்தை உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்து அதன் மீது தொடர் நடவடிக்கை விரைவிலே எடுக்கப்படும்.

[1995 மே 3

(ஆ) வத்திராயிருப்பு ஒன்றியம் அயன்நத்தம்பட்டி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய வங்கி கடன் கொடுக்காததால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவ்னத்திற்கு கொணடு வருவார். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், அயன்நத்தம்பட்டி ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு சிறப்பு மத்திய உதவி திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு கடன் வழங்க மானியம் ரூ. 1,12,400–ஐ மத்திய வங்கிக்கு வழங்கியும், மத்திய வங்கியில் கடன் கொடுக்காததால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

காமராஜர் மாவட்டத்திற்கு 1993–94–ம் ஆண்டில் இந்து ஆதிதிராவிடர்களுக்கு 55 ஆடு அலகுகள் கால்நடை பராமரிப்புத் துறையால் வழங்குவதற்காக, தாட்கோ மூலம் மத்திய சிறப்பு நிதியுதவியிலிருந்து ரூபாய் 2,47,500/– வழங்க அரசு உத்தரவிட்டது. இதில் திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் 34, அயன்நத்தம்பட்டி ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு 12 நபர்களுக்கு ஆடு அலகுகள் நிறுவுவதற்கு தொடக்க விவசாயக் கூட்டுறவு வங்கி மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு காமராஜர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு பணம் (மானியம்) கால்நடை பராமரிப்புத் துறையினரால் செலுத்தப்பட்டது. ஆனால், ஏற்கனவே 1992–93ஆம் ஆண்டில், 34, அயன்நத்தம்பட்டி ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, மத்திய நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஆடு அலகுகள் வழங்கப்பட்ட ஆதி திராவிடர் பயனாளிகள் கடனை சரியாக திருப்பிச் செலுத்தாததால், தற்போது இச்சங்கத்திற்கு மேலும் கடன்

1995 மே 3] [திரு. எம். ஆனந்தன்]

வழங்க மத்திய கூட்டுறவு வங்கி முன்வரவில்லை. இது தொடர்பாக ஏற்கனவே மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்கண்ட நிலையில் 34, அயன்நத்தம்பட்டி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு தற்போது ஆடுவளர்ப்பு கடன் வழங்க வாய்ப்பில்லை. இருப்பினும், 12 நபர்களுக்குரிய மானியம் மட்டும் வங்கியின் இருப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

2. எனினும், விரைவில் பயனாளிகளுக்கு கடன் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி, காமராஜர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அவர்களுக்கு அறிவுரை வழங்க இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என மேலாண்மை இயக்குநர் தாட்கோ தெரிவித்துள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காமராஜர் மாவட்டத்தில் ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு நேஷனல் வங்கியிலும் சரி, மத்திய கூட்டுறவு வங்கியிலும் சரி, எந்த வங்கியிலும் ஆடுவளர்ப்புக் கடன் கொடுப்பது கிடையாது. அயன்நத்தம்பட்டி விவசாயிகள் நலச் சங்கத்தின் மூலமாக 25 பேர் ஏழை எளிய அரிஜன மக்கள் கடன் பெறுவதற்கான விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு கால்நடை பராமரிப்பு மானியம் 50% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு பாக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். உண்மையிலேயே 25 பேருக்கும் பாக்கி கிடையாது. மேலும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் விருதுநகர் வருகை தந்தபோது இந்த ஏழை எளிய அரிஜன மக்கள் அமைச்சரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அமைச்சர் அவர்கள் டெலிபோன் செய்திருக்கிறார்கள். சென்னைக்கு வந்து மறுபடியும் டெலிபோன் செய்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற அதிகாரிகளும், என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறோம். இந்தப் பகுதி மக்கள் ஏழை எளிய கவரிமான் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பெரு விவசாயிகள் கிடையாது, பெரு விவசாயிகளுக்கு வேண்டுமானாலும் கடன் பாக்கி இருக்கலாம். இந்த சிறு விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு கடன் பாக்கி இல்லை. மற்றவர்களை வைத்து இவர்களுக்கு கடன் தர மறுக்கிறார்கள். இது மிகவும் பரிதாபத்திற்குரிய செயலாகும். எனவே இதை ஸ்பெஷல் கேஸாக எடுத்து,--ஸ்பெஷல் கேஸ் என்று சொல்ல

முடியாது,--இது அவர்களுடைய நியாயமான கோரிக்கை. எனவே மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பக்கத்தில்தான் இருக்கிறார். அவர் அந்த அதிகாரிகளுக்கு அறிவுரை கூறி அவர்களுக்கு கடன் வழங்கவேண்டும். 50% பாக்கி கட்டியாகிவிட்டது. மற்றவர்களெல்லாம் கடனைத் திருப்பியே தரமாட்டார்கள். நியாயமானவர்களுக்கு, ஒழுக்கமானவர்களுக்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அந்த சிறு விவசாயிகளுக்கு கடன் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. இந்த கோரிக்கை பரிசீலிக்க வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் நான் இந்த கவன ஈர்ப்பு வந்தவுடனேயே பேசி இருக்கிறேன். அவரும் உரிய முறையில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். எனவே உறுப்பினருடைய கோரிக்கை மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியம் கொடுத்து இப்பொழுது ஒரு வருடம் ஆகிறது. அவர்களும் கலெக்டரைப் பார்த்து மற்ற இடங்களிலும் அலைந்து அலைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவ்வளவு காலத்திற்குள் கொடுக்கப்படும்-உடனே கொடுக்கப்படும் என்று சொல்லவில்லை--விரைவில் கொடுக்கப்படும் என்றால், இந்த கவன ஈர்ப்பிற்காகவா? அல்லது ஒரு வாரத்திற்குள் கொடுக்கப்படும் என்று சொன்னால் பிரச்சனை முடிந்துவிடும். ஆனால் காலக்கெடு நீண்டுகொண்டே போகிறது. ஆகவே...(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அதுபற்றிய கோரிக்கையை கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் சொல்லி வேகமாக நடவடிக்கை எடுப்பார் என்று சொல்லியிருக்கிறார். அவரே இந்தப் பிரச்சினையில் நான் கொடுக்கிறேன் என்று சொல்லமுடியாது. வேகமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றால், அதுபற்றிய நடவடிக்கையைத் துறையின் மூலம் எடுப்பார்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்குள், 10 நாட்களுக்குள், 15 நாட்களுக்குள் என்று இப்படி சொல்வதை விட்டு ஆகட்டும் பார்க்கலாம் என்று

சொன்னால், பெருந்தலைவர் காமராஜர் பாணியில் அது சரியாக வராது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்குள் கொடுக்கிறேன் என்று சொல்ல வேணடும். 50% மானியம்..(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆதிதிராவிடர் நலத்துறையைப் பொறுத்தவரையில் மானியம் ரூபாய் 1,12,400 வழங்கப்பட்டுவிட்டது. கூட்டுறவுத்துறை சம்பந்தப்படடதற்கு நான் உறுதி அளிக்க இயலாது. நான் அமைச்சருடன் பேசி இருக்கிறேன். அவரும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து தகவல் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதைவிட என்னால் அதிகமாகச் சொல்ல முடியாது. ரூபாய் 1,12,400 கொடுத்தாகி விட்டது என்பதை சட்டமன்ற உறுப்பினரே சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் சொல்லி அமைச்சரும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

நண்பகல் 12–00

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

1995 மே 3] [திரு. இரா. தாமரைக்கனி]

சொன்னால், பெருந்தலைவர் காமராஜர் பாணியில் அது சரியாக வராது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்குள் கொடுக்கிறேன் என்று சொல்ல வேணடும். 50% மானியம்..(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆதிதிராவிடர் நலத்துறையைப் பொறுத்தவரையில் மானியம் ரூபாய் 1,12,400 வழங்கப்பட்டுவிட்டது. கூட்டுறவுத்துறை சம்பந்தப்படடதற்கு நான் உறுதி அளிக்க இயலாது. நான் அமைச்சருடன் பேசி இருக்கிறேன். அவரும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து தகவல் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதைவிட என்னால் அதிகமாகச் சொல்ல முடியாது. ரூபாய் 1,12,400 கொடுத்தாகி விட்டது என்பதை சட்டமன்ற உறுப்பினரே சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் சொல்லி அமைச்சரும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

நண்பகல் 12–00

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 49,80,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2383, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் கூட்டுறவு கடன்களுக்குரிய வட்டி தள்ளுபடிக்காக அறிவித்த போனஸ் திட்டத்தை கால நீட்டிப்புச் செய்வது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 49,80,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2383, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் கூட்டுறவு கடன்களுக்குரிய வட்டி தள்ளுபடிக்காக அறிவித்த போனஸ் திட்டத்தை கால நீட்டிப்புச் செய்வது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,80,27,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டு நாள்தோறும் ஒரு கலவரச் சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டு இங்கே வருகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. சாதாரணமாக வெட்டுத் தீர்மானங்களை அந்தக் கட்சியின் சார்பாக யார் யார் முன்மொழிகிறார்கள் என்பதை அந்தச் கட்சியின் கொறடா கொடுக்க வேண்டும். கொடுத்திருப்பார்கள். அதற்குப் பிறகு ஏதோ ஒரு சூழ்நிலையிலே வெளிநடப்புச் செய்திருப்பார்களானால் அவர்கள் இல்லாத சூழ்நிலையில், இருக்கிற உறுப்பினர்கள் வேறு யாரேனும் முன்மொழிகிறீர்களா என்று கேட்டு நான் முன்மொழிய அழைப்பது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக பேரவையின் 'ஜீரோ ஹவரிலே' வருகிறவர்கள், அந்தக் கட்சியின் கொறடாவும் சரி, அந்தக் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் இங்கே இருந்தபோதும் சரி, மற்றும் அந்தக் கட்சியின் பொறுப்பாளர்களும் சரி, என்னிடத்திலே வந்து எங்களுடைய உறுப்பினர்களில் இவர் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிவார் என்று எந்த மானியக் கோரிக்கைக்கும் கொடுத்தது இல்லை. அதனுடைய பொருள் என்ன? நாங்கள் ஏதோ செய்துவிட்டு, ஏதோ ஒரு வகையிலே வெளியே போவோம் என்று திட்டமிட்டு முடிவெடுத்து வைத்துக்கொண்டு செய்கிறார்கள் என்பதற்கு—நாள்தோறும் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தை யார் முன்மொழிய இருக்கிறார்கள், யார் மானியக் கோரிக்கையில் பேச இருக்கிறார்கள் என்ற பெயர் விவரத்தைக் கொடுப்பதே இல்லை—அதிலே இருந்து, திட்டமிட்டு ஏதோ ஒரு சூழ்நிலையை இந்தப் பேரவையில் உண்டாக்கி அதுபற்றிய செய்தியைப் பூதாகரமாக வெளியே கொண்டு செல்வதற்காக அவர்கள் திட்டமிட்டுச் செய்த செயல்தான் இவ்வளவு நாட்களும். இன்றைக்கு நடந்த அத்துமீறிய இந்த செயலும்கூட, முன்னேற்பாடாக அவர்கள் பேசி வைத்து வந்து செய்ததுதான் என்பதற்குரிய ஆதாரம் வேறு எங்கும் போய் பார்க்க வேண்டியதில்லை. இது ஒன்றே போதும் என்பதைப் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவை முன் மாண்புமிகு உறுப்பினர்களுடைய பார்வைக்காக அவை வைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழிலே அச்சடிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாக ஏற்று அவைப் பதிவேட்டில் பதிவு செயயவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது தெரிவிக்கின்ற கருத்துக்களை ஏற்று, இறுதியில் என்னுடைய பதிலை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு சிறிய திருத்தத்தை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தமிழிலே அளிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் *48*–ல், பத்தி *2*–ல் வரி *3*–ல் நகர கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை *4394* என்று இருக்கும் அச்சுப் பிழையை *4384* என்று திருத்திக் கொள்ளுமாறும், அதை அவைக்குறிப்பில் பதிவு செய்யுமாறும் வேண்டுகிறேன்.

பிற்பகல் *12–05*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறையின் சார்பில், சில கூட்டுறவு அமைப்புகளின் சார்பில் தயாரிக்கப்பட்டிருக்கிற நல்ல பொருட்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்காக வழங்கியிருக்கிறார்கள். நம்முடைய பேரவையின் நூலகப் பிரிவிலிருந்து அதைப் பெற்றுக் கொள்ளலாம். நல்ல சில மூலிகைகளிலிருந்து தயாரித்த நல்ல உணவு பதார்த்தங்களும் கொடுத்து இருக்கிறார்கள். (சிரிப்பு) (குறுக்கீடு) அது என்ன என்பதை நீங்கள் சாப்பிட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டும். சுவையான 'ஜாம்' போன்றவைகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். சாப்பிடுகிற பொருள்கள் மட்டும் அல்ல மாண்புமிகு கூட்டுவுத்துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு பால் பாயிண்ட் பேனாவும், பவுண்டன் பேனா ஒன்றும் கொடுத்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) பேனாவை எதற்குப் பயன்படுத்துவார்களோ அதற்குத்தான் பயன்படுத்தவேண்டும். விவாதம் தொடங்குகிறது. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு கொடுத்தமைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

@ *291* முதல் *354* வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சடிக்கப்பெற்றுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்கத்திற்கு தேர்தல் நடத்த வேண்டும் என்பது ஒரு முக்கிய கோரிக்கையாகும். கூட்டுறவுச் சங்கத்திற்கு தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலையில் இந்த அரசு ஏற்பாடு செய்கின்றபோது கோர்ட்டிலே வழக்கு ஒன்றைத் தொடுத்த காரணத்தால் இந்த கூட்டுறவுச் சங்க தேர்தலை நடத்த முடியவில்லை என பல்வேறு நேரங்களில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் எதிர்க்கட்சிகள் கூட்டுறவுச் சங்க தேர்தல் நடத்த வேண்டும். கூட்டுறவுச் சங்க தேர்தல் நடத்த வேண்டும் என்று பல்வேறு முறையில் இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கோரிக்கைகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிரதான கட்சியான காங்கிரஸ் கட்சி, என்னுடைய கட்சி, ஒரு வேட்பாளரை இந்த இடைத் தேர்தலிலே நிறுத்த முடியாமல் எங்கோ தேடிப்பிடித்து, ஆளில்லாத கட்சியைச் சேர்ந்த ஒரு நபரை தேர்ந்தெடுத்து இருக்கக்கூடிய ஒரு கேவலமான சூழ்நிலையை நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த சட்டமன்றத்திற்கு நாங்கள் எல்லாம் முறையாக வாக்குகளைப் பெற்று, முறையாக செயல்பட்டு முறையாக பிரச்சினைகளை எடுத்துக்கூறி, முறையாக மக்களுக்கு சேவை செய்து வந்திருக்கிறோம். அப்படி வந்திருக்கின்ற நாங்கள் சட்டமன்றத்திலே கூட்டுறவுத் துறையைப் பற்றி நிரம்பப் பேசலாம். நிரம்ப வாயப்பு இருக்கிறது. பல்வேறு மானியக் கோரிக்கைகள் நடந்து முடிந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் சொன்னது போல், இந்த மாமன்றத்திலே வெட்டுத் தீர்மானங்களை யார் யார் முன்மொழிவது என்பதை எங்களுடைய கட்சி கொறடாதான் கொடுக்க வேண்டும். ஆனால் எங்கள் கட்சியினுடைய கொறடா இது வரையில், மானியக் கோரிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்தே வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிவது, மானியக் கோரிக்கையில் யார் பேசுவது என்பது போன்ற குறிப்புக்களை பேரவைத் தலைவரிடத்தில் கொடுப்பதில்லை. நான் தினமும் தலைவரிடத்தில் சென்று அவர்கள் கொடுத்திருக்கின்றார்களா என்று கேட்பேன். அவர்கள் யாரையும் கொடுக்கவில்லை என்று பேரவைத் தலைவர் சொல்லுவார். நாங்கள் பேசுகின்றோம் என்று அனுமதி கேட்போம். அவர் அனுமதி அளிப்பார். காங்கிரஸ் கட்சி பாரம்பரியம் மிக்க கட்சி. எங்களுக்கு எல்லாம் மனது வேதனையாக இருக்கிறது. அதற்கென்று தனி மரியாதையும், தனி கௌரவமும் தனி அந்தஸ்தும் இருக்கிறது.

அப்படிப்பட்ட காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய பெயரை களங்கப்படுத்துகின்ற வகையிலே செயல்படுவது என்பது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. காங்கிரஸ் பேரியக்கம் ஒரு தேர்தலுக்கு ஒரு வேட்பாளரை நிறுத்த முடியவில்லை என்று சொன்னால்—அதை தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சித் தலைவர் அறிவித்திருக்கிறார், பொது வேட்பாளராக நிறுத்துகிறோம் என்று...(மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கட்சிப் பிரச்சினை வேண்டாம்.

திரு. ஆர். சிங்காரம்: எப்படியாவது இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட வேண்டும். இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியை, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியை வீழ்த்த வேண்டும். சதித் திட்டத்தின் மூலமாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாகும். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றக் கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து அந்த நோக்கத்திலேயே செயல்படுவதாகச் சுட்டிக்காட்டினார்கள்.

பிற்பகல் 12-10

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த எண்ணினால் அதை நடத்த வேண்டாம் என்று சொல்கிறார்கள். இதே மாமன்றத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பொறுப்பேற்றவுடன் உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதாக அறிவித்தது. அரசு அறிவித்தவுடனேயே, அனைத்துக் கட்சிகளும், எங்களுடைய கட்சியினுடைய தலைவர் உட்பட தேர்தல் நடத்த வேண்டாம்,. தேர்தல் நடத்த வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கட்சியின் பொதுச் செயலாளர், முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய வேட்பாளர்களையெல்லாம் தயார் செய்து, பட்டியல் எல்லாம் தயார் செய்து விட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நிறுத்திவிட்டார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று சொல்கிறபோது, இயற்கையான இடர்பாடுகள் என்ன என்பதை நாம் அறிய வேண்டும். ஏதோ போகிற போக்கிலே, எதையாவது சொல்லிக் கொண்டு போனால், அதில் பிரயோசனம் இல்லை. அதாவது, இங்கே பேசுகிற பேச்சை இன்றைக்கு தமிழக மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்திலே என்ன நடக்கிறது என்று அவர்களும் உன்னிப்பாகக் கவனித்துக்

கொண்டிருக்கிறார்கள். அவர்களும் செய்திகளின் வாயிலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மீறி, நாம் சட்டமன்றத்தை விட்டு, மக்களைச் சந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்திலே இருக்கிறோம். மக்களைச் சந்தித்து, நான் இன்னன்ன செயலைச் செய்திருக்கிறேன்; சட்டமன்றத்திலே இன்னின்ன பேசியிருக்கிறேன்; இன்னின்ன வாதாடி இருக்கிறேன், இந்தத் தொகுதிக்கு இன்னின்ன பெற்றுத் தந்திருக்கிறேன்; இத்தனைக் கேள்விகள் கேட்டிருக்கிறேன்; இத்தனை முறை மானியக் கோரிக்கைகளில் பேசியிருக்கிறேன் என்று மக்களின் முன்பாகச் சொல்லியாக வேண்டும். அந்த அளவுக்கு நாம் கடமைப்பட்டவர்கள். ஆகவேதான், இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராக இருந்தும், மேலே வழக்கு இருக்கிற காரணத்தினால் நடத்த முடியவில்லை. விரைவிலே அந்த வழக்கைச் சந்தித்து, இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)

அடுத்து, கூட்டுறவுச் சங்கக் கடன்களுக்கு வட்டி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அதனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று, நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, கோரிக்கை விடுத்தேன். அதன்படி, நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'நபார்டு' இயக்ககம், கடன் தள்ளுபடி செய்வதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஆகவே, வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை; ஆகவே, 'நபார்டு' இயக்ககத்தைப் பொறுத்தவரையில், தள்ளுபடி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அவர்கள் சொல்லிவிட்டதாகத் தெரிவித்தார்கள். மேலும், இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் அதனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கிறீர்கள்; அந்த வட்டித் தொகை அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறீர்கள்; ஆகவே, அந்த வட்டியை, 'போனஸ்' ஆகத் தமிழக அரசு கொடுக்கும் என்று சொன்னார்கள். தள்ளுபடி என்ற வார்த்தை இல்லாமல், 'போனஸ்'-ஆகக் கொடுக்கும் என்று தமிழக அரசினுடைய முதலமைச்சர் அவர்கள், இங்கே சென்ற ஆண்டு அறிவித்தார்கள். அவ்வாறு அறிவித்ததன்படி, பலபேர் பயன்பெற்றார்கள். ஆனால், பலபேர் பணம் கட்ட முடியவில்லை. காரணம், அந்த நேரத்தில் அவர்களால் பணம் கட்ட முடியாத ஒரு கஷ்டமான சூழ்நிலை இருந்த காரணத்தினால், கட்ட முடியவில்லை. அசலைக் கட்டி இருந்தால், அந்த வட்டி தள்ளுபடியாகியிருக்கும். ஆனால், பாதி பேருக்குமேல், கட்டமுடியாத

காரணத்தினால், இன்றைக்கு அந்த அசலும் வட்டியும் சேர்ந்து, ஐயாயிரம் அசல் என்று சொன்னால், 10 ஆயிரம் அல்லது 12 ஆயிரம் ரூபாய் வட்டியோடு சேர்ந்து வருகிற சூழ்நிலை இருக்கிறது. அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து பலமுறை முயற்சித்தும், அவர்களால் பணம் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவை 1980, 81, 82, 83, 84 ஆகிய ஆண்டுகளில் பெற்ற பழைய கடன்கள். புதிய கடன்கள் அல்ல. அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு முயற்சித்தும், 'நபார்டு' இயக்ககம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில், விவசாயிகள் பணம் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பழைய அந்த 'போனஸ்' திட்டத்தை இன்னும் ஒருமுறை நீட்டித்துக் கொடுப்பீர்களேயானால், நிச்சயமாக இந்த நேரத்திலே, அவர்கள் அசலைக் கட்டிவிடுவார்கள். அதற்கு அவர்கள் தயாராகவும் இருக்கிறார்கள். இன்றைக்கு, அவர்கள் அதைக் கட்ட முடியாத காரணத்தினால், ஜப்தி போன்ற நடவடிக்கை எடுக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற முறை, நான் மாமன்றத்திலே, மாண்புமிகு கூட்டறவுத் துறை அமைச்சரிடத்திலே கேட்டபோது, ஜப்தி நடவடிக்கை எடுக்கவில்லை; நாங்கள் கறாராக வசூல் செய்வதற்கான முயற்சிகளை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள்.

ஆனாலும்கூட ஜப்தி நடவடிக்கை பல்வேறு இடங்களில் இன்னும் ஆங்காங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளினுடைய நன்மையைக் கருதி செயல்படுகிற அரசு என்கிற காரணத்தினால், எந்தக் கோரிக்கையைச் சொன்னாலும், எது நியாயம், அநியாயம் என்று பார்த்துச் செயல்படுகிற காரணத்தினால், இதனைப் பரிசீலனை செய்து, ஜப்தி நடவடிக்கையே இல்லாத அளவுக்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்த வட்டிச் சலுகையை, 'போனஸ்' தொகையாக மேலும் கால அவகாசம் நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலும், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–15

கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஐ.ஆர்.டி.பி. கடன்கள் வழங்கப்படுகின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும், கூட்டுறவு வங்கிகளின் மூலமாகவும், ஐ.ஆர்.டி.பி. கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த ஐ.ஆர்.டி.பி. கடன்களை

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் சரியாக வழங்குவதில்லை. அதேநேரத்தில், கூட்டுறவுச் சங்க வங்கிகளில் கடன் பெறுவதற்கு அவர்கள் பங்குத் தொகை செலுத்துகிறார்கள். பங்குத் தொகை செலுத்தி, மானியம் ஒதுக்கப்பட்ட பிறகு, அந்தக் கிளைகளிலிருந்து மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகிறது. அந்த மத்திய வங்கி, உதாரணத்திற்கு தஞ்சை மத்திய வங்கிக்கு அனுப்பினால் அவர்கள் சீக்கிரமாக சேங்ஷன் செய்வதில்லை; டிலே செய்கிறார்கள். உதாரணமாக பேராவூரணி தொகுதியிலே ஊமத்தநாடு என்று ஒரு கிராமம் இருக்கிறது; பின்னவாசல் என்று ஒரு கிராமம் இருக்கிறது; பேராவூரணி நகர வங்கி இருக்கிறது; ஒட்டங்காடு இருக்கிறது. இந்த 4 ஊர்களிலும் 1 ½ வருடமாக அவர்களுக்கு கடன் வழங்கப்படவில்லை. காரணம் தஞ்சை கூட்டுறவு வங்கி அதுகுறித்து டிலே செய்து கொண்டிருக்கிறது. அது குறித்து நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்தில் சொல்லி, அவர்களும் தகவல் கொடுத்து இருக்கின்றார்கள்; ஆனாலும்கூட இதுவரையில் அது வழங்கப்படவில்லை என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து அதை விரைவிலே வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நிலவள வங்கியில் பழைய கடன்களை கட்டினால்தான் புதிய கடன்கள் கொடுக்க முடியும் என்று சொல்லுகின்றார்கள். பழைய கடன்களை வசூலிப்பதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை. ஆனால், புதிய கடன்கள் கொடுப்பதன் மூலம் பம்ப்செட், போர்-வெல், டயர் வண்டி, டிராக்டர், நில மராமத்து, நிலம் பெறக் கடன் போன்ற கடன்களை வழங்க முடியாத காரணத்தினால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இந்தக் கடன்களை வழங்குவதற்கு விரைவில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டின் தலைமையிடமான தலைமைச் செயலகத்தில் இயங்கிவரும் தலைமைச் செயலக கூட்டுறவு உணவகத்தை பணியாளர்கள் பொதுநலன் கருதி, தமிழக அரசே ஏற்று, அருந்தக ஊழியர்களின் வறுமையைப் போக்கும்படி மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் மத்திய அரசு நிறுவனங்களில் இயங்கும் அருந்தகங்களுக்கு அங்கே பணிபுரியும் ஊழியர்களின் ஊதியத்தை வழங்க அரசே மானியம் வழங்குகிறது. அதேபோன்று தமிழக தலைமைச் செயலகத்தில் இயங்கும் கூட்டுறவு அருந்தக ஊழியர்களின் ஊதியத்தை தமிழக அரசு மானியமாகக் கொடுத்து—பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக, எதையும் செயல்படுத்தும்

நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இதையும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. பி. சந்திரசேகர்): திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிடத்தின் திருவிளக்கு, தீந்தமிழின் திருப்புமுனை, சமூகநீதி காத்த வீராங்கனை, எங்களது காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் வணங்கி என்னுடைய உரையைத் துவங்குகின்றேன். கூட்டுறவே நாட்டுயர்வு, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற முதுமொழிக்கிணங்க இன்றைக்கு கூட்டுறவுத் துறை தமிழகத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்காகவும், விவசாயப் பெருங்குடி மக்களுடைய பொருளாதாரம் மேம்படுவதற்காகவும், தமிழகத்தினுடைய கூட்டுறவுத் துறை சிறப்பான வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது. இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே பல்வேறு வங்கிகளின் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு கடன்களை வழங்கி, விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்காலத்திலே ஒரு மேன்மையான வாழ்க்கையை அவர்கள் அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பினை கூட்டுறவுத் துறை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்து இருக்கின்றது. கூட்டுறவுத் துறை மூலம் இன்றைக்கு ஒவ்வொரு சங்கத்திலும் உறுப்பினர்களாக, ஆதிதிராவிட சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆக்கவேண்டும் என்பதற்காக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களிலே அவர்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்வதற்கு பங்குத் தொகை கட்ட முடியாத ஆதிதிராவிட மக்களுக்கு பங்குத் தொகையைக் கட்டுவதற்கு கூட்டுறவுத் துறை மூலம் அரசே முன்வந்து இருக்கிற நிலைமையைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலே அவர்கள் தங்களுடைய பங்குத் தொகையைக் கட்டுவதற்காக இன்றைக்கு அரசு மூலம் 250 ரூபாய் வழங்கி, ஒவ்வோர் ஆண்டிலும் 50 ரூபாயை திருப்பிக் கட்டுகின்ற ஒரு சூழ்நிலையை புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உருவாக்கித் தந்து இருக்கிறது என்றால், ஏழைஎளிய ஆதிதிராவிட மக்களின்பால் புரட்சித் தலைவியின் அரசு எந்த அளவுக்குக் கருணை கொண்டு

செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். அதேபோல, நகர கூட்டுறவு வங்கிகளிலே ஆதிதிராவிடர்களை உறுப்பினர்களாக ஆக்குவதற்கு, அவர்களுக்கும் பங்குத்தொகை கட்டுவதற்கு 500 ரூபாயை இன்றைக்கு வழங்கி அதை வருடத்திற்கு 100 ரூபாய் திருப்பிச் செலுத்துகின்ற ஒரு சலுகையை புரட்சித் தலைவியின் அரசு அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், நிலவள வங்கிகளைப் பொறுத்த அளவில் இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் சொன்னதைப் போல, டிராக்டர் மற்றும் பல்வேறு விவசாய கருவிகளை வாங்குவதற்கு, விவசாய உபகரணங்களை வாங்குவதற்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. அப்படி கடன் வழங்கப்படுகின்ற நிலைமையிலே, இன்றைக்கு அந்தக் கடன்களை, ஒருசில தொகைகளை செலுத்தப்படாத நிலைமையிலே புதிய கடன்கள் வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையினை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அடுத்து கடன்களை கொடுக்கின்றபோது அந்தத் தொகைகளை வரவு வைத்துக்கொண்டாவது அவர்களுக்கு புதிய கடன் தொகை கிடைக்க வழிவகை செயயவேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

நிலவள வங்கிகளைப் பொறுத்தஅளவில் ஆதிதிராவிடர்களுக்கு நிலம் வாங்குவதற்கான கடன் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஒவ்வொரு நிலமற்ற ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் 20 ஆயிரம் ரூபாய் கடன் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த முறையிலே ஒவ்வொரு நிலவள வங்கியிலும் குறிப்பாக மன்னார்குடி நிலவள வங்கியிலே 200 பேர்களுக்கு கடன் கொடுப்பதாகச் சொல்லி அங்கே அப்ளிகேஷன் கொடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு வாங்கப்பட்டது. ஆனால், இதுகாறும் ஒருவருக்கும் கடன் தொகை வழங்கப்படவில்லை என்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், அங்கே பொதுமக்களிடையே ஒரு நிலைமை இருக்கிறது. இந்த அரசின் மீது அவர்கள் ஆதங்கப்படுகிற நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்தத் தருணத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, நிலவள வங்கிகளைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு ஆழ்குழாய் கிணறுகள் போட்டு விவசாயப் பெருங்குடி மக்களுடைய குறையைத் தீர்க்கின்ற அளவுக்கு ஆழ்குழாய் வெட்டுவதற்கான கடன் வழங்கப்படுகின்றது. அந்த ஆழ்குழாய் கிணறுகளைப் போடுவதற்கான கடன்கள் வழங்கப்படுகின்ற நிலையிலே, அதற்கு ஒரு சீலிங் லிமிட்டாக 40ஆயிரம் ரூபாய் வரை அந்தக் கடன்களை வழங்குகிறார்கள். ஆனால் 40 ஆயிரம் ரூபாய் கடன்கள் வழங்கப்படுகின்றபோது அங்கே நிலத்தடி நீர் மட்டம் 120 அடி அல்லது 200 அடி இருக்குமேயானால் அவர்கள் கொடுக்கின்ற கடன் அந்த விவசாயிகளுக்கு பயன்படுகிற சூழ்நிலை அமைகிறது. அதேநேரத்திலே அந்த ஆழ்குழாய் கிணறுகளை போடுகின்றபோது நிலத்தடி நீர் 800 அடிக்கு 900 அடிக்குக் கீழே இருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால் அவர்களுக்கு அந்த 40 ஆயிரம் ரூபாய் எந்த விதத்திலேயும் பயன்படுவதாக இல்லை என்ற காரணத்தினால், அப்படி நிலத்தடி நீர் எந்த இடத்திலே அமைந்திருக்கிறது என்று எண்ணிப்பார்க்கின்றபோது, இங்கே மன்னார்குடி தாலுகாவிலே நீடாமங்கலம் தாலுக்கா போன்ற பகுதிகளிலே 10 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்ற இடங்களிலே பார்க்கின்றபோது, மன்னார்குடியிலே 120 அடியிலே கிடைக்கின்ற தண்ணீர், வடுவூர் பகுதியிலே 800 அடிக்குக் கீழே தண்ணீர் கிடைக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, ஒரே தாலுக்காவில் ஒரு பகுதிக்கு 40 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் அங்கே ஆழ்குழாய் கிணறுகள் போடுகின்ற வாய்ப்பு இருக்கிறது. மற்ற பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள் அந்தக் கடனை பயன்படுத்த முடியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, வாட்டர் லெவல் பூமியிலே நிலத்தடி நீர் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு கடன் தொகையை உயர்த்தித் தருவதற்கான, கடன் தொகையை அதிகப்படுத்துவதற்கான ஒரு வாயப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும். இந்தப் பிரச்சினையை நான் கடந்த 2,3 ஆண்டுகளாக வைத்தபோதிலும், இந்தப் பிரச்சினையை நபார்ட் வங்கியோடு தொடர்பு கொண்டு அவர்கள் அதற்கு அனுமதி தரவேண்டும் என்ற நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார். ஆகவே, நபார்டு வங்கியோடு தொடர்பு கொண்டு அந்தப் பிரச்சினையிலே அதிகத் தொகையைத் தருவதற்கான சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும். அதேபோல இன்றைக்கு கூட்டுறவுத் துறையைப் பொறுத்த அளவிலே, கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணிபுரிகின்ற பணியாளர்களை எடுத்துக்கொள்வோமானால் அந்தப் பணியாளர்கள்

போர்டிலே இருந்த காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் என்ற காரணத்தினால் அந்தப் பணி மாற்றத்திற்கு உட்படாத பணியாக இன்றைக்குக் கருதப்படுகின்ற காரணத்தினால் ஒவ்வொரு வங்கியிலும் பணியாற்றும் பணியாளர்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டு, 30 ஆண்டு என்று அந்த வங்கியிலே பணியாற்றுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகின்ற காரணத்தினால் பல்வேறு இடங்களிலே இருக்கின்ற பணியாளர்கள் தங்களுடைய பணியை விடுத்து இன்றைக்கு அரசியல் செய்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அப்படி ஒரு சூழ்நிலை உருவாகாமல் இருக்கவேண்டுமென்றால் இந்த அரசுக்கு விசுவாசமாக அவர்கள் செயல்படவேண்டுமென்றால் அந்த பணி மாறுதல்களுக்குட்படுத்தப்படக் கூடிய பணியாக, டிரான்ஸ்பரபிள் போஸ்டாக அந்த நிலைமை உருவாக்கப்படவேண்டும். இது மிகவும் அவசியமான பிரச்சினை என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே கூட்டுறவுத் துறையின் கீழே இயங்கி வருகின்ற அமுதம் அங்காடியிலே அங்கே விற்பனையாளர்கள் பணியிடம் நிறைய காலி இருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் இந்த துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்பதற்கு முன்னாலே அதற்கான இண்டர்வியூ எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டு இண்டர்வியூ நடத்தப்பட்டு அங்கே விற்பனையாளர்களுடைய பணியிடத்திற்கு ஆட்களை நியமிப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு, என்ன காரணமோ தெரியவில்லை, அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-25

அந்த இடங்களை உடனடியாக நிரப்புவதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைசசர் அவர்கள் நிச்சயமாக புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அதை தீவிரமாக இன்றைக்கு சிறப்பாகச் செய்து கொடுக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் என்கின்ற காரணத்தினால், என்னுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளிலே டயர் வண்டிகளுக்காக 9 ஆயிரம் ரூபாய் இங்கே கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அதிலே பங்குத் தொகை 900 ரூபாய் கட்டப்பட வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி 900 ரூபாய்பங்குத்தொகை என்றால் 9 ஆயிரம் ரூபாயிலே, 8 ஆயிரம் ரூபாய்க்கு ஒழுங்கான முறையிலே டயர் வண்டி பெற முடிகிறதா என்றால் அதைச் செய்ய முடியுமா என்று எண்ணிப் பார்க்கும்போது நிச்சயமாக 13 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் இல்லையென்றால் டயர் வண்டியினை இன்றைக்கு நாம் நல்ல டயர் வண்டியாக பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால், அந்தத் தொகையை 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்கின்ற என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையை மத்திய கூட்டுறவு வங்கி 500 ரூபாயிலிருந்து 750 ரூபாய்க்கு இந்த அரசு உயர்த்தியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, மகளிரால் நடத்தப்படும் கூட்டுறவு வங்கிகள் என்று இன்றைக்கு அறிவிக்கப்பட்டு, தமிழகத்திலே 23 வங்கிகள் இதுகாறும் செயல்பட துவங்கியிருக்கின்றன என்பதை இங்கே அறிவித்து இருக்கிறார்கள். மேலும், 9 வங்கிகள் இந்த ஆண்டிலே துவங்கப்படும் என்றும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அப்படி 9 வங்கிகள் தொடங்கப்படும் நேரத்திலே ஒரு வங்கியை, மகளிர் கூட்டுறவு வங்கியாக மன்னார்குடியிலே துவங்க வேண்டும் என்கிற என்னுடைய அன்பான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, 'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்கின்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க தமிழகத்தினுடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எந்த ஒரு செயலாக இருந்தாலும், அவர்கள் செயல்படத் துணிந்த பின்னால் நிச்சயமாக எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும், எந்த ஒரு காரணத்திற்காகவும் அதை பின்வாங்க மாட்டார்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்கின்ற சூழ்நிலையிலே இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் முன் வைத்த காலை என்றைக்குமே பின்வைத்தது இல்லை என்ற வரலாற்றை படைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் துவங்கப்படுகின்ற நேரத்திலே அந்தத் துவக்க விழாவிலே, நாகை-காயிதே மில்லத்

மாவட்டத்திற்கு கும்பகோணத்திலே இருக்கின்ற வங்கி அங்கே மாற்றப்படும் என்ற செய்தியை அங்கே அறிவித்தார்கள். ஆனால், இரண்டு மூன்று ஆண்டுகளாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு மத்திய கூட்டுறவு வங்கி மாற்றப்படவில்லை. இல்லையேல் அங்கே புதியதாக ஒரு வங்கி ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அப்படி ஒரு சூழ்நிலையையும் உருவாக்கவில்லை என்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒரு மத்திய கூட்டுறவு வங்கியினை ஆரம்பித்துத் தர வேண்டும்,. தொடங்கப்பட வேண்டும் என்கின்ற என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன்.

அதே நேரத்திலே, கூட்டுறவுத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்தாலும், என்னுடைய தொகுதி பிரச்சினைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நாகை-காயிதே மில்லத் மாவட்டம் தொடங்கப்பட்டபோது, அந்தத் தொடக்க விழாவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், மன்னார்குடி தொகுதியைப் பொறுத்தவரையில், பல நல திட்டங்களை அங்கே அறிவித்தார்கள். மன்னார்குடியிலே இருக்கின்ற அரசு மருத்துவமனையை இடவசதி இல்லாத காரணத்தினால் அதை ஒரு புதிய இடத்திலே, புதிய வளாகத்தோடு கட்டித் தருவதற்காக, 500 படுக்கைகளைக் கொண்ட ஒரு புதிய கட்டிடம் கட்டித் தரப்படும் என்கின்ற அந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் அங்கே அறிவித்தார்கள். அந்த வேலையை உடனடியாக துவங்க வேண்டுமென்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மன்னார்குடியிலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றி அதையும் புதிய இடத்திலே, புதிய வளாகத்தோடு கட்டித் தரப்படுமென்கின்ற செய்தியை புரட்சித் தலைவி அவர்கள் நாகை-காயிதே மில்லத் மாவட்ட நலத் திட்ட துவக்க விழாவிலே அறிவித்தார்கள். அதையும் உடனடியாக நிறைவேற்றித் தர அன்புடன் வேண்டுகின்றேன்.

அதைப்போல, இன்றைக்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மட்டும் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். கீழப்பாலம் என்கின்ற பாலத்தை புதிதாக புதுப்பித்து கட்டுவதற்காக 1¼ கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, டெண்டர் விட்டு இருக்கின்றார்கள் என்கின்ற நிலைமையிலே நான் என்னுடைய

மனமார்ந்த நன்றியை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இன்றைக்கு மன்னார்குடி பகுதியிலே இருந்த 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின்நிலையமாக மாற்றி அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இட்ட ஆணையை இன்றைக்கு வெற்றிகரமாக நிறைவேற்றித் தந்தமைக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மனமாரத் தெரிவித்து, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையிலே திட்டியிருக்கிற திட்டங்களை வரவேற்று, எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. தவசி. திரு. தவசி அவர்கள் இப்போதுதான் இந்த அவைக் கூட்டத்தொடரில் முதன்முதலாகப் பேச இருக்கிறார்கள். அவர்கள், நம்முடைய தொலைக்காட்சி மட்டுமல்ல. பி.பி.சி-ல்கூட வருகின்ற அளவுக்கு பல்வேறு சீரிய கருத்துக்களை வெளியிலே சொல்லிக் கொண்டிருக்கக்கூடியவர்கள். அந்த அளவுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்வார் என்று நம்புகிறேன்.

திரு. கே. தவசி: நன்றி. மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்களுடைய கோரிக்கையான் 23-ஆம் எண். கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, எங்களை வாழவைத்துக் கொண்டிருக்கிற எங்களுடைய இதயதெய்வம், சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய கருத்துக்களை வழங்க இருக்கிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தனி நபர் கடன் ரூ. 250 என்று இருந்ததை ரூ. 1500-ஆக சிறு தொழில் வளர்ச்சிக்காக அளித்ததை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். இது நகர்ப்புறங்களில் மட்டும் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் வழங்க வேண்டுமென்று வேண்டுதல் விடுக்கிறேன். அடுத்தபடியாக, விவசாயப் பெருமக்கள் தங்களுடைய நகைகளை விவசாயக் காலங்களில்

அடகுவைத்து, விவசாயத்தை முன்னேற்றம் செய்வதற்கு நகைக் கடன் வாங்கும்போது, ஒரு சவரனுக்கு ரூ. 2000 என்று இருந்ததை ரூ. 2400 என்று ஆக்கியதை நான் பாராட்டுகிறேன். 1994-ஆம் ஆண்டு குறுகிய காலக் கடன் 450 கோடியிருந்து 520 கோடியாக வழங்கியதை நான் பாராட்டுகிறேன். மத்திய காலக் கடன் 55 கோடியிலிருந்து 65 கோடியாக, டார்கெட்டை பூர்த்தி செய்ததை நான் பாராட்டுகிறேன். நீண்டகாலக் கடன் 1994-95-ஆம் ஆண்டு 53 கோடியிலிருந்து 150 கோடி ரூபாயாகக் கொடுத்து, புரட்சித் தலைவி அவர்களின் சீரிய திட்டத்தால், தொழில்கள் வளருவதற்கு அதிகமாகக் கொடுத்ததை இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன். ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு நகர மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பங்குத் தொகை செலுத்துவதற்கு, நகரத்திற்கு 40 இலட்சமும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் 20 இலட்சமும் பங்கீட்டுத் தொகை ஒதுக்கியதை நான் பாராட்டுகிறேன்.

1994-ஆம் ஆண்டு குறுகிய காலக் கடன் 70 கோடி, மத்திய காலக் கடன் 20.6 கோடி, நீண்ட காலக் கடன் தீபாவளிப் பண்டிகையின்போது பெண்களுக்கு ஒரு சேலை மற்றும் ஜாக்கெட், ஆண்களுக்கு ஒரு வேட்டி மற்றும் ஷர்ட் போன்றவைகளை ரூ. 99/-க்கு வழங்கியதை நான் பாராட்டுகிறேன்.

அதைப்போல, பட்டாசு பாதி விலைக்கு வழங்கியதை நான் பாராட்டுகிறேன். 1995-96-ஆம் ஆண்டு அஞ்சல் வழி மூலம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்வி படிப்பதற்கு மனுச் செய்தவர்கள் அனைவருக்கும் அனுமதி வழங்கியதை நான் பாராட்டுகிறேன். அதேபோல, ஆண்டிப்பட்டி தொகுதி, கடமலைக்குண்டில் பெண்களுக்கென்று துவங்க இருக்கிற வங்கிகளில் ஒரு கிளையை ஏற்படுத்த வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலிருந்து மத்திய வங்கியினுடைய கிளையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், பலமுறை எடுத்துக்கூறி, அதற்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, இது மத்திய ரிசர்வ் வங்கியினுடைய உத்தரவை எதிர்நோக்கி இருக்கிறது. விரைவாக இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள உபகரணங்கள் மோசமாக இருக்கின்றன. குறிப்பாகக் கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள நாற்காலிகள், மேசைகள் எல்லாம் அருவருக்கத்தக்க வகையில் உள்ளன. அவைகளை மாற்றி நவீனமயமாக்க மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதுபோல், விவசாய இடுபொருள்களை எல்லாம் ஒரே இடத்தில் வாங்க வசதிகள் இருப்பதைப் போல, விவசாயக் கருவிகளையும் ஒரே இடத்தில் வாங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருவார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. மதுரையில் உள்ள மேலாண்மைப் பயிற்சி நிலையம் (இன்ஸ்டியூட் ஆப் கோவாபரேட்டிவ் மேனேஜ்மென்ட்) கட்டிடம் பல ஆண்டுக்காலமாக பழுதடைந்த நிலையில் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அதற்கு நிரந்தரக் கட்டிடம் சொந்தமாகக் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் திருட்டைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்வேறு கிராமங்களில் உள்ள இப்படிப்பட்ட வங்கிகளில் அடிக்கடி திருடு போகின்றது. இங்கே காங்கிரஸ்காரர்கள் கலாட்டா செய்வதைப்போல, பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் திருடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தத் திருட்டைத் தடுக்க அபாயமணி வைத்தால் நிச்சயமாக அந்தத் திருட்டைத் தடுக்க முடியும். அபாயமணி அடித்தவுடன் பொதுமக்கள் எலலோரும் எழுந்து நின்று, எப்படி காங்கிரஸ்காரர்களை இந்த நாட்டிலேயிருந்து மக்கள் விரட்டியடிக்க இருக்கிறார்களோ அதேப்போல திருட்டை அங்கே ஒழிப்பதற்கு ஏதுவாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, அங்கே அபாயமணி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசுப் பணிகளுக்கு வயது நிர்ணயம் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. சீர் மரபினருக்கு அரசு வேலைவாய்ப்பில் 32 வயது என்று நிர்ணயிக்க வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் வேலையில் சேர, தற்போது 30 வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை 32 வயது என்று ரிலாக்ஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிப் பிரச்சினை சிலவற்றை எடுத்துக் கூற கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். நேரடியாக அங்கே பல நிகழ்ச்சிகளுக்கு அவர் வந்திருக்கிறார். நிச்சயமாக அதை எனக்குச் செய்து தருவார் என்ற நம்பிக்கையும், அதை இந்தத் தொடரிலேயே அறிவிப்பார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. என்னுடைய தொகுதி பரந்த தொகுதி. 3 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 3 நிலவள வங்கிகள் இருக்கின்றன. வடமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், 100 கிலோமீட்டருக்கு அப்பால் உத்தமபாளையம் சென்று, அங்கே இருக்கிற நிலவள வங்கிற்குப் போக வேண்டும். அதனால் மிகவும் கஷ்டமான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, எங்களுக்கு நிலவள வங்கி ஒன்றையும், மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றையும் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தொகுதியானது, தற்போது புரட்சித் தலைவியினுடைய சீரிய தலைமையிலே இயங்கும் ஆட்சியில், தாலுக்கா அந்தஸ்து பெற்று இருக்கிறது. அங்கும் கூட்டுறவு நிலவள வங்கி இல்லாமல், 50 கிலோ மீட்டருக்கு அப்பால் உசிலம்பட்டிக்கு வந்து விவசாயிகள் அலைய வேண்டியிருப்பதால், சேடப்பட்டியிலும் கூட்டுறவு நிலவள வங்கி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீது ஒருசில கருத்துக்களைக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே, கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவதற்கு, சென்னை உயர்நீதி மன்றத் தடையாணை இருக்கிறது. அந்தத் தடையாணை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிற காரணத்தால், தேர்தல்களை நடத்த இயலவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. மூன்றாண்டுக் காலமாக இந்தத் தடையாணையை வழக்கின் மூலம் சந்தித்து அந்தத் தடையாணையை நீக்க, கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். எவ்வளவோ வழக்குகளைச் சந்திக்கக்கூடிய தமிழக அரசு, இந்த ஒரு சிறிய வழக்கைச் சந்திக்க முடியவில்லை என்று கூறுவது பொருத்தமாக இருக்காது. ஆகவே,

விரைவாக அதை நடத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி, தேர்தலை விரைவாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் ஊழியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அந்த ஊழியர்கள் பற்றாக்குறையை விரைவாகப் போக்க வேண்டும். ஊழியர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால் உரிய காலத்தில் கடன் வழங்குவதில், உரிய காலத்தில் கடன் வழங்குகிற மனுக்களைப் பெறுவதில், உரிய காலத்தில் அதுசம்பந்தமாக பணியாற்றுவதில் தேக்கநிலை ஏற்படுவதால் விவசாயிகள் மற்றும் அங்கத்தினர்களாக இருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, விரைவாக அந்த ஊழியர்கள் பற்றாக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கொள்கைக் குறிப்பில் அந்த ஊழியர்களை நியமிப்பதற்கு மாவட்டந்தோறும் ஒரு தேர்வுக் குழு நியமிக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்க அம்சமாகும். ஆனால், இந்த ஆண்டிலேயே அதை நடைமுறைப்படுத்த அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையில் பணியாற்றக் கூடிய ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும். காரணம், ஏதோ இன்று இருந்து நாளைக்கு போகக்கூடிய துறை அல்ல இது. நீண்ட நெடுங்காலமாக மக்களுக்கு சேவை செய்யக்கூடிய துறை இத்துறை. மேலும் மேலும் அபிவிருத்தி அடைய, வளர்வதற்கு ஒரு சூழ்நிலை இருக்கிறது. இத்துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்கப்படவில்லை. குறிப்பாகச் சொன்னால் விலைவாசியை மையமாக வைத்து அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. ஆகவே, அரசு ஊழியர்களுக்கு ஒருவிதமான சலுகையும், இங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு ஒரு விதமான நிலைமையும் இருக்கிறது. இரவு பகலாகப் பணியாற்றக்கூடிய அந்த ஊழியர்களுக்குத் தேவையான ஊதியம், அரசு அளிக்கக்கூடிய சலுகைகள் முழுவதும் கிடைக்கப்படாமல் இருப்பது நியாயமானதல்ல. ஆகவே, அவர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து, அரசு ஊழியர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகளை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு அங்காடிகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் பற்றாக்குறை இன்னமும் இருக்கிறது. அதனால் கூட்டுறவுத் துறை மூலம் அங்காடிகளை விஸ்தரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஊழியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வழங்கக்கூடிய சம்பளம் என்பது மிகக் குறைவு. ஆகவே, இன்றைக்கு ஏறி வருகிற விலைவாசி அவர்களுடைய குடும்பச் சூழ்நிலை, இவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, அந்த அங்காடிகளில் பணியாற்றுகிற ஊழியர்கள் நிச்சயமாக தங்களுடைய குடும்ப வாழ்க்கையை நடத்த முடியாமல், ஒரு பொருளாதார நெருக்கடியில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, விலைவாசியை மையமாக வைத்து அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த கூட்டுறவு அங்காடிகளுக்கு அனுப்பக்கூடிய பொருள்கள் எடைக் குறைவதாக அவர்கள் சொல்கிறார்கள். பல கடைகளில் பறக்கும் படை மூலம் இப்போது சோதனை செய்யப்படுகிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 40 அங்காடிகளை அன்றாடம் சோதிப்பதற்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல அம்சம். ஆனால், கடைசியில் கணக்கு பார்க்கிறபோது எடைக்குறைவு ஏற்படுகிறது. அதனால் நாங்கள் தவறு செய்து விட்டதாக அரசு கருதுகிறது. ஆகவே, எங்களுக்கு கொடுக்கக்கூடிய பொருள்களை எடைக் குறையாமல் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் எடை குறையாமல் தலைமை நிலையங்களிலிருந்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் கூட்டுறவு அங்காடிகளில் விற்கக்கூடிய பொருள்களுக்கும், தனியார் விற்கக்கூடிய பொருள்களுக்கும் சில நேரங்களில் வித்தியாசம் வருகிறது. கூட்டுறவு அங்காடிகளில் விற்கக்கூடிய பொருள்களுடைய விலை கூடுதலாகவும், தனியார் கடைகளில் விற்கக்கூடிய பொருள்களுடைய விலை குறைவாகவும் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால், கூட்டுறவுத் துறையில் பொருள்களை டெண்டர் முறையில் பெறுகிறபோது, பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. ஒரு பொருளை கூட்டுறவுத் துறைக்கு வழங்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் 4, 5 மொத்த வியாபாரிகள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, இன்ன விலைக்குதான் போட

வேண்டுமென்று போட்டு விடுகிறார்கள். அதைத்தான் நாம் வாங்க வேண்டிருக்கிறது. அதை வாங்கி கடைகளில் விற்கிற போது, அதே பொருளை வெளி மார்க்கெட்டில் அவர்கள் குறைந்த விலைக்கு சில்லரை கடைகளுக்கு கொடுக்கிறார்கள். அப்போது ஜனங்களுக்கு ஒரு உணர்வு வருகிறது. கூட்டுறவுத் துறையில் அதிக விலையும், தனியார் கடைகளில் குறைந்த விலையும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அங்காடிகளில் கொடுக்கப்படுகிற, விநியோகிக்கப்படுகிற குடிமைப் பொருள்கள் அல்லது அத்தியாவசியப் பொருள்கள் விலை அதிகமாக இருக்கிறது என்றும், அதேநேரத்தில் தனியார் கடைகளில் விலை குறைவாக இருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். தனியார் கடைகளில் கொடுக்கப்படுகிற பொருள்களுக்கு அந்தத் தனியார்தான் உத்தரவாதம் தருகிறார்கள். அந்தத் தனியார் முதலாளிகள்தான் பதில் சொல்கிறார்களே தவிர, கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு விற்பனை பண்டகசாலையின் மூலமாக விநியோகிக்கப்படுகிற பொருள்களுக்கு கூட்டுறவுத் துறையே பதில் சொல்லியாக வேண்டும். பொதுமக்களுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

பிற்பகல் 12-45

அதுமட்டுமல்ல, கூட்டுறவுத் துறையின் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற பொருட்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தியாவிலே எங்கெல்லாம் எந்தந்தப் பொருட்கள் எந்தந்த காலகட்டத்திலே மலிவாகக் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் சென்று, அங்கே டெண்டரையோ அல்லது வேறுவிதமான நடைமுறைகளையோ கையாண்டு, அங்கே விலை குறைவாக வாங்கி வந்து, இங்கே விற்கிறோம். ஆக, தனியார் கடைகளிலே இருக்கின்ற விலைக்கும், கூட்டுறவு கடைகளிலே இருக்கின்ற விலைக்கும் அதிகம் என்று சொல்ல முடியாது. காரணம், இன்னொன்றையும் இங்கே எண்ணிப் பார்க்கவேண்டும். தனியார் கடைகளிலே தரத்தைப் பற்றியே மக்கள் கவலைப்படுவது கிடையாது. ஆனால், கூட்டுறவுத் துறையின் மூலமாக வினியோகிக்கப்படுகின்ற பொருட்கள், அந்தத் தரத்தையும் அந்தத் தரத்தினுடைய தகுதியையும், விலையையும் இந்தத் துறை தன்னுடைய

உள்ளத்திலே வைத்துக் கொண்டு, அந்த விலையை நிர்ணயிக்கிறது. இன்றைக்குக்கூட பத்திரிகைகளிலே நான் பார்த்தேன். பருப்பு வாங்குவதிலே தவறு இருப்பதாக ஏதோ ஒரு பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. நான் பதில் உரையை அளிக்கின்றபோது, அதற்கும் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு பொது மார்க்கெட்டிலே பலவிதமான வெரைட்டிஸ், பலவிதமான தனித் தனியான பொருட்கள் என்பது இருக்கின்றன. பருப்பு என்று வைத்துக் கொண்டால், ஒரு கிலோ 15 ரூபாய்க்குக் கிடைக்கிறது. 20 ரூபாய்க்கும் கிடைக்கிறது. 25 ரூபாய்க்கும் கிடைக்கிறது. இன்னும் சொல்லப்போனால், 31 ரூபாய், 32 ரூபாய்க்கும் பருப்பு கிடைக்கிறது. கூட்டுறவுத் துறையிலே கொடுக்கின்ற பொருட்களைப் பொறுத்தவரையில், எவ்வளவு உயர்ந்த தரம் உள்ள பொருட்கள் அதில் இருக்கின்றனவோ, அவைகளை வாங்கி வந்து, நாங்கள் கொடுக்கிறோம். ஆனால், தனியார் 15 ரூபாய்க்குக் கொடுக்கிற பொருட்களை வைத்துக் கொண்டு, அதை வாங்கிக் கொண்டு வந்து, அங்கே விலை குறைவாக இருக்கிறது, இங்கே விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்கிற அந்த வாதத்திலே எந்தவிதமான பிடிப்பும் இல்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி சில பொருட்களை நாம் வாங்குகிறபோது நம்முடைய உள்நாட்டிலேயே சில பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. மகசூல் காலங்களில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் விலை குறைக்கப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இந்த ஆண்டுகூட புளியினுடைய விலை குறைந்துவிட்டதாக, புளியை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் அந்தந்த மாவட்டங்களிலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் குறைந்த விலைக்கு வருகிறபோது, அந்த மார்க்கெட் விலையைவிட கொஞ்சம் கூடுதலாக வைத்து நாம் அந்தப் பொருட்களைக் கொள்முதல் செய்ய முடியும். சென்ற ஆண்டு, அதேபோல், மிளகாய் விலை வீழ்ந்துவிட்டதாக விவசாயிகள் கூறினார்கள். அப்படிப்பட்ட உற்பத்திக் காலங்களில், ஏற்படுகிற விலை வீழ்ச்சியை ஓரளவிற்கு பயன்படுத்தி, விவசாயிகளுக்கு லாபம் கிட்டவும், நமக்குக் குறைந்த விலையில் அந்தப் பொருட்களை நேரடியாகக் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு வங்கிகளிலே கடன் வழங்கப்படுகின்றது. இன்றைக்கு நிலவள வங்கிகளில் கடன் வழங்கப்படுகிறது. நிலவள வங்கிகளில் சிறு/குறு ·விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்குக் கடன் வழங்கப்பட்டது. இந்த பம்ப் செட் கடன்கள், இதுவரையில் கட்டப்படாமல் பாக்கி இருக்கிறது. சிறு குறு விவசாயிகளுக்குத் தொடர்ந்து ஏற்பட்ட இயற்கை பாதிப்பின் காரணமாக, கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. நான் சென்ற ஆண்டுகூட இதைச் சொன்னேன். அதன்மீது இருக்கிற வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்தாலும், அசலைக் கட்டிவிடுவார்கள் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த வாதத்திலே எந்த அளவிற்கு வலிமை இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக, வங்கிகள் மூலமாக, விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னால் ஏதோ கூட்டுறவுச் சங்கங்கள் அங்கே பணத்தை உருவாக்கி, அவர்களே தயார் செய்து மக்களுக்கு அந்தக் கடன் வசதியைத் தருவது அல்ல. இந்தக் கூட்டுறவுத் துறையே நபார்ட் வங்கியிலேயிருந்து பணத்தைக் கடனாகப் பெற்று அவர்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டியையும் நாம் செலுத்தி, அந்தப் பணத்தை நம்முடைய கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்குக் கடனாகத் தருகிறோம். ஆகவே, இன்றைக்கு ஒரு விவசாயி கூட்டுறவுத் துறையின் மூலமாக கடனைப் பெற்று, அந்தக் கடன் மூலமாக அவர்கள் வசதிகளை எல்லாம் பெற்றுவிட்ட பிறகு அந்தப் பணத்தைக் கூட்டுறவு வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தவில்லை என்று சொன்னால் உண்மையிலே வாங்கியக் கடனைத் திருப்பித் தரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அந்தக் கடனை குறித்த காலத்திலே தந்த அந்த விவசாயிகளுக்குக் கடன் வசதி இல்லாது போகின்ற அந்த நிலைமை இன்றைக்குத் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அங்கே நபார்டு கடன் தரவில்லை என்று சொன்னால், இங்கே விவசாயிகளுக்கு நாம் கடன் தர முடியாது. ஆகவே, இப்போது வட்டியைக் குறைக்க வேண்டும் அல்லது வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற அந்த வாதத்திற்கே இடமில்லை. காரணம், அங்கே வட்டியை நாம் தள்ளுபடி செய்தால், நபார்டு வங்கியிலே நமக்குக் கிடைக்கின்ற அந்த நிதி ஆதாரமே போய்விடும். அப்படி நிதி ஆதாரம் போய்விடுகிறது என்று சொன்னால், இங்கேயிருக்கிற விவசாயிகளுடைய வயிற்றிலே நாம் அடித்துக்

கொண்டிருக்கிறோம், அவர்கள் செய்யவேண்டிய பயிரை நாம் பாழடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தவிர, அதற்கு வேறு ஒரு பொருள் அல்ல. நீங்கள்கூட பார்த்திருக்க முடியும். இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுக்கின்ற கடன் எப்படிப் பட்டது என்று சொன்னால், நீங்கள் ஒரு கண்காட்சிக்குச் செல்லுகிறீர்கள் என்று சொன்னால், அங்கே ஒரு நீருற்றை வைத்திருப்பார்கள். அந்த நீருற்று, விதவிதமான வண்ணங்களிலே மேலே வந்து, கீழே உள்ள அந்தத் தொட்டியிலே விழுந்து, அதே தண்ணீர்தான் மீண்டும் மேலே வருகின்ற அந்த நீருற்றுக்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

பிற்பகல் 12-50

அப்படித்தான் கூட்டுறவுத் துறையின் மூலமாக கொடுக்கப்படுகின்ற கடன்கள் எல்லாம் 'ரீ சைக்கிளிங் ஆஃப் தி ஃபைனான்ஸ்' - அதாவது கொடுக்கப்பட்ட அந்தக் கடன்களிலேயிருந்து நாம் மீண்டும் மீண்டும் சுற்றி சுற்றி வந்து அவர்களுக்குக் கொடுக்கிறோம். ஆகவே, வட்டியைத் தள்ளுபடி செய்வது என்பது இன்றைக்கு நபார்டு வங்கி அந்த விதிமுறைகளை, நிபந்தனைகளை தளர்த்துமேயானால், தமிழக அரசுதான் முதலிலே அந்த வட்டியைத் தள்ளும் என்பதை நான் உங்களுக்கு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது கூட்டுறவு வங்கியிலே கடன் பெற்றால் கொடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல. இந்த பம்ப் செட்டுகளுக்காக வழங்கியிருக்கிற கடன் நீண்டகாலமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்பு. சிறு/குறு விவசாயி ஒரு ஏக்கர், அரை ஏக்கர் உடைய அந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடன் மிகக் குறைந்த அளவிலே வழங்கப்பட்டது. இந்தக் குறைந்த அளவு கடனில் அந்த வட்டி முழுமையும் தள்ளினால் அசலைக் கட்டிவிடுவார்கள். ஆனால், இப்போது கட்டியிருக்கிற பணத்தையே நீங்கள் கணக்கு பண்ணினால்கூட நாம் வழங்கிய அசலுக்கு அது சரியாகப் போய்விடும். அதனாலே இதிலே எந்த பாதிப்பும், எந்த நஷ்டமும் கூட்டுறவுச் சங்கத்திற்கு வராது. ஆகவே, இப்படி நீண்டகாலமாக கடன் இருப்பதாகச் சொல்லி, அதன்மீது வட்டி, அபராத வட்டி என்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அதை முழுவதும் அசலாக மாற்றி, இப்படி விவசாயிகளுக்கு கொடுக்கக் கூடிய நிர்பந்தத்தைத் தவிர்ப்பதற்கு அரசு அதைப் பரிசீலித்து, அந்த வட்டி முழுமையும் தள்ளினால் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன்

நிச்சயமாகக் கிடைத்துவிடும். இதிலே மறுபடியும் எந்தப் பிரச்சினையும் இருக்காது. எந்தப் பாக்கியும் இருக்காது.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு கடனை வாங்குகிறபோது அசல் ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்கள் என்று வாதத்திற்காக வைத்துக் கொள்கிறோம். மூன்று ஆண்டுகளாக அதற்கு வட்டியே தரவில்லை என்று சொன்னால், ஏறத்தாழ ரூ. 1,000 அல்லது ரூ. 750 வட்டி வருகிறது என்று இங்கே வாதத்திற்காக வைத்துக்கொள்வோம். ஆக இந்த ரூ. 1000 அசலையும் தரவில்லை. வட்டியும் தரவில்லை. ஆக இந்த ரூ. 1750 இருக்கிறதே அதற்கு நாம் நபார்டிலே பதில் சொல்லியாகவேண்டும். அதாவது கேட்பிலே 40 சதவீதம் இருந்தால்தான் நபார்டு நமக்கு அங்கே நிதியுதவியைத் தரமுடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம், அவர் இருக்கின்ற பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி வாங்கிய கடனை குறித்த காலத்திற்குள்ளே திருப்பித் தாருங்கள். உங்களுக்கு உடனடியாக கடன் வசதிகளைத் தருவதற்கு கூட்டுறவுத் துறை தயாராக இருக்கின்றது என்கின்ற அந்தக் கருத்தினை அவர் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குச் சொல்ல வேண்டும். அதிலே இன்னும் சொல்லப்போனால் the hon. Member should try to educate the people. அவர்களுக்கு இதைச் சொல்லி, அறிவுரைகளைச் சொல்லி வாங்கிய கடனைத் தாருங்கள் என்று சொல்ல வேண்டிய கடமையை உறுப்பினரவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதைச் சொல்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாங்கிய கடனைக் கொடுக்கவேண்டாம் என்று நான் கோரவில்லை. வாங்கிய கடனைத் திரும்பக் கட்ட வேண்டாம் என்று எந்த விவசாயி இடத்திலும் சொல்லவில்லை. கட்ட வேண்டுமென்று தான் சொல்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட நிலைமைகள் வருகிற போது நபார்டு வங்கியினுடைய வட்டியையும் விவசாயிகளுக்கு வழங்கக் கூடிய வட்டி விகிதாச்சாரத்தையும் பார்க்கிறபோது நபார்டு வங்கியில் வாங்கியிருக்கக் கூடிய அந்தக் கடனை இந்த வட்டி ஈடு செய்துவிட முடியும். அந்த அளவிற்கு ...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்.

***திரு. கி. பாலசுப்பிரமணியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது எதிர் தரப்பைச் சார்ந்த தம்புசாமி அவர்கள் இந்தக் கடன்கள் வழங்கப் படும்போது அதை திருப்பித் தரக்கூடாது என்ற நோக்கத்துடன் இல்லை என்று சொன்னார்கள். அது முற்றிலும் தவறானது. வாங்கும்போது வாங்கிவிடுகிறார்கள். ஆனால் கட்டுவதற்கு இல்லாமல் பல பாங்கிகளிலே பணங்கள் முடக்கப்பட்டு, வட்டியும் கொடுக்கவில்லை, பிரின்சிபில், அதாவது முதலீட்டையும் கொடுக்கவில்லை. இதுமாதிரி கடன் வழங்கும்போது பாங்குகளிலிருந்து இனிமேல் கோவாப்பரேடிவ் சொசைட்டிகளுக்கு கொடுக்கப்படுவது இல்லை என்று சில நபர்களை ரிஜெக்ட் செய்திருக்கிறார்கள். இதுதான் உண்மை. இதைப் பார்க்கிறபோது கோவாப்பரேஷன் சிஸ்டத்திலே நபார்டிற்கு - அவர்களுக்கு ஆன்சர் பண்ண வேண்டிய நிலைமையில் இருக்கிறோமே. வட்டியையும் முதலையும் சேர்த்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அவர்கள் கட்டிவிடுவார்களேயானால், பளு குறைந்துவிடும். அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போல திருப்பியும் கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய பகுதியிலே இருக்கக்கூடிய கடன் வாங்கியவர்களிடம் சொல்லி, அதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

The Hon'ble Mr. DEPUTY SPEAKER: This is not a point of order. This is only a self-explanation by the hon. Member.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் கூறியதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுவிட்டார்கள். அதிலே கருத்து வித்தியாசமே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு கருத்தையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வங்கியிலிருந்து கடனைப் பெறுகிறார்கள் என்று சொன்னால், அந்த அசலும் வட்டியும்

சேர்த்துத்தான் அவர்கள் இந்தக் காலக் கட்டத்திற்குள்ளே திரும்பச் செலுத்த வேண்டும் என்கிற அந்த நீதி இருக்கிறதே, அது சட்டப்படி வாங்கியது ரூ. 1000 அசல் என்று சொன்னாலும், திரும்பத் தருகின்றபோது அந்த வட்டியும் சேர்த்துத்தான் கட்டவேண்டும்.

பிற்பகல் 12-55

அதற்குத்தான் அங்கே ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அந்த வட்டியையும் சேர்த்து கட்ட வேண்டும் என்று அங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் கூட செய்திப் பத்திரிகையிலே நேற்றைய தினம் பார்த்திருக்கிறேன். இன்றைக்கு நபார்ட் எந்த நடைமுறைகளுக்கு எந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், ரிசர்வ் வங்கியினுடைய விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நபார்ட் தன்னுடைய பணத்தை கடனாக மற்ற பல்வேறு கூட்டுறவுத் துறைகளுக்குத் தருகிறது. மைய அரசின் நிதியமைச்சராக இருக்கிற திரு. மன்மோகன் சிங் அவர்கள் கூட 2, 3 நாட்களுக்கு முன்னாலே என்று கருதுகிறேன், அவர்கள் இனி கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பெற்ற கடன்களுக்கு எந்தவிதமான விலக்கும் அளிப்பது கிடையாது என்கிற முடிவிற்கு வந்திருக்கிறது என்கிற செய்தியையும் சொல்லியிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையின் மூலமாக படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னக் கருத்தோடு நேற்றைய்தினம் மாண்புமிகு மைய அரசினுடைய நிதியமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு வழங்குகின்ற எந்தவிதமான கவர்ச்சிகரமான சலுகைகளுக்கும் எந்த நிதியையும் மத்திய அரசாங்கம் தராது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீங்கள் சொல்லுகிற கருத்து கூட்டுறவுத் துறைக்கு மட்டுமா அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கும் பொருந்துமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது வங்கிக்கு மட்டும் அல்ல. பொதுவாகத் தொழில் என்பதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். இன்றைக்கு அழியக் கூடியது வேளாண்மைத் தொழில், மற்றொன்று மூலதனத் தொழில், பேக்டரி போன்றவைகள் இருப்பது, வேளாண்மை அப்படிப்பட்ட தொழில் அல்ல. வேளாண்மை செய்திருக்கிறவர்களுக்கு

ஒரு புறத்திலே வறட்சி வருகிறது, புயல் வருகிறது, வெள்ளம் வருகிறது. இந்தத் தொழிலில் எந்த மூலதனத்தை எதிர்பார்த்து விவசாயிகள் சாகுபடி செய்கிறார்களோ, அது பாதிக்கப்படுகிறபொழுதுதான் விவசாயிகள் கட்ட முடியாத ஒரு நிலைமை வருகிறது. இப்போது இந்தக் கடன்களைப் பார்த்தால் 10 ஆண்டுகளுக்கு முன் பெற்ற முழுமையான கடனாக இருந்திருக்கும். சென்ற ஆண்டு வாங்கிய கடனை கட்டவில்லையா அதற்கு முந்தைய ஆண்டு வாங்கிய கடனை கட்டவில்லையா, கடன் கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதிலே யாருக்கும் கருத்து வித்தியாசம் கிடையாது. இயற்கைப் பாதிப்பு வருகிறபொழுது அந்தப் பாதிப்பு நேரங்களிலே அரசாகவே கூட பாதிப்புகளை உணர்ந்து கடனை ஒத்தி வைக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில் ஏற்படக்கூடிய அந்தக் கடன்களில் குறைந்த பட்சம் வட்டிச் சலுகையாவது அளித்தால் அந்தக் கடன் முழுமையாக வந்து விடும். கடன் பாக்கி இருக்காது. அதனாலே திருப்பி கடன் கொடுக்கிறபொழுது நமக்கு ஏற்பட்ட நஷ்டமும் ஈடாகிவிடும். ஆகவே, அந்த வட்டியை தள்ளுபடி செய்து சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்களினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு அவர்கள் கடனையெல்லாம் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதுவரையிலும் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே தான் பயிர்ஈட்டுக் காப்புறுதி என்ற திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய்களை கொடுத்திருக்கிறார்கள். அதை எப்படி கூட்டுறவுத் துறையினர் கணக்கிலே பிரித்து வைத்திருக்கிறார்கள் என்றால் எந்தெந்த பகுதியிலே இயற்கைச் சீற்றத்தினால் மகசூல் கிடைக்கவில்லை என்பதற்கு ஒரு வரையறை வைத்திருக்கிறார்கள். அதாவது ஒரு பிளாக்கிலே 8 இடங்களைத் தேர்ந்து எடுத்து, அந்த 8 இடங்களிலே கிடைத்திருக்கிற மகசூலைப் பார்த்து அதை அறுவடை செய்த கணக்கு எடுத்து அதிலே குறைவாக இருக்கிற இடங்களிலே வந்திருக்கிற அந்த மகசூலை வைத்து குறைவாக இருக்கிறது என்று சொன்னால் அந்தப் பகுதி இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதிலே கூட அந்த 8 பகுதியிலே இரண்டிரண்டு இடங்களிலே அவர்கள் டெஸ்ட் முறையிலே மகசூலை

சோதனை செய்து, அந்த அளவுக்கு எடுக்க வேண்டும் என்று ஒரு விதிமுறை இருக்கிறது. அது மட்டும் அல்ல இன்றைக்குப் பயிர் ஈட்டுக் காப்புறுதி-இன் மூலமாக, கட்டுகின்ற கடன்கள் 3 ஆண்டுக் காலக் கட்டத்திற்கு-- பத்தாயிரம் ரூபாய்க்கு ஒருவர் இன்ஸ்ஷ்யூரன்ஸ் செய்திருக்கிறார் என்று சொன்னால், அந்த இயற்கைச் சீற்றத்தினால் மகசூல் அங்கே குறைந்து விட்டது என்று சொன்னால், அவர் பெறுகிற இன்ஸ்ஷ்யூரன்ஸ் பத்தாயிரம் ரூபாயை அவர்கள் வாங்கிய கடனுக்கு மூன்றாகப் பிரித்து, மூன்று கடன்களுக்குத் தனித் தனியாகப் பிரித்து வைத்துக் கொள்கிறார்கள். ஆகவே இயற்கைச் சீற்றத்தினால் வருகிற அந்த நிலைமையில் விவசாயிகள் பாதிக்கப்படுவது இல்லை. இயற்கை சீற்றத்தினால் எந்த அளவுக்கு இன்ஸ்ஷ்யூரன்ஸ் அமௌன்ட் பெறுகிறார்களோ அந்த அளவுக்கு நன்மை பெற்று வருகிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களே இந்த இன்ஸ்ஷ்யூரன்ஸ் பெறுவது என்பது இந்த ஆண்டு மட்டும் தான், வேறு எந்த ஆண்டும் கிடையாது. ஆகவே, நான் கூறுவது இந்த ஆண்டுக் கடனைப் பற்றிச் சொல்லவில்லை. இதற்கு முன்னால் இருக்கக் கூடிய இன்ஸ்ஷ்யூரன்ஸ் தொகை பெறாத காலங்களில் ஏற்படக் கூடிய நஷ்டத்திலிருந்து விடுவிக்க குறைந்த பட்சம் பம்புசெட்டுகளுக்கு வாங்கியிருக்கக் கூடிய கடனுக்காவது வட்டியையாவது தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

அடுத்து, நகைக்கடன் வழங்குகிறபோது, அதற்கான நில தஸ்தாவேஜுக்கள், சிட்டா, அடங்கல், நகல்கள் முழுமையும் வாங்க வேண்டியிருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், விவசாயிகளுக்கு அட்டைகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிலம் இருக்கிறது என்று பார்த்து, சிறு விவசாயியா, குறு விவசாயியா அல்லது நடுத்தர விவசாயியா என்று பார்த்து அட்டைகள் வழங்கப்படுகின்றன. அந்த அட்டைகளின் அடிப்படையிலே இந்தக் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு வேறொரு தஸ்தாவேஜு தேவையில்லை. குடும்பக் கார்டு இருக்கிறது. அதிலே, அரசால் அளிக்கப்பட்ட அந்த அட்டையின் அடிப்படையிலே கடன் வழங்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அட்டை வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலே கடன் தரலாம் என்றும் சொல்லுகிறார்கள். இதிலே இருக்கிற சட்டப் பிரச்சினை என்னவென்று சொன்னால், அட்டை வழங்கப்பட்ட பிறகு, அந்த நிலம் மாற்றாருக்கு மாற்றப்பட்டு இருந்தால், உரிமை வேறொருவருக்கு மாற்றப்பட்டிருந்தால், அந்த அட்டையிலே அது வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு சொத்திருக்கிறது என்று சொன்னால், அந்த சொத்தின்மீது கூட்டுறவுத் துறையினுடைய வங்கிகள் கடன்கொடுக்கிறது என்றால், என்கம்பரன்ஸ் சர்டிபிகேட், வில்லங்கம் சர்டிபிகேட் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக தஸ்தாவேஜுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அது மட்டும் அல்ல. இன்றைக்கு சட்டத் துறையிலே பார்க்கின்றபோதுகூட இன்னொரு பிரச்சினை வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு விவசாயி இங்கே கடன் பெற்று, அந்த சொத்தின் மீது, வேறொருவர் மீது அங்கே நீதிமன்றத்திலே வழக்கு ஏற்பட்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அந்த சிவில் நீதிமன்றத்திலே ஒரு அட்டாச்மெண்டு அதாவது இந்த சொத்தை இந்த வழக்கு முடிகிற வரையிலே வேறொருவருக்கு மாற்றம் செய்யக் கூடாது என்கிற ஒரு அட்டாச்மெண்டு, கோர்ட்டினுடைய அட்டாச்மெண்டு என்று சொன்னால், அது வில்லங்க சர்டிபிகேட்டிலே வராது. அப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் இந்த அட்டையிலே வருகிறது என்பதற்காகத்தான் தஸ்தாவேஜுகள் வேண்டுமென்று கூட்டுறவுத் துறையினர் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு நிலம் வாங்குவதற்காக கடன் வழங்கப்படுகிறது. அப்படி நிலம் வாங்குவதற்காகக் கடன் வழங்குகிறபொழுது அது 20,000 என்று இருக்கிறது. இன்றைக்கு ஒரு

ஏக்கர் குறைந்தபட்சம் 30 ஆயிரத்திலிருந்து 35 ஆயிரம் வரையிலும் விலை போகிறது. அந்த அளவுக்கு அந்த முழுத் தொகையையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதிலே ஒரு சிக்கல் என்னவென்றுச் சொன்னால், குத்தகை சாகுபடி செய்கிறார்கள். குத்தகைக்கு நிலத்தை வைத்திருப்பவர்கள், வெளியூர்களிலோ, சென்னையிலோ அல்லது மற்ற இடங்களிலோ அதிகாரிகளாக பணியாற்றுகிறார்கள். அந்த நிலத்தை வாங்குகிறபொழுது, விற்க வருகிறவர்களிடம், சாகுபடி செய்கிறவர்களிடம் பணம் கிடையாது. அந்தப் பணத்தை பெறுவதற்கு வழியும் கிடையாது. ஆகையால் வேறொருவருக்கு விற்கிறபொழுது, விற்கிறவர்களுக்கும், இவர்களுக்கும் கடுமையான தகராறுகள் தொடர்ந்து இருக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அந்தக் குத்தகை சாகுபடி செய்யக்கூடியவர்கள், நிலச் சொந்தக்காரர்கள் விற்க விரும்பினால், நிலத்தை சாகுபடி செய்யக்கூடியவர்கள் அதை வாங்க விரும்பினால், அதற்கான கிரயத் தொகையைக் கொடுத்து, வேண்டுமென்றால் வங்கிச் சாசனத்தை வாங்கிக்கொள்ளலாம். இன்றைக்குச் சர்வோதய இயக்கத்தின் மூலம் அப்படி நிலம் வாங்குபவர்கள் சாசனத்தை அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். பணம் கட்டிய பிறகுதான், சாசனம் திரும்பக் கொடுக்கப்படுகிறது. அந்த வழிமுறைகளை கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று, பம்ப் வழங்குவது இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சாகுபடி செய்யமுடியாத நிலைமைகள் ஏற்படுகின்றபொழுது, பம்ப் தேவைப்படுகிறது. ஆகையால் அவர்களுக்கு பம்ப்-கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, தொழிற் கடன்கள். சைக்கிள் தொழில் போன்ற தொழில்களுக்குக் கடன்கள். கிராமத்திலிருக்கிற கூட்டுறவு வங்கிகள் கொடுக்க வேண்டும். ஏனென்றால் சர்க்காரிலிருந்து நாம் கடன் கொடுக்கின்றபோது அதற்கான மானியத் தொகையும் முதலிலேயே வங்கிகளுக்கு வழங்கப்படுகிறது. அந்த வங்கி இப்பொழுது இருக்கக்கூடிய மற்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர நம்முடைய வங்கிகளுக்குக் கொடுப்பதில்லை. ஆகவே, அந்த மானியக் கடனை நாம் பெற்று, அந்தக் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோன்று, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்திலே ஒரு உத்தரவு இருந்தது. 25 சதம் கட்டியிருந்தால் மீதம் தள்ளுபடி செய்யப்படும் என்று இருந்தது. ஆனால், அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் பலர் அந்தச் சமயத்தில் வீடு கட்டினார்கள்.

வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்திலே, தள்ளுபடி செய்யப்பட்ட அந்தக் கடனை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, அந்தக் கடன் டிராக்டர்களுக்கெல்லாம் வழங்கப்படுகிறது. கிராமத்தில் இருக்கிற வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்த படித்த பட்டதாரிகளுக்கு அந்த குவேட்டா ஒரு சிறு தொழில் மாதிரி. அந்த குவேட்டா, அதனுடைய விலை கிட்டத்தட்ட 60 ஆயிரம் ரூபாய் என்று நினைக்கிறேன். அவர்கள் அந்த குவேட்டாவை வேளாண்மைத் துறையில் பயன்படுத்தி, வருமானம் வருவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இருக்கும். இன்றைக்கு 2 லட்சம், 2½ லட்சத்திலே டிராக்டர்கள் வழங்கப்படுவதை விட 60 ஆயிரத்திலே வேளாண்மை குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோன்று, விவாசாயிகள் விரும்புகின்ற உரத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

பிற்பகல் 1-05

உதாரணத்திற்குச் சொன்னால் இன்றைக்கு சூப்பர் பொட்டாஷ் யூரியா தனித்தனியாக அவர்களுக்குக் கிடைக்குமேயானால் தங்களுடைய தேவைக்கேற்ப அதை பயன்படுத்திக்கொள்ள முடியும். முதலிலே சூப்பர் போடலாம். சூப்பர் போட்டு 20 நாள் கழித்து பொட்டாஷ் யூரியா பயன்படுத்தலாம். இப்படி அந்த உரம் இல்லாததனால் விவசாயிகள் சிரமப்படுகிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இப்படி தனி உரத்தை கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த உரங்கள் விநியோகிக்கப்படுகின்றபோது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற அந்த உரங்கள் விவசாயிகள் எந்த உரத்தைக் கேட்கிறார்களோ அதைத்தான் தர முடியும். அவர்களும் அதைத்தான் வாங்குவார்கள். இன்னும் சொல்லப்போனால், நகரத்திலே இருப்பவர்களைவிட கிராமங்களிலே இருக்கின்ற விவசாயிகள் நல்ல விவரம் தெரிந்தவர்கள். அவர்கள் கேட்கின்ற உரத்தை அல்லாமல் வேறு ஒரு உரத்தை நாம் விநியோகிக்கின்றபோது வாங்குங்கள் என்று வாதத்திற்காக வற்புறுத்துகிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும்கூட அதை அவர்கள் வாங்க மாட்டார்கள். அப்படித்தான் இன்றைக்கு நிலைமை. இன்றைக்கு ஒரு உரம் கிடைக்கவில்லை என்று சொன்னால்

அந்த உரத்தை கூட்டுறவுத் துறையின் மூலமாக அந்தக் கடைக்கு வந்து கேட்கிறார்கள். அது இல்லையென்றால் பொதுச் சந்தைக்குப் போய் வாங்குகிறார்கள். அதே வாதந்தான் வேறு ஒரு உரத்தை தருகிறார்கள். அதை வாங்க வேண்டுமென்று விவசாயிகளை வற்புறுத்துகிறார்கள் என்று சொன்னால் விவசாயிகள் இதே வாதத்தைப் பின்பற்றி இங்கு இல்லை என்றால் நான் கேட்கின்ற உரத்தை நான் வெளியே போய் வாங்கிக் கொள்கிறேன் என்கின்ற அந்த நிலைமை வரும். ஆக உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்து இருக்கின்றதே, அந்தக் கருத்து இதுவரையிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வற்புறுத்தப்படவில்லை என்று தெரிவித்து அப்படி யாராகிலும் வற்புறுத்தியிருப்பார்களானால் அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக எல்லாவிதமான நடவடிக்கையும் அந்த அதிகாரிகள் மீது எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி பேசி முடித்துவிடலாம். நேரம் இல்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே எனக்குக் கருத்து வித்தியாசம் கிடையாது. நன்றி. ஆனால் ஒன்று, என்னவென்றால் இப்போது விதைப்பு விவசாயம், நீர் வந்து நடவு நடக்கூடிய விவசாயம் என்று இரண்டு விவசாயங்கள் எங்கள் மாவட்டத்திலே பின்பற்றப்படுகின்றன. அந்த விதைப்பு விவசாயம் பண்ணுகின்றபோது கோடைக்காலத்திலே சூப்பரை போட்டு உழுது விடலாம். அது வீணாகாது. தண்ணீர் வந்த பிறகு நடுகின்றபோது யூரியா பொட்டாஷ் போடலாம். அப்படிப் பயன்படுத்துகின்றபோது இதே கலப்பு உரத்தை முன்னாலே தரிசிலே போட்டு உழ முடியாது. நடவு நடுகின்றபோதுதான் பயன்படுத்த முடியும். அதனால் விதைப்பு விவசாயம் பயன்படுத்தக்கூடிய விவசாயிகள் முழுவதும் இந்த சூப்பர் தனியாகவும், பொட்டாஷ் தனியாகவும், யூரியா தனியாகவும் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படிக் கிடைத்தால் அவர்களுக்குச் சுலபம். அந்த வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி பேசி முடித்து விடலாம். 12.38க்கு நீங்கள் ஆரம்பித்தீர்கள். எதிர்க்கட்சிகளுக்கு

அதிகமாக வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் உங்களுக்கு நான் அதிக நேரம் கொடுத்திருக்கிறேன். இதோடு உரையை முடித்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

திரு. வே. தம்புசாமி: துணைத் தலைவர் அவர்களே, அதே போன்று இந்த களைக்கொல்லி மருந்து தரம் இல்லாத மருந்தாக இருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள். தரம் உள்ள மருந்தாக வழங்க வேண்டும். அதை வாங்க நிர்பந்தப்படுத்தக் கூடாது என்றுச் சொல்லி இந்த மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகின்றபோது இந்த வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலே காலியிடங்கள் இருக்கின்றன. அவைகளை பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக இப்போது ஒரு ரெக்ரூட்மென்ட் பீரோ, அதாவது யார் யாரை வேலைக்கு எடுக்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுப்பதற்காகவே ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இவ்வளவு காலம் வரையிலே அதிலே ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னால் பல்வேறு தொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து எங்களைத் தவிர வேறு யாரையும் இதிலே பொதுவாக எடுக்கக்கூடாது என்கின்ற அடிப்படையிலே வழக்குகள் இருந்தன. அந்த வழக்குகளை இப்போதுதான் அந்தந்த சங்கங்களே திரும்பி பெற்றுக்கொண்டுவிட்டன. ஆக, இனிமேல் அந்த காலியிடங்களை பூர்த்தி செய்வதற்கு விரைவான எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, வஞ்சக நெஞ்சத்தோடு துரோக மனப்பான்மையோடு குறுக்கு வழியிலே இந்த ஆட்சியை வீழ்த்த வேண்டுமென்று எண்ணுவோரின் எண்ணத்தை எல்லாம் தூள் தூளாக்கி இன்றைக்கு மக்கள் தலைவியாக இந்த

மக்களுக்கு சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்ற எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி இந்த கூட்டுறவு மானியத்திலே பேசும் முன் மணப்பாறைக்கும் அதைச் சுற்றியுள்ள 59 கிராமங்களுக்கும் குளித்தலையிலிருந்து காவிரி குடிநீர் வழங்கிய என் அன்புத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறி இந்த கூட்டுறவுத் துறையிலே சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். கூட்டுறவுத்துறை என்பது தமிழகத்திலே மிகவும் சிறப்பாக விளங்குகின்ற துறையிலே ஒன்று என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். கூட்டுறவுத் துறையை இன்று பயன்படுத்தாத மக்களே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு அத்தனை துறையிலும் கூட்டுறவுத் துறை பரந்து இருக்கிறது.

பிற்பகல் 1-10

இந்தக் கூட்டுறவு துறை கிராமப் பகுதிகளில் விவசாயப் பொருட்களை விளைவிப்பதற்கும், விவசாய பெருங்குடி மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கும் முயன்று நன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல், அங்கே விளைந்தப் பொருட்களை எடுத்து கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும், நாட்டில் இருக்கின்ற நகர மக்களுக்கும் விநியோகம் செய்வதும் கூட்டுறவுத் துறை தான். ஆகவே, இந்தத் துறையின் மூலமாக 80 சதவீத மக்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தால் அது மிகையாகாது. அதனால்தான் இந்தத் துறை உயர்வு பெற்றால்தான் நாடு உயரும் என்று சொல்லியிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அதனால் தான் கூட்டுயர்வே நாட்டுயர்வு என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்கு இந்தத்துறை சிறந்து இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை இங்கே அறிவித்து இருக்கிறார்கள்.

ஆண்டுக்கு ஆண்டு இந்தத் துறை வளம் பெற்று இருந்தாலும்கூட இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலே சில திட்டங்களை மாண்புமிகு அமைச்ச்ர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். உதாரணமாக சொல்லப்போனால் நகைக் கடனாக 25 ஆயிரம் ரூபாய் என்று வழங்கிக்கொண்டு இருந்த இந்த அரசு இன்று கிராமத்தில் இருக்கின்ற ஏழை விவசாயிகளாக இருந்தாலும் சரி, சற்று கூடுதல் விவசாயம் பெற்ற விவசாயிகளாக இருந்தாலும் சரி அதை 40

ஆயிரம் ரூபாயாக உயர்த்திருப்பது அந்தப் பகுதியில் உள்ள விவசாய குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு அது வழி வகுக்கும் என்பதில் நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் சவரனுக்கு 2200 ரூபாய் என்று கடன் கொடுத்த இந்தத் துறை இன்று அதிலே 2400 ரூபாய் என்று உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது ஆகும்.

அதேபோல், சிறு வியாபாரிகளுக்கு நகரப் புறத்தில் இருப்பவர்களுக்கு 500 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருந்த இந்த வங்கி இன்று 750 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இங்கே கூட்டுறவுச் சங்கங்களிலே திருடு போகிறது என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் அதையெல்லாம் பாதுகாக்க சென்ற ஆண்டு 150 பெட்டகங்கள் கொடுத்து இருந்தாலும் கூட இந்த ஆண்டு இன்னும் 200 பாதுகாப்புப் பெட்டகங்கள் கொடுக்க இருக்கிறார்கள். ஆகவே, கிராமப்புறத்தில் நகைகளை வைத்துக்கொள்ளவும் அல்லது மற்ற பணங்களை வைத்துக் கொள்ளவும் அது பாதுகாப்பாக இருக்கும். நிதியைப் பாராமல் இந்த உதவிஂய கிராம வங்கிகளுக்கு செய்து இருப்பதற்கு நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் இந்த ஐ.ஆர்.டி.பி. லோன் மூலமாக பால் உற்பத்தி செய்வதற்கு பால் மாடுகள் வாங்குவதற்கு கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதை எல்லாம் கூட இந்த மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆராய்ந்து அந்தக் கிராமப் பெண்களுக்கு அங்குள்ள பால் பண்ணைகளுக்கு பால் மாடு வாங்குவதற்கு கடன் கொடுத்தால் அது மிகவும் சிறப்பாக அமையும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், ஐ.ஆர்.டி.பி. லோன் வழங்கும்போது நேஷனலைஸ்டு வங்கிகள் கடன் தர மறுக்கிறார்கள். அவர்கள் யாருக்கோ கொடுத்துவிட்டு போய்விடுகிறார்கள். ஆகவே, அதையும் கிராம தொடக்க வேளாண்மை வங்கிகள் எடுத்துக் கொண்டால் அந்தப் பணியாளர்களை வைத்து அந்த ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கவேண்டும் என்று பணித்தால் அந்தக் கிராமத்தில் இருக்கின்ற ஏழை, எளியவர்கள் யார் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் யார் என்பதை எல்லாம் அவர்கள் ஆராய்ந்து, கடனைத் திருப்பிச்

செலுத்தக்கூடிய தன்மை உடையவர்கள் யார்? அந்தத் தொழில் செய்பவர்கள் யார்? என்பதை எல்லாம் ஆராய்ந்து அந்தக் கடன் வழங்குவதற்கும் அதைத் திருப்பிப் பெறுவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மார்க்கெட்டிங் கமிட்டி என்று வைத்து இருக்கிறார்கள். 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தூரம்கூட விவசாயிகள் சென்று அதில் வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, நல்ல சிறப்பு வாய்ந்த சில தொடக்க வேளாண்மை வங்கிகளில் இந்த மார்க்கெட்டிங் கமிட்டிக்கு கட்டிடங்கள் எடுத்து அதிலே வைக்க வேண்டும். அங்கே விவசாயிகள் விளைபொருட்களை வைத்து அவர்கள் பணத்தைப் பெறுவதற்கு உதவியாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், விவசாயத்தில் இருக்கின்ற இவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும் அதற்கு மேலும் கடன் பெற்றால் வட்டி விகிதங்கள் மாறுகின்றன. 12 சதவீதம் 25 ஆயிரம் ரூபாய்க்குள் கடன் பெறுகிறவர்களுக்கும், 15 சதவீதம் அதற்கு மேல் கடன் பெறுகிறவர்களுக்கும் என்று இங்கே விதித்து இருக்கிறார்கள். அந்த இரண்டு விவசாயிகளும் ஒன்றுதான் என்ற நினைப்பிலே விளைபொருட்களை எல்லாம் ஒரே விலைக்குத்தான் விற்கிறார்கள் என்ற எண்ணத்தில் கொண்டு அந்த வட்டி விகிதத்தை ஒரே சீரான முறையில் வைக்க வேண்டும் என்றும் அதை 12 சதவீதமாக வைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், உரப் பகுதி என்று சொன்னார்கள். உரப் பகுதியில் கடன் தருகிறார்கள். கடன் தரும்போது அதை ரொக்கப் பணமாக தருகிறார்கள். அதேபோல் பூச்சிமருந்தாகவும் தருகிறார்கள்.

இந்தக் காலகட்டத்தில் அதிகமாக பூச்சிக் கொல்லி மருந்துகளை அடிக்கக்கூடாது என்ற நோக்கத்தில் நாம் இருப்பவர்கள். ஆகவே, பூச்சி மருந்துக்காக ஒதுக்கப்படும் பகுதியை ரொக்கப் பணமாக விவசாயிகளுக்குத் தந்தால் அது சாலப் பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், உரத்தின் பகுதி சற்று அதிகமாக இருக்கிற காரணத்தால் ரொக்கமாகக் கொடுத்தால், கூடுதலாகக் கொடுத்தால் அவர்களுக்கு வேண்டும் உரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்

என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், கூட்டுறவு தொடக்க வங்கிகளிலே சாக்குகள் நிறைய தேங்கியிருக்கின்றன. சாக்கு என்றால், ஒரு வங்கியிலே ஒரு லட்சம் ரூபாய் வரை சாக்கு தேங்கியிருக்கிறது. அந்தச் சாக்குகளை எப்படி விற்கவேண்டும் என்று கண்டிஷன் விதித்து இருக்கிறார்கள் என்றால் வருடத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறையோ டெண்டர்விட்டுத்தான் விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-15

நான் ஒன்றைச் சொல்கிறேன். அந்தக் கால கட்டத்தில் விலையை நிர்ணயித்து--மாதா மாதம் விலையை நிர்ணயித்து-அந்த விலைக்குத் துவக்க வங்கிகளில் உள்ள ஊழியர்கள் விற்றுக் கொள்ளலாம்; அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கலாம்; அந்தச் சாக்கின் தன்மையை ஆராய்ந்து அந்த விலையை மாதா மாதம் நிர்ணயித்து அந்தச் சாக்குகள் வீணாகாமலும், மழையிலே நனைந்து வீணாகக் கெட்டுப் போய்விடாமலும் அந்தச் சாக்கினுடைய வருமானம் மொத்த வருமானமாக இருக்கும் என்ற எண்ணத்தை இந்த நேரத்திலே வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை ஆராய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சாக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னார்கள். பயன்படுத்தப்பட்ட சாக்குக்களைத் திருப்பி விற்க வேண்டுமென்று சொன்னால் அதற்கென்று ஒரு கமிட்டி-குழு இருக்கிறது. அந்தக் குழு பல்வேறு நபர்களிடமிருந்து கொட்டேஷன்களை வாங்கி, அதிலே யார் அதிகமாகத் தந்திருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் சற்று முன்பு பேசுகிறபொழுது எடுத்துச் சொன்னார்கள். இந்த டெண்டர்களைப் போடுகின்றபொழுது இந்த டெண்டரிலே ஈடுபடுபவர்கள் அவர்களாகவே கூட்டு சேர்ந்து கொண்டு அதிகமாக்குவதும், குறைப்பதும் அவர் கையிலே இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சட்ட விதியையே சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறேன். இண்டியன்

கான்ட்ராக்ட் ஆக்டில்-அதாவது பஃப்பிங் என்று சொல்லுவார்கள். 4 பேர் சேர்ந்து விலையை ஏற்றிவிட வேண்டியது. அதை பஃப்பிங் என்று சொல்லுவார்கள். இன்னொன்று துறையிலே நாக்கிங் டவுன் என்று சொல்லுவார்கள். விலையைக் குறைப்பது என்று. இது சட்டத்திலேயே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் அந்தக் குழுவிலே டெண்டர் போடுகிறவர்கள் கையாளுகின்ற காரணத்தினாலே இன்றைக்கு அதாவது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு லிங்க் சொசைட்டி இருக்கிறதே அதற்கும் கொடுக்கிற பணத்திலே இந்தச் சாக்கினுடைய விலையையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலேயிருந்துதான் அவர்கள் தங்களுடைய செலவுகளைச் சரிகட்ட வேண்டியிருக்கிறது. அப்படிக் கொடுக்கின்ற நேரத்தில் விலையைக் குறைவாகக் கொடுப்பார்களேயானால் ரீ-டெண்டர் போடவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் சிலயிடங்களிலே ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக அந்த ஒப்பந்தத்திலே கொடுக்கப்பட்ட விலைகள் குறைவாக இருப்பதனாலே அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கலாம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அதை வேண்டுமென்று சொல்லவில்லை. அதனால் நம் அரசாங்கத்திற்குப் பெரியதொரு நஷ்டம் வரவிருக்கிறது. டெண்டர் மூலமாக என்பது யாரோ வாதத்திற்குச் சொன்னாலும்கூட அந்தந்த மாதம் மார்க்கெட்டில் என்ன விலை நிர்ணயித்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அந்தக் கூட்டுறவுத் துறையில் யார் தன்னைச் சிறப்பாக ஈடுபடுத்திக் கொள்கிறார்களோ அவர்களுக்கே கொடுப்பதில் ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. நான் சொல்வது விவசாயிகளுக்குத்தான் கொடுக்கச் சொல்லுகிறேன். ஆகவே, அந்தந்த மாத விலையை அங்கே கமிட்டி நிர்ணயிக்கட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. சர்க்கரைச் சாக்காக இருக்கலாம் அல்லது அரிசிச் சாக்காக இருக்கலாம். சாக்கினுடைய தரத்தை அனுசரித்து வீணாகப் போகாமல் அதை ஒரு நல்ல விலையில் விற்பதற்குத்தான் இதை ஆலோசனையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கரும்புக்குக் கடன் தருகிறார்கள். ஒன்றை சொல்லுகிறேன். கடன் வசூலாகவில்லை என்ற காரணத்திற்காக நாணயமாகக் கட்டுகிறவர்கள்கூடத் திருப்பிக் கடன் பெற முடியாத சில சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்

திரு. தம்புசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் சொன்னது, டிராக்டர்களுக்கென்று பெரு விவசாயிகள் வாங்கிய கடன்கள்தான் நிலுவையில் அதிகமாக இருக்கிறதே தவிர சிறு விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடன் அதிகமாக இருக்காது. அது பாதிக்கவும் பாதிக்காது. ஆகவே இதேப்போன்ற பெரிய விவசாயிகள் டிராக்டர்கள் போன்றவற்றிற்கு வாங்கி திருப்பிச் செலுத்த முடியாததால் அந்த வங்கி கட்ட வேண்டிய பர்சென்டேஜ் குறைந்திருக்கிற காரணத்தால், வங்கிக்குக் கடன் கொடுக்க முடியாமல் ஒழுங்காகக் கட்டிய விவசாயிகளுக்கும் பணம் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு நாம் தயாராக இருப்பதற்காக சில முறைகளை அமைச்சரவர்கள் கையாள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கட்டியவர்களுக்கு, நாணயமாகச் செலுத்தியவர்களுக்கு கடன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த அளவிலே விட்டுவிட்டு எனது தொகுதி பற்றிய சில பிரச்சினைகளைச் சொல்லிவிட்டு விடைபெறுகிறேன்.

கூட்டுறவு வங்கிகளிலே, அவர்கள் சொன்னதுபோல, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

அதேபோல, கூட்டுறவுச் சங்கத்திலே செயலாளர்கள் இருக்கிறார்கள். அதைச் சொல்லியாக வேண்டும். குறிப்பாக, அவர்கள் ஏதோ ஜமீன்தாரர்களைப்போல பத்தாண்டு, இருபதாண்டு அங்கேயிருந்துகொண்டு அந்தப் பகுதி மக்களுடைய தரத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசியல்கூட நடத்துகிறார்கள் என்று நான் சொல்வேன் பகிரங்கமாக. அந்த அளவிற்கு கூட்டுறவுச் செயலாளர்கள் ஒழுக்கமின்மையாகவும், அவர்கள் ஏதோ தனது இராஜ்யம் என்று நினைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். ஆகவே, எந்தச் சட்டத்தையாவது இயற்றி-புரட்சித் தலைவியால் முடியாதது ஒன்றுமில்லை. ஆகவே, எந்த வழியிலாவது அந்தச் சட்டத்தை இயற்றி அந்தச் செயலாளர்களையும், அந்த ஊழியர்களையும் மாற்றுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தோகை மலையிலே இருக்கின்ற கிரானைட் கற்கள் மிக விலை உயர்ந்த கற்கள். அந்தக் கற்களையெல்லாம் கூட்டுறவுத் துறையினாலே கொடுக்க நீங்கள் உதவியாக இருக்க வேண்டும். யாரோ ஒரு தனியாருக்குக் கொடுப்பதனாலே ஒரு தனியார் இலாபம் அடைகிறாரே தவிர அங்கே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டும். சாதாரணக் கல்லாக இருந்தாலும் சரி, கிரானைட் கல்லாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கின்ற அந்தக் கற்களைக் கூட்டுறவுத் துறை மூலம் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் குளித்தலை ஒரு நகராட்சி. இதுவரை பஸ் ஸ்டாண்ட் இல்லாத ஊர் என்றால் குளித்தலையைத்தான் சொல்ல வேண்டும். ஒரு நகராட்சியிலே பஸ் இல்லாத ஊர் குளித்தலை. ஆகவே, அதைக் கட்டித் தருவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதுபோல, காவேரி குடிநீர் கிடைத்தும் சில ஊர்களில் கொடுக்க முடியாத காரணத்தால் அங்கே மக்கள் சற்றுக் கவலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதையும் பரிசீலித்து அந்தப் பகுதியிலே செல்கின்ற தண்ணீரை வழி ஓரத்திலே இருக்கின்ற அந்தக் கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த நல்ல சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கு நன்றி கூறி, கூட்டுறவு மானியத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ரா. சக்குபாய்.

திருமதி ரா. சக்குபாய்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னாட்சியில் பல்வேறு துறைகளில் மக்களின் நலம் கருதி செய்கின்ற ஒவ்வொரு அடிப்படைத் திட்டமும் நேராக சம்பந்தப்பட்ட மக்களுக்குச் சென்று பயன் அடைகின்ற காட்சியை கண்கூடாக காண்கிறோம். குறிப்பாக கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொண்டால் அதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சரித்திர சாதனை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தைப் போல, கூட்டுறவுத் துறையிலும் பல பிரிவுகள் பிரித்து குறிப்பாக, திருவல்லிக்கேணி கூட்டுறவுச் சங்கம், சிந்தாமணி கூட்டுறவுச் சங்கம், சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சங்கம், பாரதி நகர் கூட்டுறவுச்

சங்கம், அம்பேத்கார் கூட்டுறவுச் சங்கம், வடசென்னை கூட்டுறவுச் சங்கம் போன்ற அமைப்புகள் மூலம் ஏழை எளிய, பாட்டாளி மக்களுக்கு அன்றாடத் தேவையான அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை, ரவை, மைதா, போன்றவைகளை பொது இந்தியாவிலேயே குறைந்த விலையில் நிறைவான, தரமான பொருள்களை மக்களுக்கு சிறப்பாக அளிக்கின்ற அரசு புரட்சித் தலைவியின் அரசுதான்.

மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒரு கடைக்கு 3000 குடும்ப அட்டைகள் இருந்தும் பொது மக்களுக்கு, குறிப்பாக தாய்மார்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி, நீண்ட நேரம் நின்று பொருள்களை வாங்கிய நிலைமையை மாற்றி, நியாய விலைக் கடைகளை அதிகப்படுத்தி, கூடுதலாகப் பணியாளர்களை அமர்த்தி அரசுக்கு வருவாய் இழப்பு இருந்தும், அதனையும் பொருட்படுத்தாமல் மக்களின் நலம் ஒன்றையே கருத்தில் கொண்டு ஒரு நியாய விலைக் கடைக்கு குறைந்தது 1000 குடும்ப அட்டைகளுக்கு மேற்படாமல் ஏற்படுத்தி பொது மக்கள் அலைச்சல் இன்றி பொருட்களை வாங்க வழி செய்தது இந்தியாவிலே நமது இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசுதான். பெரும்பாலும் எந்த ஒரு அரசும் அத்தியாவசியப் பொருள்களின் விலையை ஏற்றாமல் பார்த்துக் கொள்வதுதான் வழிமுறை. ஆனால், மத்திய சர்க்காரால் ஏற்றிய அரிசி விலையை ஏழை மக்கள் நலம் கருதி ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைத்து சாதனை படைத்த அரசும் நமது புரட்சித் தலைவியின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்மையில் மாண்புமிகு இதயதெய்வம், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியை பெண்களே நிர்வகிப்பார்கள் என அறிவித்து பாரதி கண்ட புதுமைப் பெண் கனவை நினைவாக்கி சாதனை படைத்த புரட்சித் தலைவிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு நகரத்திலே செயல்படும் இந்தத் திட்டத்தை தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்து, குறிப்பாக எனது மாவட்டமான செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு முன்னுரிமை தரும்படி எனது தாழ்மையான வேண்டுகோளை புரட்சித் தலைவியின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

சென்னை போன்ற பெரிய நகரங்களில் அரை கிலோ மீட்டருக்கு ஒரு நியாய விலைக் கடையை அமைத்து மக்கள் குறையைப் போக்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என்னுடைய தொகுதியான

கும்முடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் கூடுதலாக பகுதிநேர நியாய விலைக் கடைகளை திறந்து வெகுதூரத்தில் இருந்து வந்து பொருட்களை வாங்கும் கிராம மக்களின் குறைகளைப் போக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக, தொகுதி மக்களின் வேண்டுகோளை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவியின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

பல்வேறு காலகட்டங்களில் மக்களின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு மக்கள் அரசு அமைக்க நாட்டு மக்களை சந்திக்கும் வேளையில், எதிர்க்கட்சிகளின் சொல்லடிகளையும், வன்முறைகளையும், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட வேதனைகளையும் சாதனைகளாக மாற்றி, மக்களின் ஏகோபித்த வாக்குகளை பெற்று ஈடு இணையற்ற முதல்வராக பொறுப்பேற்று ஏழை எளிய, பாட்டாளி, விவசாயி, நாடோடி மக்களின் உயர்வுக்காக தன் இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றி வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு நீடித்து இன்றுபோல் என்றும் மக்கள் பணியில் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்கின்ற என்னுடைய அவாவை தெரிவித்து எத்தனைச் சோதனைகள் வந்தாலும். நீதி, நேர்மை, கண்ணியத்தைக் காத்து நாட்டு மக்களையும் காத்து அரவணைத்து வருகின்ற எங்களது இதயதெய்வம், நாங்கள் எங்கள் இதயத்தில் கோவில் கட்டி வணங்குகின்ற தாயினும் மேலான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகத்தின் ஆறுகோடி மக்களும், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், புரட்சித் தலைவிக்கும், அரசுக்கும், அரணாகவும், பாதுகாவலாகவும், தேவைப்பட்டால் எங்களது உயிரையும் கொடுக்கவும் தயாராக இருக்கிறோம் என்று கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ.து. வரதராஜன்.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன? மைக் வேலை செய்யவில்லையா? அப்படியானால் நீங்கள் மாலைக் கூட்டத்தின்போது பேசிக் கொள்ளலாம். உட்காருங்கள். திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு.

திரு. கி. இராஜன்பாபு என்கிற **தணிகைபாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் போன்றவர்களை ஆளாக்கி அரவணைத்து தமிழ்ச் சமுதாயத்திற்கு அடையாளம் காட்டி வாழ வைத்துக்கொண்டிருக்கிற நடமாடும் மனித தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர், புனிதத் தாய், பொன்மாதா, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி நான் வணங்கி இந்த 23-ஆம் எண் மானியக் கோரிக்கையான கூட்டுறவுத் துறையின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய எனது இதயதெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர், புனிதத் தாய், புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்றுப் பேசுகிற அரியதொரு வாய்ப்பிலே எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவி அவர்களை இந்த நாட்டினுடைய மக்கள் தங்களின் நிரந்தர முதலமைச்சராக ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்ற ஆதங்கத்தோடு இதயதெய்வத்தின் மீது சொல்லடியும், கல்லடியும், வீசி இந்த ஆட்சிக்கு ஊறு விளைவிக்கவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அன்றாடம் செயல்பட்டுக் கொண்டிருக்கிற காங்கிரஸ்காரர்கள் ஒரு பக்கம். தமிழ்ச் சமுதாயத்தையே தன் பக்கத்திலே ஈர்த்து, உலகமே இன்று புரட்சித் தலைவியைக் கண்டு பாராட்டுகிற இந்த நல்ல வேளையில், இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய நல்லவர்களும், வல்லவர்களும் புரட்சித் தலைவியைப் பாராட்டுகிற இந்த அரிய சந்தர்ப்பத்தில் புரட்சித் தலைவிக்கு ஊறு விளைவிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, தீய நோக்கத்தோடு பந்த் என்ற போர்வையிலே புரட்சித் தலைவியின் அரசுக்கு ஊறு விளைவிக்கவேண்டும் என்ற எத்தர்களின் சூழ்ச்சிகளை எல்லாம் முறியடிக்கிற ஆற்றல்--எங்களைப் போன்ற சாமானியத் தொண்டர்கள் இன்றையதினம் தமிழக மக்களிடத்திலே பேசுகிறபோது அவர்கள் ஆர்வத்தோடும், ஆதங்கத்தோடும் பேசுகிற வார்த்தைகளைக் கேட்கிறபோது, எப்பேர்ப்பட்ட பந்த் ஆனாலும் அந்த பந்த்-ஐ பந்தாக முறியடிக்கிற ஆற்றல்--புரட்சித் தலைவியிடத்தில் உண்டு.

இன்றையதினம் புரட்சித் தலைவியின் ஆட்சிக்கு ஊறு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு காங்கிரஸ்காரர்கள் செயல்பட்டாலும் இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்களும் புரட்சித் தலைவிக்கு நாங்கள்

ஆதரவாக இருக்கிறோம் என்கிற ஒரு ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறபோது இந்த நாட்டினுடைய மிகப்பெரிய பொறுப்பிலே இருக்கின்ற ஒருவர் காங்கிரஸ்காரர்களோடு சேர்ந்து கொண்டு, காங்கிரஸ் கட்சிக்காரர்களின் கூடாரங்களுக்கு ஆதரவு தந்துகொண்டு, அவர்களை அரவணைத்து அவர்களை ஆளாக்குகிற ஒரு நிலைமையை ஏற்படுத்தி, ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு இந்த அரசையும், இந்த நாட்டு மக்களையும், சட்டம் ஒழுங்கையும் இன்றையதினம் கொண்டு வந்து முடக்கிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார். அவர் மீது இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒரு நடவடிக்கை எடுக்கச் சொல்லி மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கும் வகையில் நாம் தீர்மானம் போட்டும் கூட அதற்கு பாரதப் பிரதமர் இதுகாறும் செவி சாய்க்காமல் கேட்பாரற்றுக் கிடக்கிற ஒரு மாநிலம் போல் கருதிக்கொண்டு மாற்றாந்தாய் மனப்பான்மையை உருவாக்குகிறார்கள் என்று சொன்னால் நாட்டு மக்கள் இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக்கூடிய ஒன்றரைக் கோடி உறுப்பினர்களும் தங்களுடைய இன்னுயிரையும் இன்றையதினம் மாய்த்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அத்தகைய ஒரு தற்கொலைப்படையை இன்றைய தினம் உருவாக்கியிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக நாளையதினம் பந்த் என்று சொல்கிறார்கள். அது பந்த் அல்ல. எதிர்க்கட்சிக்காரர்கள்......

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூட்டுறவுத்துறை மானியத்திலே உங்களுடைய கருத்துக்களைக் கூறி முடியுங்கள்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற **தணிகைபாபு:** அது காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிர்க்கட்சிக் காரர்களின் சூழ்ச்சியே. இந்த நாட்டினுடைய உயர்ந்த பதவியில் இருந்துகொண்டிருக்கிற நபர்களின் சூழ்ச்சியாகத்தான் அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இன்றைக்குக் காலையிலே இங்கே மைக்கை உடைக்கிறார்கள். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்குகிறார்கள் என்று சொன்னால் எப்படி அவர்கள் இந்த நாட்டிலே ஜனநாயகத்தைப் பற்றி பேச முடியும்? ஜனநாயகத்தைப் பற்றி விமர்சிப்பதற்குக் கூட

தகுதியில்லாமல் இன்றையதினம் காங்கிரஸ்காரர்கள் தமிழகத்தில் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர்களுடைய நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. மையத்தில் இருக்கக்கூடிய ஆட்சிக்குக் கூட மிகப்பெரிய ஆபத்து உருவாக்கப்பட்டு இருக்கிறது. அவர்களை அவர்களாக மாய்த்துக்கொண்டிருக்கிறார்கள். யாரும் அவர்களை அழிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைமைக்கு காங்கிரஸ் உருவாக்கப்பட்டு இருக்கிறது. எனவே என்னைப் பொறுத்தமட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒப்பாரும் மிக்க தலைவி, புரட்சித் தலைவி இந்த நாட்டினுடைய நிரந்தர முதலமைச்சர். *(மேசையைத் தட்டும் ஒலி)* புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டினுடைய நிரந்தர முதலமைச்சர். எப்பேர்ப்பட்ட சக்தியாலும் அவரை ஒன்றும் செய்துவிட முடியாது என்கிற உள்ள உணர்வை எடுத்துச் சொல்லி இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்றுப் பேசுகிறேன்.

பிற்பகல் *1-30*

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில், ஒரு சிறந்த துறையாக, இன்றையதினம் தமிழகத்தில் அதனுடைய அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய ஐயா அவர்கள் சிறப்பான முறையில் நடத்தி வருகிறார்கள் என்பதற்காக நான் உளமார அவரைப் பாராட்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்னொன்றையும் நான் குறிப்பிட்டு ஆகவேண்டும். இந்தியத் திருநாட்டிலே இன்றையதினம் தமிழகம்தான் கூட்டுறவுத் துறையில் சிறந்து ஓங்குகின்ற மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவியின் ஆட்சியில். இந்தத் துறை இப்படி பல்வேறு பரிசுகளைப் பெற்றிருக்கிறது. எனவே, நான் அவர்களை மனதாரப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்கள் மத்தியிலே ஒரு ஆதங்கம் உண்டு. இன்றையதினம் குடும்ப அட்டைகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்ப அட்டைகளை வழங்கும்போது எவ்வாறெல்லாம் வழங்கவேண்டுமென்று சென்ஸார் செய்து வழங்கினாலும் ஒவ்வொரு குடும்பத்திலேயும் ஒரு தனி நபருக்குக்கூட *5, 6* அட்டைகள் இருக்கின்றன. கிராமப்புறங்களிலே இருக்கக் கூடியவர்கள் நியாயவிலைக் கடைக்குச் செல்கிறபோது *5, 6* அட்டைகளைக் காண்பித்து பொருட்களை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள். . . . *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 4-00 மணிக்கு நீங்கள் தொடரலாம். பேரவையின் ஒப்புதலோடு பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவு பெறுகின்றன. பேரவை மீண்டும் மாலை 4-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பிற்பகல் 4-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தணிகைபாபு தொடரலாம்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே வழங்கப்பட்டிருக்கிற குடும்ப அட்டைகள் அதிகப்படியாக அரசிடத்திலே மக்கள் கோரி பெற்றிருக்கிறார்கள். ஒரு குடும்பத்திலே 5 அட்டைகள், 6 அட்டைகளுக்கு மேலாக வைத்திருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் வைத்திருக்கிற குடும்ப அட்டைகளுக்கெல்லாம் அவர்கள் முன்னதாக நியாயவிலை கடைகளுக்குச் சென்று அத்தியாவசிய பொருட்களை பெற்றுவிடுகிறார்கள். ஒரு சிலர் தேவைக்கு அதிகப்படியாக இருக்கிற குடும்ப அட்டைகளை எல்லாம் சிறு வியாபாரிகளிடத்திலே, கிராமங்களிலே வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகளிடத்திலே அடமானம் வைக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல 'வேண்டும் என்று சொன்னால், ஒரு ஆண்டுக்கு ஒரு அட்டையின் மீது இரண்டாயிரம் ரூபாய், மூன்றாயிரம் ரூபாய் என்று அடமானத்தில் அட்டைகளுக்கு காசு பெறுகிறார்கள். அந்த சிறு வியாபாரிகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் 500, 600 குடும்ப அட்டைகளை தன் வசம் வைத்துக் கொண்டு, நியாய விலைக் கடைகளிலே, பொருட்களை ஒட்டுமொத்தமாகவும், உடனடியாகவும் பெற்று விடுகிறார்கள். உண்மையாக குடும்ப அட்டை வைத்திருக்கூடிய நபர்கள் பொருட்களை வாங்குவதற்கு நியாயவிலை கடைகளுக்குச் செல்வார்கள் என்று சொன்னால் அந்த நியாயவிலைக் கடைகளிலே உரிய பொருட்களை தருவதிலே தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து இதுபோன்ற அதிகப்படியான குடும்ப அட்டைகள் வைத்திருக்கக்கூடிய குடும்ப அட்டைதாரர்கள் மீது உரிய நடவடிக்கை

எடுத்து அந்த குடும்ப அட்டைகளை பறிமுதல் செய்யவேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். அதேபோன்று, இன்றையதினம் வங்கிகள் இருக்கின்றன. மாவட்டங்களில் இருக்கக்கூடிய மத்திய கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அதனுடைய கிளை வங்கிகள் இருக்கின்றன. அரசாங்க வங்கிகள், அதாவது மைய அரசால் இயக்கப்படுகின்ற வங்கிகளில் இருப்பவர்கள் மார்ச் மாதம் வரும்போது எங்களுக்கு டார்கெட் பிக்ஸ் செய்திருக்கிறார்கள். இவ்வளவு டெப்பாசிட் கலெக்ட் செய்ய வேண்டும் என்று சொல்லி, அவர்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும், பல்வேறு தனியாரிடத்திலும், பிக்ஸ் செய்யப்பட்டிருக்கிற அந்த டெப்பாசிட்டை கலெக்ட் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் சிரத்தையாக இதுபோன்ற முயற்சிகளை எடுப்பது கிடையாது. காரணம் நம்முடைய மாநில சர்க்கார் சில உத்தரவுகளை தந்திருக்கிறது. அதன் அடிப்படையில், மாநில சர்க்காரிடத்தில் வைக்கப்படுகிற வைப்பு நிதியை வைத்துக்கொண்டு மட்டும் அவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். மைய சர்க்கார் வசம் இருக்கக்கூடிய வங்கிகள் ஆண்டுதோறும் எப்படி டெப்பாசிட் என்ற அடிப்படையிலே கலெக்ட் செய்கிறார்களோ, அதுபோன்று நம்முடைய வங்கிகளிலும், அதாவது கூட்டுறவிலே பணியாற்றக்கூடிய மத்திய கூட்டுறவு வங்கி என்று வருகின்றபோது துணை கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகிறவர்கள் டெப்பாசிட் கலெக்ட் செய்வதற்கான ஒரு முயற்சியை அமைச்சர் பெருமகனார் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, கூட்டுறவுத் துறையை பொறுத்தவரையில் ஒரு சிறப்பான துறையாக இந்தியாவிற்கே எடுத்துக்காட்டான துறையாக பல்வேறு கோப்பைகளை எல்லாம் பெற்று சிறந்த துறையாக விளங்குகிறது. அப்படிப்பட்ட நல்ல நிலையில் அமைச்சர் பெருமகனார் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றக்கூடிய, அதாவது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலே பணியாற்றக்கூடியவர்களாக இருந்தாலும் சரி, அங்கே பணியாற்றக்கூடிய செயலாளராக இருந்தாலும் சரி, இன்றையதினம்--பழைய காலத்தில் ஜமீன்தாரர்கள், வி.ஏ.ஓ-க்கள் இருந்தார்களே அதுபோன்று இன்றையதினம்-- அவர்கள் கிராமங்களிலே வங்கிகளில் பணியாற்றுகிறபோது அரசை நடத்துகின்றவர்களாகவும், அரசுக்கு எதிராக செயல்படுபவர்களாகவும் ஒரு சிலர் இன்றையதினம் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை

எடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும். அந்த வங்கிகளிலேயும் சரி, கிராம தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகிற செயலாளர்களும் இன்றையதினம் தன்னிச்சையான முறையில் அரசாங்கம் தரக்கூடிய ஒரு சில நடவடிக்கைகளில் இறங்காமல், எதிர்மறையான நடவடிக்கைகளில் இறங்கக்கூடிய நிலைமை இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் அமைச்சர் பெருமகனார் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-05

என்னுடைய தொகுதி குறித்த கோரிக்கைகளை எடுத்து வைத்து முடித்துவிடலாம் என்று கருதுகிறேன். திருத்தணி தொகுதியை பொறுத்தவரையில் முடிந்தமட்டில் இதயதெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் நிறைவான முறையில் செய்திருக்கிறார்கள். திருத்தணிக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் தந்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, திருவேலங்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை விரிவுபடுத்தி தந்திருக்கிறார்கள். திருப்பூவலங்காட்டிலே இருக்கக்கூடிய புறக் காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டிலேகூட திருத்தணியில் நிரந்தரமாக குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்கின்ற அடிப்படையில் இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். என்னுடைய மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறேன். அதை நான் இந்த அவையிலே பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மீனளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் சுட்டிக்காட்டினேன். அதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்து செய்திருக்கிறார்கள். அதுபோல தொகுப்பு வீடுகள் இன்னும் பல கிராமங்களுக்கு நீங்கள் தரவேண்டும். அதற்கு உத்தரவிட வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் திருத்தணி புண்ணிய யாத்திரீகத் தலமாக இருக்கிற காரணத்தால் பேருந்து நிலையம் கட்ட வேண்டுமென்று சொல்லி அரசு 1 ½கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் அங்கு நிலம் கையகப்படுத்துவதிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறது. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை திருத்தணி நகராட்சியம் எடுத்துக் கொண்டு அதற்கு ஈடாக 5.6 ஏக்கர் நிலத்தை நில பரிவர்த்தனை செய்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்கி இதயதெய்வம் புரட்சித்

தலைவி அவர்கள் அந்தக் கோப்பிலே கையொப்பம் இட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னாலே நிதி ஒதுக்கீடு செய்தும் இதுவரையிலும் செயல்படுத்தாமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதனையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பன்னெடுங்காலமாக குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்த மணவாளன் நகர் பகுதிக்கு 35 லட்ச ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கப்பட்டு அங்கு குடிநீர்ப் பணிகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மணவாளன் நகர் பேரூராட்சி போன்ற ஒரு பெரிய நகரம். அந்த நகரத்திலே ஒரே ஒரு கூட்டுறவுக் கடைதான் இயங்கி வருகிறது. எனவே, அந்தக் கூட்டுறவுக் கடையை இரண்டாகப் பிரித்து மணவாளன் நகரிலிருந்து கபிலர் நகருக்கு ஒரு கூட்டுறவு அங்காடியை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த இனிய வாய்ப்பினை தந்தமைக்காக பேரவைத் தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்.

8. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32-ஐ தளர்த்துதல்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 4-5-1995 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகின்றேன்.

மறுப்போரே இல்லை

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு இவ்வாறு செய்வது போல் தோன்றுகிறதே . திரு. செ.து. வரதராஜன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு--தொடர்ச்சி

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகின்ற வாய்ப்பு கிடைக்குமா என்ற ஒரு ஐயம் இருந்தது. இருப்பினும் நான் பேசுவதற்கு காங்கிரஸ் கட்சித் தோழர்கள் மிகத் தடையாக இருந்தார்கள் என்று நினைத்தபோது, அவர்கள் வெளியில் சென்ற பிறகு கூட மைக்கை கையிலே எடுத்துக் கொண்டு சென்றதால்-- அந்த அவல நிலையை பார்த்த பிறகு நமக்கு பேச வாய்ப்பு கிடைக்குமா என்ற ஐயம் இருந்தது. உடனே என்னுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் எப்படியும் எத்தனை தங்கு தடைகள் வந்தாலும் அதை உடனே தீர்த்து விடுகின்ற வகையில் செயல்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் நான் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு என்னுடைய தலைவிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள், எதிர்க்கட்சித் தோழர்கள், தமிழக அரசு ஏழை மக்கள் பயன்படுத்தும் அரிசி விலையை உயர்த்தி, பின்பு அரிசி விலையை குறைத்தது ஒன்றும் சாதனையில்லை என்கிறார்கள். மத்திய அரசு பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் டீசல், பெட்ரோல், கிரோஸின், சர்க்கரை, இரும்பு, சிமெண்டு, தபால், டெலிபோன், ரயில் பயண டிக்கெட்டுகள், பிளாட்பார்ம் டிக்கெட்டுகள், உரம் போன்ற பொருள்கள் விலையை உயர்த்தி உள்ளார்களே, இந்த விலையை இவர்கள் குறைப்பதற்குத் தயாரா என அறிய விரும்புகிறேன்.

விவசாயப் பொருட்கள் நல்ல உற்பத்தியும் ஜனபெருக்கம் இல்லாத முன் காலத்தில், முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எலிக் கறியையும், கடலை பிண்ணாக்கையும் சாப்பிடச் சொன்னார்கள். அது

1995 மே 3] [திரு. செ.து. வரதராஜன்]

மட்டுமல்லாமல் வாரம் ஒரு நாள் விரதம் இருக்க வேண்டும் என்றும், உணவு விடுதிகளுக்கு வாரம் ஒரு நாள் கண்டிப்பாக விடுமுறை விட வேண்டும் என்றும் கூறினார்கள். கஞ்சித் தொட்டிகளை எல்லாம் திறந்தார்கள். பெரிய விருந்துகள் நடத்தக் கூடாது என்றார்கள். கல்யாணத்தில் சாப்பாடு போடக்கூடாது என்று சொன்னார்கள். எங்கள் தங்கத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி நல்ல தரமான அரிசியை கூட்டுறவுத் துறையின் வாயிலாக ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் என்கின்ற உணர்வுடன் தங்கத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் யாரும் ஒரு வேளை கூட பட்டினியாக இருக்கக்கூடாது என்ற ஒரு நல்ல உணர்வுடன் அவர்களுடைய ஆட்சியில் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் சத்துணவும், சத்துருண்டையும் வழங்குகிறார்கள். அதோடு, இரண்டு வயது குழந்தைகள் முதல் 80 வயது பெரியவர்கள் வரை சத்துணவும், இலவச வேட்டி, சேலைகள் வழங்குகின்றார்.

இந்த மானியக் கோரிக்கையில் எந்தக் குறையும் சொல்ல முடியவில்லை. மாற்றாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது தேர்தலுக்காக கொடுக்கப்பட்ட மானியக் கோரிக்கை என்று கூறுகின்றார்கள். எங்களுக்குத்தான் தேர்தல் வருகிறதா? இதுவரை நிர்வாகம் செய்த மாநில, மத்திய அரசுக்குத் தேர்தல் வரவில்லையா? அவர்கள் தங்கத் தலைவியின் பொற்கால அரசு வழங்குவது போன்று, முன்பிருந்த அரசுகள் இதுபோன்ற, ஏழை மக்களுக்கு நேரடியாகச் சேரும் உதவியைச் செய்தவர்களா? தங்கத் தலைவி ஆட்சியின் நிர்வாகத் திறமையை, முன்னாள் இரண்டுமுறை முதல்வராக இருந்த, அவரை மட்டும் இந்த அரசு சட்டமன்றத்தில் இருக்க வேண்டும் என்று தமிழக மக்கள் அனுப்பியும், அவர் ராஜினாமா செய்துவிட்டார். சட்டசபையில் இருந்திருந்தால், இரண்டுமுறை முதல்வராக இருந்தபோது இப்படித் திறமையாக ஆட்சி நடத்தவில்லையே என்று வருந்தியிருப்பார்.

பிற்பகல் *4–10*

இதற்குமுன் இருந்த எதிர்க்கட்சிகள் எல்லாம், நல்லொழுக்கமுள்ள மக்களுக்காக வாதாடுவார்கள். ஆனால், தற்போது உள்ள எதிர்க்கட்சிகள், ஜெயிலில் உள்ள குற்றவாளிகளுக்கு மிகவும் வேகமாக வாதாடுகிறார்கள். கடத்தல்காரர்கள், சந்தன மரக் கடத்தல்காரர்களின் திறமையைப் பற்றியும், அவர்கள் நல்லவர்கள் என்றும் பாராட்டுகிறார்கள். அமைதியாக இருந்த தமிழகத்தை, இப்போது, சிறையில் இருக்கும்

குற்றவாளி கைதிகளுக்கு ஆதரவளித்து, அவர்களைத் தூண்டிவிடப் பார்க்கின்றார்கள். இந்த எதிர்க்கட்சிகளின் தூண்டுதல் எடுபடவில்லை.

எங்கள் தங்கத்தலைவி புரட்சித்தலைவி அவர்கள் கொண்டுவந்த, இந்தியாவிற்கே ஒரு எடுத்துக்காட்டான தொட்டில் குழந்தைகள் திட்டத்தை, அன்னை தெரசா அவர்கள் போற்றியுள்ளார்கள்.

69 சதவிகித இட ஒதுக்கீடு, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது.

எங்கள் தங்கத்தலைவி ஆட்சிக்கு வந்தபோது, முதியோர்களின் உதவித்தொகை ரூ.50 ஆக இருந்ததை ரூ.100 ஆக உயர்த்தி, முதியோர்களின் எண்ணிக்கையைக் கூட்டியுள்ளார்.

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, டாக்டர் புரட்சித் தலைவி அரசு, கூட்டுறவுத் துறையின்மூலம் பெரிதும் உதவி புரிகிறது. ஒட்டுமொத்தச் சங்கங்கள் 11, 291. இந்தச் சங்கங்களின் மொத்த ஆண்டு வியாபாரத் தொகை ரூ. 7,606.65 கோடியாகும். இத்தொகைக்கான வியாபாரம் செய்தது, உண்மையிலேயே புரட்சித்தலைவி ஆட்சியின் சாதனை என்றால் மிகையாகாது.

கூட்டுறவுத் துறையில், விவசாயக் கடன்கள் வழங்குதல், வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல், உரங்களை வினியோகித்தல், நுகர்பொருட்களை வினியோகம் செய்தல் போன்ற இனங்களில், 1995-96-ஆம் ஆண்டில் நல்ல முன்னேற்றங்களை அடைந்திருப்பது பாராட்டுதற்குரியது.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஏலக் கொட்டகையுடன் கூடிய விற்பனைக் கூடம், உலர்தளம், பயிரிடுவோர் ஓய்வறை, மாட்டு வண்டிக் கொட்டகை, லாரிகள் நிறுத்தும் இடம், தரம் பிரிக்கும் இயந்திரங்கள், லாரிகள் வாங்குவதற்கு 1995-96-ஆம் ஆண்டில் ரூ.8.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது பாராட்டுக்குரியது.

1995-96-ஆம் ஆண்டில், 16,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு, ஒரு நபருக்கு ரூ.250 பங்கு தொகை, வட்டியில்லா கடனாக வழங்கியது பாராட்டுக்குரியது.

கூட்டுறவு வங்கியில், வைப்புத் தொகைகளுக்கு வணிக வங்கிகள் அளிக்கும் வட்டியைவிட, 1.5 விழுக்காடு கூடுதலாக வட்டி வழங்க முடிவெடுத்துள்ளதும், பிக்ஸட் டெபாசிட்டுக்கு அதன்பேரில் அதிக பற்று கொடுக்க வசதியை அனுமதித்திருப்பதும், வங்கியின் வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கிறது.

2785 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.21.39 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

ஒரு விவசாயி, வீடு கட்டுவதற்கு உச்சக் கடனாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்குவது சிறப்பான திட்டம்.

போக்குவரத்து வாகனங்கள், டெம்போ, வேன்கள், லாரிகள் வாங்குவதற்கு 85 விழுக்காடு வரை கடனுதவி செய்வது மிகவும் சிறப்பானது.

கடன்களைச் சிறப்பாக வசூல் செய்து, மீண்டும் கடன் வழங்குவதற்கேற்ற வகையில், 181 பிரதம நில்வள வங்கிகளில், 161 வங்கிகள், 1995-96-ஆம் ஆண்டில் மீண்டும் கடன் வழங்கும் தகுதியைப் பெற்றிருப்பது, நம்முடைய தங்கத்தலைவி புரட்சித் தலைவியினுடைய அரசு.

1995-96-ஆம் ஆண்டில், நகர கூட்டுறவு வங்கிகளில், தாழ்த்தப்பட்ட இனத்தினர், 4,000 அங்கத்தினர்களுக்கு ரூ.20 இலட்சம் வட்டியில்லா கடன் வழங்குவது தங்கத்தலைவி புரட்சித்தலைவியினுடைய அரசு.

சிறுதொழில், குடிசைத் தொழில் செய்ய 30,703 நபர்களுக்குக் கடன் உதவி ரூ. 25.53 கோடியாக வழங்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை 1995-96-ஆம் ஆண்டில் ரூ.1700 கோடி அளவிற்கு விற்பனை செய்ய திட்டமிட்டிருப்பது மிகமிகச் சிறப்பானது.

பிற்பகல் 4-15

பொது வினியோகத்தின்படி, 137.42 இலட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கி, 75 முதன்மைச் சங்கங்கள் மற்றும் 4,915 இணைப்புச் சங்கங்களின் வழியாக, 20,912 நியாய விலைக் கடைகள் மூலம், பொது வினியோகத் திட்டம் மூலம், மாதம் ஒன்றிற்கு ரூ.84 கோடி அளவுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, கிரசினாயில், பாமாயில், சர்க்கரை ஆகியவற்றை தொய்வில்லாமல் விநியோகம் செய்துகொண்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது. அனைத்து மாவட்டங்களிலும் எடை அளவுகளைக் கண்காணிக்கக் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்கள் மாதம் ஒரு முறை கூடுவதற்கு உறுதி செய்கின்ற வகையில், கண்காணிப்புக் குழுக்களைக் கூட்டுவதற்கு அதன் அழைப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கி உள்ளது பாராட்டுக்குரியது.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற விற்பனையாளர்கள் செய்கின்ற முறைகேடுகளுக்கு, அவர்கள் மீது தொடரப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக வழக்குகளைத் தீர்வு செய்ய ஒழுங்கு நடவடிக்கை ஆய்வுக் குழு ஒன்றை அரசு மாவட்டம் தோறும் அமைத்தது பாராட்டுக்குரியது.

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்கள் காலியாக இருக்கின்ற இடங்களில் அவற்றை நிரப்புவதற்காக மாவட்டம் தோறும் மாவட்டத் தேர்வுக் குழு அமைத்தது பாராட்டுக்குரியது.

கூட்டுறவு நியாய விலைக்கடைகளில் திடீர் ஆய்வு செய்ய ஒரு சிறப்பு பறக்கும் படை அமைத்து, திறம்பட செயல்பட வைத்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பெரிய நகரங்களிலுள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் சமூக விரோதிகளின் தொல்லைகளைக் களைவதற்காக காவல்துறை அதிகாரிகள் ஆய்வு செய்ய ஏற்பாடு செய்ததை மக்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைச் சரியான அளவில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்ல, முடிந்த அளவிற்கு தரப்படுத்தப்பட்ட கோணிப்பைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று கூறி இருப்பது பாராட்டுக்குரியது.

மலைப் பகுதிகளிலும், அணுக முடியாத இடங்களிலும் செயல்படும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் மலைவாழ் மக்களுக்குக் கூண்டு உந்துகள் வாங்க அரசு நிதி உதவி செய்து *26* கூட்டுறவு சங்கங்களில் *27* வண்டிகள் வாங்க ரூ.*91.50* லட்சம் இதுவரை தமிழக அரசு வழங்கி, இதன் மூலம் நடமாடும் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் ஏழை, எளிய மக்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்தது பாராட்டுக்குரியது.

நகை அடமானத்தின் பேரிலே ஒருவருக்கு வழங்கப்படுகின்ற உயர்ந்த அளவு கடனாக இதற்கு முன்பு *25* ஆயிரமாக இருந்ததை எங்கள் தங்கத் தலைவி புரட்சித்தலைவியின் ஆட்சியில் *40* ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது மட்டுமல்லாமல், ஒரு சவரனுக்கு *2200* ரூபாய் கடன் கொடுத்தார்கள்; அதை இப்போது *2400* ரூபாயாக உயர்த்தி கடன் வசதி செய்ததும், சிறு வியாபாரிகளுக்குக் கடன் தொகையை ரூ.*500*-லிருந்து

ரூ.750 ஆக உயர்த்தியதும் பாராட்டுக்குரியது. அதுமட்டுமல்லாமல், சிறு வியாபாரிகளுக்குக் குறைந்த வட்டிக்கு 16 சதவீதம் முன்பு கொடுத்து இருந்தார்கள்; அதை மேலும் குறைத்து 14 சதவீதமாகக் குறைத்து ஏழை எளிய மக்களுக்கு புரட்சித் தலைவி செய்தது வாழ்த்துதலுக்குரியது; வணக்கத்திற்குரியது.

ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர் வங்கி கிளை திறக்க வேண்டும் என்று தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப் பிறப்பித்தார்கள். அதன்படி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 31–1–1995 வரை 23 கிளை வங்கிகள் செயல்பட்டுக் கொண்டு இருந்தாலும், மேலும் இந்த நிதியாண்டில் 9 மகளிர் கிளை வங்கிகளைத் திறப்பதற்கு உடனே ஆவன செய்தது மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

திரு. செ.து. வரதராஜன்: 450 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் வழங்கும் இடத்தில் இரும்புப் பெட்டகம் வழங்க இருப்பது, மக்களின் பொருட்களைப் பாதுகாப்பதற்கு மிகவும் சிறப்பாக இருக்கும்.

பிற்பகல் 4–20

இந்த அரசு மேற்கொண்டும் எண்ணற்ற காரியங்களைச் செய்ய நல்ல திட்டங்களை வகுக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினால், இரண்டொரு கருத்துக்களை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் அத்தியாவசியப் பொருட்கள் எந்தத் தேதியில், எந்த நேரத்தில், எந்த அளவில் வழங்கப்படுகிறது என்பதை முதல் நாளே விளம்பரப் பலகையில் எழுதி, பொது மக்களினுடைய பார்வையில் வைக்க வேண்டும். பொது மக்கள் வெயிலிலும், மழையிலும் நீண்ட நேரம் காத்துக்கொண்டு அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டியிருப்பதால், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் முன்பு ஒரு ஓலைக் கொட்டகை போட்டுத் தந்தால் தாய்மார்களுக்கு அது மிகவும் நலமாக இருக்கும். கிரசின்ஆயில் வாங்க போதிய 20 லிட்டர் டிரம்கள் நியாய விலைக் கடைகளில் இல்லை என்று சொல்லுகிறார்கள். சுமார் 10 டிரம் தேவை என்றால், 5 டிரம்களில்தான் கிரசின்ஆயில் முதலில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு பிறகு 5 டிரம்கள் கிரசின்

கொண்டு வருவதில் மிக்க தவறுகள் நடைபெறுவதாக பொதுமக்கள் மத்தியிலேயும் பரவலாகப் பேசப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு முறையும் கிரசின் வழங்கும்போது, அதற்குள்ள அத்தனை டிரம்கள் கிரசினையும் ஒரே முறையாக எடுத்துவந்து விநியோகம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோணிப் பைகள் தரமுள்ளதாக வாங்கவேண்டும். அந்தக் கோணிப் பைகள் மீது கூட்டுறவுச் சங்க அடையாளம் இருக்க வேண்டும். மீண்டும் அந்தக் கோணிப் பைகளைப் பயன்படுத்தவேண்டும் அல்லது கோணிப் பைகளை விற்க இருந்தால் முதல் தரத்திலே விற்க வேண்டும். சில பணியாளர்கள் புதிய கோணிப் பைகளை எடுத்துவிட்டு பழைய கோணிப் பைகளைக் காட்டுவதாக தெரிய வருகிறது. இந்தத் தவறுகளைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் ஒரு புகார்ப் புத்தகம் வைக்க வேண்டும். அதில் கண்காணிப்புக் குழுவினர் எந்த அளவுக்கு பொருள்கள் வந்துள்ளது. ஒப்பனிங் ஸ்டாக், அதற்குப் பிறகு குளோசிங் ஸ்டாக், எவ்வளவு அளவு கொள்முதல், பொருள்கள் இருப்பு இருக்கிறது என்பதனை ஒரு கையெழுத்துப்போட்டு அது மக்கள் மத்தியிலே தெரியப்படுத்திட அரசு ஆவன செய்யவேண்டும்.

தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அரசு 600 கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் ஒரு கிலோ அரிசியினுடைய விலையை ஒரு ரூபாய் குறைத்த பலன் மக்களுக்குப் போய் சேரவேண்டுமென்ற நல்ல உணர்வோடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஊழல் செய்கின்ற விற்பனையாளர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து உடனே வேலையில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும். இது போன்ற கூட்டுறவுச் சங்கங்களில் பணம் கையாடல் செய்யும் விற்பனையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து பணத்தை வசூல் செய்து வேலையில் இருந்து நீக்கம் செய்ய ஆவன செய்ய வேண்டும்.

அளவு குறைவாகப் போடுகின்ற, எடை கற்கள் குறைந்த அளவிலே வைத்திருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டும்.

நியாய விலைக் கடைகள் காலை 6 மணி முதல் பகல் 10 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற செங்கற்பட்டு வல்லம் கிராமத்தில் அரசுக்குச் சொந்தத்தில் கூட்டுறவு விற்பனைக்கூடம் பல லட்சம் ரூபாயில் கட்டி இது நாள் வரை அந்தக் கிடங்கு பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. இந்த வேளாண்மை கூட்டுறவு இணை மையம் முன் இருந்தவர்கள் செய்த தவறால் அதைத் திறக்கமுடியாமல் இருக்கிறது. உடனே புதிய அமைப்பை ஏற்படுத்தி இந்தச் சங்கத்தைத் துவக்க ஆவன செய்யவேண்டுமென்று மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடிந்துவிட்டது. மக்கள் பாராட்டும் புகழும் ஆற்றலும் வாய்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி, எங்களது இதய தெய்வத்தின் தலைமையின் கீழ் கூட்டுறவுத்துறை செயல் திறமையிலும் பொருளாதாரத்தில் உச்ச நிலையும், புதிய வளர்ச்சியும், எந்த தொய்வும் இல்லாமல் தமிழக அரசுக்குப் புகழ் சேர்த்த மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக இதுவரை பிற மாநிலங்களை ஒப்பிடும்போது நம் அரசின் கீழ் இயங்கும் இத்துறை மிகமிக நல்ல செயல்பாடுகளுடன் செயல்படுகிறது என்று கூறி இந்த வாய்ப்பினை தந்த எனது அருமைப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ் இருக்கையில் இல்லை. கூட்டுறவுத்துறை அமைச்சருடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெற்றித் தமிழ்த் தாயின் நெற்றித் திலகமே
சுற்றிவரும் பகை முடிக்கும் சுடர் ஒளியே (மேசையைத் தட்டும் ஒலி)
நடுக்கடலில் அலை அடிக்க முடியாது
நடுக்கடலில் நிலவுக்கு நடுக்கம் தான் எப்போதும்
எட்டுத் திசையிலும் இன்னொலி எழுப்பும்
ஈடிலா அரசி எங்கள் அரசி.

VAAIMAIYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS

எங்கள் இதய தெய்வம்-ஓர் வீணை
அந்த வீணையை உடைக்க நினைப்பவர்கள்
விரல் உடைந்து போவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).
தேன் கூட்டைக் கலைக்க முடவர்களா திரளுவது
ஏன் கூட்டை உடைக்கவேண்டும்
என்றெண்ணிப் பார்த்தாரா?
மாறுதல் வேண்டும் என்று மார் தட்டி நிற்போர்க்கு
தேர்தல் வந்தால் தெரியும்
அவர்கள் சேதி என்னவென்று? (மேசையைத் தட்டும் ஒலி)
இறக்கை இல்லாத இந்தக் கோட்டான்கள்
எங்கே பறக்க முடியும்?
வீரம், விவேகம், அறிவு, ஆற்றல், அரசியல் ஞானம்
இவை அனைத்தும் ஒருங்கே திரண்டு வந்த
விஞ்ஞான தேவதையே
புகார் கண்டம் எழுதுகின்ற புல்வர்க்கு
நான் சொல்வேன், புகார் காண்டம் எழதிகொண்டிருக்கிறார்கள்.
அந்த புகார் காண்டம் எழுதுகின்ற புல்லர்க்கு நான் சொன்னேன்
வஞ்சிக் காண்டத்தில் தான் சிலம்பு முடிவதென்பதை
வையகம் அறியட்டும்
சிலம்பில் கதை தெரியாது புலம்புகின்ற சிறியோர்க்கு
கூட்டுறவு ஒன்றே நாட்டுயர்வு
நம் உயர்வு என்றெண்ணி கொள்கை
பாட்டும், கலையும், பல்வேறு பண்பாடும்
கூட்டி வளர்க்கின்ற
கொள்கை அரசி கோலோச்சும் அரசு இது.

இந்த அரசின் புகழ் மகுடத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி கூட்டுறவு மானியத்தை அவைமுன் வைக்கிறேன்.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

பிற்பகல் 4-25

என்றான் வள்ளுவன். இன்றைக்கு இந்த அவையினுடைய மாண்புகளை எல்லாம் மண்ணிலே போட்டு புதைக்க வேண்டுமென்று சிலர் எண்ணிணாலும்கூட, இந்த அவையினுடைய இறையாண்மையைக் காத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளில் இன்று கூட்டுறவு சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தக் கூட்டுறவு தத்துவத்திற்கும், தமிழகத்திற்கும் மிக நெருங்கிய வரலாற்றுப் பெருமை உண்டு.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் ஏழை, எளிய, வசதியற்ற, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள லட்சக்கணக்கான மக்கள் தங்கள் தேவைகளை தங்கு தடையின்றி பெற்று வருகிறார்கள். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்கூட நெருங்க முடியாத சரித்திர சாதனைகளை தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள், அசாத்திய அறிவாற்றல் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆற்றல்மிகு ஆட்சியில் சர்வசாதாரணமாக நிகழ்த்திக் காட்டி வருகின்றன. கால்கடுக்க நடந்து, கை சோர்ந்து கேட்டுக் கேட்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடம் சென்று பெறமுடியாத வசதிகளை எல்லாம் கூட்டுறவுத் துறையில் கடந்த நான்காண்டுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில்தான் எந்தவிதமான சிரமமும் இன்றி பெற்று வருகிறார்கள்.

விவசாய முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக அமைவது அவர்களுக்குத் தேவையான சாகுபடிக் கடன்களை அளிப்பதுதான் என்கின்ற கொள்கையினைத் திடமாகக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்குத் தேவையான குறுகியகாலக் கடன் மற்றும் மத்திய காலக் கடன் உதவிகளை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

1993-94-ல் குறுகியகாலக் கடனாக *439.54* கோடி ரூபாய் வழங்கப்பட்டது. *1994-95*-ல் இந்த குறுகிய காலக் குறியீடு *450* கோடி ரூபாயாக அதிகரிக்குமென இந்த மன்றத்தில் நான் சென்ற ஆண்டே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அனுமதியுடன் அறிவித்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சாதனையாக இந்தக் குறியீடு எட்டியது மட்டுமல்லாமல், அதையும் மிஞ்சி *561.74* கோடி ரூபாயாக குறுகிற காலக் கடனாக ஒப்பற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வழங்கியுள்ளது. இதனால் *7* லட்சத்து *83* ஆயிரம் விவசாய உறுப்பினர்கள் பலனடைந்திருக்கிறார்கள். *1989-90*-ல் இக் கடனுதவி *233.84* கோடி ரூபாய் அளவில் மட்டும்தான் இருந்தது. இந்தக் கடனளவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களினுடைய ஆட்சிக்காலத்தில் *140* விழுக்காடு அதிகரித்துள்ளது என இம்மன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோல, மத்திய காலக் கடனாக *1993-94*-ஆம் ஆண்டில் *56.65* கோடி ரூபாய் வழங்கப்பட்டு இருந்தது. *1994-95*-ல் மத்திய காலக் கடன் குறியீடு *55* கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இந்த மன்றத்தில் நான் சென்ற ஆண்டே அறிவித்தேன். அதையும் மிஞ்சி சென்ற ஆண்டு, நிதியாண்டில் மத்திய காலக் கடனாக *61.99* கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் *74* ஆயிரத்து *729* விவசாய உறுப்பினர்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகைக் கடன்களைப் பொறுத்தமட்டில் விவசாயப் பெருங்குடிமக்கள், வெண்ணையைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதேன், என்கின்ற அந்த அடிப்படையில் தங்களுக்குப் பணம் தேவைப்படும் பொழுதெல்லாம் கூட்டுறவு வங்கிகள் மூலமாக நகைக்கடன் பெற்று வருகிறார்கள். தனியாரிடம் சென்று நகைக்கடன் பெறுபவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு இன்னல்களைக் களைந்து, அவர்களுக்கு,

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்றானே வள்ளுவன், அந்த அடிப்படையிலே இன்றைக்கு கூட்டுறவு வங்கிகள் நகைக்கடன்களை வழங்கி வருகின்றன. 1993-94-ல் நகைக் கடனாக 1, 363 கோடி ரூபாய் கூட்டுறவு வங்கிகள் மூலம் இந்த அரசு வழங்கியிருக்கிறது. 1994-95-ல் வழங்குவதற்காக குறியீடாக 1,390 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

எதிலும் முன்னேற்றம், எங்கும் முன்னேற்றம் என்கின்ற இலட்சிய அடிப்படையில் ஆட்சியை நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல்மிகு ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) 1994-95-ல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாக 1805.50 கோடி ரூபாய் அளவிற்கு, 26 லட்சத்து 44 ஆயிரம் நபர்களுக்கு நகைக்கடனாக வழங்கப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தில் (மேசையைத்தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1995-96-ல் 1,450 கோடி ரூபாய் நகைக் கடன் வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-30

கூட்டுறவு வங்கிகள் நலிவுற்றப் பிரிவினருக்கு குறுகிய கால, மத்திய காலக் கடன்களை மிக அதிக அளவில் வழங்கி வருகின்றன. 1993-94ல் குறுகிய காலக் கடனாக ரூ. 272.89 கோடியாக வழங்கி இருந்த அளவு 1994-95ல் நலிந்த பிரிவினருக்கு அளித்த குறுகிய காலக் கடன் உதவி 367.03 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதேபோல 1993-94ல் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட மத்திய காலக் கடன் 47.52 கோடி ரூபாய் அளவில் இருந்தது. 1994-95-ல் வழங்கப்பட்ட மத்திய காலக் கடன் 56.45 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆக மொத்தம் வழங்கப்பட்ட மத்திய காலக் கடன் தொகையில் 91 விழுக்காடு நலிவுற்ற பிரிவினரை சேர்ந்து அடைந்திருக்கிறது என்கின்ற இந்தச் செய்தியை இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன். (மேசையைத்தட்டும் ஒலி).

ஆதி திராவிடர் வாழ்வு மேம்பாட்டடைய அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரம் குறுகிய காலக்கடனாக 44.54 கோடி ரூபாயாக 1993–94–ல் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 1994–95ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு குறுகிய காலக் கடனாக 69.78 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மத்திய காலக்கடனாக 13 கோடி ரூபாய் அதே காலகட்டத்தில் வழங்கப்பட்டு இருக்கிறது. 1994–95ம் நிதியாண்டில் இக்கடனுதவி 20.61 கோடி ரூபாயாக வழங்கப்பட்டு இருக்கிறது.

இதேபோல, ஆதி திராவிடர் உறுப்பினர்களுக்கு 1994–95–ல் 53.5 கோடி ரூபாய் நீண்ட காலக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடன் வழங்கல் முறையை எளிதாக்கவும், முந்தைய கடனை திரும்பச் செலுத்துகின்ற உறுப்பினர்களுக்குப் புதிய பயிர் கடன்களை உடனுக்குடன் வழங்குவதை உறுதிப்படுத்தவும், பச்சை வண்ண அட்டை வழங்கி, உடனடியாகக் கடன் வழங்கும் திட்டம், எல்லோரது கணக்குகளையும் தவிடு பொடியாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் 1991–92 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 4482 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 3,87,589 உறுப்பினர்களுக்குப் பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டு, 1994–95ஆம் ஆண்டில் 3,47,601 உறுப்பினர்களுக்கு 266.10 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட, நடப்பு ஆண்டில் மேலும் 20 விழுக்காடு கூடுதலாகச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஏழை, எளியோர்மீது ஈவும் இரக்கமும் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சிறு சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்கட்கு உதவும் பொருட்டு, தேவையின் அடிப்படையில் தனி நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ. 750/– வரையில் மத்திய கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. 1994–95ஆம் ஆண்டில்

மட்டும் 6520 நபர்களுக்கு 43.77 இலட்சம் ரூபாய் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 3791 மகளிருக்கு 25.29 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. வாரிக் கொடுத்தே பழக்கப்பட்ட வள்ளலின் வாரிசின் ஆட்சியில் 1995-96-ல் குறைந்தது 50 இலட்சம் ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் தவப்புதல்வி, சோதனை நெருப்பில் மலர்ந்த மலர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் விருப்பப்படி, விவசாய உறுப்பினர்கள் தாமாக முன்வந்து முறைப்படி பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் கலாச்சாரம் தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக வளர்ந்தோங்கி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

தமிழ்நாட்டில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள் கடன் வசூலில் முன்னேற்றம் 1989-90-ல் 52 விழுக்காடாகவே இருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே இன்றைக்கு இது படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து, 1993-94ம் ஆண்டில் சாதனைகளின் சரித்திரம் படைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் விருப்பம்போல 79.1 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத்தான் நபார்டு வங்கியின் தலைவர் திரு. கோட்டையா அவர்கள் சென்ற ஆண்டு சென்னைக்கு வருகை புரிந்தபோது சொன்னார்,

"State, such as Tamil Nadu has logged good performance in advances and recovery rates, even without elected bodies in Co-operatives to manage the affairs" என்று. அதாவது, விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதிலும் சரி, கொடுத்த கடனைத் திருப்பி வசூல் செய்வதிலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையிலும் கூட, தமிழ்நாட்டின் செயல்திறன் பாராட்டுக்குரியது என்று மனதாரப் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள்.

சென்ற நிதியாண்டில் திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் புதிய மத்திய கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆக, தற்போது தமிழகத்தில் 22 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 622 கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியின் ஆட்சியில் 22 கிளைகள் இதில் மகளிராலேயே நடத்தப்படும் கிளைகளாகும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடப்பு ஆண்டில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மேலும் 9 மகளிர் வங்கிக் கிளைகளைத் தொடங்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் இந்த மன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தணிகை பாபு பேசுகின்றபோது, மத்திய கூட்டுறவு வங்கிகளும், மற்ற கூட்டுறவு வங்கிகளும் வைப்பு நிதியைத் திரட்ட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இந்திய நாட்டிற்கே 'ஆட்சி' என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்து வழிகாட்டிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கிராம மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உயர்த்திடும் நோக்கத்தோடு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, வைப்புத் தொகைளை அதிக அளவில் திரட்டும் திட்டம் சென்ற ஆண்டு முதல் வேகமாகச் செயல்படுத்தப்பட்டது. 1989-90ஆம் ஆண்டில் மத்திய கூட்டுறவு வங்கிகளின் வைப்புத்தொகை ரூ. 961.37 கோடியாக இருந்தது. எதையும் உயர்வாகவே எண்ணி, மற்றவர்களை உயர்த்தும் பண்பின் இருப்பிடமாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் 1994-95ல் 1886.83 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை இந்த மன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒல்காப் புகழ்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் கிராமங்களில் 4655 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் மகத்தான சேவை புரிந்து வருகின்றன. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்க, நியாயவிலைக்கடைகளை நடத்துவது மட்டுமின்றி, குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன் உதவிகளை விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கி, அவர்களது வருமானத்தை உயர்த்திட வழிவகை செய்கின்றன. இவ்வாறு வழங்கப்பட்ட கடனை வசூல் செய்வதில் நல்லதொரு முன்னேற்றத்தை மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் எண்ணத்திற்கேற்ப இந்த வங்கிகள் எய்தியுள்ளன.

1990–91ல் 56.57 விழுக்காடாக இருந்த கடன் வசூல் 1993–94ல் 72.50 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதில் 48 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், தங்கள் உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் நிலுவைகளை முழுமையாக வசூல் செய்து சாதனை படைத்துள்ளன. இச்சங்கச் செயலாளர்களின் பணியைப் பாராட்டும் வகையில், இவர்களைப் பிற மாநிலங்களுக்குச் சுற்றுப் பயணம் அனுப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து உள்ளார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இயங்கிவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் வலிவாகவும், பொலிவாகவும் செயல்படவும், விவசாய உறுப்பினர்களுக்குத் தேவையான வசதிகளை வங்கியில் செய்து தரவும், அவைகளில் உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்த, நவீன வங்கி முகப்புகள் (பேஸ் லிப்ட்) அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1000 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கி முகப்பு அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993–94 ராபி பருவத்தில், புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 6.66 கோடி ரூபாய் ஈட்டுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு 2.22 கோடி ரூபாயாகும். இந்தத் திட்டத்தின் கீழ் 28,887 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். கூட்டுறவு வங்கிகள் மூலம் மட்டும் 5.37 கோடி ரூபாய் ஈட்டுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் 23,938 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

கூட்டுறவு வங்கிகள் சொந்த நிதியாதாரங்களைப் பெருக்கிக் கொள்வதற்காக, வளர்ச்சி செயல்திட்டத்தின்கீழ் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும், தொடக்க வேளாண்மை கூடடுறவு வங்கிகளுக்கும் வள்ளல் தன்மைமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பங்கு மூலதன உதவி வழங்குகிறது. 1989–90–ஆம் ஆண்டில் இந்த உதவி

98.87 இலட்ச ரூபாயாக இருந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் இது படிப்படியாக உயர்ந்து 1993-94 ஆம் ஆண்டில் 175 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை இந்த அவையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற நிதியாண்டில் இந்த பங்கு மூலதன உதவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி, 947.84 இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டது என்ற மாபெரும் சாதனையை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 68,252 மலைவாழ் மக்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பழங்குடியினரின் ஏழ்மையான பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு இந்தச் சங்கங்களுக்கு நிதியுதவிகளைத் தொடர்ந்து, தாராளமாக வழங்கி வருகிறது. தற்போது இந்தச் சங்கங்கள் வட்டியில்லாக் கடன்களை வழங்கி வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் 1994-95 ஆம் ஆண்டில் 76.96 இலட்ச ரூபாய் மானிய நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடனாக 641.23 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நீண்ட காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் குறுகிய காலக் கடன்களையும் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஏழை விவசாய மக்களுக்கு நாம் அளித்து, இந்தக் கடன்களை மீண்டும் குறித்த காலத்தில் திரும்பப் பெறுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் நாம் எடுத்து வருகிறோம். இந்த அடிப்படையில் தான், 1989-90-ஆம் ஆண்டில், அந்தக் காலக்கட்டத்தில் எந்த ஆட்சி இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், 1989-90-ஆம் ஆண்டில் கொடுத்த கடன்களைத் திரும்பப் பெற்றது 11.1 விழுக்காடு. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில் 1993-94-ஆம் ஆண்டில் கொடுத்த கடன்களைத் திரும்பப் பெற்றது 71.1 விழுக்காடு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மன்றத்திற்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் கூட்டுறவு நிலவள வங்கி கடன் நிலுவையில் 99 விழுக்காடு வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளின் அவசர நுகர்வுத் தேவைகளை நிறைவு செய்யவும், வங்கிகள் இலாபகரமாகச் செயல்படவும், பிரதம நிலவள வங்கிகளினால் 17-8-1994 ஆம் நாள் முதல் நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 31-3-1995 ஆம் நாள் வரையில் இந்த வங்கிகள் 22.47 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்களை வழங்கியுள்ளன. இதன்மூலம் இந்த வங்கிகளின் உறுப்பினர்கள் அவசர தேவைகளுக்காகப் பிற வங்கிகளை நாட வேண்டிய அவசியம் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில், இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் ஆவணங்களை வைத்து கடன் பெறுகிறபோது, ஒரு அடமானப் பத்திரத்தைப் பதிவு செய்து தர வேண்டுமென்று ஒரு சாதாரண சட்டம் இருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு புதிய திட்டத்தைக் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொண்டு வந்து, கூட்டுறவுத் துறை வங்கிகளில் ஒருவர் கடன் வாங்குகிறார் என்றால் அந்தச் சொத்தை சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று பதிவுசெய்ய வேண்டிய தேவையில்லை, 'டெபாசிட் ஆன் டைட்டில் டீட்' ஆவணங்களைக் கொடுத்து அதன்மூலமாகக் கடன்களைப் பெற முடியும் என்கிற ஒரு புதிய திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு அடமானப் பத்திரத்தின் மீது நாம் ஸ்டாம்ப் டியூட்டி கட்டுவதைத் தவிர்த்து, ரெஜிஸ்ட்ரேஷன் சார்ஜஸ்ஸை தவிர்த்து, இன்னும் பல விதமான சிக்கல்களைத் தவிர்த்து, ஆவணங்களை கொடுத்து, அதன்பேரில் கடன் பெறுகிற இந்தப் புதிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறுதொழில்களில் ஈடுபட்டுள்ள நலிவுற்ற பிரிவினைச் சார்ந்தவர்களுக்கும், முக்கியமாக மகளிருக்கும் முன்னுரிமை அளித்து நிதியுதவி செய்யும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 'புரட்சித் தலைவி

ஜெ. ஜெயலலிதா சிறுதொழில் கடன் திட்டம்' என்கிற அந்தத் திட்டத்தின் கீழ், 1992–93 ஆம் ஆண்டு முதல் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ·செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 4–45

இத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டு காலமாக மொத்தம் 260.19 கோடி ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 5 லட்சத்து 67 ஆயிரத்து 103 நபர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். இதில் 2 லட்சத்து 87 ஆயிரத்து 39 பேர் மகளிர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில் இரண்டு லட்சம் பேருக்கு சிறுதொழில் கடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது என்பதையும் நான் இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்நாட்டில் தலைமை நிறுவனமாக தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும், மாவட்ட அளவில் 29 மொத்த கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளும், தொடக்க நிலையில் 3712 பிரதம பண்டகசாலைகளும் உள்ளன. மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 13 பிரதம பண்டகசாலைகள் 6 மாவட்டங்களில் இயங்குகின்றன. மொத்தவிற்பனைப் பண்டகசாலைகளில் வாங்கப்படும் பொருட்கள் கலப்படம் அற்று, தரமாக இருப்பதைச் சோதனை செய்வதற்காக 24 தரப் பரிசோதனைக் கூடங்கள் இயங்குகின்றன. சென்ற நிதியாண்டில் மட்டும் நுகர்பொருட்கள் 1,539 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு எல்லோரும் இன்புற்றிருப்பதைத் தவிர, வேறொன்றும் அறியாத மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தீபாவளிப் பண்டிகையை ஏழை, எளியவர்களும், சிறப்பாகக் கொண்டாடும் வகையில், ஆணையிட்டதையொட்டி, சென்ற தீபாவளியின்போது, சேலை, இரவிக்கை, வேட்டி, முழங்கால் சட்டை, சட்டைத் துணி வகைகளை பாக்கெட் ஒன்றுக்கு 99 ரூபாய் என்ற குறைந்த விலையில் 25 லட்சம் ரூபாய்க்கு பண்டகசாலைகள் மூலமாக விற்பனை செய்தார்கள். மேலும் 27 தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள், சந்தை விலையைவிட 10 விழுக்காடு குறைவாக, 280 லட்ச ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டன என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். கூட்டுறவுத் துறையிலே, பருப்பு வாங்குவதிலே ஏதோ தவறு நடந்து இருப்பதாக ஒரேயொரு பத்திரிகை எழுதியிருக்கிறது. இதுசம்பந்தமாக இன்றைக்கு இந்த மானியம் இடம் பெறுகிற காரணத்தால், அதற்கு பதில் அளிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பொதுவாக பத்திரிக்கைகள் செய்தியைத் தருகின்றபோது, யாரோ சொன்னார்கள், இப்படி கருதப்படுகின்றது, இப்படி சொல்கிறார்கள், இவர்கள் செய்தார்கள் என்று ஏதோ ஒரு யூகத்தினுடைய அடிப்படையிலே செய்திகளை, அதுவும் குறிப்பாக அரசுத் துறை செய்திகளை அவர்கள் வெளியிடக்கூடாது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு நான் எண்ணிப்பார்க்கிறேன். ஒரு காலகட்டத்திலே அமெரிக்க நாட்டின் பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் அவர்கள் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார்கள். அதாவது தாங்குகினற கட்டைகள் இல்லாமல், தனி மனிதனுடைய உதவி இல்லாமல் அவர்கள் எழுந்து நிற்க முடியாது, நடக்க முடியாது, அப்படிப்பட்ட கட்டம். ஆனால், அன்றைக்கு இருந்த பத்திரிகைகள், அவர்கள் தாங்கி நிற்கும்போதோ, அல்லது தாங்குகின்ற கட்டைகளை அவர்கள் பயன்படுத்தி நடக்கின்றபோதோ, அந்தப் படங்களை பத்திரிகைகள் போட்டதே கிடையாது. அவர்கள் உட்கார்ந்து இருப்பதைப் போலவோ, நடப்பதைப் போலவோ நின்று இருப்பதைப் போலவோ போட்டதே கிடையாது. அதைப்போல வின்சன்ட் சர்ச்சில். இப்படிப்பட்ட நிலைமைகளுக்குள் நான் அதிகமாகப் போக விரும்பவில்லை. அதேபோல், ஹெரால்ட் வில்சன் அவர்கள் ப்ரைம் மினிஸ்டராக இருந்தபோது, பிரவுன் என்பவர் துணைப் பிரதமராக இருந்தார். இவர், பாராளுமன்றத்திற்குச் செல்கின்றபோது, அந்தப் படிகளில் ஏறுகின்றபோது, பிரவுன் அவர்கள் தடுக்கி கீழே விழுந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் பத்திரிகையாளர்கள், படம் பிடிப்பவர்கள் அங்கே இருக்கிறார்கள். அந்தப் படத்தை எடுத்தார்கள். என்றாலும் கூட, அந்தப் பத்திரிகைகள் அந்தப் படத்தை வெளியிடவே இல்லை. அதற்கு அடுத்த நாள் "டைம்ஸ்" என்கிற பத்திரிகை துணைத் தலையங்கம் எழுதுகிறது. அந்தத் தலையங்கத்திலே என்ன சொன்னார்கள் என்று சொன்னால் அந்தப் படத்தை நாங்கள் வெளியிட்டால், எங்களுடைய வாசகர்களுக்கு ஒரு கீழத்தரமான கருத்தை நாங்கள் தெரிவிக்கிறோம் என்கிற அடிப்படையிலே துணைத் தலையங்கமே எழுதியிருந்தார்கள். எதற்கு இதைச் சொல்கிறேன்

என்றால் இன்றைக்கு பருப்பு வாங்கியதிலே தவறு நடந்து இருப்பதாக, அவர்கள் பத்திரிகைகளிலே செய்தி தந்திருக்கிறார்கள். பருப்பு அல்லது வேறு எந்தப் பொருளாக இருந்தாலும் கூட்டுறவு பண்டகசாலைகளிலே கொடுக்கப்படுகின்ற 29 அத்தியாவசிய பொருட்களைப் பொறுத்தவரையில் எந்தெந்த இடங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறைவான விலையிலே விற்கப்படுகிறதோ, அந்தந்த இடங்களுக்கு எல்லாம் சென்று, அந்தப் பொருட்களை வாங்குகிறார்கள். எனவே, இன்றைக்கு வந்திருக்கிற அந்தப் பத்திரிகைச் செய்தியை நான் முழுக்க முழுக்க மறுக்கிறேன். அதிலே எந்தவிதமான தவறும் நடக்கவில்லை. ஒன்றினை மட்டும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட செய்திகளைப் போடுகின்றபோது, இந்தத் துறையில் இருப்பவர்களையும் ஒரு வார்த்தை கேட்டு, இப்படிப்பட்ட செய்தி வந்திருக்கிறதே என்று கேட்டு, அவர்கள் வெளியிட்டால் அது நன்றாக இருக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது வினியோகத்திட்டம் இன்றைக்கு இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலுமே இல்லாத அளவிற்கு, தமிழகத்திலேதான் பொது வினியோகத் , திட்டம் மிகச் சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலே மற்ற மற்ற மாநிலங்கள் அது எங்கெங்கு எல்லாம் பொது விநியோகத் திட்டம் இருக்கிறதோ, அவர்கள் எல்லாம் தமிழகத்திற்கு வந்து இங்கே நடைமுறையில் இருக்கின்ற அந்த நடைமுறைகளை எல்லாம் பார்த்துச் செல்கின்ற சூழ்நிலை தமிழகத்தின் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அந்தச் செயல் முறை நடத்தப்படுவதை வந்து பார்த்துச் செல்கிறார்கள்.

பிற்பகல் 4–50

அது மட்டுமல்ல, 31–12–1994 அன்று டில்லியிலே நம்முடைய கூட்டுறவுத் துறைக்காக கொடுக்கப்பட்ட அந்தக் கேடயத்தைப் பெறச் சென்றபோது அவர்கள், அங்கேயிருந்த மத்திய அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர், மற்ற மற்ற கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் அத்துணை பேரும் தமிழகத்தினுடைய செயல்முறைகளைப் பற்றி, பொது விநியோகத் திட்டத்தைப் பற்றி வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ஜப்தி நடக்கிறது என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஜப்தி என்கின்ற அந்த நிலைமையைப் பொறுத்தமட்டில் சிறு விவசாயிகளுக்கு எந்தக் காலக் கட்டத்திலேயும் ஜப்தி நடவடிக்கை எடுப்பது கிடையாது. ஆனால் ஒதுக்கப்பட்ட, குறிப்பிடப்பட்ட சில கடன்களைப் பெற்று இருப்பவர்கள், அவர்களைக் கூட அணுகுமுறையிலே அந்தப் பணத்தைத் திருப்பித் தாருங்கள் என்று சொல்லி, எங்களுடைய துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அணுகுமுறையிலே அந்தக் கடனை வசூல் செய்கிறார்கள்.

இன்னொரு செய்தியை நான் இங்கே சொல்லவேண்டும். பஞ்சாப்பில் ஒரு விவசாயி கடனைத் திருப்பித் தரவில்லை என்று அவருடைய உடைமைகளை ஜப்தி செய்தது மட்டுமல்ல, அவரைக் கைது செய்து 40 நாட்களுக்கு சிறையிலே வைத்திருக்கிறார்கள். அந்தச் செய்தியைப் பார்க்கின்றபோது இன்றைக்கு தமிழகத்திலே புரட்சித் தலைவி அவர்கள் சொல்வார்கள், 'எஜுகேட் தி பப்ளிக்'-மக்களை நீங்கள் பண்படுத்துங்கள், மக்களுக்கு நீங்கள் அறிவுரை சொல்லி இந்தக் காரியத்தைச் செய்யுங்கள் என்று அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். அந்த முறையிலே இன்றைக்கு தமிழகத்தினுடைய கூட்டுறவுத் துறையில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்பதை மக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி, அதன்மூலமாகக் கொடுத்த கடனை அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் கடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் குறித்த நேரத்திலே முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். கூட்டுறவு நிறுவனங்களில் பயிற்சி பெறாத ஊழியர்கள் நலனைக் கருதி, கருணை உள்ளம் படைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல் மிகு ஆட்சியில் அஞ்சல் வழிப் பட்டயப் பயிற்சித் திட்டம் 1992-93 முதல் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. துவக்கத்தில் 3366 ஊழியர்களும், இரண்டாவது ஆண்டில் 5263 ஊழியர்களும் இப்பயிற்சியின் மூலமாக பயன்பெற்றிருக்கிறார்கள். நடப்பாண்டில் பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை சென்ற ஆண்டைவிட சுமார் 1300 அளவிற்கு கூடுதலாகி மொத்தம் 6563 பேர் பயனடைவார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பொதுமக்களும், சங்க உறுப்பினர்களும் கூட்டுறவுக் கொள்கைகளையும், நடைமுறையினையும் நன்கு புரிந்துகொள்ள கிராமங்கள் தோறும் "உறுப்பினர் கல்வித்திட்டம்" தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 15 லட்சம் பேர் இதில் கலந்துகொண்டு பயன்பெற்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் 30,000 புதிய உறுப்பினர்களும் இதன்மூலம் சேர்க்கப்பட்டார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வானொலியின் மூலமாகக் கூட இன்றைக்கு கூட்டுறவுத் துறையினுடைய கொள்கைகளை அங்கே நிகழ்ச்சிகளாக நடத்தி, அதிலே மாணவர்களைப் பங்கேற்கச் செய்து, அதன்மூலமாக அவர்களுக்கு பரீட்சை வைத்து, அதிலே பரிசு பெறுகின்றவர்களுக்கு பரிசு தந்து, இன்றைக்கு கூட்டுறவுத்துறை ஆதரித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக மாநில அளவிலே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அந்த விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் நல்ல பரிசுகளைக் கொடுக்கின்ற ஒரு திட்டத்தை நடைமுறையில் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனிக்கொடியும், தனிச் சின்னமும் கொண்டு விளங்கும் துறையான கூட்டுறவுத் துறை, கொள்கையின் உறைவிடமாய், சாதனைகளின் பிறப்பிடமாய் திகழும் சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிதனில், சாதனைகளில் வெற்றிக் கொடியையும், வெற்றிச் சின்னத்தையும் பார் எங்கும் புகழ் மணக்க பெற்றுத் திகழும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு புதிய திட்டங்களை, அறிவிப்புகளை வழங்கி ஆணையிட்டிருக்கிறார்கள். புதிய அறிவிப்புகள். (1) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் நகர கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் சிறு தொழில் கடன் தொகை நபர் ஒன்றுக்கு ரூ. 750-லிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)..

(2) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறிய வியாபாரிகளுக்குத் தேவையின் அடிப்படையில் வழங்கப்படும் கடன் தொகை ரூ. 750–லிருந்து ரூ. 1500ஆக உயர்த்தப்படுகிறது.

பிற்பகல் 4–55

(3) நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரான, நாகப்பட்டினத்தில் அனைத்து உறுப்பினர்களும் பெண்களாகவே இருக்கும் ஒரு மகளிர் கூட்டுறவு நகர வங்கி அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து 800 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வங்கிச் செயல்பாட்டிற்கான முகப்புகள் அமைக்க ரூ. 160 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனைத் தவிர கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 200 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வங்கிச் செயல்பாட்டிற்கான முகப்புகள் அமைக்க (பேஸ் லிப்ட்) ரூபாய் 40 லட்சம் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) அரசின் கொள்கையான ஒரு மாவட்டத்திற்கு ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தல் என்ற அடிப்படையில், புதியதாக அமைக்கப்பட்ட விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திற்கு, விழுப்புரத்தில் ஒரு புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வெகுவிரைவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) புதியதாக உருவாக்கப்பட்ட விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் ஒரு புதிய நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை நிறுவப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) விவசாயிகளின் நன்மைக்காக அவர்களுக்குத் தேவைப்படும் உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவைகளோடு, விவசாயக் கருவிகளும் ஒரே இடத்தில் பெறுவதற்கு ஏதுவாக, கூடுதலாக 100 விவசாய சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(8) ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் செயல்படும் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் மூலமாக பல்வேறு விதமான கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் அவைகள் பொதுமக்களுக்கு ஆற்றும் சேவைகளை விளக்க கண்காட்சிகள் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(9) தற்போது சென்னை, அண்ணாமலை மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகங்களில் கூட்டுறவை சிறப்புப் பாடமாக எடுத்துக்கொண்டு பி.காம், மற்றும் எம்.காம் பட்டப் படிப்புகளில் தனித் தன்மையுடன் தேர்வு பெறும் மாணவர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பரிசு முறை தமிழ்நாட்டில் உள்ள ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

(10) மதுரையில் கூட்டுறவு வேளாண்மை பயிற்சி நிலையத்திற்கு --திரு. தவசி அவர்கள் கேட்டார்கள்--ரூ. *1.50* கோடி செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டப்படும். அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, விமான நிலையத்திற்குப் பக்கத்திலே அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

(11) கோவை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம் ரூ. *22* கோடி செலவில் ஐந்தாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(12) அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைமை அலுவலகங்களில் செயல்படும் வங்கிப் பிரிவுகளில் வாடிக்கையாளர்களின் வசதிகளைக் கருத்திற் கொண்டு குளிர் சாதன வசதியும் செய்து தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(13) நகர கூட்டுறவு வங்கிகளில் வாடிக்கையாளர்களின் சேவைகளை மேம்படுத்த வங்கிகளின் செயல்பாடுகள் கணிப்பொறி மயமாக்கப்படும் என்பதையும் மகிழ்சசியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(14) 1995–96-ஆம் ஆண்டில் கூட்டுறவு பயிற்சி நிலையங்களில் பட்டயப் படிப்புக்கான மாணவர்களின் எண்ணிக்கை 4,340-லேயிருந்து 5,300 ஆக உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(15) பள்ளி இறுதிப் படிப்பு அல்லது இதற்குக் குறைவான கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு உச்ச வயது வரம்பு 30-லிருந்து 32 ஆக உயர்த்தி 20–10–1993-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த அரசு ஆணையைப் பின்பற்றி அதனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விரிவுபடுத்த 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் தக்க திருத்தம் கொண்டு வரப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(16) அனைத்து மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை சிறப்பு அங்காடிகளில் புத்தகப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(17) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட தலைநகர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் "கூட்டுறவு திருமண மண்டபம்" என்கிற ஒரு மண்டபம் 75 லட்சம் ரூபாயில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(18) தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அலுவலக கட்டிடங்களுக்குச் சுற்றுச் சுவர் எழுப்பவும், கூட்டுறவு வங்கிகளில் திருட்டு நடந்துவிடாமல் தடுப்பதற்கு "முன்னெச்சரிக்கை மணி" (Burglary Alarm) மற்றும் அதைப்போலவே அனைத்து கூட்டுறவு வங்கிகளிலும் ''தீயணைப்பு கருவிகள்'' (Fire Extinguishers) பொருத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையிலேயே உறுப்பினர்கள் பேசியபோது அவ்வப்போது கொடுத்த பதில்களிலேயிருந்தும் (குறுக்கீடு) (பார்வையாளர் மாடத்திலிருந்து ஒருவர் கோஷமிட்டு துண்டுபிரசுரங்களை அவைக்குள் வீசி எறிந்தார்).

பிற்பகல் 5-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையிலே உறுப்பினர்கள் பேசியபொழுது அவ்வப்போது கொடுத்த பதில்களிலே இருந்தும், இப்போது நான் ஆற்றிய உரையிலிருந்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாவிதமான விளக்கங்களையும் பெற்றிருப்பார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. தவசி.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு நிறுவனங்களில் செயலர் என்ற பதவி பல நாட்களாக, 50, 60 ஆண்டுகாலமாக ஒரு பாரம்பரியம் மிக்க குறுநில மன்னர்கள் போல இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களை மாறுதல் செய்வதற்கு ஏதாவது அமைச்சர் அவர்கள் சட்டப்பூர்வமாக சட்டத் திருத்தம் கொண்டுவருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத்துறைச் சட்டம் 1983-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இப்போது அதை ஒட்டினாற்போல் 1988-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட விதிமுறைகளின்படியும், இந்த அதிகாரிகளை மாற்றுவதற்கு அந்தச் சட்டத்திலே இடம் இல்லை. ஆகவே, இப்போது கூட்டுறவுத் துறை அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு, அதில் ஒரு திருத்தம் கொண்டு வருவதற்கு மிக வேகமாகச் செயல்பட்டுவருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத்திற்கு முன்பாகவே தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்குப் புதியதாக மத்திய கூட்டுறவு வங்கி ஆரம்பித்தோ அல்லது கும்பகோணத்திலிருக்கிற வங்கியை மாற்றவோ அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திற்கு ஒரு மத்திய கூட்டுறவு வங்கி என்கின்ற அந்தக் கொள்கையின்படி தஞ்சாவூருக்கு ஒரு மத்திய கூட்டுறவு வங்கியும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒரு மத்திய கூட்டுறவு வங்கியும், உருவாக்கவேண்டும் என்பது அரசுக்குத் தெரியும். நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு உருவாக்க வேண்டிய அந்த மத்திய கூட்டுறவு வங்கிக்காக இப்போது நிலம் வாங்கப்பட்டு, உடனடியாக அங்கு வேலைகள் தொடங்கப்பெற்று, அந்த மாவட்டத்திற்குத் தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி உருவாக்கப்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நாச்சியப்ப கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியில் நான்கே வகுப்பறைகள்தான் உள்ளன. ஒரு வகுப்பறையில் 100-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று கொண்டுள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, சேர்க்கப்படுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைப்பது அல்லது புதியதாக இடங்களை ஏற்படுத்தித்தர வேண்டும். அங்கு சேருகின்ற மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றார்கள் என்பதற்காகத்தான் இப்போது அஞ்சல் வழியாகக் கூட்டுறவுப் பட்டயப் பாடத்தினை நடத்துவது என்கின்ற ஒருமுறையையும் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போன்று, அங்கே வசதியிருக்குமானால், இடம் அங்கே கிடைக்குமானால், அதே இடத்திலே விரிவுபடுத்த வசதியிருக்குமானால், அது விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 23--கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 23, கூட்டுறவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கூட்டுறவுப் பற்றிய 23–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 49,80,27,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 46—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கை மீதான விவாதமும், வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 46--செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கை எண் 46–ன் கீழ் ரூபாய் 10,44,15,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2404, திரு. ஆர். சிங்காரம்.

பிற்பகல் 5-05

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,44,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி திரைப்படத்தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கை என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டு உள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை குறிப்புகளை @நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் என்னுடைய பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்கு பதிலையும் அரசு எடுக்கவுள்ள முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்கள் அடுத்து அவரது மானியக் கோரிக்கையை முன்மொழிய இருக்கிறார். இப்போது பேரவைக்கு ஓர் அறிவிப்புச் சொல்லவேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறையின்மீது கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சாப்பிடுவதற்கு வசதியாக கோல்டன் ப்ரைடு பிரான், பிரான் பக்கோடா, ஃபிஷ் கட்லட், ஃபிங்கர்

@ 355 முதல் 400 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

ஃபிஷ், ஃபிஷ் பிரை, சுறா புட்டு, ச்சில்லி ஃபிஷ், சாலட் மற்றும் டோமேட்டா ஸாஸ்ஸும், கடைசியாக தேநீரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டசபை வளாகத்திற்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்து மீனைபோல் சத்தான கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு நேரம் விவாதம் நடக்க இருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

திரு. இராம. இராமநாதன்: தலைவர் அவர்களே, நண்டு வைத்திருக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இராமநாதனுக்கு மட்டும் தனியாக தரச் சொல்லியிருக்கிறேன். (சிரிப்பு). செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தொடங்குகிறது. திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: தலைவர் அவர்களே, மைக் சரியாக வேலை செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையில் உங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சிலர் செய்த திருவிளையாடலால் பல மைக்குகள் இங்கே வேலை செய்யவில்லை. அவர்கள் ஒவ்வொன்றாக அவர்கள் இடத்தில் இருப்பதைத்தான் பெயர்த்து எடுத்தார்கள் என்கிறபோது, மற்ற மைக்குகளுக்கு உரிய இணைப்பையும் அது துண்டித்து இருக்கிறது. மதிய வேளையில் சரி செய்தார்கள். இன்னும் கொஞ்சம் சரிசெய்ய வேண்டியிருக்கிறது.

திருமதி ஜீனத் சர்புதீன்: தலைவர் அவர்களே, 1995-96 ஆம் ஆண்டுக்கான இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு அனுமதி தந்ததற்காக தங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்குகிறேன். வரலாறு காணாத அளவுக்கு அமோகமான மக்களின் செல்வாக்கையும், மக்களின் நன்மதிப்பையும், மக்களின் நல்லெண்ணத்தையும் ஒருங்கே சேரப்பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்து, சாதிக்க முடியாத சாதனைகளை எல்லாம் சாதித்து, சரித்திரம் படைத்து, அவற்றையெல்லாம் பொன்னேடுகளில் எழுதி, எதிர்க்க முடியாத சவால்களை எல்லாம் எதிர்த்து, வெற்றியும் கண்டு, உலகத் தமிழ் மாநாடு நடத்தி, உலகத்தில் உள்ள அத்தனை மக்களின் நன்மதிப்பையும் பெற்று, உலகத்தில் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில்

எல்லாம் நிரந்தர இடத்தைப் பெற்று, நம்முடைய நிரந்தர முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் பாண்டியநாடு பைந்தமிழ் பாவலர் எங்கள் அமைச்சரின் கீழ் இந்தத் துறை ராக்கெட் வேகத்தில் மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

பிற்பகல் *5-10*

மக்கள் ஆட்சியில் அரசு ஒவ்வொரு துறையிலும் என்ன செய்தது, என்ன செய்து கொண்டிருக்கிறது, இனிமேல் என்ன செய்யும் அதனுடைய திட்டங்கள் என்ன என்பதெல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்துவது இந்தத்துறைதான். ஏனென்றால் என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும், என்னதான் நன்மைகளைச் செய்தாலும், செய்தி மூலமாகவோ, டி.வி. மூலமாகவோ அல்லது ஏதோ செய்திகள் மூலம் தெரிவிக்காவிட்டால் இந்தச் செய்திகள் எல்லாம் மக்களுக்குப் போய்ச் சேராது. மக்களுக்குப் போய்ச் சேர்ந்தால்தான் அவர்களும் இதெல்லாம் நமக்கு அரசாங்கம் செய்திருக்கிறது என்று அவர்கள் எண்ணி நம் அரசாங்கத்தின்மேல் நல்ல மதிப்பை வைக்க முடியும். ஆகையால் இந்தத் துறையானது அரசுக்கும் மக்களுக்கும் இணைப்பாக ஒரு பாலமாக விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தத் துறையானது பொருட்காட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது. பொருட்காட்சி என்று சொன்னால் ஏதோ ஒரு பொழுதுபோக்கு இடம் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. அந்தப் பொருட்காட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலுள்ள அதாவது நம்முடைய இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதத்தில் அதாவது உடையில், உணவில், சீதோஷ்ணத்தில் அவர்களுடைய பண்பில், கலையில், எல்லாவிதத்திலும் ஒவ்வொரு வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசங்களை எல்லாம் குறிக்கிற அளவுக்கு ஒவ்வொரு மாநிலத்திலுள்ள கலைகள், கலாச்சாரங்கள், தொழில்களை அந்தப் பொருட்காட்சிகள் சித்தரித்துத் தருகின்றன. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ரூபாயை செலவழித்து அங்கெல்லாம் சென்று அங்கே கற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் ஒரு *5* ரூபாயோ அல்லது *10* ரூபாயோ கொடுத்து பொருட்காட்சிக்குச் சென்று அதனைக் கற்றுக்கொண்டு வர முடியும். ஆகவே இந்தப் பொருட்காட்சிகள் சாதாரண ஒரு இடம் அல்ல. அறிவைப் புகட்டும் இடம் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நம் நாட்டிலுள்ள பெரும் தலைவர்கள், சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகள் அவர்களுக்கு எல்லாம் நினைவுக்கூடங்களின் பராமரிப்பையும் இது ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பெரிய பெரிய தலைவர்கள் காமராஜர், பேரறிஞர் அண்ணா இன்னும் மற்றும் பெரிய பெரிய தலைவர்களுக்கு எல்லாம், அவர்களுடைய பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக பிலிம் இன்ஸ்ட்டிடியூட்டை நடத்துகிறது. அந்த பிலிம் இன்ஸ்ட்டிடியூட்டில் நடிப்புத் தொழில், டைரக்டர் தொழில், டெக்னிசியன் தொழில் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இது தான் நம் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு நடத்தும் பிலிம் இன்ஸ்டிடியூட் என்று நினைக்கிறேன். மற்ற மாநிலங்களில், பூனாவில் ஒன்று இருக்கிறது. அது மத்திய அரசு நடத்துகிறது என்று நினைக்கிறேன். நம் இந்தியாவிலேயே, மாநில அரசு நடத்தும் ஒரு பிலிம் இன்ஸ்டிடியூட் இருக்கிறது என்று சொன்னால் அது நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சி செய்யும் தமிழகத்தில்தான் இருக்கிறது என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இதற்கு எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் ஜெ.ஜெ. பிலிம் சிட்டியை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த பிலிம் சிட்டியில் சினிமா உலக வித்தகர்களுக்கு என்ன என்ன தேவையோ அத்தனையும் இருக்கின்றன. அதாவது காவல்நிலையம் வேண்டுமா; ரயில்வே ஸ்டேஷன் வேண்டுமா; பொருட்காட்சி வேண்டுமா; கிணறு வேண்டுமா, குளம் வேண்டுமா; அல்லது கொடைக்கானலில் உள்ள குளு, குளு, தோட்டங்கள் வேண்டுமா, ஊட்டியில் உள்ள உன்னதமான தோட்டங்கள் வேண்டுமா; நைனிடாவில் உள்ள அலங்காரத் தோட்டங்கள் வேண்டுமா; அத்தனையும் ஒருங்கே அமைக்கப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே புரடியூசர்கள் இருந்து தங்கி அங்கே படம் பிடிப்பதற்குக் கூட பைவ் ஸ்டார் ஓட்டல்கள் நல்ல இயற்கையான சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதை எல்லாம் நான் புத்தகத்தைப் பார்த்துவிட்டு சொல்லவில்லை. நேரில் சென்று பார்த்தேன், ஆகவே தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது போல் இருக்கிறது. எப்படி என்றால், இந்த பிலிம் சிட்டி நிறுவியதால் அரசுக்கு லாபம் கிடைக்கிறது; அதே நேரத்தில்

புரடியூசர்களும் அவர்களுடைய சைட் சீனுக்காக ஊட்டிக்கோ, கொடைக்கானலுக்கோ, காஷ்மீருக்கோ, பஞ்சாப்புக்கோ, அரியானாவுக்கோ, செல்ல வேண்டியது இல்லை. குறைந்த செலவில் இங்கே படம் எடுக்க முடிகிறது. இப்படிப்பட்ட நல்ல ஒரு காரியத்தைச் செய்ததற்கு சிலர் ஏதோ ஓலம் இட்டுக்கொண்டு இருந்தார்கள். ஏதோ அவர்கள் பாட்டனார் வீட்டு சொத்தோ; அல்லது அவர்களுடைய தகப்பனார் வீட்டு சொத்தோ; அல்லது அவர்கள் மனைவிமார்கள் மூலம் வந்த சீதனச் சொத்தோ பறிபோய்விட்டது மாதிரி, ஐயோ பிலிம் சிட்டிக்கு எடுத்துக்கொண்டார்களே, பிலிம் சிட்டிக்கு எடுத்துக்கொண்டார்களே; என்று ஓலம் இட்டுக்கொண்டு இருந்தார்கள். இதைச் சும்மா எடுத்துக் கொள்ளவில்லை. அது வேஸ்ட்டாக இருந்தது. பல வருடங்களாக அதில் ஒன்றுமே செய்யவில்லை. அண்ணா யூனிவர்சிட்டிக்குச் சொந்தமான நிலம். சொந்தம் என்றால் அரசாங்கம் கொடுத்ததுதான். அண்ணா யூனிவர்சிட்டிக்கு என்று தனியான ஒரு இடம் அல்ல. அரசாங்கத்தை சேர்ந்ததுதான். அவர்களுக்குக் கொடுத்து இருந்தார்கள். பல வருடங்களாக அது வேஸ்டாகக் கிடந்தது. அப்படி வேஸ்டாக இருந்த அந்த இடத்தை ஒரு நல்ல காரியத்திற்காக உபயோகம் செய்தார்கள். அதற்கு எல்லோரும் ஓவென்று கத்தினார்கள். ஏன் என்றால் வேறு ஒன்றும் இல்லை. அதாவது ஒன்றும் இல்லை என்றால் வெறும் வாயை மெல்லுவதற்குப் பதிலாக ஏதோ கொஞ்சம் அவுல் கிடைத்தால் மென்றுகொண்டு இருப்பார்களாம். அது மாதிரி ஒன்றும் இல்லாமல் இருந்ததால் அதைப்போட்டு மென்று கொண்டு இருந்தார்கள். இப்போது கடைசியில் கம்மென்று இருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு ஊரில் ஒரு கிணறு பாழடைந்திருக்கிறது, தண்ணீர் வேண்டியிருக்கிறது, மக்களுக்கு அந்தப் பாழடைந்த கிணற்றை தூர் எடுத்து மக்களுக்கு தண்ணீர் ஊற்றினால் தப்பா; அதேமாதிரி தான் இதுவும். சும்மா கிடந்த நிலத்தை எடுத்து ஒரு நல்ல காரியத்திற்கு உபயோகம் செய்கிறார்கள். அரசுக்கும் லாபம் வருகிறது; மக்களுக்கும் லாபம் கிடைக்கிறது. ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு அதில் கஷ்டம். ஏன் என்றால் அம்மாவுடைய புகழ் ஜெ. ஜெ. என்று ஏறிக்கொண்டே போகுதே; இதை எப்படி தடுப்பது? ஏதாவது ஒன்று வேண்டாமா; அதற்காகத்தான். வேறு ஒன்றும் உண்மையிலேயே அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தஞ்சையிலே உலகத் தமிழ் மாநாடு நடந்தது. தஞ்சைத் தரணியிலே எங்கு பார்க்கிலும் பாட்டும் பரதமும் தான். நோக்கின இடங்கள் எல்லாம் கர்நாடக கீதம். அதேபோல் நாட்டுப்புற மக்களுக்கு வேண்டுமா, அங்கே நாட்டுப்புறக் கலைகள். அப்புறம் பட்டிமன்றங்கள். அப்புறம், வண்ண வண்ணக்

காட்சிகள். வண்ண வண்ண வர்ண விளக்குகளால் வர்ணத் தோரணங்கள்.

பிற்பகல் 5-15

அங்கே பார்த்தால் மாதா-அதாவது வேளாங்கண்ணி மாதாவுடைய உருவம் ஒரு பக்கம் நிற்கும். அதுமாதிரி நாகூர் ஆண்டவருடைய பள்ளிவாசல் ஒரு பக்கம். அதே மாதிரி கோவில்கள். அதாவது அங்கேகூட சமத்துவம், சோஷலிசத்தைக் கொண்டு வந்திருந்தார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்.

இப்படியெல்லாம் செய்கிறார்களே புரட்சித் தலைவி, தினம் ஏணியிலே ஏறிக்கொண்டிருக்கிறார்களே ஜேஜே என்று, இதை வீழ்த்துவது எப்படி என்றுதான் இவர்களுக்கெல்லாம் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், அதைச் செய்ய முடியாது.

ஆகையினால்தான், நான் என்ன சொல்கிறேன் என்றால், கோணல் புத்தி படைத்த இந்தக் குள்ளநரிக் கும்பலும்--கோணல் புத்தி படைத்த இந்தக் குள்ளநரிக் கூட்டமும், குறுக்கு வழி தேடும் நயவஞ்சக சகுனிகளும், விரோதிகளுக்குத் துணை போகும் நயவஞ்சகத் துரோகிகளும், பலப்பல சூழ்ச்சிகள் செய்தாலும் அவைகளையெல்லாம் சுக்கு நூறாக்கி இந்த ஆட்சிக்கு அரணாக நின்று அறம்பல செய்திடுவோம் எனக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கையில் உரையாற்ற வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களுக்கும், அரசிற்கும் இணைப்புப் பாலமாகச் சிறந்த முறையில் பணியாற்றும் இந்தத் துறையின் சார்பில் தயாரிக்கப்படும் அரசின் செய்தி மலர்கள் திரையரங்குகளில் மட்டுமே திரையிடப்பட்டு வருகின்றன. அனைத்து இல்லங்களிலும் அரசின் திட்டப் பணிகளும், ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களும் பொது மக்களைச் சென்றடைவதற்கு ஏதுவாக கேபிள் டி.வி.க்கள் மூலமாகச் செய்தி மலர்கள் திரையிடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு வேண்டுகிறேன்.

கர்நாடக மாநிலத்தில் திரைப்படத் துறையை ஒரு தொழில் துறையாக மாற்றுவது குறித்து ஆராய சுப்பாராவ் கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் கர்நாடக மாநிலத்தில் திரைப்படத் துறை தொழில் துறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, தமிழகத்திலும் திரைப்படத் துறையைத் தொழில் துறையாக அறிவிக்க ஒரு கமிட்டி அமைத்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

தற்போது மத்திய அரசு தனது விருப்பப்படி திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதைக் கைவிட்டு, திரைப்படத் தணிக்கை குழுவிற்கு மாநில அரசு பரிந்துரைச் செய்பவர்களையே உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துமாறு வேண்டுகிறேன்.

தமிழ்த் திரைப்படங்களில் வன்முறை வெறியாட்டமும், ஆபாசக் களியாட்டமும் வரம்பு மீறி அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்குமாறு தணிக்கைக் குழுவுக்குப் பரிந்துரைச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

தூங்கிக் கிடந்த தமிழகத்தைத் தட்டியெழுப்பிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர்களின் வாழ்க்கை வரலாற்றைச் செய்திப்படங்களாகத் தயாரிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சி முடிந்து அடுத்த நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் அரசின் பிரச்சாரப் படங்களை இனிமேல் இலவசமாக ஒளிபரப்ப மாட்டாது என்ற மத்திய அரசின் முடிவைக் கண்டித்து, மாநில அரசு தயாரிக்கும் பொதுமக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய விழிப்புணர்ச்சியூட்டக் கூடிய பிரச்சாரத் திரைப்படங்களைத் தொடர்ந்து கட்டணம் இன்றி தொலைக்காட்சியில் இடம் பெறச் செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்துமாறு வேண்டுகிறேன்.

இந்த ஆண்டு தேசியக் கவிஞர் பாரதியின் நினைவுநாளை பவளவிழா ஆண்டாக எட்டையபுரத்தில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

சீறா தந்த செம்மல் உமறுப்புலவர் அவர்களின் விழாவினை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

அமெரிக்காவில் பிறந்து, தமிழகம் வந்து, தமிழ் இலக்கியங்களைக் கற்று, திருக்குறள், திருவாசகம் உள்பட பல நூல்களை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்து, தமிழ் மொழியின் சிறப்புக்களை உலகம் முழுவதும் பரவக் காரணமாக இருந்த ஜி.யு. போப் அவர்களின் திருவுருவச் சிலையைத் தஞ்சாவூரில் அமைக்குமாறு வேண்டுகிறேன்.

சுதந்திரக் காற்றை நாம் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகத் தாய் நாட்டை விட்டு வெளியேறி அயல்நாட்டில் இந்திய தேசீய ராணுவம் அமைத்து நாட்டு விடுதலைக்காகப் போராடிய தலைவர் வங்கம் தந்த சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் அவர்களுக்கு மதுரையிலும்,

சுதந்திரப் போராட்ட வீரரும், தேசபக்தருமான சுப்பிரமணிய சிவா அவர்களின் சொந்த ஊரான தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப் பட்டியிலுள்ள அவரது சமாதியிலும்,

விடுதலைப் போராட்ட வீரரும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அரசியல் குருவுமான தீரர் சந்தியமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு புதுக்கோட்டை அடுத்துள்ள திருமயத்திலும்;

“கண்ணியம் இந்த நாட்டில் நடமாடுகிறது” என்று பேரறிஞர் பெருந்ததை அண்ணா அவர்களால் போற்றப்பட்ட கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னையிலும்;

நாகர்கோவிலில் பிறந்து திரைப்படத்தில் தனது நகைச்சுவை மூலம் புரட்சிக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி தமிழக மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்ற வள்ளல் பெருந்தகை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு அவர் வாழ்ந்த சென்னையிலும்;

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் மறைவுக்குப் பிறகு இஸ்லாமிய சமுதாயத்தின் மதிப்புமிகு தலைவர் சிராஜுல் மில்லத், ஏ.கே.ஏ. அப்துஸ்ஸமது அவர்களின் தந்தையும், தித்திக்கும் திருமறையான திருக்குர்ஆனை தேனினுமினிய செந்தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அளித்த சிறந்த மார்க்க அறிஞரும், தமிழ்ப்

பற்றாளருமான மௌலானா மௌலவி, அல்லாமா அ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களுக்குச் சென்னையிலும்;

மறைந்த முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தபடி பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் பிறந்த பூந்தமல்லி அருகே நசரத் பேட்டையிலும்;

நினைவு மணிமண்டபங்களை அமைக்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5.20

தமிழ்த் தாத்தா. உ.வே. சாமிநாதைய்யரின் பிறந்த ஊரான தஞ்சை உத்தமதானபுரத்திலும், அவர் மறைந்த திருக்கழுக்குன்றத்திலும் நினைவுத் தூண்கள் அமைக்குமாறு வேண்டுகிறேன்.

மறைந்த தவில் வித்வான் நீடாமங்கலம் என்.டி. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவினையும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் நூற்றாண்டு விழாவினையும் அரசு விழாவாக கொண்டாடுமாறு வேண்டுகிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் தரும் புனிதப் பணியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு முன்னணியில் இருந்து வருகின்றது.

சென்னையில் பத்திரிகையாளர்கள் குடியிருப்பதற்காக வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 5.5 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தந்து வீடுகள் வழங்கத் திட்டம் மேற்கொண்டிருப்பதைப் போலவே திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலான முக்கிய நகரங்களிலும், பத்திரிகையாளர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்கு விரிவுபடுத்தியருள வேண்டுகிறேன். மற்ற பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு வழங்குவதற்கு அரசு ஆவன செய்வது போலவே, தமிழரசு, திருக்கோயில், கூட்டுறவு முதலிய அரசின் இதழ்களில் பணியாற்றுபவர்களுக்கும் குடியிருப்பு வழங்க வேண்டுகிறேன்.

பத்திரிகைகளைச் சிறப்பாக நடத்துகின்றவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக இதழ்யியல் துறைகளில் பேராசிரியர் பதவிகளுக்கு அனுபவம் மிக்க பத்திரிகையாளர்கள் தேர்வுச் செய்யப்பட வேண்டும். அதற்கேற்ப பல்கலைக் கழக விதிகளைத் திருத்தியமைக்க வேண்டுகிறேன். இதழ்யியல் மற்றும் மக்கள் தொடர்புக் கல்விக்கென்று தனியாக செய்தித் துறையின் சார்பில் கல்லூரி துவக்கி அங்கு பத்திரிகையியல் மற்றும் மக்கள் தொடர்புக் குறித்து பட்டயப் படிப்பு முதற்கொண்டு பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகளையும் துவக்கி நடத்திட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். வெளிநாடுகளில் கம்யூட்டர் யுகமான இப்போது, மின்னணுச் செய்தித் தாள்கள் பரவலாக வந்துவிட்டன. இந்தியாவிற்கு அனைத்துத் துறைகளிலும் சிறந்த வழிகாட்டியாகத் திகழும் தமிழகம், செய்தித் துறையின் சார்பில் மாதந்தோறுமாவது மின்னணுச்' செய்தித் தாள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

வெளிநாடுகளைச் சார்ந்தவர்கள் இந்தியாவில் தினசரிப் பத்திரிகைகளையும், கால இதழ்களையும் ஆரம்பித்து நடத்த அனுமதிப்பதுப் பற்றி பரிசீலித்து வருவதாக மத்திய அரசு அறிவித்திருப்பது இந்திய மக்களை மீண்டும் அடிமைப்படுத்துவதற்கு வழிவகுப்பதுடன், பத்திரிகை சுதந்திரத்திற்கு வைக்கப்படும் வேட்டு என்று பத்திரிகையாளர்களால் அஞ்சப்படுகிறது. பத்திரிகை ஆசிரியரின் பணி தொழில் அல்ல. தொண்டு என்பதே உலகம் முழுவதும் பெரும்பாலானவர்களின் கருத்தாகும். எனவே, சுரங்கம் மற்றும் பல்வேறு தொழில்கள் நடத்துவதற்கு வெளிநாட்டினரை அனுமதிப்பதைப்போல் பத்திரிகைகளை நடத்துவதற்கு வெளிநாட்டினருக்கு இந்தியாவில் இடம் தரலாம் என்ற வாதம் தவறானது. இந்தியர்கள் நடத்தும் பத்திரிகைகளுக்கு இந்தியாவின் நலன்களே முக்கிய குறிக்கோளாக இருக்கும். வெளிநாட்டவர்கள் இந்தியாவில் நடத்தக்கூடிய பத்திரிகைகளுக்கு இந்தக் குறிக்கோள் இருக்காது என்பது தெளிவு. இந்தியப் பத்திரிகைகளில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கக் கூடாது. இந்தியப் பத்திரிகைகளில் ஆசிரியர் பதவி போன்ற உயர்நிலை பதவிகளில் வெளிநாட்டினர் இருக்கக் கூடாது. இந்தியர்கள்தான் இருக்க வேண்டுமென்று 1954–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட முதல் பத்திரிகைக் கமிஷன் சிபாரிசு செய்தது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிபதி மாத்யூ தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டாவது பத்திரிகைக் கமிஷன், வெளிநாட்டுப் பத்திரிகைகளின் இந்திய பதிப்புகளைத் துவக்குவதற்கு தடை விதித்து

சட்டம் இயற்ற வேண்டுமென்று சிபாரிசு செய்தது. ஆகவே, வெளிநாட்டு பத்திரிகைகள் இந்தியாவில் பதிப்புகளைத் துவங்குவதற்குத் தடை விதிக்கும் சட்டத்தை இயற்றுமாறு மத்திய அரசை வலியுறுத்துமாறு வேண்டுகிறேன்.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாவினைக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தபோதே சிறப்புறக் கொண்டாடி சிறப்பித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண் விடுதலைக் கீதம் இசைத்த மகாகவி பாரதியின் பெயரில் ஆண்டுதோறும் சமுதாயத்தில் சிறந்து விளங்கும் பெண்மணிகளுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கும் தபால் தலைகள் வெளியிடுமாறு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன்.

சென்னைத் தீவுத் திடலில் நிரந்தரப் பொருட்காட்சி அமைத்திடவும், மாவட்டந்தோறும் தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்துவதற்கும், கரூர், திருப்பூர், சிவகாசி முதலிய குறிப்பிடத்தக்க நகரங்களில் பொருட்காட்சிகள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

பெண் சிசுக் கொலையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட பாரதிராஜாவின் "கருத்தம்மா" திரைப்படத்திற்கு வரிவிலக்கு அளிப்பதுடன் மத்திய அரசு கலை விளம்பரத்துறையின் சார்பில் புன்னகை, திக்கற்ற பார்வதி முதலிய திரைப்படங்களைக் கிராமங்களில் பொது மக்களுக்கு இலவசமாகத் திரையிடப்படுவதைப் போல் "கருத்தம்மா" திரைப்படத்தை செய்தித் துறை சார்பில் கிராமங்களில் இலவசமாக திரையிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

இந்திய விடுதலைக்காக மாவீரன் திப்புசுல்தானோடு இணைந்து போரிட்டவரும், வெள்ளைக்கார அதிகாரிகள் வரி வசூலிப்பதைத் தடுத்து, வசூலித்த வரி பொருட்களை கைப்பற்றியதால் வெள்ளைக்கார அதிகாரிகள் எங்கள் மேல் அதிகாரிகள் கேட்டால் என்ன சொல்வது என்று கேட்க, 'சிவன் மலைக்கும், சென்னி மலைக்கும் நடுவே, ஒரு சின்ன மலை இருந்து பறித்துக் கொண்டதாக கூறுங்கள்' என்று சொல்லி தீரன் தீர்த்தகிரி என்கின்ற பெயரை தீரன் சின்ன மலையாக

தோற்றம் பெற்ற தூக்குக் கயிற்றை இந்தத் தேசத்தின் விடுதலைக்காக முத்தமிட்ட தீரன் சின்னமலைக்கு மாபெரும் நினைவுச் சின்னம் அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-25

மேலும் இந்த மானியத்தை வரவேற்று முடிக்கும் முன் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மக்களின் நா வறண்டால் நாடு வறண்டுவிடும் என்பதை நன்கு உணர்ந்த மக்கள் சக்தி மிக்க மாபெரும் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரவக்குறிச்சி தொகுதி மக்களுக்காக காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்காக 6 கோடியே 69 இலட்சம் ரூபாய் நடப்பு நிதியாண்டிலேயே ஒதுக்கீடு செய்ததற்காகத் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை, செய்தி-திரைப்படத் தொழில் மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கியமைக்காக முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

பார்வதி தேவி பிறந்த தினமான பௌர்ணமி நாளில் பிறந்து பாரத நாட்டுக்கு ஒளி தந்த புனிதவதியே! ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒருசில சாதனைகளையே புரிவார்கள் அன்னையே! ஆனால் சாதனைகளே வாழ்க்கையாகிவிட்டது உங்களுக்கு. சட்டசபைக்குள் நீங்கள் வீற்றிருந்தால் அதுவும் ஒரு கோயிலாகும் தாயே. வறுமைச் சாபம் பெற்ற தமிழக பூமி உங்கள் பாதம் பட்டபிறகு அகலிகை போல் உயிர்பெற்றது. வெளிநாட்டு தீய சக்தியால் சிதைந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கி அதில் தொழிற்சாலை என்னும் இரும்புப் பூக்களைப் பூக்க வைத்தீர்களே அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி வற்றியபோதெல்லாம் தன் கண்ணீரை மழையாக்கி விவசாயிகளின் வாழ்க்கை கருகாமல் காத்தீர்களே அம்மா. வியாழன்

கிரகத்தில் மோதிய வால்நட்சத்திரம் போல் எதிரிகளைச் செயல் இழக்க வைத்த பெண் சிங்கமே. (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை நேரு ஸ்டேடியம், தரமணி திரைப்பட நகரம், தஞ்சை எட்டாவது உலகத் தமிழ் மாநாடு ஆகியவை உங்கள் மணிமகுடத்திற்கு ஒளி வீசும் மாணிக்கக் கற்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) 69 சதவீத இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றி தமிழ் மக்கள் இதயத்தில் 100 சதவீதம் இடம் பிடித்த புரட்சித் தலைவியே. (மேசையைத் தட்டும் ஒலி) அனாதைப் பெண் சிசுக்களுக்கு முகவரி தந்த தென்னகத்தின் தெரசாவே; ஜவ்வாது மலைச் சந்தனமே, ஏலகிரி மலை குறிஞ்சிப்பூவே, அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வியே, உங்களுடைய திசை நோக்கி வணங்கி இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறேன்.

நம்முடைய செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவியின் எண்ணங்களைச் செயல்படுத்தி, அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதை மிகத் திறமையுடன் செயல்படுத்துகிறவர்கள். சென்னையில் முக்கிய இடத்திலே திரைப்படத் தொழிலாளர்களுக்காக 85 ஏக்கர் நிலத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இந்தியாவில் எந்த முதலமைச்சரும் செய்து முடிக்க முடியாத ஒரு அற்புதமான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 85 ஏக்கர் நிலத்தின் மதிப்பு 10 கோடி ரூபாய். திரைப்படத் தொழிலாளர்களுக்கு இலவசமாக இடம் கொடுத்து இவ்வாறு செய்கிறார்கள் என்றால் இந்தத் திரைப்படத் தொழிலாளர்கள் மீது புரட்சித் தலைவி எந்த அளவுக்கு அன்பும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

திரைப்படக் கலைஞர்களுக்கு 60 வயது ஆனால் அவர்களுக்கு மாதம் 300 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. திரைப்படத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் 50000 ரூபாய் வழங்கும் திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அற்புதமான திட்டம். இதனை எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள்.

1993 ஆம் ஆண்டு தமிழ் திரை உலகத்திலே மிகப்பெரிய பிரச்சினை ஏற்பட்டு அதாவது படத் தயாரிப்பாளர்களுக்கும், வினியோகஸ்தர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தமிழ்த் திரை உலகமே ஸ்தம்பித்துப் போனது. 6 மாத காலத்திற்கு எந்தவிதமான

படப்பிடிப்பும் நடைபெறவில்லை. இதை உணர்ந்த புரட்சித் தலைவி அவர்கள் அனைவரையும் கூப்பிட்டு 6 மாதத்தில் தீர்க்க முடியாத பிரச்சினையை 6 மணி நேரத்தில் தீர்த்து வைத்தவர் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி தமிழ்த் திரைப்பட உலகத்தில் உள்ள பிரச்சினையை மட்டுமல்ல; ஆந்திராவில் பிரச்சினை ஏற்பட்டபோது அந்த மாநிலத்தில் உள்ள நடிகர், நடிகையர், படத்தயாரிப்பாளர்கள், பட விநியோகஸ்தர்கள் ஆகியோர் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தவர்தான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அதுமட்டுமல்ல. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் திரைப்பட உலகத்தில் பிரச்சினை ஏற்பட்டாலும் அதைத் தீர்த்து வைக்கிற வல்லமைப் பெற்றவர் எங்கள் புரட்சித் தலைவி என்றுதான் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பபட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-30

சென்னை, தரமணி திரைப்பட உலகம் போல் வேறு எங்குமே கிடையாது. 85 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த மாதிரி திரைப்பட உலகம் வரவேற்கத்தக்கது. ஒரு தயாரிப்பாளர், நடிகர் நடிகைகளை அழைத்து, திரைப்பட நுட்ப கலைஞர்களை அழைத்துச் சென்றாலே அந்த திரைப்பட உலகத்திலே படத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்துவிடலாம். அந்த அளவுக்கு அந்த திரைப்பட உலகம் பாராட்டத்தக்க அளவில் இருக்கிறது.

நாங்கள் 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆதரவால் மலேசியா, ஹாங்காங், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளுக்கெல்லாம் 31 சட்டமன்ற உறுப்பினர்கள் போயிருந்தோம். நாங்கள் அங்கிருந்த கட்டிடங்களைப் பார்த்தபோது, அதைவிட பிரமாதமாக கலை உலகத்தினுடைய நுட்பத்தின் பிரகாசமாக அந்த திரைப்பட உலகம் இருக்கிறது என்றால், அந்த அளவுக்கு திரைப்பட உலகம் அமைந்திருக்கிறது என்பதை நாம் பாராட்டியாகவேண்டும்.

மேலும் தமிழக அரசு செய்திப் படங்களைத் திரையிடுகிறது. அது முன்பு போல திரையரங்குகளிலே காட்டப்படுவதில்லை. புரட்சித் தலைவியினுடைய சாதனைகளை கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருவது செய்திப் படங்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி எல்லா

கிராமங்களிலும், நகரங்களிலும் செய்தித் திரைப்படத்தைக் காட்டவேண்டுமென்று ஒரு உத்தரவு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திரைப்படங்கள் வழங்கப்படுகிறது. செய்தி வழங்கப்படுகிறது. ஆனால் சினிமாத் தியேட்டர்களிலே அது சரியாகக் காட்டப்படுவதில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு எல்லாத் தியேட்டர்களிலும் தமிழக அரசு செய்திப் படங்களை காட்டவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், சினிமாப் படத்தை தணிக்கைச் செய்வதற்கு மத்திய அரசுதான் தணிக்கைக் குழுவை அமைக்கிறது. அதை மாற்றி தமிழக அரசே திரைப்பட தணிக்கைக் குழு அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், தியேட்டர்களில் நினைத்த அளவுக்கு கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன. அரசு இதில் தலையிட்டு சினிமாக் கட்டணங்களைக் குறைக்க வகைசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சினிமாவை ஏழை மக்களெல்லாம்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரவேல், நீங்கள் நாளைக்கு வேறு பேசுகிறீர்களா, கைத்தறியில் நீங்கள் பேசவேண்டுமானால் 5 நிமிடம்கூட கொடுக்க மாட்டேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைத் தொலைக்காட்சியில் சட்டமன்றம் நடைபெறுகின்ற அன்று சட்டமன்ற நிகழ்ச்சி என்று சொல்லி ஒரு 10 நிமிடம் நாட்டு மக்களுக்கு ஒளிபரப்பப்படுகிறது. 10 நிமிடம் என்பதை மாற்றி 30 நிமிடங்களுக்கு அதை நேரடி ஒளிபரப்பு செய்ய ஆவன செய்யும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னையில் உள்ள சினிமாத் தியேட்டர் அதிபர்களை அழைத்து அமைச்சர் அவர்கள் பேசவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரவேல், ** அது எப்படி? அதெல்லாம் வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள டூரிங் தியேட்டர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. இந்த டூரிங் தியேட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது அதற்கு சற்று தொலைவிலே ஒரு நிரந்தர தியேட்டர் கொடுத்துவிட்டால் 5 ஆண்டு கொடுத்தாலும் அந்த நிரந்தர தியேட்டர் கட்ட லைசென்ஸ் கொடுத்ததை வைத்து, டூரிங் தியேட்டர் லைசென்ஸை கேன்ஸல் செய்து விடுகிறார்கள். ஏனென்றால், எங்கள் திருப்பத்தூரில் மாடப்பள்ளி கிராமத்திலே டூரிங் தியேட்டருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. 5 ஆண்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்ட அந்த டூரிங் தியேட்டர் 2 வருடம் 3 மாதம் தான் ஆனது. அதற்கு எதிரிலே ஒரு தியேட்டர் கட்ட ஆரம்பித்தவுடனே அந்த டூரிங் தியேட்டர் லைசென்ஸ் கேன்சல் செய்துவிட்டனர். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எத்தனை ஆண்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அத்தனை ஆண்டுகளும் பயன்படுத்திவிட்டு பிறகு வேண்டுமென்றால் லைசென்ஸை கேன்சல் செய்துவிடலாம். ஏனென்றால் எங்களுடைய திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் 4 மணிக்கு ஒரு நிரந்தர தியேட்டருக்கு லைசென்ஸ் கொடுத்துவிட்டு, அந்த லைசென்ஸை பெற்றுக்கொண்ட நிரந்தர தியேட்டர் உரிமையாளர் உடனே எங்கள் மாடப்பள்ளி கிராமத்திற்கு வந்து முதல் காட்சிக்கு டிக்கெட்டு கொடுத்த பின்பும், நான் நிரந்தர தியேட்டர் லைசென்ஸ் வாங்கிவிட்டேன், ஆகவே நீங்கள் தியேட்டரில் காட்சி ஓட்டக் கூடாது என்று அந்த டூரிங் தியேட்டர் உரிமையாளரை மிரட்டுகிறார்.

பிற்பகல் 5-35

ஆகவே அப்படி நீங்கள் லைசென்ஸ் கொடுப்பதாக இருந்தால், 5 ஆண்டுகள் முடிந்ததற்கு பின்பு வேண்டுமானால் நிரந்தர தியேட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கலாம். அப்படி இல்லை என்றால், 5 ஆண்டுகள் வரை அந்த டூரிங் தியேட்டர்களின் லைசன்ஸ் முடிந்ததற்குப் பிறகு வேண்டுமானால் நீங்கள் லைசன்ஸ் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் சினிமா தியேட்டர்களில் அதிகாரிகள் சென்று பார்வையிடுகிறபோது தியேட்டர்களைப் பார்வையிடுகிறார்களே தவிர, பாத்ரூமையோ, லெட்ரீனையோ பார்ப்பது இல்லை. அவை மிகவும் மோசமாக இருக்கின்றன. சினிமா தியேட்டருக்குச் சென்றாலே, அங்குள்ள பாத்ரூமுக்கு போக முடிவதில்லை. அந்த அளவுக்கு மிகவும் மோசமாக இருக்கினறன. ஆகவே, அதிகாரிகள் இதனை உடனடியாக கவனித்து

தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருட்காட்சிகள் அமைக்கப்படுகின்றன. அப்படி பொருட்காட்சிகள் அமைப்பது வரவேற்கத்தக்கதாகும். ஏனென்றால் அந்தந்த மாவட்டங்களிலே புரட்சித் தலைவி அவர்கள் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். இந்த அரசு என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு அமையும் இந்த பொருட்காட்சிகள் வரவேற்கத்தக்கதாகும். அதேபோல் சென்னையிலே ஒரு நிரந்தர பொருட்காட்சி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் வெளிநாடுகளுக்குச் சென்றபோது 365 நாளும் அங்கே பொருட்காட்சி நடத்தப்படுவதைப் பார்த்தோம். அதுபோல் சென்னையிலே ஒரு நிரந்தரப் பொருட்காட்சியை அமைக்க வேண்டுமாய் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூரிலே மிகப் பெரிய அளவிலே வரும் ஆண்டில் ஒரு பொருட்காட்சியை அமைக்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய திருமுருக கிருபானந்தவாரியாருடைய நினைவாலயம், எங்களுடைய வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் அவர் பிறந்த ஊரான.... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூரிலே அரசு பொருட்காட்சியை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு, வேலூரிலே, செய்தித் துறையின் சார்பிலே பொருட்காட்சி நடத்தப்பட்டு, 45 நாட்கள் வேலூரிலே பொருட்காட்சி நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினரும் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தைச் சார்ந்தவர்தான், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வேலூரிலேதான் இருக்கிறது. வேலூரிலேதான் பொருட்காட்சி நடந்தது. ஏன் இப்படி சொல்லுகிறார் என்று தெரியவில்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பொருட்காட்சிக்கு நானும் சென்றிருந்தேன். அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். அது மிகச் சிறிய அளவில் இருந்தது. மிகப் பெரிய அளவில் அமைக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும், எந்த அரசாங்கமும் நேரடியாக பொருட்காட்சிகளை நடத்துவது இல்லை. தமிழகத்திலேதான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலேதான், இந்த அரசாங்கத்திலேதான் பொருட்காட்சிகள் மாநில அரசின் சார்பிலே நேரடியாக நடத்தப்படுகிறது. ஆகவே அந்த அடிப்படையில் நம்முடைய தமிழ்நாட்டிலே 7 பொருட்காட்சிகள் ஆண்டு ஒன்றுக்கு நடத்தப்படுகின்றன. அந்த அடிப்படையிலே வேலூரிலும் நடத்தப்பட்டது. அதுவும் பெரிய பொருட்காட்சிதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரவேல். இதோடு பேசி முடித்து விடுங்கள்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல் ஒவ்வொரு ஆண்டும் வேலூரிலே பொருட்காட்சி நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசின் சார்பிலே தமிழக அரசு என்ற புத்தகம் 15 தினங்களுக்கு ஒரு முறை வருகிறது. அதை வாரம் ஒரு முறை அச்சிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தமிழக அரசு புத்தகம் எல்லா கடைகளிலும் கிடைப்பது இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'தமிழ் அரசு'-தான் தமிழக அரசு அல்ல.

திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்: எல்லா கடைகளுக்கும் முகவர்களை ஏற்படுத்தி, எல்லா கடைகளிலும் 'தமிழ் அரசு' கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தமிழ் அரசு' இதழ் மாதம் இருமுறை வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நம்முடைய வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்கு முகவராக இருந்தால் எத்தனை இதழ்கள் வேண்டுமோ, அத்தனை இதழ்களையும் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மிக்க நன்றி. மேலும், வேலூரிலே, செய்தி மக்கள் தொடர்பு அலுவலருக்கு மாவடடத்தில் எந்த மூளையில் கூட்டம் நடந்தாலும், அரசு விழாக்கள் நடைபெற்றாலும், அதற்கு செல்வதற்கு அவர்களுக்கு ஜீப் ஊர்தி இல்லை. ஆகவே, வேலூர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலருக்கு ஒரு ஊர்தி வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5–40

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி திரைப்பட தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கை எண். 46–ல் எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

மக்களாட்சியின் அடிப்படை நோக்கமும், தத்துவமும் வெற்றி பெறுவதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சி நடத்துகின்ற இந்த அரசினுடைய செயல்பாடுகள் மக்களிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி, அதே நேரத்திலே மக்களை அந்த விழிப்புணர்வில் ஈடுபடச் செய்கின்ற ஒரு துறைதான் இந்தத் துறை. அரசினுடைய திட்டங்கள், அதைச் செயல்படுத்துகின்ற வகைகள் குறித்து மக்களுக்கு நேரிடையாக கிடைக்கச் செய்வது இந்தத் துறை. ஏழை எளிய மக்களுக்கு அளிக்கின்ற பல்வேறு சலுகைகள், பொது மக்களுக்கு பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் எடுத்துக் கூறி இந்த அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இடையே ஒரு பாலமாகத்தான் இந்தத் துறை இருக்கிறது. இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அமைச்சரவையில் பொறுப்பான வகையில் மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை அமைசசர் அவர்கள் சிறப்பாக, செவ்வனே செயல்படுகின்றார்கள் என்பதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

பொருட்காட்சி சுவரில் தொங்கும் சித்திரமானது ஓராயிரம் வார்த்தைகளுக்கு சமமானது என்ற சீனப் பழமொழி கூறுகிறது. கற்றலின் கேட்டலே நன்று என்பார்கள். எனினும் கேட்டலின் காணலே நன்று என்று சொல்வார்கள். அதேபோன்றே, நூல்களின் வாயிலாக அறிந்த கல்வியை விட காட்சி வாயிலாக அறிவதே எளிது என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அந்த அடிப்படையிலே தமிழகம் முழுதும் பொருட்காட்சிகளை மாவட்டத்திலுள்ள தலைமையகங்களில் நடத்துகிறார்கள். சென்னையிலும் நடக்கின்றது.

சிறப்பாக சென்னையிலே நடைபெறுகின்ற அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியிலும் இந்த துறை பங்கு கொண்டிருக்கிறது. புது டெல்லியில் நடந்த பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சியிலும் இந்த துறை கலந்து கொண்டு பரிசு பெற்றிருப்பது உண்மையிலேயே பாராட்ட வேண்டியது. அலங்காரத் துறையிலும், மற்றும் இன்னொரு துறையிலும் டெல்லியில் நடைபெற்ற தேசீய ஒருமைப்பாடு மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்துகின்ற மலர் பேரணி விழாவில் கலந்து கொண்டு சிறந்த இரண்டு விருதுகளை பெற்றிருக்கின்றது என்று இந்த மானியக் கோரிக்கையிலே சொல்லி இருப்பது உண்மையிலேயே தமிழகத்திலே செய்தி விளம்பரத் துறை எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறது என்பதின் எடுத்துக்காட்டுத்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒலி-ஒளி கண்காட்சி. இதயதெய்வம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தை வென்ற காவிய நாயகர்–மறைந்தும் மறையாமல் இன்றைக்கும் நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்களுடைய இதயத்திலே தெய்வமாக இருக்கின்றவர். இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்க்கையை, அவர்களுடைய சாதனையை விளக்குகின்ற வகையிலே ஒலி-ஒளி கண்காட்சியை-- தந்தைப் பெரியார் அவர்களுடைய வாழ்க்கை மற்றும் அவருடைய அறிவுரை இவைகளை உணர்த்துகின்ற ஒலி-ஒளி கண்காட்சிகளை எல்லாம் ஒளிபரப்பு செய்கின்ற--தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி பரப்பு செய்கின்ற--இப்படிப்பட்ட முக்கியமான முன்னோடியான அரசில் தலைவர்களுக்கும் ஒலி-ஒளி கண்காட்சியை ஒளி பரப்பு செய்கின்றார்கள். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கின்ற ஒலி-ஒளி கண்காட்சியை தமிழகத்திலே மாவட்டந்தோறும் எல்லா இடங்களிலும் ஒளிபரப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

விழாக்கள் நடைபெறுகின்ற காலத்திலே, இளைய தலைமுறையினருக்கு நம்முடைய மகத்தான தலைவர்கள் பற்றியும், மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் உணர்த்த வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமையாக இருக்கிறது. அதேநேரத்திலே மாநில அளவிலே தலைவர்களுடைய விழா–டாக்டர் அம்பேத்கார் விழா, பெருந்தலைவர் காமராஜர் விழா, பேரறிஞர் அண்ணா விழா, கவியரசர் கண்ணதாசன் விழா ஆகியவை எல்லாம் மாநில அளவிலே நடைபெறுகின்றன. இவைகளெல்லாம் மாவட்ட அளவிலே கொண்டாட கட்டபொம்மன் மாவட்டத்திலே வீரபாண்டிய கட்டபொம்மன்

அவர்களுடைய விழா நடக்கின்றது. மதுரையிலே திருமலை நாயக்கருடைய விழா, ராமநாதபுரத்திலே மருதுபாண்டி சகோதரர்களுடைய விழா நடைபெறுகின்றது.

மதுரையில் திருமலை நாயக்கர் அரண்மனையில் ஒலி–ஒளி கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த இடத்திலே இருக்கக்கூடிய ஒலி-ஒளி கண்காட்சிக் கருவி-ஸ்டாட் என்ற கருவி பழுது அடைந்திருக்கிறது. ஸ்டாட் என்ற கருவி பழுதடைந்திருப்பதால் அந்த இடத்திலே ஒலி-ஒளி காட்சியினுடைய நேரம் ½ மணி நேரமாக குறைக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் ஒரு மணி நேரம் காட்சி ஓட்டப்படும். அங்கு வருகின்ற பயணிகள் எல்லாம் அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். அந்த ஸ்டாட் என்ற பிலிப்பைன் இயந்திரம் பழுதடைந்திருப்பதால்--என்னுடைய தொகுதியிலே திருமலை நாயக்கருடைய அரண்மனை இருக்கின்றது. அந்த இயந்திரத்தை பழுதுபார்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

அதை உடனடியாகச் சீரமைத்தால்தான், திருமலை நாயக்கர் மன்னருடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கிற ஒரு வரலாற்றை முழுமையாக சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்வார்கள். இல்லையென்றால், அந்த அரைமணி நேரம் காட்டுவது, அரைகுறையாகத்தான், திருமலை நாயக்கருடைய வாழ்க்கை வரலாற்றைக் காட்டுவதாக அமையும். இது மிகவும் வருத்தமாக இருக்கிறது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, திருமலை நாயக்கர் மகாலில், ஒலி, ஒளி கண்காட்சி காட்டுகிற கருவி, பழுதடைந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பனர் அவர்கள் தெரிவித்தார்கள். சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், அவ்வாறு பழுதடைந்த செய்தி கிடைத்தவுடனேயே, அதன்மீது இத்துறை நடவடிக்கை மேற்கொண்டு, அதனைப் பழுது நீக்குவதற்காக 65 இலட்சம் ரூபாய் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; அதுகுறித்து, இத்துறை உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை, 15 நாட்களுக்கு முன்பாக, அவர் 'செவாலியர்' விருது பெற்றமைக்காக, ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். அந்தப் பாராட்டு விழாவினைத் தொடர்ந்து, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுடைய 'செவாலியர்' விருதைப் பாராட்டி, திரைப்படத் துறையிலே அருந்தொண்டு ஆற்றியவர்களுக்காக, சிறந்த கலைகளுக்காக, 'செவாலியர் சிவாஜி கணேசன்' விருது வழங்கப்படுமென்று, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருப்பது, உண்மையிலேயே பாராட்டத் தகுந்த ஒரு செயலாக இருக்கிறது. அதேநேரத்தில் திரைப்படத்திலே தொலைநோக்கோடு தயாரிக்கின்ற திரைப்படங்கள், சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கான பரிசுத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. முதல் பரிசு, ரூ. 1¼ இலட்சமாக இருக்கிறது. ஒரு படம் தயாரிப்பதற்கு, கோடிக்கோடியாக செலவாகிறது. முதல் பரிசினை, குறைந்தபட்சம் 10 முதல் 20 இலட்சமாகக் கொடுத்தால்தான், உண்மையிலேயே அந்தத் தயாரிப்பாளர்களுக்கு அது ஒரு ஊக்கமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, சிறந்த திரைப்படங்களுக்கான முதல் பரிசுத் தொகையை 10 முதல் 20 லட்சம் ரூபாய் வரை, இந்த அரசு தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கோரிக்கையை விடுத்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், செய்தி-திரைப்படத் துறையின் வாயிலாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திரைப்படம் வெளியிடப்படுகிறது. இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திரைப்படம் இப்போதெல்லாம் பார்க்க இயலாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, திரைப்பட குடும்பக் கட்டுப்பாட்டுப் படத்தை, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையே வைத்து, உதாரணமாக சொல்லப்போனால், நம்முடைய நாமக்கல் அன்பழகன் அவர்கள் பிரமாதமாக கதை வசனம் எழுதுவார்கள்; அவ்வாறு படம் எடுக்கலாம்.

அதேபோன்று, திரைப்படத்தில் நடிப்பவர்கள் வயதான பெண்களாக இருப்பதால், அதை யாரும் விரும்பிப் பார்ப்பதில்லை. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம்; அது, அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழகான பெண்களை வைத்து, குடும்பக் கட்டுப்பாடு போன்ற திரைப்படங்களைத் தயார் செய்தால், உண்மையிலேயே மக்கள் மத்தியிலே அது பிரபலமடையும் என்று கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அமர்நாத்துக்கு இப்போதும் அந்த ஆசையெல்லாம் வரவேண்டுமா? (சிரிப்பு) திரு. ப. பெரியசாமி.

***திரு. ப. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வானில் ஒரு துருவ நட்சத்திரமாய், நலிந்தோர் துயர்துடைக்கும் பாட்டுடைத் தலைவியாய், கடைசி தொண்டனுக்கும் கருணை ஒளி காட்டிய காலத்தின் வழிகாட்டியாய், நியாயத்தை மட்டுமே தீர்ப்பாக எழுதும் தர்மத்தின் தலைமகளாய், துரோகிகளின் முகத்திரையைக் கிழித்திட்ட ஆதிபராசக்தியாய், பழங்கதையையே பேசித் திரிந்த இந்தப் பைத்தமிழ் நாட்டில், அறிவியல் தமிழையும் அறிவித்த எங்கள் தமிழ் அன்னையாய், சுட்டுவிரல் காட்டும் திசையில், கட்டி வா என்றால், வெட்டி வரும் கோடிக்கணக்கான தொண்டர்களினுடைய வீரத் தளபதியாய் விளங்கி வருகின்ற, இன்றும் தமிழ், என்றும் தமிழ், என்று முழக்கமிட்ட எங்கள் தமிழன்னையே; இன்றும் வெற்றி, என்றும் வெற்றி என்று வெற்றிச் சாதனையைப் படைத்திட புதுக்கோட்டையை நோக்கிப் புறப்பட்டுவிட்ட வீரத் திருமகளே; எங்களின் எழுச்சி மிக்க தளபதியே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

பிற்பகல் 5-50

செய்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை உரித்தாக்குகிறேன். அரசின் செயல்பாடுகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்தி, அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களினுடைய பயன்கள் மக்களுக்குக் கிடைக்க வழி வகுத்து அரசின் கொள்கைகள், கோட்பாடுகள், ஆற்றிவரும்

பல்வேறு திட்டங்கள், ஒவ்வொரு துறைதோறும் நடத்தப்படும் சாதனைகள், ஏழை மக்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு சலுகைகள் ஆகியனபற்றி எடுத்துக்கூறி அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையே வலுவான பாலமாக அமைந்து நல்லெண்ணத் தொடர்புகளையும் நட்புணர்வையும் ஏற்படுத்தும் அரிய பணியை கடமையுணர்வோடு செய்து வருகின்ற செய்தி மக்கள் தொடர்பு துறையை மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சாதாரணமாக ஒன்றை நினைக்கமாட்டார்கள்; நினைத்துவிட்டால் அதை சாதிக்காமல் விடவும்மாட்டார்கள். எத்துறையிலும் தனி முத்திரை பதிக்கும் நம்முடைய தங்கத் தலைவி அவர்கள் செய்தித் துறையிலும் பல சாதனைத் திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். இந்தியத் திரை உலகமே பாராட்டுகின்ற வகையில் தமிழகத்தின் தலைநகராம் சென்னை தரமணியில் பல கோடி ரூபாய் செலவில் 86 ஏக்கர் நிலப் பரப்பில் மாபெரும் திரைப்பட நகரத்தை உருவாக்கிக் காட்டினார்கள். இந்தத் திரைப்பட நகர், கலை உலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பயன்படுவது மட்டுமல்லாமல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளையும் கவருகின்ற வகையில் சிறப்பான பல அம்சங்களோடு அமைந்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் எந்த ஒரு முதல்வரும் செய்திராத புரட்சிகரமான திட்டமாக திரைப்பட துறையைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை, சரித்திரத்தில் இடம் பெறுகின்ற திட்டங்களை இன்றையதினம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். திரைப்பட தொழில் வல்லுநர்களை ஊக்குவிப்பதற்காக பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரிலும், மறைந்தும் மறையாமலும் நமது நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரிலும் மற்றும் பலருடைய பெயரிலும் விருதுகள் ஏற்படுத்தி திரைப்பட துறையின் வளர்ச்சிக்கு வித்திடப்படுகிறது. 1993 ஆம் ஆண்டு முதல், திரைப்பட துறைக்கு அரும்பாடுபட்டு வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பேரால் சிறப்பு விருது வழங்கும் திட்டம் சீரான முறையில் செயல்பட்டு வருகின்றது. சமுதாய நோக்கோடுகூடிய தமிழ்படங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், அனைவராலும் பாராட்டப்படுகின்ற திட்டமாக மதிக்கப்படுகின்றது. திரைப்படத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை நன்கு உணர்ந்த நம்முடைய தங்கத் தலைவி அவர்கள் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக சென்னை அருகே

வேளச்சேரியில் ரூபாய் பத்து கோடி மதிப்புள்ள 85 ஏக்கர் நிலத்தை தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கு 20–4–95 அன்று இலவசமாக அளித்தார்கள். அதுமட்டுமல்லாமல் திரைப்பட தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம், ஓய்வூதியம் வழங்கும் திட்டம், விபத்து காப்பீட்டுத் திட்டம், தொழிலாளர் நல நிதி திட்டம் என பலவிதமான திட்டங்களை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கின்றார்கள். இத்தனை திட்டங்களும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய சிந்தனையில் மட்டுமே உதித்த கருத்துக்கள் என்பதை யாராலும் மறுக்க முடியுமா? அத்தனை திட்டங்களையும் பாராட்டும் நோக்கத்தோடுதான் கலை உலகமே நம்முடைய கலைத் தாய் புரட்சித் தலைவி அவர்கள் பின்னால் அணி வகுத்து வருகின்ற காட்சியை நாம் காணுகின்றோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்–தலைமை)

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை தஞ்சையிலே நடத்திக் காட்ட முடியுமா என்று கேட்டார்கள் பலர். உலகமே வியக்கின்ற வகையில் தமிழுக்கு பெருமை சேர்த்த புறநானூற்று தமிழ்தாயாக மாநாட்டை சீரும் சிறப்புமாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடத்திக் காட்டினார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டின் எழில்மிகு நிகழ்ச்சிகளைக் காணாதவர்களும் கண்டு களிக்கும் வகையில் திரைப்பட மலராகத் தயாரித்து நாடெங்கிலும் திரையிட்டு மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய செய்தித் துறையை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கேற்ப இந்த மாநாடு தொடர்பான செய்திகளையும் புகைப் படங்களையும் உடனுக்குடன் பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிக்கும் கொடுத்து சிறப்பான முறையில் செயல்பட்டதோடு மட்டுமல்லாமல் பலவிதமான கண்கவர் நிகழ்ச்சிகளை மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வண்ணம் தொகுத்து அளித்த இந்தத் துறையை நான் பாராட்டுகிறேன்

பிற்பகல் 5-55

அரசின் கொள்கைகளையும் நலத் திட்டங்களையும் அரும்பெரும் சாதனைகளையும் விளக்கும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் பொருட்காட்சிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படுகின்றன. அரசுத் துறைகளும், அரசு சார்பு நிறுவனங்களும் அரங்கங்கள் அமைக்கும் இந்த பொருட்காட்சிகள் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுவது மட்டுமல்லாமல் அறிவூட்டவும், வருவாய் ஈட்டித் தரவும் பயன்படுகின்றன.

வரும் நிதியாண்டில் கூடுதலாக வேலூரிலும், கடலூரிலும் பெரிய அளவிலான பொருட்காட்சிகள் நடத்தப்பட உள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டதை மனமாரப் பாராட்டி, அதே நேரத்தில் அன்றும், இன்றும், என்றும் புரட்சித் தலைவி அவர்களுடைய எஃகுக் கோட்டையாக, தகர்க்க முடியாத தங்கக் கோட்டையாக விளங்கிவருகின்ற பெரியார் மாவட்டத்தின் தலைநகரமாம் ஈரோட்டில் அரசு பொருட்காட்சி நடத்தப்படவேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்பாதம் பணிந்து வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

இளைய தலைமுறையினருக்கு மகத்தான தலைவர்களைப் பற்றியும், மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் உணர்வதற்காக வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளை நினைவு கூறும் விழாக்களையும், வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்களுடைய வாழ்வோடு தொடர்புடைய பிறந்தநாள் போன்ற விழாக்களையும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா, தந்தை பெரியார், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., டாக்டர் அம்பேத்கார், காயிதேமில்லத், அண்ணல் காந்தியடிகள் இன்னும் பல மாபெரும் தலைவர்களுடைய பிறந்த நாள் விழாக்கள் மிகவும் சிறப்பாக இந்தத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்ற மானியக் கோரிக்கையின்போது சுதந்திர போராட்ட வீரர்களுக்கும் மாவட்ட அளவில் விழாக்கள் நடத்தப்படவேண்டுமென அறிவிப்புகள் செய்யப்பட்டதற்கு ஏற்ப கொங்கு மண்டலமாம் பெரியார் மாவட்டத்தில் பிறந்த, ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடி வீர மரணம் அடைந்த சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு காங்கேயத்தில் பிறந்தநாள் விழா மிகச்சிறப்பான முறையில் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசால் நடத்தப்பட்டது. பெரியார் மாவட்ட மக்களின் சார்பாக எங்களுடைய மனமார்ந்த நன்றியை டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களுக்கு சமர்ப்பித்து, தீரன் சின்னமலை பிறந்த பெரியார் மாவட்டத் தலைநகரமாம் ஈரோட்டில் அவரது திருவுருவச் சிலையை நிறுவி மணிமண்டபம் கட்டித்தர ஆவன செய்யவேண்டுமென புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்றையதினம் செய்தி வெளியீட்டுப் பிரிவு அதனுடைய பணிகளை மிகச்·சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது.

இந்தத் துறையில் பணியாற்றி வரும் பத்திரிகை துறையைச் சார்ந்த நண்பர்களுக்கு வீட்டுவசதித் திட்டம், ஓய்வூதியத் திட்டம் போக்குவரத்துச் சலுகை கட்டணம் போன்ற பல நல்ல உதவித் திட்டங்களை டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது. மாநில அரசின் அனைத்து துறைகள் அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனம் ஆக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது.

சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளுக்கும் விளம்பரங்களை அளிப்பதன் மூலம் அவைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. அரசின் சாதனைகள் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலப்பணிகள் வீடியோ வாகனம் மூலமாக நடத்தப்படும் படக்காட்சிகள் இன்றையதினம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன.

மாவட்டந்தோறும் மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு அரசின் செய்திகளையும் அனுப்பவும் பெறவும் ஃபாக்ஸ் வசதியுடன் கூடிய தொலை தொடர்பு இணைப்பை ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

அவசர கால அறிக்கைகள் இரவு நேரங்களில் கடைசி நேரத்தில் நாளிதழ்களுக்கு செய்திகளை வழங்கி மறுநாளே பிரசுரிக்க வேண்டியுள்ளதால் நைட் மெசன்ஜர் பணியிடம் ஒன்றினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது திரையிடப்படுகின்ற சில திரைப்படங்களில் அரசியல் தலைவர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் பற்றி மக்கள் மத்தியில் கெட்ட எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் சித்தரிக்கின்றார்கள். அதனால் அரசியல் பணியில் ஈடுபடுகின்றவர்கள் மனம் புண்படுகிறது. இந்த சூழ்நிலையை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழ்கின்றபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
என, அஞ்சா நெஞ்சத்துடனும்
அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடைமையடா
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, தாயகம் காப்பது நமது கடமையடா

[திரு. ப. பெரியசாமி] [1995 மே 3

என்ற கடமையுணர்வுடன், மகத்திலே பிறந்து ஜகத்தினை ஆளும் மங்காத ஒளி விளக்கு, மாதர்குல மாணிக்கம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்றைக்குமே இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் நிரந்தர முதல்வராக இருப்பார் (மேசையைத் தட்டும் ஒலி) எனச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

9. பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டு ஒருவர் துண்டுப் பிரசுரம் வீசியது குறித்து—பேரவைத் தலைவரின் அறிவிப்பு

பிற்பகல் 6-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பதில் உரை முடிந்த நேரத்தில் பேரவையின் மாடத்திலே இருந்து, திருச்சி மாவட்டம், பெரம்பலூர் அருகிலுள்ள தொண்டைமான்துறை என்ற ஊரைச் சேர்ந்த ஐயங்கார் ரெட்டியார் எனபவரின் மகன், திருமலை என்பவர் 'புரட்சித் தலைவி வாழ்க, திருச்சி மாவட்டத்தைப் பிரித்து, திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கவும்' என்று கோஷமிட்டார். அவ்வாறு பேரவை மாடத்திலே இருந்து கோஷமிடுவது தண்டிக்கத்தக்க குற்றம் என்பதை அனைவரும் அறிவீர்கள். அவரை காவலர்கள் பிடித்து என்னிடத்திலே கொண்டு வந்தார்கள். தற்போது காவலர்கள் அவரைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். என்னிடத்திலே அவர் தெரிவித்தபோது, எத்தகைய உள்நோக்கமும் இல்லாமல், உணர்ச்சிவசப்பட்டு, அவ்வாறு குரல் எழுப்பிவிட்டதாகவும், அதற்காக மன்னிக்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறார். அவரை விசாரித்த வகையில், வேறு எத்தகைய உள்நோக்கமும் இல்லை என்று தெரிகிற காரணத்தாலும், உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அத்தகைய கோஷத்தை எழுப்பினார் என்கிற காரணத்தாலும், அவர் மன்னிப்பு கேட்கிற காரணத்தாலும், அவர் தெரிவித்த மன்னிப்பை ஏற்றுக்கொண்டு, இவ்வாறு வேறு நேரங்களில் செய்திடல் ஆகாது என்ற எச்சரிக்கையோடு அவரை விட்டுவிடலாம் என்று காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

அவருக்கு அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொடுத்திருக்கிறவர்-மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சார்பில் அவருடைய நேர்முக உதவியாளர் கொடுத்திருக்கிறார். இவ்வாறு, பேரவை

மாடத்தில் உறுப்பினர்களுக்கு நுழைவுச் சீட்டு பெற்று கொடுக்கிற உறுப்பினர்களாக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும், பேரவையில் நாம் கடைபிக்கிற இந்த விதிகளைச் சொல்லி அனுப்ப வேண்டுமென்று ஏற்கெனவே இதைப்போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். எனவே, பார்வையாளர் மாடத்திற்கு சீட்டு வாங்கி அனுப்புகிறபோது, உள்ளே வருபவர்களுக்குரிய முழுப் பொறுப்பையும் சீட்டு வாங்கிக் கொடுக்கிறவர்கள்தான் ஏற்றுக் கொள்கிறீர்கள். எனவே அத்தகைய விதிகளை அவர்களுக்குச் சொல்லி அனுப்ப வேண்டும். இந்த நிகழ்வில் அவர் சொல்லி அனுப்பாமல் இருந்தால் தவறுதான். எனவே, இனிமேல் உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்கள், பார்வையாளர் மாடத்திற்கு சீட்டு வாங்கி அனுப்புகிறபோது, அந்த விதிமுறைகளை எல்லாம் சொல்லி அனுப்ப வேண்டும் என்பதை கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட நபர் தான் எத்தகைய உள்நோக்கமும் இல்லாமல், உணர்ச்சிவசப்பட்டு கோஷம் எழுப்பினேன், அதற்காகவும்கூட நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரை விடுவிக்குமாறு காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96—விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத்தொழில் நுட்பவியல்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களுடைய பதில் உரை.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனை செழுமையும், செயல் திறமையும், கொள்கையில் உறுதியும், குறிக்கோளில் தெளிவும், பகைக்கஞ்சா பண்பும், இலக்கினை நோக்கி நடைபோடுகின்ற இலட்சியப் பயணத்தில் அயர்வும், சோர்வும், தளர்ச்சியும் காணாது, வெற்றியின் விலாசத்தை நெற்றியிலே பதித்து, இந்த மண்ணிலே புகழுக்கு புகழ் சேர்த்துக்கொண்டு இருக்கிற, அறிவாண்மைமிக்க, சான்றாண்மைமிக்க, தாளாண்மைமிக்க, பேராண்மை மிக்க, சமூக நீதிக்காத்த வீராங்கனை இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி

வணங்கி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 6-05

அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, ஊக்கமுடைமை, நாணுடைமை, பொறையுடைமை இத்தகைய உடைமைகளை மட்டும் தன்னகத்தே கொண்டிருக்காமல், தமிழ்நாட்டு மக்களை தன்னுடைய உடமையாகக் கருதி, தன்னுடைய சிந்தனைத் திறனால், செயல் திறனால், இராஜ தந்திரத்தால், தீர்க்க தரிசனத்தால், தொலைநோக்குப் பார்வையால், கொடைத் தன்மையால், அற்புதமான திட்டங்களை எல்லாம் தீட்டி, நாட்டு மக்களை வாழ வைப்பதையே தனது கடமையாகக் கருதி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையிலே இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

இல்லாமை, கல்லாமை, இயலாமை, அறியாமை--இப்படிப்பட்ட சமுதாய ஆமைகளை தகர்த்து எறிகின்ற வல்லமை மிக்க தலைவிதான் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வலலமைக்கு வடிவம் தந்த வரலாறாக புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய வரலாற்றுத் தலைவியை நோக்கி அவதூறுகள் பரப்பப்படுகின்றன. அவதூறு சொல்லுகிறவர்கள் அவதார புருஷர்களா? நிச்சயம் அவதார புருஷர்களாக இருக்க முடியாது. அவர்கள் எத்தனை அவதாரம் எடுத்தாலும், அவர்களை புரட்சித் தலைவி சம்ஹாரம் செய்வார்கள் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே புரட்சித் தலைவியைப் போல வீரமிக்க முதலமைச்சர் உண்டா? புரட்சித் தலைவியைப் போல தீரமிக்க முதலமைச்சர் உண்டா? ஆகவே வீரமிக்க, தீரமிக்க, ஈரமிக்க, வன்மைமிக்க, தின்மைமிக்க, மனிதத் தன்மைமிக்க, மறத் தன்மைமிக்க, மேன்மைமிக்க, கொடைத்தன்மைமிக்க, மதி நுண்மை மிக்க காக்கும் திறன் மிக்க, கம்பீரம் மிக்க, புகழ்மிக்க, கருணை மிக்க ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி என்று சொன்னால் யாராலும் மறுக்க முடியாது. அள்ளித் தருவதிலே அமுதசுரபியை மிஞ்சுகின்ற அன்புச் சுரங்கமாக, எடுத்துக் கொடுப்பதிலே கொடுத்து மகிழ்வதிலே சாதனைச் சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற சகாப்தத் தலைவியாக புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிந்தனைகள் எல்லாம் செயலாவதில்லை; செயல்கள் ஆனாலும் சாதனையாவதில்லை; சாதனையானாலும் சரித்திரம் ஆவதில்லை; சரித்திரம் ஆனாலும் சகாப்தம் ஆவதில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனைகள் செயலாகிறது. அந்தச் செயல்கள் சாதனையாகிறது, அந்தச் சாதனைகள் சரித்திரமாகிறது, அந்தச் சரித்திரம் சகாப்தம் ஆகிறது. அப்படிப்பட்ட சகாப்தத் தலைவிதான் புரட்சித் தலைவி எனறு சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) எவராலும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட முதலமைச்சர் மந்திரத்தாலோ, தந்திர்த்தாலோ அல்லது மாயஜாலத்தாலோ முதலமைச்சர் ஆகவில்லை. பெருமாள் அவதாரம் எடுத்ததுபோல அவதாரம் எடுத்து, வாக்காளர்களாக மாறி, வாக்குகளைப் போட்டு, இன்றைக்குக் கோட்டையிலே முதலமைச்சராகவில்லை. மக்களைச் சந்தித்தார். மக்களுடைய உணர்வுகளை எதிரொலித்தார், மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வேன் என்று உறுதி கொடுத்தார், மக்கள் நம்பினார்கள், வாக்களித்தார்கள், மகுடத்தைச் சூட்டினார்கள், பட்டத்து ராணியாகப் புரட்சித் தலைவியைக் கோட்டையிலே உட்கார வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிப்பட்ட புரட்சித் தலைவிக்கு எதிராக 'ப்ந்த்' நடத்துகிறார்கள். எத்தனை 'பந்த்' நடத்தினாலும் இந்த பூமி பந்திலே எக்காலமும் நிலைக்கின்ற பொற்கால சாதனைகள் படைத்துக்கொண்டிருக்கிற தலைவி புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) உதிக்கின்ற சூரியனையே அஸ்தமனமாக்கிய தலைவி புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) ஊமை வெய்யிலுக்கே உருகிப் போகின்ற இந்தக் கட்சிகள் மங்கள தீபமாக இருக்கிற புரட்சித் தலைவியை வீழ்த்திட முடியாது.

மறைத்தாலா தாழையின் மணம் குறைந்துவிடும்; நீரிலே கரைத்தாலா தங்கத்தின் மகிமை குறைந்துவிடும்; இறைத்தாலா ஏழுகடல் வற்றிவிடும்; வானத்து நிலவை தீக்குச்சி சுட்டுவிட முடியாது; மங்காப் புகழ் பெற்ற தலைவியாக காலமென்னும் ஆழியிலே, கனல் நெருப்பிலே அழிக்க முடியாத மங்காப் புகழ் பெற்ற அற்புதத் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியை யாராலும் அசைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) யாராலும் வெல்ல முடியாது. அப்படிப்பட்ட புரட்சித் தலைவி அரசு தீட்டி வருகின்ற திட்டங்களை நாட்டு மக்களுக்காக வழங்கி வருகின்ற அற்புதச் சாதனைகளை மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்லுகின்ற பணியைத்தான் செய்தித் துறை செம்மையாகச் செய்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 6–10

ஒரு காலத்திலே இலக்கியத்திலே, காப்பியத்திலே, ஏட்டிலே, பாட்டிலே அரசியல் தலைவர்களும், அரசியல் விற்பன்னர்களும், கவிஞர்களும் எழுதி வைத்தார்கள். ஏட்டிலே, பாட்டிலே எழுதிவைத்ததையெல்லாம் இந்த நாட்டிலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிற தலைவி, புரட்சித் தலைவி என்று சொன்னால், அதை எவரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட ஆற்றல் பெற்ற முதலமைச்சருடைய அற்புதச் சாதனைகளைப் பல்வேறு வகைகளிலே எடுத்துச் சொல்கின்ற வகையிலே, இன்றைக்கு செய்தித்துறை செம்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நினைத்ததை முடிக்கின்ற ஆற்றல் புரட்சித் தலைவிக்கு உண்டு அந்த ஆற்றல் மட்டுமல்ல, முடித்ததை நெஞ்சை நிமிர்த்தி மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்கின்ற ஆற்றலும் புரட்சித் தலைவிக்கு உண்டு. அவர் அறிவித்த அத்துணை அறிவிப்புகளும் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட ஆற்றல் திறன் மிக்க முதலமைச்சராக, செயல் திறன் மிக்க முதலமைச்சராக, தீர்க்கதரிசனம் மிக்க முதலமைச்சராக, தொலைநோக்குப் பார்வை கொண்ட முதலமைச்சராக புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு துறைகளின் சார்பிலே அரசு தீட்டி வருகின்ற திட்டங்களை மக்கள் மத்தியிலே பல்வேறு வகைகளிலே எடுத்துச் சொல்லுகின்ற பணியை செய்தித்துறை செம்மையாகச் செய்து கொணடிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிற, அவருடைய கட்டுப்பாட்டிலே இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிற செய்தித்துறை, பல்வேறு வகைகளில் எல்லாம் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது; வலிவு பெற்றிருக்கிறது; பொலிவு பெற்றிருக்கிறது; ஆகவே, அத்தகைய பெருமை, இந்தியத் துணைக் கண்டத்திலே நம்முடைய செய்தித்துறை ஆற்றிய பணிகளைப் போல எந்த மாநிலத்திலும் எந்தச் செய்தித்துறையும் பணியாற்றியதில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வீரர்களுக்கு விழா எடுப்பது, வித்தகர்களுக்கு சிலை வடிப்பது, நிலைத்த புகழ் பெற்றவர்களுக்கு நினைவகங்கள் அமைப்பது போன்ற அற்புதமான பல பணிகளைச் செய்தித்துறை செய்துகொண்டு இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இருக்கிற, எந்தக் கட்சியும் ஆளுகிற எந்த அரசாக இருந்தாலும் சரி, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நாட்டுக்கு உழைத்தவர்களைப் பெருமைப் படுத்துவதைப்போல இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும்

எந்த அரசும் செய்யவில்லை. இன்றைக்கு, ஒருமைப்பாடு உணர்வு மிக்கவர்களாக இருந்தாலும் சரி, அல்லது இந்த தேசத்தின் நேசத்திற்குரியவர்களாக இருந்தாலும் சரி, இந்த நாட்டு மக்களுடைய பாசத்திற்கு உரியவர்களாக இருந்தாலும் சரி, யார் யாரெல்லாம் பெருமைக்குரியவர்களோ, யார் யார் எல்லாம் புகழுக்குரியவர்களோ, யார் யாரையெல்லாம் பெருமைப்படுத்த வேண்டுமோ, யார் யாரையெல்லாம் புகழுக்குரியவர்களாகக் கருதப்படவேண்டுமோ, அவர்களையெல்லாம் பெருமைப்படுத்துகின்ற ஒரே மாநிலம் புரட்சித் தலைவி ஆளுகின்ற தமிழ் மாநிலம்தான் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குச் செய்தித்துறையின் சார்பிலே நாட்டுக்கு உழைத்த தலைவர்களைப் பாராட்டுகின்ற வகையிலே மாநில அளவிலே 19 பிறந்தநாள் விழாக்களும், மாவட்ட அளவிலே 14 விழாக்களும் அரசின் சார்பிலே நடத்தப்படுகின்றன. ஆகவே ஒரு அரசாங்கம் இப்படிப்பட்ட பெருமைக்குரியவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுகிற வகையிலே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி, அதைப்போல மாவீரன் நேதாஜி, தீரன் சின்னமலை, அழகு முத்துக்கோன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், டாக்டர் அம்பேத்கார், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத், வ.உ. சிதம்பரம் பிள்ளை போன்ற தலைவர்களுக்கெல்லாம், பிறந்த நாள் விழா கொண்டாடுகிற ஒரே அரசு இந்தியத் துணைக் கண்டத்திலே நமது தமிழக அரசு, புரட்சித் தலைவியின் அரசுதான். ஆகவே 33 விழாக்களை இந்த அரசு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்திக் கொண்டிருக்கிறது. அதைப்போல, நிலைத்த புகழ் பெற்றவர்களுக்கு நினைவகங்கள் அமைக்கிறது.

இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே, தமிழ்நாட்டிலேதான் நாட்டுக்கு உழைத்தவர்களைப் பெருமைப்படுத்துகினற வகையிலே, 25 நினைவகங்கள் செய்தித்துறை பராமரித்துக் கொண்டு வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இப்படி தலைவர்களுடைய நினைவகங்கள் வைக்கப்பட்டதும் இல்லை. பராமரிக்கப்பட்டதும் இல்லை என்றே சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால், வைக்கம் வீரர் என்று போற்றப்பட்ட நம்முடைய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாருக்கு, அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரள மாநிலத்தின் வைக்கத்திலே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு நினைவகத்தை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த ஒரு திராவிட இயக்கத் தலைவருக்கு, ஒரு சுயமரியாதைச் சுடரொளிக்கு,

சமூக நீதியை இந்த மண்ணிலே உலவவிட்ட அந்த மாபெரும் பகுத்தறிவுத் தந்தைக்கு, அண்டை மாநிலத்திலே வைக்கத்திலே ஒரு நினைவகத்தை அமைத்து, அதைத் திறந்து வைத்த பெருமையும் நமது புரட்சித் தலைவிக்கு உண்டு என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

பிற்பகல் 6–15

திராவிட இயக்கத்தின் வழியில் வந்தவர்கள், தந்தை பெரியாரின் வழியில் நாங்கள் பணியாற்றியவர்கள், தந்தை பெரியாருடைய கையைப் பிடித்து நடந்தவர்கள் என்றெல்லாம் மார்த்தட்டிக் கொண்டார்களே, அப்படிபட்டவர்கள் ஆட்சியில் இருந்தார்களே, அண்டை மாநிலத்தில் வைக்கத்தில ஒரு நினைவகம் அமைக்க வேண்டுமென்று ஒரு எண்ணம் அவர்களுக்கு இருந்ததா? ஆனால் புரட்சித் தலைவி அவர்கள்தான் தந்தை பெரியாரை பெருமைப்படுத்துகிற வகையில் வைக்கத்தில் நினைவகம் உருவாக்கி இருக்கிறார்கள். அன்றைக்கு வைக்கத்தில் தீண்டாமை எதிர்ப்பு போராடினாரே–ஆடு வரலாம், மாடு வரலாம், பன்றி வரலாம், நாய் நடக்கலாம், ஆனால் ஒரு பஞ்சமன் வீதியில் நடக்கக்கூடாதா என்று அன்றைக்கு சத்யாகிரக போராட்டத்தை நடத்த வேண்டுமென்று, வைக்கம் வீதியில் பெரியார் போராடினாரே, அந்த வைக்கத்தில் அவருக்கு ஒரு நினைவகம் மாணபுமிகு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி).*

தந்தை பெரியாருக்கு மட்டுமல்ல, கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கு மணி மண்டபம்; மகாகவி பாரதியார் அவர்களுடைய நினைவு இலலம் அரசு இல்லமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஏறத்தாழ 25 நினைவகங்கள் தமிழக அரசின் சார்பில் செயதித் துறையால் பராமரிக்கப்படுகின்றன.

அதைப்போல 17 சிலைகள். நிலைத்த புகழ் பெற்றவர்களுக்கு 17 சிலைகள் இன்றைக்கு செய்தித் துறை சார்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செய்தித் துறை சார்பில் அரசு பொருட்காட்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த பொருட்காட்சிகள் 79 இதுவரையில் நடத்தி இருக்கிறோம். அதன் மூலம் 5.23 கோடி அரசாங்கத்திற்கு இலாபம் கிடைத்து இருக்கிறது. 1994–95 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொருட்காட்சிகளின் மூலம் 59.30 இலட்சம் ரூபாய் நம்முடைய அரசாங்கத்திற்கு இலாபமாக கிடைத்து இருக்கிறது. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் அரசு நேரடியாக பொருட்காட்சிகளை

நடத்துவது தமிழ் நாட்டில் மட்டும் தான். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுடைய உணர்வுகளை எதிரொலிக்கிற வகையில், அரசு தீட்டி வருகிற திட்டங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்கிற வகையில் அப்படிப்பட்ட பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல திரைப்பட விருதுகள். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களின் அரசு விருதுகளை வழங்கி வருகிறது. சிறந்த கலைஞர்களுக்கு மட்டுமல்லாமல், சிறந்த படங்களையும் தேர்வு செய்து, அந்த சிறந்த படங்களுக்கும் பரிசும், தங்கப்பதக்கமும், கேடயமும் வழங்கி வருகிறது. அதை எந்த அளவுக்கு வழங்கி வருகிறோம் என்பது கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவுக்கிணங்க அவர்களுடைய திருநாமத்தில் திரைப்பட நகர் உருவாக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசும் தமிழக திரைப்பட உலகிற்கு செய்யாத அளவில் பல்வேறு நன்மைகளையும் சலுகைகளையும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள். திரைப்பட உலகத்தின் நாடித் துடிப்புகளையும், அனைத்து தேவைகளையும் நன்கு அறிந்த முதல்வராக இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இருக்கிற காரணத்தால் அற்புதமாக ஒரு திரைப்பட நகரை உருவாக்கி இருக்கிறார்கள். குறைந்த செலவில், குறைந்த காலத்தில், தரமான படங்களையும், வீடியோ படங்களையும் படமாக்குவதற்கு ஏற்றவகையில் எண்ணற்ற வெளிப்புற படப்பிடிப்பு இடங்களை ஒரே குடையின்கீழ் அமைத்து சாதனை படைத்து இருக்கிறார்கள். சர்வதேச தரம் வாய்ந்த மிக நவீன வசதிகளுடன் கூடிய தொழில்நுட்ப கருவிகள் அங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகள் விளையாட்டு அரங்கம், வீடியோ விளையாட்டு, குழந்தைகள் புகைவண்டி, மோதும் கார், இப்படிப்பட்ட பொழுது போக்கு அம்சங்களும் அங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. திரைப்பட நகர் தேவையா என்றெல்லாம் இன்றைக்கு பலபேர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே திரைப்பட நகர் மூலம் கடந்த 8 மாத காலத்தில் 54.52 இலட்சம் ரூபாய் நமக்கு வருவாய் கிடைத்து இருக்கிறது. திரைப்பட நகரை காண்பதற்காக வருகிறார்களே, அந்த நுழைவுச் சீட்டின் மூலம் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 3 இலட்ச ரூபாய் வருவாய் கிடைத்து இருக்கிறது. ஆகவே, திரைப்பட நகர் என்பது வருவாய் தருகிற ஒரு அமைப்பாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. திரைப்பட உலகத்திற்குத் தேவையான

அத்தனை வசதிகளும் அங்கே இருக்கின்றன. அங்கே சென்றால் வெளிபுறப்படிப்பிடிப்புக்கு வேறு எங்கும் செல்லத் தேவையில்லை. அத்தனை வசதிகளும் அங்கே செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்வதேச தரம் வாய்ந்த நவீன வசதிகளைக் கொண்ட கருவிகள் அங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அற்புதமான ஒரு நகராக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் திருநாமத்தில் இருக்கிற திரைப்பட நகர் விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தித் துறை இன்றைக்கு விளம்பரங்களைச் செய்து கொண்டிருக்கிறது. அதிகமான விளம்பரங்களைச் செயகிறார்கள் என்றெல்லாம் எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் எந்த அளவுக்கு விளம்பரங்கள் செய்யப்பட்டனவோ அந்த அளவுக்குதான் இன்றைக்கு விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. ஒன்றை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் இல்லாத திட்டங்கள் எல்லாம் இந்த ஆட்சியில் நிறைவேற்றப்படுகின்றன. திட்டங்களுக்கு தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தை விட சாலை வசதிகளுக்கு ஒதுக்கப்பட்டதைவிட மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்தில் 30 சதவீதத்திற்கு மேல் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல அந்த ஆட்சிக் காலத்திலே இல்லாத திட்டங்கள், இன்றைக்கு ஆதி திராவிட மக்களுக்காக அற்புதமான திட்டங்கள், அதிகம் உள்ளன. அதைப்போல, நாட்டுக்கு உழைத்த தலைவர்களுக்கு நினைவகங்கள் அமைப்பது, விழா எடுப்பது, அந்தச் சிலைகளுக்கு மாலை அணிவிப்பது, என்று இப்படிப்பட்ட விழாக்கள் அதிகமாகி இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு திடடங்கள் அதிகம். சாதனைகள் அதிகம். இந்தத் திட்டங்களை உருவாக்குவதற்கு விளம்பரங்களைக் கொடுத்தாக வேண்டியிருக்கிறது.

பிற்பகல் 6-20

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்து முதலமைச்சரும் நம்முடைய முதலமைச்சர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் போல,--மக்களைச் சந்தித்ததைப்போல, எந்த முதலமைச்சரும்-மக்களைச் சந்தித்தது இல்லை. (மேசையைத் தடடும் ஒலி). மக்களை வெறும் கையோடு சந்திக்கவில்லை, நலத் திட்ட உதவிகளுடன் சந்தித்தார். பல கோடிக்கணக்கான திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். அந்தத் திட்டங்களை எல்லாம் விளம்பரப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இங்கே 17

சிலைகள் இருக்கின்றன. அந்த 17 சிலைகளுக்கும் நாம் மாலை போடுகிறோம். ஆகவே, அந்த தியாகிகளை மதிக்கின்ற வகையிலே மாலை போடுகின்றபோது, அதை விளம்பரம் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப்போல, கோடிக்கணக்கான ரூபாய்க்கு இன்றைக்குச் சாலைகளைப் போடுகிறோம். அந்தச் சாலைகளை எல்லாம் விளம்பரப் படுத்தவேண்டியிருக்கிறது. அதைப்போல ஆதி திராவிட மக்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. அதைப்போல பல அலுவலகங்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்தவேண்டி இருக்கிறது. இதற்கெல்லாம் டெண்டர்விட வேண்டியிருக்கிறது. திட்டங்கள் அதிகம். ஆகவே, விளம்பரங்களைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய பட்ஜெட்டிலே அது 6 சதவீதம் தான். ஏறத்தாழ 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுகிறோம் என்று சொன்னால், 6 சதவீதம்தான், விளம்பரத்திற்காக பல்வேறு அரசு துறைகளின் சார்பிலே பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் சார்பிலே ஒதுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

செய்தித் துறையைப் பொறுத்தவரையில், தன்னுடைய பட்ஜெட்டில் ஒரு சதவீதத்தைத்தான் விளம்பரத்திற்காக ஒதுக்குகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ சில பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுக்கிறார்கள். சில பத்திரிகைகளுக்கு கொடுக்க மறுக்கிறார்கள் என்றெல்லாம் இன்றைக்குப் பேசுகிறார்கள். கடந்த காலத்திலே எந்த அடிப்படையிலே விளம்பரங்கள் கொடுக்கப்பட்டனவோ, அந்த அடிப்படையிலேதான் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தியப் பத்திரிகையாளர் சங்கம் கூட வலியுறுத்தி இருக்கிறது. சிறிய பத்திரிகைகள், நடுத்தரப் பத்திரிகைகள் ஊக்கப்படுத்தப்படவேண்டும் என்று சொலலியிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல. அன்னை இந்திரா காந்தி அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். விளம்பரம் கொடுப்பதிலே பத்திரிகையினுடைய தொனியைப் பார்க்கவேண்டும். பத்திரிகைகளின் குரல் மக்கள் குரலை எதிரொலிக்கிறதா என்று பார்க்கவேண்டும். அரசாங்கம் செயகின்ற திட்டங்களை தினமும் தந்தி போல, தினத்தந்தியாக அதை வெளியிடுகிறதா என்று பார்க்க வேண்டும். மக்கள் குரலை எதிரொலிக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. விளம்பரங்கள் கூடுதல் என்று சொல்லுகிறார்கள். விளம்பரக் கட்டணம் அதிகரித்து இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தினகரன் பத்திரிகையை எடுத்துக் கொண்டால் ஒரு சென்டி மீட்டருக்கு-விளம்பரம் அதிகம் என்று சொல்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். தினகரன் பத்திரிகைக்கு விளம்பரக் கட்டணம் அன்றைக்கு 1990 ஆம் ஆண்டு 87 ரூபாய் ஒரு சென்டி மீட்டருக்கு. விளம்பரக் கட்டணம், 1990 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட விளம்பரம் எவ்வளவு தெரியுமா, 98 லட்சத்து 27 ஆயிரத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல முரசொலி. அன்றைக்கு விளம்பரக் கட்டணம், 1990-லே 18 ரூபாய். ஆனால் கொடுக்கப்பட்ட விளம்பரம் 35 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய். ஆனால் தினமணிக்கு எவ்வளவு தெரியுமா? விளம்பரக் கட்டணம் சென்டி மீட்டருக்கு 72 ரூபாய். கொடுத்தது 25 லட்சம் ரூபாய். 18 ரூபாய் விளம்பரக் கட்டணத்திற்கு 35 லட்சம் என்றால், 72 ரூபாய் விளம்பரக் கட்டணம் சென்டி மீட்டருக்கு என்றால் 25 லட்சம். அதைப்போல மக்கள் குரல் விளம்பரக் கட்டணம் 23 ரூபாய். ஆனால் கொடுக்கப்பட்ட விளம்பரம் 20 லட்சம் ரூபாய். ஆகவே, தினகரனுக்கு மட்டும் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் விளம்பரம், 1990-91 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த அடிப்படையிலே தான், அன்றைக்கு இருந்த அரசு எந்த அடிப்படையிலே விளம்பரங்களைப் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்களோ, அந்த அளவிற்குத்தான் இந்த அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு விளம்பரத்திற்காக அதிக தொகையை செலவழிக்கிறது என்று சொல்கிறார்கள். இன்றைக்கு விளம்பரக் கட்டணம் உயர்ந்திருக்கிறது. தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 1990 ஆம் ஆண்டு ஏறத்தாழ 7 கோடி ரூபாய் பல்வேறு துறைகளின் சார்பிலே விளம்பரத்திற்காக கொடுத்திருக்கிறார்கள். 37 லட்சம் ரூபாய் செய்தித் துறையின் சார்பிலே விளம்பரத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு மட்டும், 1991 ஆம் ஆண்டு 36 லட்சம் ரூபாய்க்கு முரசொலிக்கு விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் நமது எம்.ஜி.ஆர். பத்திரிகைக்கு ஒரு பைசாவிற்குக் கூட விளம்பரம் கொடுக்கவில்லை என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-25

அதே நேரத்தில் இன்றைக்கு பத்திரிகைகளுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பத்திரிகை சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதிவிடக் கூடாது. நீங்கள் காயங்களை நியாயப்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் நியாயங்களை காயப்படுத்தாதீர்கள். அந்த உணர்வுகளில் நீங்கள் செயல்பட வேண்டும். இருட்டடைப்பு செய்வது, தனக்கு வேண்டிய கருத்துக்களை தன்னுடைய தொனிக்கு ஏற்ற கருத்துக்களை வெளியிடுவது, இப்படிப்பட்ட செய்திகளை வெளியிடாமல் திருத்திக் கொள்ளவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே உரிய முறையிலே மக்களுக்கு பயன்படுகின்ற வகையிலே நீங்கள் செய்திகளை வெளியிட வேண்டும். உண்மைகளுக்குப் புறம்பான வதந்திகளை பரப்பிவிடும் கேந்திரங்களாக பத்திரிகைகள் மாறிவிடக்கூடாது. அப்படிப்பட்ட அபாயம் நிகழ்கிறபோது, அது ஜனநாயகத்தின் ஆணிவேரை அசைக்கக் கூடிய துரதிருஷ்டத்தை உருவாக்கிவிடும். 'நியூஸ் பத்திரிகைகள், வியூஸ் பத்திரிகைகளாக, மாறிவிடக் கூடாது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த உணர்வுகளிலே நீங்கள் செயல்பட வேண்டுமென்று செய்தித் துறை அமைச்சர் என்ற முறையிலே உங்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல திரையரங்கத்தைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். இன்றைக்கு ஆபாசப் படங்கள் திரையிடப்பட்ட திரையரங்குகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை--16 திரையரங்குகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரசு செய்தி மலர் காட்டப்படாத திரையரங்குகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை-- 58 திரையரங்குகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கள்ளச் சந்தைகள் போன்ற முறைகேடுகள் நடத்தும் திரையரங்குகள் மீது 1196 தடவை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல பராமரிப்புக் கட்டண வசூல் பற்றியும் அதற்காக செலவு விவரங்கள் பற்றியும், தனிப் பதிவேட்டில் பராமரிக்காத திரையரங்குகள் 2 தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வீடியோ திருட்டுகள் பற்றி 174 நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரிலே பொது இடங்களில் முறைகேடான சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுக்கின்ற வகையிலே 195

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல திரையரங்கத்திற்கு டிக்கெட் விலையை உயர்த்திவிட்டார்களே என்று இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். அரசாங்கம் டிக்கெட்டுகளின் விலையை உயர்த்திக் கொள்ளலாம் என்று ஆணை வெளியிடவில்லை. திரையரங்க உரிமையாளர்களே விருப்பப்பட்டால் டிக்கெட் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் குறைந்த வகுப்புக் கட்டணத்தில் 20 சதவீத இருக்கைகள் இருந்தாக வேண்டும். அதைக் கூட்டக்கூடாது, குறைக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே திரையரங்க உரிமையாளர்களே உயர்த்திக்கொள்ளலாம் என்பதன் மூலம் ஏறத்தாழ 4 மாதங்களில் மட்டும் கேளிக்கை வரியாக ரூ. 6 கோடி அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. வருடத்திற்கு ரூ. 12 கோடி கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே ரூ. 88 கோடி என்று சொன்னால், இன்றைக்கு ரூ. 100 கோடி கிடைக்கும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

அதைப்போல பராமரிப்புக் கட்டணம் இன்றைக்கு திரையரங்குகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு ஏ.சி. தியேட்டருக்கு 50 பைசா, ஏ.சி. அல்லாத தியேட்டருக்கு 25 பைசா. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே சில மாநிலங்களில் பராமரிப்புக் கட்டணம் கொடுக்கப்படுகிறது. அதைப்போல தமிழ்நாட்டிலும் பராமரிப்புக் கட்டணம் இன்றைக்கு வழங்கப்படவிருக்கிறது. அந்த பராமரிப்புக் கட்டணம் ஏன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், தியேட்டர்கள் முறையாக இருக்க வேண்டும். அங்கேயிருக்கிற கழிவறைகள் முறையாக இருக்க வேண்டும். அங்கேயிருக்கிற விசிறிகள் ஒழுங்காக ஓடவேண்டும். இருக்கைகள் ஒழுங்காக இருக்கவேண்டும். ஆகவே அந்த அடிப்படையிலேதான் பராமரிப்புக் கட்டணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதனை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது சில அறிவிப்புகளை நாங்கள் வெளியிட்டிருந்தோம். அந்த அறிவிப்புகளை நாங்கள் இன்றைக்கு நடைமுறைப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு திரைப்பட நகருக்கு இதய தெய்வம், புரட்சித் தலைவி, பெயர் சூட்டப்படும் என்று அறிவித்திருந்தோம். 31-8-1994 அன்று

இதய தெய்வம் புரட்சித் தலைவினுடைய திருக்கரத்தாலே திரைப்பட நகர் தொடங்கப்பட்டது.

அதைப்போல எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ரூ. 54 லட்சம் செலவிலே இன்றைக்கு திட்டம் பரிசீலனையில் உள்ளது. வைக்கத்திலே பெரியார் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்று அறிவித்தோம். இன்றைக்கு அது கொண்டாடப்படுகிறது. அதைப்போல ஜீவா நினைவகம். இன்றைக்கு நடவடிக்கையில் உள்ளது. புலித் தேவனுக்கும், அழகுமுத்துக்கோனுக்கும் பிறந்தநாள் விழா நடத்தப்படும் என்று அறிவித்தோம். அது நெல்லை மாவட்டத்தில் நடத்தப்பட்டது. ராஜாஜி மண்டபம் ரூ. 17.9 லட்சம் செலவில் புதுப்பிக்கும் பணி நடக்கும் என்று சொன்னோம். பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழரசுக்கு கம்யூட்டர் வாங்கப்படும் என்று சொன்னோம். வாங்கப்பட்டது. பயன்பாட்டில் உள்ளது.

திரைப்படக் கல்லூரி நூல்நிலையம் ரூ. 3 லட்சம் செலவில் நூதனப்படுத்தப்படும் என்று சொன்னோம். நூல்கள் வாங்கப்பட்டுள்ளன. அறிவிக்காமலேயே அம்பேத்கார் சிலை இன்றைக்கு அமைக்கப்பட்டு, புரட்சித் தலைவியினுடைய திருக்கரத்தாலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6–30

அதைப்போல சென்னையிலே கவியரசர் கண்ணதாசனுடைய சிலை புரட்சித் தலைவியினுடைய திருக்கரத்தாலே (மேசையைத் தட்டும் ஒலி) திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன நூல்நிலையம் நவீனப்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தோம். இனறைக்கு நவீனப்படுத்தப்பட்டுள்ளது. மாநில செய்தி நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ. 3 லட்சம் செலவிலே மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தோம். அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொருட்காட்சிகள் கடலூரிலும் வேலூரிலும் கூடுதலாக நடத்தப்படும் என்று அறிவித்திருந்தோம். கடலூருக்கு பதிலாக தஞ்சையிலும், வேலூரிலும் பொருட்காட்சி நடத்தப்பட்டது. பல்வகை பணிவிளக்க முகாம்கள், திண்டுக்கல் அண்ணா, விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டங்களில் நடத்தப்படும் என்று அறிவித்து இருந்தோம். 4 மாவட்டங்களில் பல்வகை பணிவிளக்கு முகாம்கள் நடத்தப்பட்டன. ஆகவே சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில் எத்தகைய திட்டங்கள் செய்தித்

துறையின் சார்பிலே செயல்படுத்தப்படும் என்று அறிவித்தோமோ அத்துணை திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேஜர் சிவராஜனுக்கு சிலை வைக்கப்பட்டது. அதுவும் புரட்சித் தலைவியினுடைய திருக்கரத்தாலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திற்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தோம். இன்றைக்கு அதற்காக இடம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே சென்ற ஆண்டு, நாங்கள் அறிவித்தது போல இந்த ஆண்டும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஒப்புதலுக்கு இணங்க சில அறிவிப்புகளை இங்கே நான் வெளியிட விரும்புகிறேன்.

சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் (மேசையைத் தட்டும் ஒலி) நெய்தல் நில நாயகன், தீரர், கிளர்ச்சிகள் போராட்டங்கள் அவருக்கு நிலாச்சோறு. எப்படி புரட்சித் தலைவி அவர்களுக்கு கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நிலாச்சோறோ அப்படி சிந்தனைச் சிற்பி சிங்கார வேலருக்கு கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நிலாச்சோறு. ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்து எவருக்கும் அஞ்சாதவர், எப்படி யாருக்கும் அஞ்சாத, எதற்கும் அஞ்சாத, எங்கும் அஞ்சாத, எவருக்கும் அஞ்சாத என்றைக்கும் அஞ்சாத (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் சூளுரைத்து இருக்கிறார்களோ அது போலவே நம்முடைய சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அஞ்சாத சிங்கம். சிறைக்கு அஞ்சாதவர். சிறையை சகஜமாக எதிர்நோக்கக் கூடியவர். பொதுவுடமை கருத்துக்களை எளிதாக எவரும் உணரும்படி எழுதியும் பேசியும் இயக்கம் வளர்வதற்கு தந்தை பெரியார் வழியிலே பாடுபட்டவர். அப்படிப்பட்ட சிந்தனைச் சிற்பி மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த (குறுக்கீடு) அதுதான் நெய்தல் நில நாயகன் என்று சொன்னேனே, நெய்தல் நில நாயகன் என்றால் மீனவர் சமுதாயம், கடலும் கடல் சார்ந்த இடமும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோடிமாரிக்கு இப்போதுதான் புரிந்திருக்கிறது. *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: அந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் திருவுருவச் சிலையை இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய வேண்டுகோளுக்கு இணங்க இந்த ஆண்டு சென்னையிலேயே அமைக்கப்படும், நிறுவப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல சின்னச் சின்ன இழை பின்னிபின்னி வரும் கைத்தறிச் சேலையைப் போல நம்

எண்ணத்தறிகளில் வண்ணக் கவிதைகளை பாருக்கு நெய்திட்ட பட்டுக்கோட்டையார் நினைவகமும் பட்டுக்கோட்டையிலே இந்த ஆண்டு நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல தேசியமும் தெய்வீகமும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த மாமனிதர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய நினைவகமும், இன்றைக்கு செய்தித் துறையின் சார்பிலே பராமரிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் வாழ்ந்த இல்லமும் அரசு மூலமாக நினைவு இல்லமாக ஆக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப்போல இஸ்லாமிய சமுதாயத்தின் ஒப்புயர்வற்ற தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரரும், நமது நாட்டின் முதுபெரும் அரசியல் தலைவரும் ஆகிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய நூற்றாண்டு விழா சென்னையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே மிகச்சிறப்பாக நடைபெறவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்து மாவட்டங்களிலும் அவருடைய நூற்றாண்டு விழா நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் திருச்செங்கோட்டிலே ஒரு விழாவிலே கலந்து கொண்டு *15-7-1994* அன்று அரசு நலத் திட்டங்கள்-உதவிகள் வழங்கும் விழாவிலே பேசுகின்றபொழுது, சிலப்பதிகார காவிய நாயகி கண்ணகிக்கு சிறப்புக் கோட்டம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கு ஏற்ப அந்த பத்தினித் தெய்வத்திற்கு திருச்செங்கோடு நாகர்மலை பின்புறம் உள்ள மண்கரட்டில் கோட்டம் அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப்போலவே தமிழகத்தில் பக்தி உணர்வு கொண்டவர்களின் உள்ளத்தில் எல்லாம் குடி கொண்டிருக்கும் தமிழ் கடல் திருமுருக கிருபானந்த வாரியாருக்கு ஒரு நினைவு மண்டபம் தமிழக அரசின் சார்பிலே அவர் பிறந்த ஊரான வட ஆற்காடு மாவட்டம் காங்கேயநல்லூரிலே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப்போல கி.பி. 18ஆம் நூற்றாண்டில் நெல்லைச் சீமையிலே வாழ்ந்த வெள்ளையனை எதிர்த்துப் போராடி, பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட வீரன் அழகு முத்துக்கோன் அவருக்கு அரசின் சார்பிலே சென்ற ஆண்டு மாவட்ட அளவிலே பிறந்த நாள் நடத்தப்பட்டது. இந்த ஆண்டு நெல்லைச் சீமையிலே மாவீரர் அழகுமுத்துக் கோன் அவர்களுக்கு சிலை அமைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-35

அதேபோல, 18-ஆம் நூற்றாண்டில் சென்னிமலைக்கும், சின்ன மலைக்கும் இடையிலே ஒரு சின்ன மலை வாங்கிப்போட்டான், வாங்கிக் கொண்டான் என்று சொல் என்று தண்டல்காரனிடம் உரைத்தானே தீரன் சின்னமலை, அந்தப் போர்வீரனை நினைவுப்படுத்துகின்ற வகையிலே, விடுதலை வீரர்களையும், தியாக சீலர்களையும் பெருமைப்படுத்துக்கின்ற வகையிலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த தீரன் சின்னமலையினுடைய பிறந்த நாள் விழா சென்ற ஆண்டு மாவட்ட அளவிலே அரசின் சார்பிலே நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். இந்த ஆண்டு அந்த மாவீரன் தீரன் சின்னமலையினுடைய திருவுருவச்சிலை பெரியார் மாவட்டத்தின் தலைநகரமான ஈரோட்டிலே வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே போல், வெள்ளையனே வெளியேறு என்று நெல்லைச் சீமையிலே முதல் முதலாக விடுதலைக்கு முழக்கமிட்ட புலித்தேவனுக்கு அரசின் சார்பிலே பிறந்தநாள் விழா மாவட்ட அளவிலே நடத்தப்படும் என்று புரட்சித் தலைவி அவர்களால் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இந்த ஆண்டு புலித்தேவனுக்கு நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே திருவுருவச் சிலை நிறுவ உத்தேசிக்கப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே போல், விஜயாலயன் என்னும் சோழ மன்னன், முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றியதாக திருவாலங்காட்டு செப்பேடுகள் தெரிவிக்கின்றன. தஞ்சையை விஜயாலயன் கைப்பற்றியதற்கு முன்னரே தஞ்சையையும், வல்லத்தையும், தலைநகராகக் கொண்டு, எல்லா வளமுடன் தஞ்சையை ஆண்ட, தஞ்சைகோன், நற்புகழாளன் என்னும் பெயர் பெற்ற பெரும்பிடுகு முத்தரையருக்கு சிலை ஒன்று திருச்சியிலே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் அரசின் பல்துறை பணிவிளக்க முகாம்கள் 1993-94ஆம் நிதியாண்டிலே ராமநாதபுரம், சிதம்பரனார் மாவட்டங்களிலே நடத்தப்பட்டு, 1994-95ஆம் நிதியாண்டிலே திருவண்ணாமலை-சம்புவராயர், திண்டுக்கல்-அண்ணா, விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் நடத்தப்பட்டு, அரசின் பல்துறை விளக்க முகாம்கள், மக்கள் பயன் அடையும் வகையில் அமைந்துள்ளமையால் இந்த நிதியாண்டில் 10 மாவட்டங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல், அரசின் சாதனைகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலப்பணிகள்

குறித்து, வீடியோ படங்கள் காண்பிப்பதற்காக செய்தி மக்கள் தொடர்புத் துறையிலே சென்ற ஆண்டு 10 வீடியோ வாகனங்கள் வாங்கப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். 10 வீடியோ வாகனங்கள் வாங்கப்பட்டது. இன்றைக்கு 20 வீடியோ வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் விடுபட்ட 3 மாவட்டங்களுக்கு பகுதி-2 திட்டத்தின் கீழ் இரண்டு வாகனங்களும், விடப்பட்டுள்ள சென்னைக்கு ஒரு வீடியோ வாகனமும் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல், பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடரொளி தந்தை பெரியார், வைக்கம் தந்த வீரர் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாகத் தொகுத்து வெளியிட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. அதே போல், அறிவுலக மாமன்னர், எழுத்துலகச் சிற்பி, செயல்திறத்தாலே செந்தமிழ் உள்ளங்களில் நிலைத்து வாழுகின்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை தொகுத்து புத்தகமாக வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. அதே போல, மறைந்தாலும் மங்காபுகழ் பெற்ற மாணிக்கத் தலைவராக, அமுதசுரபி ஏந்தி வந்த அற்புதத் தலைவன், தாயினும் சாலப்பிறந்த அமுதூட்டிய தாயன்புத் தலைவன் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து புத்தகமாக வெளியிட அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் நான் அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பின் மூலமும், என்னுடைய பதிலுரையின் மூலமும் உங்களுடைய சந்தேகங்களை போக்குகின்ற வகையிலும், அரசாங்கத்தின் திட்டங்களையும், செயல்பாடுகளையும் எடுத்து சொல்கின்ற வகையிலும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு சந்தேகமே இல்லை. உறுப்பினர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள். (சிரிப்பு) நீங்கள் இவ்வளவு பேசியதற்குப் பிறகு சந்தேகம் எப்படி வரும்?

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. தங்களுக்கு திருப்தி தரும் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்ப எனக்கு சந்தேகம் என்று சொல்கிறீர்களே, எனக்கு சந்தேகமே இல்லை.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: ஆகவே, நான் ஆற்றிய உரைகள் அவை பதிவேட்டிலே இருக்கின்றன. உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் கைகளைத் தூக்குகிறார்கள். டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்சி மாநகரத்திலே உள்ள பத்திரிகையாளர்கள் வீடு கட்ட கடன் உதவியை நம்முடைய அமைச்சர் அவர்கள் அளிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6-40

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கான கடன் உதவியை செய்தித் துறை அளிப்பது இல்லை. வீட்டு வசதி வாரியம்தான் அந்தப் பணியைச் செய்துக் கொண்டிருக்கிறது. திரைப்படத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் 85 ஏக்கரை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கூட்டுறவு சங்கத்தை அமைத்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் அந்தப் பணியைச் செய்துக் கொண்டிருக்கிறது. செய்தித் துறையின் சார்பிலே வீடு கட்டிக் கொடுப்பதற்கு திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். சிவபதி.

திரு என். ஆர். சிவபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பில் இன்றைக்கு சுதந்திரப் போராட்ட வீரர் தளபதி பெரும்பிடுகு முத்தரையன் திருவுருவச் சிலையை திருச்சி மாவட்டத்தில் நிறுவுவதற்கு அனுமதி வழங்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு வருகின்ற திரைப்படங்களில் அரசியல் தலைவர்களையும் மற்றும் பிரதிநிதிகளையும், அமைச்சர் பெருமக்களையும் மிகக் கேவலமாக சித்தரிக்கப்பட்டு வெளியிடப்படுவதால் மக்கள் மத்தியில் அரசியல் தலைவர்கள் மீது ஒரு தவறான எண்ணத்தையும் உருவாக்கி அந்த படமே தவறான முன்மாதிரியாக அமைய வாய்ப்பு உள்ளது. ஆகவே அப்படிப்பட்ட திரைப்படங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம்

செலுத்தி திரையிடப்படுவதை தடை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: தலைவர் அவர்களே, திரைப்படங்கள் வெளியிடப்படுவதற்கு முன்னால் தணிக்கை குழுவால் பார்க்கப்பட்டுத்தான் வெளியிடப்படுகின்றன. ஆகவே தணிக்கை குழு அதிகாரம் நம்முடைய கையிலே இல்லை. அது மத்திய அரசின் கையிலே இருக்கிறது. நம்முடைய கையிலே அந்த அதிகாரம் இருக்குமானால் அதைப்பற்றி நிச்சயமாக கடுமையான நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தமிழாய்ந்த தமிழறிஞர், தமிழுக்கு முதல் அகராதியைத் தந்த தேவநேய பாவாணர் அவர்களுக்கு விழா எடுக்கும் பொருட்டு அவர் வாழ்ந்த சங்கரன்கோயில் பகுதியில் உள்ள கோமதிமுத்துபுரம் என்ற புறக்கடையான்பட்டி கிராமத்தில் அவருடைய இல்லத்தை நினைவில்லமாக்கி அவருக்கு ஆண்டுதோறும் அவர் வாழ்ந்த (குறுக்கீடு) சங்கரன்கோயில் பகுதியிலும், சென்னை நகரிலும் விழா எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: தலைவர் அவர்களே, மொழி ஞாயிறு தேவநேயபாவாணரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே அண்ணாசாலையிலே இருக்கின்ற நூலகத்திற்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நிதி நிலைக்கு ஏற்ப அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: தலைவர் அவர்களே, எவ்வளவோ வெள்ளையர்கள் முயன்றும் கட்டபொம்மனை காட்டிக்கொடுக்காத சேதுபதி மன்னருக்கு சிலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஊர் சட்டமன்ற உறுப்பினரே அமைச்சர்தான்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திர போராட்டத்திலே முதல் வீரனாக விளங்கிய ரிபல் முத்துராமலிங்க சேதுபதி இந்த சென்னை கோட்டையிலே 27 ஆண்டுகள் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார்கள். நெல்சன் மண்டேலா தென் ஆப்ரிக்காவிலே அந்த கருப்புச் சிங்கம் 25 ஆண்டுகள்தான் சிறையிலே இருந்தார்கள். ஆனால் ரிபல் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் 27 ஆண்டுகள் இந்த சென்னை கோட்டையிலே இருந்தார்கள். அவரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே ரிபல் முத்துராமலிங்க சேதுபதியினுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்படும் என்று சென்ற ஆண்டே அறிவித்து இராமநாதபுரத்திலே ரிபல் முத்துராமலிங்க சேதுபதியினுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது என்பது மட்டும் அல்ல சென்ற ஆண்டே அவருக்கு சிலை வைக்கப்படும் என்று அறிவித்து இன்றைக்கு சிலை வைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படத் தொழிலாளர்களுக்கு அளிக்கின்ற உதவியினைபோல் சினிமா தியேட்டர்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படுமா அல்லது அவர்களது சம்பளத்தையாவது உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்பட அரங்குகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு அதனுடைய உரிமையாளர்கள் உதவி செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவித்த திட்டத்தையெல்லாம் சீரும் சிறப்போடும் செயல்படுத்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்வதோடு ஒன்றை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா, தமிழர் என்றொரு இனம் உண்டு, தனியே அவர்க்கொரு குணம் உண்டு' என்று

பாடிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் வாழ்ந்த வீட்டை நினைவிடமாக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு அறிவித்தார்கள். ஆனால் இன்னும் அதை செயல்படுத்தவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6-45

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: தலைவர் அவர்களே, நாமக்கல் கவிஞர் மகாத்மா காந்தி காலத்து கவிஞர். அந்தக் கவிஞரை பெருமைப்படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள், அவர் வாழ்ந்த இல்லம் நினைவில்லமாக ஆக்கப்படும் என்று அறிவித்தார்கள். அவர் வாழ்ந்த இல்லத்தைக் கையகப்படுத்துவதில் எத்தகைய பிரச்சினைகள் இருக்கின்றன என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். நானே நாமக்கல்லுக்கு அந்த இல்லத்திற்கு வந்து அந்த இல்லத்தில் இருப்பவர்களை எல்லாம் சந்தித்து பேசினேன் என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு தெரியும். ஆகவே அந்த வீட்டைக் கொடுப்பதிலே அவர் பெற்ற பிள்ளைகளுக்குள்ளே வேறுபாடுகள் இருக்கின்றன என்பதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும்; கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்பதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். அவர், அவர்களோடு தொடர்புகொண்டு அந்த இடத்தை வாங்கிக் கொடுப்பதற்கு முயற்சி எடுப்பார்களானால் நிச்சயம் அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதற்கான நிதியை ஒதுக்கி வைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பே. தர்மலிங்கம்.

திரு. பே. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையில் விடுதலை வீரர் அழகுமுத்து கோனுக்கும், புலித்தேவனுக்கும் சிலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு அவை நெல்லை நகரத்தின் மத்திய பகுதியில் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகள் மதிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாமுனிவர் என்று அனைவராலும் போற்றப்பட்டு நாட்டு மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கும் தவத்தோடு காட்சி அளித்த நம்முடைய காஞ்சிப் பெரியவர், மகா பெரியவர் அவர்கள் இன்றைக்கு இல்லாவிட்டாலும் அவர் அருள் ஆசி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர் இறந்து இருக்கின்ற காஞ்சிபுரத்திலாவது அல்லது அவர் பிறந்து இருக்கின்ற விழுப்புரத்திலாவது அவருடைய திருவுருவச் சிலையை அதைப்போல அவருக்கு என்று ஒரு மணி மண்டபம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அதனை காஞ்சிபுரத்தில் அமைப்பார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாமுனிவருக்கு காஞ்சியே சாட்சியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, நல்ல கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும் நாட்டுக்காகப் பாடுபட்டவர்களுக்கு சிலை வைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முயற்சி செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாருக்கும் சிலை வைத்து விட்டீர்களே எனக்கு மட்டும் ஏன் சிலை வைக்கவில்லை என்று ஒரு ஆத்மா சாந்தி அடையாமல் இருக்கிறது. ஆகவே தமிழுக்காக உயிர் நீத்த சங்கரலிங்கனார் சிலையை விருதுநகரில் வைப்பதற்கோ அல்லது சென்னையில் வைப்பதற்கோ ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரவாயில்லை.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பிறந்த நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று தன் இன்னுயிரைப் பணயம் வைத்து தன் உயிரைத் துறந்த அந்த மாவீரன் தியாகி, சங்கரலிங்கனாருக்கு சிலை நிர்மாணிக்கப்பட்டு விரைவில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேதி கொடுத்ததற்குப் பிறகு அந்த சிலை திறக்கப்படுகின்ற நிலையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஆ) கோரிக்கை எண் 46-செய்தி திரைப்படத்தொழில் நுட்பவியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46-செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.10,44,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

(இ) கோரிக்கை எண் 21-மீனளம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கை மீது விவாதமும், வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 21, மீனளம். மீன் கம, கமவென்று மணக்கிறது. மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.28,49,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2355, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இறந்தால் வழங்கப்படும் உதவித் தொகையை 3 மாதத்திற்குள் வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,38,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மீளைத்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையான மீனளம் என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக்குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. அதில் தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதை அவைக்குறிப்பில் பதிவு செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

@ 401 முதல் 429 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பிற்பகல் 6-50

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும், ஆலோசனைகளுக்கும் என்னுடைய பதில் உரையையும், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீர்மிகு ஆட்சியில் எடுக்க இருக்கும் முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. மீன் பிடிப்பதில் வல்லவர்கள் பலர் விவாதத்திலே கலந்து கொள்ளுகிறார்கள். எனவே, பிடிக்கிற மீனை வேகமாகப் பிடித்து கொடுத்தீர்கள் என்றால் நல்லது. ஒரேயடியாகக் கடலுக்குள் போய்விட்டீர்கள் என்றால் (சிரிப்பு) மணி 6.50. எனவே விவாதத்தில் பங்கு கொள்ளுகிற உறுப்பினர்கள் நேரத்தின் அருமையையும் கருதி, சுருக்கமாகப் பேசக் கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்முடைய மீனளத் துறை அமைச்சரவர்கள், நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் கூறியதைப்போல, இன்று சுவையான நல்ல உணவு படைத்தற்காக இங்கே மாமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினையும் வணக்கத்தினையும் மாண்புமிகு மீனளத் துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

தரையில் வாழ்கின்ற மக்களுக்கும், கடலில் வாழ்கின்ற மக்களுக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. கடலிலே வாழ்கின்ற மக்கள் தினந்தோறும் செத்துப் பிழைக்கின்றவர்கள் என்று சொல்லுவார்களே அதுபோல செத்துப் பிழைக்கின்றவர்கள். அவர்களுக்குத் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி அமைத்த பிறகுதான் ஒரு நல்ல செயல்திட்டங்களை ஏற்படுத்தி, பல்வேறு புயல் பாதுகாப்புத் திட்டங்கள், கட்டிடங்கள், தொகுப்பு வீடுகள், மீனவர்

காலனி தொகுப்பு வீடுகள் போன்ற வீடுகளை மிகப் பிரமாதமான முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏனென்றால் என்னுடைய தொகுதியிலே 15 ஊராட்சிகள் மீனவர்கள் வாழ்கின்ற பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினாலும் எனக்கு அந்த மீனவர்கள் மீது பற்றும் பாசமும் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், அதுகுறித்து இங்கே சொல்ல ஆசைப்படுகின்றேன்.

பேரவைத் தலைவரவர்கள் சொன்னதுபோல நான் விரைவாக முடிக்க ஆசைப்படுகிறேன்.

மீனவர்களுடைய உணவுப் பொருட்களைப் பேருந்துகளிலே, நகரப் பேருந்துகளிலே கொண்டு செல்லுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. பேருந்துகளில் அந்த உணவுப் பொருட்களை–நண்டு, மீன், இறால் போன்ற உணவுப் பொருட்களை அங்கே அந்தப் பகுதியிலேயிருந்து–உதாரணமாக, சேதுபாவாசத்திரம் கடலோரப் பகுதியிலிருந்து அறந்தாங்கிக்கோ அல்லது பட்டுக்கோட்டைக்கோ கொண்டு வர வேண்டுமென்று சொன்னால் அந்த நகரப் பேருந்துகளில் ஏற்ற மறுக்கிறார்கள். அவர்கள் காலை 7 மணியிலிருந்து மதியம் வரையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவேதான், நான் பல்வேறு நேரங்களில் இந்த மாமன்றத்திலே அவர்களுக்கு என்று ஒரு தனி பேருந்து அல்லது அந்த நகரப் பேருந்துகளிலே தனியாக பின்புறம் ஒரு இடம் ஒதுக்கி அந்த உணவுப் பொருட்களை வைப்பதற்குத் தக்க நடவடிக்கையைப் போக்குவரத்துத் துறையும், மீனைத் துறையும் சேர்ந்து எடுத்தால் அந்த மீனவர்களுக்கு–அந்தத் தொழிலாளர்களுக்கு மிகவும் சிறப்பாக அமையும் என்கின்ற காரணத்தால் இதைத் தயவு செய்து மாண்புமிகு மீனளத் துறை அமைச்சரவர்களும் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும் கலந்து நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே இதை அவசியம் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது இறால் பண்ணை எங்கு பார்த்தாலும் அமைக்கப்படுகிறது. அதிலே இறால் பண்ணை அமைக்கின்ற தனியார்கள் கடலோரத்திலே இருக்கின்ற பகுதிகளிலே இறால் பண்ணைகளை அமைக்கிறார்கள். அமைக்கின்றபொழுது வடிகால்–நீண்ட காலமாக வடிகாலாக இருக்கின்ற அந்தப் பகுதிகளை

அடைத்து விட்டு அதிலே இறால் பண்ணைகளை அமைக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சர்வே செய்து லிஸ்ட் எடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்தி அந்த மீனவ மக்கள் வாழ்கின்ற பகுதியிலே அந்த வடிகால் பகுதிகளை விட்டுவிட்டு மீதிப் பகுதியில் அவர்கள் இறால் பண்ணையை அமைப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதுபோல மீனவர்கள்......

மாண்புமிகு திரு. டி.ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இறால் பண்ணைகளைப் பொறுத்தவரையிலே அதை முறைப்படுத்த வேண்டுமென்பதற்காகவே நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலேயும் கொண்டுவர முடியாத அளவிற்கு நம்முடைய தமிழகத்திலே ஒரு சிறப்பான சட்டத்தைக் கொண்டு வந்து அந்த அடிப்படையிலே இப்பொழுது அதனை முறைப்படுத்தியிருக்கின்றார்கள்.

மீனவர் காலனிகளாக இருந்தாலும் சரி, சிறுசிறு குப்பங்களாக இருந்தாலும் சரி, பெரிய குப்பங்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு தூரத்தில் அவை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெளிவாகவே அந்தச் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

பிற்பகல் 6-55

உதாரணத்திற்கு 500 மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமத்தில் மக்கள் வாழ்கிறார்கள் என்றால் அந்த வெளிப்புற எல்லையிலிருந்து, கிராம எல்லையிலிருந்து 100 மீட்டருக்குத் தள்ளித்தான் இறால் பண்ணை ஆரம்பிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் 500–க்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற கிராமத்திலே அந்த வெளிப்புற எல்லையிலிருந்து ஏறக்குறைய 500 மீட்டர் தொலைவிலேதான் இறால் பண்ணை ஆரம்பிக்க வேண்டும். அதே போன்று, வடிகால் வாரியம், அந்த வடிகால் வழிகளை எடுக்க வேண்டுமென்றால்கூட, பொதுப் பணித் துறையினுடைய முன்அனுமதி, தடையின்மைச் சான்றிதழை பெற்றுத்தான் எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மிக்க

நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்கின்றபோது இறந்துபோனால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் இருந்ததைவிட தற்போது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் அந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதே நேரத்தில் அந்தத் தொகையை வழங்குவதற்கு நீண்ட காலஅவகாசம் சுமார் 6 மாதங்களுக்கு மேலாக ஆகிறது. 3 மாதத்திற்குள்ளாக அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து, அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின் மூலமாக மீனவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மீனவன் தொழில் ஆற்றும்போது இறந்தால் அந்த இறந்த மீனவனுடைய, அந்த முதல் தகவல் அறிக்கை காவல் நிலையத்திலிருந்து பெற்று, சம்பந்தப்பட்டத் தகவல்களையெல்லாம் பெற்று 'பிஸ்கோபெட்' என்று சொல்லக்கூடிய–அது இங்கே இல்லை டெல்லியிலே இருக்கிறது–அந்த நிறுவனத்திற்கு அனுப்பி, அங்கேயிருந்து வந்த பிறகுதான் காசோலை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த காலத்திலே எல்லாம் ஒரு வருடம்கூட காத்திருக்கின்ற நிலைமை இருந்தது. ஆனால், தற்போது 3 மாதத்திற்குமேல் இதிலே காலதாமதம் செய்ய முடியாத வகையில் 3 மாதத்திற்குள்ளாகவே வழங்கி விடுகிறோம். அப்படி ஏதாவது இருந்தால், உறுப்பினர் என்னிடத்திலே தெரிவித்தால்கூட, உடனடியாக அவர்களுக்கு வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த ஒரு விஷயத்தையும் சுட்டிக்காட்டினால் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்கின்ற நம்முடைய மீனளத் துறை அமைச்சர் என்பதற்கு ஒரு சிறு உதாரணம். மீனவர்களுக்கு அடையாள அட்டை காணாமல் போய்விடுகிறது அல்லது தொலைந்துவிடுகிறது அல்லது கடலில் செல்கின்றபோது,

நனைந்து, கசங்கி அல்லது கீழே விழுந்து விடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதற்கு டூப்ளிக்கேட் அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை விட்டிருந்தோம். அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதில் மிகவும் காலதாமதம் செய்துவிட்டார்கள். அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருந்தோம். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அது தொடர்பாக மனு கொடுத்திருந்தோம். அதை உடனடியாக புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு, நம்முடைய மீனளத் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக நேரிடையாக கலெக்டரிடம் மற்றும் மீன்துறை டைரக்டரிடம் பேசி அனைத்து கார்டுகளையும் உடனடியாக வழங்க வேண்டும் என்று சொல்லி சென்ற 6 மாதங்களுக்கு முன்னதாகவே அனைவருக்குமே கார்டுகள் வழங்கப்பட்டன. அது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு நன்றியை அன்றே சொல்லியிருக்கிறேன். அதுபோல, விரைந்து நம்முடைய மீனளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியிலே ஒரு சில கோரிக்கைளை சொல்ல ஆசைப்படுகிறேன். பேராவூரணித் தொகுதியில் செந்தளவயல் கிராமத்தில், மீனவர்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலங்களை, வனத் துறையிடமிருந்து மீட்டு, மீண்டும் மீனவர்களிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்குச் சொந்தமான இடம். அதை வனத் துறை எங்களுடைய இடம் என்று அங்கே அடையாளம் இட்டு, வேலி அமைப்பதாக சொல்லி விவகாரம் நடந்து கொண்டிருக்கிறது. அதில் தாங்கள் தலையிட்டு செந்தளவயல் என்ற கிராமம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்த இடத்தை மீட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, கடலோரப் பகுதியில் சில கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள், இங்கே ஹாலோ பிளாக் என்று ஒரு சிமெண்ட் அச்சையும் கோர்த்து பிரமாதமான முறையில் கட்டிக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய தமிழகத்தில்தான் முதல் முறையாக அந்த மீனவர்களுக்கு செங்கல் வைத்து கட்டப்பட்டது. அது உப்பு தண்ணீரிலே கரைந்துவிடுகிற காரணத்தினால், விரைவாக 4, 5 ஆண்டுகளுக்குள் இடிந்து விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, இதைச் சுட்டிக்காட்டியவுடன் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு, அந்த ஹாலோ பிளாக் என்ற அளவிலே அங்கேயே காங்கிரிட் வீடாக அந்த ஒன்றியத்தினுடைய தலைமையிடத்திலேயே அதற்கு தனியாக சிமெண்ட் மண் போன்றவற்றை

ஏற்படுத்தி கல் தயார் செய்து, அந்த ஹாலோ பிளாக் போட்டால், அந்த உப்புத் தண்ணீர் அரிப்பு இல்லாமல், வீடு நிரந்தரமாக ஒரு 50 வருடங்களுக்கு இருக்கின்ற அளவுக்கு இன்று கட்டப்படுகிறது. அதற்கு நான் என்னுடைய மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறேன். அதை நான் இந்த அவையிலே பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மீனளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் சுட்டிக்காட்டினேன். அதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்து செய்திருக்கிறார்கள். அதுபோல தொகுப்பு வீடுகள் இன்னும் பல கிராமங்களுக்கு நீங்கள் கட்டித் தரவேண்டும். அதற்கு உத்தரவிட வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-00

அதேபோல் புதுப்பட்டினம், சேதுபாவாசத்திரம், கீழத்தோட்டம், ஏரிப்புறக்கரை, காங்குடா, கழமங்குடா, கணேசபுரம் ஆகிய ஊர்களில் மீனவர் காலனி வீடுகளும் அதேபோல் புதுப்பட்டினம், அம்மணிசத்திரம், மந்திரிப்பட்டினம், புதுத்தெரு, சோமநாதப்பட்டினம், சின்ன ஆவுடையார் கோயில் ஆகிய ஊர்களில் மீனவர்களுக்கு புயல் பாதுகாப்பு கட்டடங்களும் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மீனவர்களுக்காக எல்லாவிதமான நடவடிக்கைகளையும் துரிதமாக எடுக்கின்ற அதே நேரத்தில் அவர்களுக்கு இருக்கின்ற இன்னும் சில குறைகளையும் போக்குகிற அளவுக்கு நம்முடைய மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்து அந்தக் குறையை நிவர்த்தி செய்கிறேன் என்று சொல்லியிருந்தார்கள். இடையிடையே சட்டமன்றம் கூடியதால் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. விரைவில் எங்கள் பகுதிக்கு வந்து அந்தக் கடலோர மீனவர்களைச் சந்தித்து அவர்களுடைய மற்ற குறைகளையும் நிவர்த்தி செய்ய ஆவன செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குப்பன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பினை இன்றைக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களுடைய

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிற திசை நோக்கி வணங்கி இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பேசுகிற நேரத்தில் எல்லாம் எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்த அதாவது மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த, மீனவ சமுதாயத்தில் பிறந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைக்கவேண்டும் என்று கோரிக்கைகள் வைத்திருந்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கு சென்னையிலே சிலை அமைக்க மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் மூலமாக உத்தரவிட்டமைக்காக தமிழகத்திலே உள்ள அனைத்து மீனவ சமுதாய மக்களின் சார்பிலே நன்றிக்கடன் பட்டவர்கள் என்பதை எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மீன்வளத் துறை மூலமாக, எத்தனையோ முதலமைச்சர்களும் எத்தனையோ அரசுகளும் அமைந்திருந்தாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றபிறகுதான் மீனவ சமுதாய மக்களுக்காக பல்வேறு சலுகைகளையும், பல்வேறு நலத் திட்டங்களையும் உருவாக்கிக் கொடுத்ததற்கு தமிழகத்திலே உள்ள அனைத்து மீனவ சமுதாய மக்களும் புரட்சித்தலைவியின் பின்னாலே என்றென்றைக்கும் அணிவகுத்து நிற்போம் என்ற உறுதியை இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட சலுகைகளை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் இந்த சமுதாய மக்களுக்காக வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் மனமார்ந்த நன்றியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் ஆண்டு ஒன்றுக்கு 2000 வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து, இன்றைக்குச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே திருச்சினாங்குப்பத்திலே 2,37,00,000 ரூபாய் செலவில் 492 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு அந்த மக்களுக்கு வழங்கப்படடிருப்பதற்காக இதயதெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் கடலரிப்பு அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே அவ்வாறு கடலரிப்பால் பாதிக்கப்பட்ட காசிவிசுவநாதகுப்பம், நல்லதண்ணீர்ஓடைக்குப்பம் மற்றும் இரண்டு மூன்று கிராமங்கள் கடலரிப்பால் பாதிக்கப்பட்டு, மாற்று இடம் இல்லாமல் டாமின் என்கிற கனிம நிறுவனத்தின் இடத்திலே குடியேறி இருக்கிறார்கள். எனவே மீன்வளத் துறை மூலமாக அதை எடுத்து அந்த மக்கள் அங்கே எப்போதும் குடியிருக்கிற வகையில் 2 பங்கு மீனளத் துறையும் ஒரு பங்கு அந்தக் கிராமத்தில் உள்ள மக்களும் போட்டு, அந்த இடத்தைப் பெற்று அவர்களுக்கு நிரந்தர பட்டா இடமாக மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களிடத்திலும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மீனவர் காப்புறுதித் திட்டம் என்று சொன்னால், கடந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மீனவர்கள் கடலிலே சென்று இறந்தால் அவர்களுக்குக் கொடுப்பது ஆயிரம் ரூபாய் என்றிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அதை 2000 ரூபாயாக உயர்த்தினார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அது 5000 ஆக உயர்த்தப்பட்டு, பிறகு 15000 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் தமிழக முதல்வர் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதை 21000 ரூபாயாக உயர்த்தி பிறகு 25000 ரூபாயாக உயர்த்தினார்கள். ஆனால் இன்றைக்கு அதை மீண்டும் 50000 ஆக உயர்த்தி, அதாவது தாயுள்ளத்தோடு அந்த மீனவ சமுதாய மக்களுடைய அல்லல்களைப் புரிந்து இந்த மீனவர் காப்புறுதித் திட்டத்தில் வழங்கப்படும் தொகையை உயர்த்தி இருப்பதற்காக எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-05

மாதம் 10 ரூபாய் கட்டினால் 9 மாத காலத்திற்கு 90 ரூபாய் என்று இருந்ததை அதனுடன் மேலும் 90 ரூபாய் சேர்த்து 180 ரூபாயாக, 3 மாத

காலம் தொழில் செய்ய முடியாத காலங்களில் மாதம் 60 ரூபாய் கொடுத்த காலத்தை மாற்றி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்கு பின்னால், மாதம் ரூபாய் 45 வீதம் 8 மாதம் கட்டினால், அது 8-வது மாதம் கட்டுகிற தொகையோடு 360 ரூபாய் சேர்த்து, மாநில அரசு 360 ரூபாய், மத்திய அரசு 360 ரூபாய் என 1080 ரூபாய் தொழில் செய்ய முடியாத காலங்களில், மாதம் 270 ரூபாய் கொடுத்து இன்றைக்கு மீனவர் சமுதாய மக்களை உயர்த்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல மீனவர்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், எத்தனையோ அரசுகள் செய்ய முன்வராத மீனவர்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய முன்வந்து அவர்களின் நீண்டகால கடன்களான ரூபாய் 7 கோடியே 37 இலட்சம் தொகையைத் தள்ளுபடி செய்த, மீனவ சமுதாய மக்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீனவ சமுதாயத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல மீனவர்களுடைய குழந்தைகள் இன்றைக்கு படிக்கின்றபோது பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெறும் அந்த மீனவ சமுதாய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு பரிசுத் தொகை ரூபாய் 500 என்று இருந்ததை மாற்றி, முதல் மார்க் எடுக்கின்ற மாணவ மாணவியருக்கு ரூபாய் 3000 ஆகவும், பிளஸ்-2 வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவ மாணவியருக்கு ரூபாய் 5000 ஆகவும் அறிவித்திருக்கின்ற எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெயராலே மாதிரி கிராமம் அமைக்க 3050 வீடுகள் என்று நம்முடைய அரசு கொள்கைக் குறிப்பிலே அறிவித்து இருக்கின்றது. எனவே அதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அதே நேரத்தில் என்னுடைய பகுதியிலே 4, 5 கிராமங்களுக்கு புரட்சித் தலைவி மாதிரி கிராமம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல அனைத்து கிராமங்களுக்கும், குறிப்பாக 90 கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இன்றைக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல என்னுடைய கோரிக்கையாக நம்முடைய வயது வந்த முதியோர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்கள், வயது வந்தவர்கள் தொழில் செய்ய முடியாத ஒரு குறிப்பிட்ட வயதை கடந்தவர்களுக்கு அந்த குறிப்பிட்ட வயதை நிர்ணயம் செய்து ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்று நான் இதே மாமன்றத்தில் கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வதற்கு ஒப்புதல் தந்தார்கள். அதை மத்திய அரசிற்கு அனுப்பி இருப்பதாவும் தெரிவித்தார்கள். அந்த ஓய்வூதியத்தை மிக விரைவிலே செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கத்தை அனைத்து கிராமங்களிலும் அமைத்துக் கொடுக்க வேண்டும். மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கம் இன்றைக்கு 88 சங்கங்கள்தான் இருக்கின்றன ஆனால் ஆண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 500, 600 வரை இருக்கின்றன. ஆகவே அதை உயர்த்துகின்ற வகையிலே எல்லா கிராமங்களுக்கும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தரவேண்டும். அதேநேரத்தில் மீனவ மகளிர் வியாபாரம் செய்வதற்கு நாம் மற்ற துறையை நாடிப் போவதைவிட மீனளத்துறை மூலமாகவே வியாபாரம் செய்வதற்கு ஒரு உதவித் தொகை கொடுக்கின்ற வகையிலே அவர்களுக்கு கடன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் நம்முடைய மீனளத்துறையிலே ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். அது நீண்டகாலமாகவே அமைக்கப்படவில்லை. அதை அமைக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றால் திரும்பி வர மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இதைக்

கருத்தில் கொண்டு, தகவல் தொடர்பு வசதி இப்போது நாகப்பட்டினத்திலே கொடுத்திருப்பதைப் போல சென்னையிலும் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்து விசைப் படகுகளுக்கும் இந்த வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இன்றைக்கு இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தை நான் கொள்கைக் குறிப்பிலே பார்த்தேன். அதற்காக மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் 7-10

வருடத்தில் ஒரு 100 ரூபாய், 125 ரூபாய் கட்டினால் ஒரு லட்ச ரூபாய் அவர்கள் தொழில் செய்கிறபோது இறக்க நேரிட்டால் கொடுப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்தை மிக விரைவிலே இந்த மீனவ சமுதாய மக்களுக்கு, அனைத்து கிராமங்களுக்கும் ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுபோல் நம்முடைய என்.சி.டி.சி-ல் கட்டுமரம், வலை, என்ஜின் போன்ற உபகரணங்கள் வழங்குவதற்காக 5 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து இன்றைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படுகிற அந்த 5 மாவட்டங்களுக்கும் மிக விரைவில் அந்த கட்டுமரம், வலை, என்ஜின் போன்ற உபகரணங்களை வழங்குவதற்கு மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக இருக்கக்கூடிய ஒரு முக்கிய பிரச்சினை நம்முடைய கச்சத் தீவுப் பிரச்சினையாகும். கச்சத் தீவுப் பிரச்சினை இன்றைக்கு மிகவும் சுயரூபம் எடுத்து, நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் இன்றைக்கு கடலுக்குள் சென்று மீன்பிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. கச்சத் தீவுப் பிரச்சினை இன்றைக்கு ஏற்பட்டதல்ல. 1974-ல் அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், மத்தியில் ஆண்ட காங்கிரஸ் கட்சி அரசும் அந்தக் கச்சத் தீவை விட்டுக் கொடுக்கவில்லை என்று சொன்னால் இன்றைக்கு மீனவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இராமநாதபுரத்திலே உள்ள மீனவர்கள் அங்கே சென்று மீன் பிடித்து, வலைகளை உலர்த்தி வருவது மட்டுமல்ல, அங்கே இருக்கிற ஒரு மாதா கோவிலுக்கு விழா நடத்துவதே இராமநாதபுரத்தை சேர்ந்த

மீனவர்கள்தான். அவர்கள்தான் விழா நடத்துவார்கள். அப்படி நம்மிடத்தில், நமது உரிமையில் இருந்த கச்சத் தீவை சுயலாபத்திற்காக அன்றைக்கு ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசும், அன்றைக்கு மத்தியில் ஆண்ட காங்கிரஸ் கட்சி அரசும் இலங்கைக்கு விட்டுக் கொடுத்த காரணத்தால் அந்தப் பகுதியிலே நம்முடைய தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் மீன் பிடிக்கச் செல்லுகிறபோது அவர்கள் உயிருக்கு போராடக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு சென்றால் திரும்பிவர முடியுமா என்ற அச்சமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் சுதந்திர கொடியேற்று விழாவிலே பேசினார்கள். கச்சத் தீவை மீட்டே தீருவோம் என்று நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உரையாற்றினார்கள். அதுமட்டுமல்ல பல்வேறு காலகட்டங்களில் மீனவர்களுக்காக டெல்லியிலே இருக்கிற மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதினார்கள். ஆனால் பார்க்கின்றேன், பேசுகின்றேன் என்று சொல்லுகிறார்களே தவிர ஒரு நிரந்தர தீர்வை இன்றைக்கு ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே நிரந்தரத் தீர்வை, மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் செய்ய முடியவில்லை என்றால் எந்தக் காலத்திலும் அதை செய்ய முடியாது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வினைக் கண்டு அந்தப் பகுதி மீனவர்கள் நிம்மதியாக வாழ வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, எனக்குத் தெரிந்தவரை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி காலத்தில்தான் மீனவர்களுக்கு பல்வேறு சலுகைகள், கேட்டதை எல்லாம் கொடுத்து--சட்டமன்ற உறுப்பினராக நான் பொறுப்பேற்ற பின்னால்--பல்வேறு சலுகைகள் அந்தச் சமுதாய மக்களுக்கு, பல்வேறு நலத் திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மீனவர்களுக்கு பல சலுகைகளை கேட்காமலேயே கொடுக்கக்கூடிய ஒப்பற்ற தலைவியை இன்றைக்கு தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை நான் மீனவ சமுதாய மக்களின் சார்பாக பாராட்டுகிற அதே நேரத்தில் புரட்சித் தலைவிக்கு எந்த நேரத்தில், எந்த இடத்திலிருந்து, எந்த இடர்பாடுகள், எப்படிப்பட்ட இயக்கங்களால் வந்தாலும் மீனவ சமுதாய மக்கள் என்றைக்கும் புரட்சித் தலைவிக்கு அரணாக இருப்போம் என்பதை இந்த நேரத்தில்

தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மூர்த்தி, சீக்கிரமாக பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் ஆண்டு மீனளத்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பு கொடுத்த தங்களுக்கும், சாதாரணமாக இருந்த எனக்கு இந்த மாமன்றத்திலே பேசுகிற வாய்ப்பைக் கொடுத்த தமிழகத்தில் முதல்வர் எங்களது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் புரட்சித் தலைவி அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இன்றைக்கு மீன்வளத் துறையை எடுத்துக் கொண்டால், குறிப்பாக 80 விழுக்காடு தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மீன் சாப்பிட்டு வருகிறார்கள். மேலும் அதன் மூலம் அன்னியச் செலாவணி பல கோடி ரூபாய் அளவுக்கு இந்த மீன் துறையின் மூலமாக கிடைத்து வருகிறது. ஏழை எளிய மக்கள் முதல் பணக்காரர்கள் வரை சாப்பிடுகிற மிக எளிமையான உணவாக இது இருக்கிறது.

முற்பகல் 7-15

எனவே, அப்படிப்பட்ட இந்த மீன்வளத் துறைக்கு அதனுடைய வளர்ச்சிக்காகவும், மீனவர் இன மக்களின் நலனுக்காகவும் குறைவாக இருந்த அந்த நிதியினை இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியின் பொறுப்பை ஏற்றவுடன் அதிக நிதியினை இந்தத் துறைக்கு ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே புரட்சித் தலைவி அவர்கள் மீனவர்கள் மீதும் மீன்வளத் துறை மீதும் எந்த அளவிற்கு அன்பும், பற்றும் வைத்துள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே மீனவ மக்களின் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மீனவர்களுக்கு வழங்கப்படும் துயர்துடைப்பு நிதி இதற்குமுன் பணமாக வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு காசோலையாக வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால் தற்சமயம் இவர்கள்

பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். காரணம் அந்தக் காசேலையை மாற்றுவதற்கு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின் மூலமாக மீனவர்களுக்கு பணமாக வழங்கப்பட்டு வந்தது. இதிலே எந்தவித தவறும் ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகை காசோலையாக வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. ஆனால் காசோலை எங்களுக்குத் தேவையில்லை, பணம்தான் தேவை என்று கேட்டால் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அவர்கள் தீர்மானம் போட்டு எங்களுக்கு காசோலை தேவையில்லை, பணம் தேவை என்று கேட்டால் பணம் தருவதற்கு தயாராக இருக்கிறோம்.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலே இருக்கிற ஏழை எளிய மீனவர்கள் காசோலையை மாற்றுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு பணமாகக் கொடுத்தால் நல்லது என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதற்கிணங்க அவர்கள் அந்தந்த சங்கங்களிலிருந்தே பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியைச் சேர்ந்த கீழமூலக்கரை மீனவர்கள் விசைப்படகு வைத்திருப்பவர்கள் ஏறத்தாழ 15 கிலோமீட்டர் சென்று டீசல் எடுத்து வரவேண்டிய நிலை இருக்கின்றது. இதனால் டீசல் எடுத்து வருகின்றபோது இடையில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. வேறு எதற்கோ எடுத்துச் செல்கிறார்கள் என்று போலீஸார் பிடித்து விடுகின்ற நிலை இருக்கின்றது. சில நேரங்களில் பங்க்குகளில் டீசல் தரவும் மறுக்கின்றார்கள். எனவே. அரசு நடவடிக்கை எடுத்து மீனவர்களின் சொந்த தொழிலான விசைப் படகு தொழில் பாதிக்கப்படாமல் டீசல் கிடைக்கவும், பர்மிட் இல்லாமல் டீசல் கிடைக்கவும், போலீஸார் தொந்தரவு இல்லாமல் இருப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி திருமுல்லைவாசல், கீழமூலர்க்கரை, பழையார், தொடுலாப், கூழையார், ஆகிய பகுதிகளில் புயல் வெள்ளக் காலங்களில் கடல் கொந்தளிப்பினால் அங்கு வசிக்கும் மக்கள் வீடுகளையும், அனைத்து உடமைகளையும் இழந்து தவிக்கின்றார்கள். மேலும் கரைகளையும் அரித்து சென்று விடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இதனை தடுக்கின்ற வகையில் அரசு உடன் நடவடிக்கை எடுத்து தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் கடலோரப் பகுதி அதிகமாக இருப்பதால் அங்கு மீனவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். மேலும், ஏழைகள் அதிகமாக இருக்கின்றார்கள். அனைத்துப் பகுதிகளிலும் அதாவது மடத்துக்குப்பம், மேலமூலர்க்கரை, திருமுல்லைவாசல், தொடுலாப், பழையார், கூழையார், கொடியம்பாளையம், ஆகிய கிராமங்களுக்கு மீனவர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கொஞ்சம் அதிகமாக முன்னுரிமை கொடுத்து கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி அருகிலுள்ள மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும்போது, நீண்டதூரம் செல்லும்போது காற்றின் வேகத்தினாலும், நீரோட்டத்தின் வேகத்தினாலும் சில நேரங்களில் திசை மாறி சென்று விடுகின்றார்கள். எனவே, அவர்கள் திசையை கண்டறிந்து திரும்பி வருவதற்கு அந்த பகுதியில் திசைக்கருவி பழையார் அல்லது கீழமூலர்க்கரை என்ற இடங்களில் லைட் ஹவுஸ் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எனது சீர்காழி தொகுதியில் உள்ள நாய்க்கர்குப்பம், கீழமூலர்க்கரை, மடத்துக்குப்பம், திருமுல்லைவாசல் மடவாமேடு, கொட்டியமேடு போன்ற இடங்களில் புயல் பாதுகாப்பு இல்லாததால் புயல் வெள்ள நேரங்களில் மக்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். எனவே, அதனைப் போக்க புயல் பாதுகாப்பு இல்லம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சீர்காழி தொகுதியில் உள்ள மீனவர் மக்கள் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ள வேண்டுமானால் சீர்காழி, கொள்ளிடம் ஆச்வின்புரம், திருவெண்காடு இங்குதான் வரவேண்டும். எனவே, அவர்களின்

நிலையினை கருத்தில் கொண்டு உடனடியாக சிகிச்சைப் பெற்றுக் கொள்ள அந்தப் பகுதியில் அதாவது பழையார் புதுப்பட்டினம் அல்லது புதுப்பட்டினத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனவர்கள் பிடித்த மீனை விற்பனை செய்வதற்கு எடுத்துச் செல்கிறபோது தலையில் தூக்கி செல்கின்றார்கள். மேலும் பேருந்தில் எடுத்துச் செல்வதற்கு மறுக்கின்றார்கள். இதனால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, இதனை போக்குகின்ற வகையில் கூட்டுறவு வங்கி மூலம் வாகன வசதி செய்து கொடுக்க உதவிட அன்புடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் 7-20

மேலும், எனது சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் அரசு மின்குளிரூட்டும் நிலையம் இருந்தது. தற்சமயம் அது இல்லை. இதனால், மீனவ மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். சில நேரங்களில், மீன்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. எனவே, இதனைப் போக்குகின்றவகையில், அந்த மின்குளிரூட்டும் நிலையத்தைப் புதுப்பித்து உதவிட அன்புடன் வேண்டுகிறேன்.

எனது சீர்காழி தொகுதியில் உள்ள கீழமூலர்க்கரை, சாவடிக்குப்பம், நாயக்கர்குப்பம், ஆகிய இடங்களில் டீசல் விசைப் படகுகள் மற்றும் கட்டுமரத்தில் பொறுத்தும் எஞ்சின் அதிகம் உள்ளதால், 15 கி. மீ. தொலைவில் உள்ள சீர்காழிக்கு வந்து டீசல் வாங்க வேண்டியுள்ளதால், மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, இதனை மாற்றுகின்ற வகையில், கீழமூலர்க்கரையில், அரசு மானிய விலையில், டீசல் பங்க்கு ஒன்று அமைத்துத் தர அன்புடன் வேண்டுகின்றேன்.

எனது சீர்காழி தொகுதியில், கீழமூலர்க்கரையில் உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் அதிகமாக உப்புத் தண்ணீர் ஊற்று தோண்டி, அதன்மூலம் சிறிது சிறிதாக தண்ணீரை எடுத்துச் சாப்பிட்டு வருகிறார்கள். இது நீண்ட நாளைய கோரிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சென்ற ஆண்டு, சீர்காழியிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார். எனவே, நிரந்தரத் தீர்வு காண்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது அந்தப் பகுதி மக்களுக்கு....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு நிலைமை, மீனவ கிராமங்களில், குடிநீர்ப் பிரச்சினை--இருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்தது. நானும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், பல்வேறு கிராமங்களுக்கு, அவருடைய தொகுதியிலே சென்றிருக்கிறோம். பல கிராமங்களிலே குடிநீர் சரியில்லை. குடிப்பதற்கே ஏற்ற சூழ்நிலை இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு, ஒரு நடவடிக்கை, –ஆக்ஷன்–தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்–ட்வார்டு போர்டு–மற்றும் மீனளத் துறை அதிகாரிகள் இணைந்து ஒரு திட்ட அறிக்கை தயாரித்து, நம்முடைய போற்றுதற்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடத்திலே சமர்ப்பித்து, அதன் பலனாக, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த வருடத்திற்கு ஏறக்குறைய *160* மீனவ கிராமங்களில்--*6.60*--அதாவது, *6* கோடியே *60* இலட்சம் ரூபாய் செலவில் *160* மீனவ கிராமங்களுக்குக் குடிநீர், நல்ல தரமான குடிநீர் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதில், கீழமூலர்க்கரை கிராமும் அடங்குமென்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மூர்த்தி, சீக்கிரம் பேசி முடியுங்கள்; நேற்றும் பேசி இருக்கிறீர்கள்.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சீர்காழி தொகுதியில், மீனவர் கிராமங்களுக்குச் செல்லும் சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன. எனது தொகுதியைச் சார்ந்த கீழமூலர்க்கரை முதல் மடத்துக்குப்பம் வரை தற்போதுள்ள சாலையைச் சீர்செய்து, இணைப்புச் சாலையை, திருமுல்லைவாசல் முதல் பழையாறு வரையுள்ள சாலையை இணைப்புச் சாலையாக்கிச் சீர்செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படும் சங்கத்திற்கு மூலதனக் கடன்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். சில கூட்டுறவுச் சங்கங்களில் எழுத்தர்கள் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்தச் சங்கங்களுக்கு எழுத்தர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியைச் சேர்ந்த பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை ஆழப்படுத்தி, நவீனப்படுத்தித் தரவும் இந்த நேரத்தில்

கேட்டுக் கொள்கிறேன். மேலும், எனது தொகுதியைச் சேர்ந்த புதுப்பட்டினம் முதல் பழையாறு சாலை மிகவும் மோசமாக இருப்பதால், அங்குப் போக்குவரத்து மிகவும் தடைப்படுகிறது. மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களை வெளியூர்களுக்கு எடுத்துச் செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மீனவர்கள் நலன்கருதி, அந்தச் சாலையை உடனே சீர்செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியைச் சேர்ந்த மடவாமேடு மீனவர் கிராமத்திற்குச் செல்வதற்குப் பாலம் கிடையாது. அது முக்கியமான பாலம். அது இல்லாமல், அங்குள்ள மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, அவர்களின் நலன்கருதி, அங்கு ஒரு நடைபாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கடற்கரை ஓரத்தில் உள்ள மீனவர் கிராமங்களுக்கும், கடலுக்கும் தூரம் அதிகமாக உள்ளது. இந்தப் பகுதியில் மணலாக இருப்பதால், மிகவும் சிரமப்படுகிறார்கள். வாகனங்கள் செல்ல முடியாமல் உள்ளதாலும், சில நேரங்களில், தலைசுமையாக மீன்களைத் தூக்கி வந்து விற்கிற சூழ்நிலை உள்ளது. அதனைப் போக்குகின்ற வகையில், அந்தப் பகுதியில் வாகனங்கள் செல்கின்ற வகையில் சாலைகள் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி குறித்து, ஒரு சில கோரிக்கைகளை வைக்க இந்த நேரத்திலே விரும்புகிறேன். எனது சீர்காழி தொகுதியில் கொண்டல் என்ற இடத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் ஓர் உயர்நிலைப்பள்ளி உள்ளது. அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், திருமுல்லைவாசல் என்ற இடத்தில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அதனையும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இன்றைக்குச் சிறப்பான முறையில், இதற்குமுன் எந்த அரசும் செய்யாத சாதனைகளை மீனளத் துறையில், நமது இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எம். பூராசாமி.

இரவு 7-25

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் எனனை பேச வைத்த இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற இடம் நோக்கி வணங்கி, எனது உரையை இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வைத்த உங்களுக்கும் வணக்கத்தைக் கூறி தொடங்குகின்றேன்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

இது குறள். இந்தக் குறளுக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம நம் முதல்வர், ஆயிரம் ஆயிரம் சோதனைகள் வந்தாலும் அவற்றை எதிர்த்து நிற்கும் அஞ்சாமை, ஏழை எளிய மக்களுக்குக் காலமறிந்து உதவும் கருணை உள்ளம், ஆவது அறிகின்ற ஆற்றல் மிகு அறிவு, இயற்றுதல், ஈட்டுதல், காத்தல், காத்தவற்றை வகுத்தல் ஆகியவற்றின் செயல்பாடுகளிலே ஊக்கம், இவையாவற்றையும் இயல்பாகவே பெற்று அமிழ்தினும் இனிய நமது தமிழ்கூறும் திருநாட்டின்கண் பொன்னான ஆட்சியை நாள்தோறும் படைத்து வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, பொன்மனச் செல்வியே, தங்களின் புகழ் என்றென்றும் சிறப்புற்று விளங்கிட வாழ்த்துகிறேன். வணங்குகின்றேன்.

ஒட்டிய வயிறோடும், உலர்ந்துவிட்ட மேனியோடும், பட்டிதொட்டிகளில் பாடுபடும் ஏழை எளியோரின் முன்னேற்றத்திற்காகவே முழு மூச்சாகச் செயல்பட்டு வருகிறது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் இயங்கும் நமது அரசு. முடமானோர்க்கு முன்னின்று உதவுதல், முதியோர்க்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், வருங்காலத் தமிழகத்தின் வாரிசுகளாய் விளங்குகின்ற குழந்தைகளுக்கும் சத்துணவு, மகளிர்க்கு நவீனப் பயிற்சியாம் சுயவேலை வாய்ப்பும், ஏழை மக்களுக்கு மருத்துவ வசதிகள் 'அனைவர்க்கும் ஆரம்பக் கல்வி' 'நீரின்றி அமையாது இவ்வுலகு', என்பதால், நிறைவாக மக்களுக்குக் குடிநீர் வசதி, வீடில்லாதவர்களுக்கு வீட்டுவசதி, வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு, சிசுக் கொலையைத் தடுக்கின்ற

பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டங்கள் என அடுக்கடுக்காய் பல நலத் திட்டங்களைத் தீட்டி செம்மையுடனே அவற்றைச் செயல்படுத்தி வருகின்றார்கள் நமது இந்தியத் திருநாட்டின் இணையற்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். மாண்புமிகு நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அயராத முயற்சியாலும், ஆற்றலாலும் அரசியலமைப்புச் சட்டத்தின் எழுபத்தாறாம் திருத்தம் மூலமாக பிற்பட்டோர், மிக பிற்பட்டோர், சீர் மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்க்கு அரசு பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டினை நாடாளுமன்ற அவைகளில் கொணடுவந்து, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று சமூகநீதி காத்த வீராங்கனையாக (மேசையைத் தட்டும் ஒலி) நம் அரசு இன்று விளங்கிக் கொண்டிருக்கிறது.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அதனைக் கருத்திற்கொண்ட நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழை தமது உயிர் மூச்சாய்க் கொண்டு "இன்றும் தமிழ்; என்றும் தமிழ்" என்னும் உயரிய முழக்கத்தை அறிவித்துள்ளார்கள்.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்னும் மகாகவி பாரதியார் எண்ணம் நிறைவேறிடவும், அறிவியல் தமிழ் அவனியை ஆளவும், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டிய நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தடையின்றி தமிழ் வளரவும், தமிழ்ப் பண்பாடு செழித்தோங்கவும் முனைந்து செயல்பட்டு வருகின்றார்கள். அதன்பொருட்டு தென் மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் புதிய வடிவம் கண்டிட ரூ. 25 லட்சம் வழங்கியுள்ளார்கள். மயிலாடுதுறை ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரிக்கு ரூ. 10 லட்சம் நிதி உதவியை தமிழுக்காகத் தந்துள்ளார்கள். ஆகவே நமது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தத் தமிழ்கூறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இனிவரும் உலகத் தமிழ் மாநாடு அத்தனையையும் நமது--புரட்சித் தலைவி அவர்கள்தான் நடத்துவார்கள்--நடத்த வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி அடைதல் பொருட்டு புதிய பல தொழில் வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட்டு, பெருமித நடை போட்டு வரும் நமது அரசு தேவையான இடப் பரப்புடன் கூடிய எனது பூம்புகார் தொகுதியில் சிறந்ததொரு தொழிற்பேட்டையை அமைத்திட பணிவோடு வேண்டுகிறேன்.

மக்கள் நலம் காக்கும்பொருட்டு மாநிலமெங்கும் மருத்துவமனைகள் அமைத்து வரும் நமது மக்களரசு பூம்புகார் தொகுதியிலே மேலும் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு மருத்துவமனையை வழங்கிடப் பணிவோடு வேண்டுகிறேன்.

கடலோர உவர்த்தன்மை நிறைந்த மீனவர் குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் வழங்கும் திட்டத்தை பூம்புகார் தொகுதிவாழ் மக்களுக்கு விரிவுடன் செயல்படுத்திட அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

புயல், வெள்ளம், பெருமழையால் பாதிக்கப்பட்ட பூம்புகார் தொகுதியில் பாலம் மற்றும் சாலைச் சீரமைப்பு பெற்றிடவும், கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தில் முன்னேற்றம் கண்டிடவும் ஆவன செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

நோயின்மை, செல்வம், பொருள் விளைவு, மகிழ்ச்சி, காவல் என வள்ளுவர் கூறும் ஐந்து அழகினையும் இன்று தமிழகம் பெற்று சிறப்புற்று விளங்குகிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்விதம் இணையில்லாத் தமிழ் வளரவும், ஏழை எளியோரின் வாழ்வு சிறக்கவும், தொழிலாளர்களாம் நம் தோழர்களின் துயரைத் துடைக்கவும், மீனவர்தம் வாழ்வில் ஒளியேற்றிடவும், மகளிர் குழந்தைகள் குடும்பநலன் காக்கவும், ஊனமுற்றோர், வேலையற்றோர், விவசாயிகள், நெசவாளர்கள், அரசு ஊழியர், ஆசிரியர் அனைவரது நலன்களை என்றென்றும் காக்கவும், உறுதியுடன் செயல்பட்டு வரும் தமிழகத்து மக்களின் இதய சிம்மாசனத்தில் என்றும் வீற்றிருக்கும் மாண்புமிகு நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுடைய வாழ்க்கையில் தமிழ் தமிழ் என்று கூறிக் கொண்டு இருக்கின்ற அந்தத் தொண்டு உள்ளத்தை நோக்கி நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி மீனவர்கள் அதிகம் வாழும், 50 கிலோ மீட்டர் தூரம் உள்ள

நிண்ட கடற்கரை ஆகும் அந்தப் பூம்புகார். இந்தத் தமிழகத்திலுள்ள இடங்களில் மீனவர்கள் அதிகமாக வாழ்கின்ற தொகுதி உண்டென்றால் அது அந்த பூம்புகார் தொகுதிதான். அந்தப் பூம்புகார் தொகுதியில் தரங்கம்பாடி பகுதியிலே மீனவர்களுக்கு நல்ல குடிதண்ணீர் இல்லை. அங்கு உடனடியாக கூட்டுக்குடிநீர் திட்டத்தை நீங்கள் ஏற்கவேண்டுமென்றும் அதைச் செயல்படுத்திடவேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மீனவர்களுடைய வீடுகளை இந்த வருடம் சென்று பார்த்தால் இருக்கும். ஆனால் வருகின்ற வருடத்திலே போய் பார்க்கும்போது அந்த இடத்திலே அவர்களுடைய வீடுகள் இருக்காது. காரணம் கடல் அரித்துவிடுகிறது. புயலும் வெள்ளமும் பூம்புகார் தொகுதியில் அதிகமாக இருக்கிறது. நாகப்பட்டினம் சமீபத்தில் இருப்பதால், புயல் வரும்போதெல்லாம் பூம்புகாரைத் தாக்குகிறது. ஆகவே கடல் வாழ் மீனவ மக்களுக்கு, அன்னிய செலாவணியை கோடி கோடியாக கொட்டிக்கொடுக்கின்ற அந்த ஏழையெளிய மீனவப் பெருங்குடி மக்களுக்கு காபந்து பண்ணவேண்டுமென்றால் அங்கே அவர்கள் வாழ்கின்ற கிராமத்தில், தாங்கள் தயவுசெய்து அந்தத் தடுப்புச் சுவரை கட்டினால்தான் அவர்கள் வீடுகள் அங்கே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச சேலை வழங்குகிறோம். இலவசமாக வேட்டி, புடவைகளை வழங்குகிறோம். அதே போல, அந்த மீனவப் பெருங்குடி மக்களுக்கும் நமது அரசு நம் இதயதெய்வம் புரட்சித் தலைவியினது அரசு வரும் நடப்பாண்டிலே வழங்கவேண்டுமென்று நான் கை கூப்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் அங்கே சாலையிலே மீனவ பெருமக்கள் வரமுடியவில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நானும் அமைச்சர் எல்லாம் போய் பார்த்திருக்கிறோம். ஆகவே சாலை ஸ்பெஷல் திட்டம் வேண்டும். பலத் திட்டங்களை நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஸ்பெஷல் திட்டங்களாக போட்டிருக்கிறார்கள். அதே போல, மீனவர்களுக்காக ஒரு புதியத் திட்டத்தை, மீனவர்கள் குடியிருப்புக்குப் போகின்ற ஒரு புதியத் திட்டத்தை உருவாக்கி உடனடியாக செயல்படுத்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, பூம்புகார், தரங்கம்பாடி போன்றவை முக்கியமான இடங்கள் ஆகும். அங்கே மீன் பிடிப்பவர்களுக்கு ஒரு துறைமுகம்

வேண்டும். மீன் பிடிப்பவர்களுக்கு கப்பல் தளம் வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நானும் 2, 3 வருடங்காகக் கேட்டுப்பார்த்தேன். கிடைக்கவில்லை, தயவுசெய்து வருகின்ற ஆண்டு பூம்புகார் தரங்கம்பாடியிலே...

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவேண்டும் என்றால், சென்ட்ரல் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் கோஸ்ட்டல் என்ஜினியரிங் என்ற ஒரு என்ஜினியரிங் விங் பெங்களூரிலே செயல்படுகின்றது. அது மட்டுமல்லாமல் நேஷனல் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் ஓஸியனாகிராபி என்று சொல்லக்கூடிய ஒரு இன்ஸ்ட்டிடியூட் கோவாவிலே இயங்குகிறது. இந்த இரண்டு விங்குகளும் எந்தெந்த கடலோர மாவட்டங்களிலே, எந்தெந்த இடங்களில் எல்லாம் அந்த மீன்பிடி தங்குதள வசதிகள் அமைக்கப்படவேண்டும், சிறிய மீன்பிடி துறைமுகம் அமைக்கப் படவேண்டும், பெரிய மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தைச் சொல்கின்றனவோ. அந்த அடிப்படையிலே அங்கே அமைக்கப்படவேண்டிய அளவுக்குச் சாத்தியக் கூறுகள் இருந்தால் நிச்சயமாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் சரித்திரத்தை மாற்றக்கூடிய ஒரு உன்னதமான, பல திட்டங்களை, பல நவீன திட்டங்களை, மக்களுக்கு பயன்படுகின்ற நல்ல பல திட்டங்களை, நம் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவர்களால் முடியாதது உலகத்திலே எதுவுமே முடியாது என்று சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே கடவுளாக இருக்கிறார்கள். கடவுள் அவதாரம் நம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஆகவே நீங்கள் அந்த நிதிகளைப் பார்க்காதீர்கள். மக்கள் வசதிகளைப் பார்க்கவேண்டும். ஆகவே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மீனவப் பெருங்குடிமக்களுக்காக--பூம்புகார் காவிரிப்பட்டினம் இந்த தமிழ்நாட்டிலே ஒரு மண்டலமாக, பெரிய மன்னர்களுக்கெல்லாம் ஒரு தலைநகரமாக இருந்தது--அங்கே கப்பல் தளம் அமைக்க நீங்கள் ஆவனசெய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்பது கப்பல் தளமா, மீன் பிடி துறைமுகமா என்று தெரியவில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கப்பல் தளமும் கேட்கிறேன், மீன்பிடிக்கின்ற துறைமுகமும் கேட்கின்றேன். ஆகவே இரண்டில் எதையாவது ஒன்று இந்த வருடம் கொடுங்கள். அடுத்த வருடங்களிலே மற்றதைத் தரலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே லைட் ஹவுஸ்கள் வேண்டும். அங்கே பூம்புகார், தரங்கம்பாடி 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. நிறைய மீன்கள் அங்கே தான் கிடைக்கின்றன. அங்கே வருகின்ற மீனவப் பெருங்குடிமக்கள் அந்த லைட் இல்லாமல் தடுமாறுகிறார்கள்.

கச்சத் தீவை அந்த * வீணாய் போனவர்கள் ஆட்சியிலே இழந்த காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) நாம் இன்று தடுமாறுகிறோம். அந்த லட்சியத்தை அடைய வேண்டுமென்றுதான் புரட்சித் தலைவி அவர்கள் சூளுரைத்து இருக்கின்றார்கள்.

பிற்பகல் 7–35

ஆகவே, கச்சத்தீவை என்று நாம் அடைகிறோமோ அன்றுதான் புரட்சித் தலைவி அவர்களுடைய உண்மையான அந்த விஸ்வரூபம் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நம் லட்சியம் நிறைவேறிவிடும். அதுவரையிலாவது இந்த பூம்புகார் தொகுதி மக்களுக்கு தயவுசெய்து லைட் ஹவுஸை பூம்புகார், தரங்கம்பாடி, சத்திரபாடி, சின்னமருதூர், ஆத்தூர், வானகிரி போன்ற இடங்களுக்கு அவசியமாக அமைக்க வேண்டும். அதுமட்டுமட்டுமல்லாமல், புயல் பாதுகாப்பு....

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊருக்கும் ஒரு லைட் ஹவுஸ் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஓர் இடத்தில் லைட் ஹவுஸ் அமைக்க ஏற்பாடு செய்து விட்டால் ஏறக்குறைய சுற்றிலும் இருக்கின்ற எல்லா கிராமங்களுக்கும் பயன்படும். அந்த அடிப்படையில், எந்த இடத்தில் அந்த லைட் ஹவுஸ் அமைக்கப்பட வேண்டுமென்று ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துண்ணத் தலைவர்: திரு. பூராசாமி. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் ஒரு இடம். தரங்கம்பாடி இரண்டாவது இடம். சின்னமருதூர் மூன்றாவது இடம். இந்த மூன்று இடங்களிலாவது தயவு செய்து அமைத்து விடுங்கள். 50 கிலோமீட்டருக்கு மேல் தொலைவு இருக்கிறது. ஆகவே இந்த லைட் ஹவுஸை நீங்கள் அமைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், சீர்காழி போன்ற இடங்களில் எல்லாம் வைக்க வேண்டும். அடுத்து, சாலைகள் அங்கே அமைக்கப்பட வேண்டும். அந்த மீனவப் பெருங்குடி மக்களுக்கான அதிகமாக பள்ளிக்கூடங்கள் மிகவும் வீண் போயிருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் போவதற்குரிய, போக்குவரத்துக்குரிய பாலங்கள் பல பழுதாகி இருக்கின்றன. அங்கே, என்னுடைய தொகுதியிலே 5 லட்சம் செலவுள்ள பாலத்தை கட்ட வேண்டுமென்று சொன்னாலும் அந்தத் தொகைக்குள் அது அடங்கவில்லை. நானும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, 5 லட்சத்திற்கு மேலே போவதால் அதை கட்ட முடியவில்லை. மாணிக்கம்புதூர் போன்ற இடங்களுக்கு மீனவ மக்கள் போவதற்கு ஏற்ற சாலை இல்லை. அங்கே அந்தப் பாலங்கள் பழுதாகிவிட்டன. அதை தயவுசெய்து கட்ட வேண்டும். பூம்புகார் தொகுதிக்கு புரட்சித் தலைவி வந்தால், அந்த பூம்புகார் தொகுதி மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள் என்று கூறிக் கொண்டு நமது டாக்டர் புரட்சித் தலைவியின் அருமையான புதுக்கோட்டை, வெற்றிக் கோட்டை (மேசையைத் தட்டும் ஒலி) எனக் கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. பூராசாமி அவர்கள் சொல்லுகின்றபொழுது கச்சத்தீவை தாரை வார்த்த சில வீணாய்ப் போனவர்கள் *என்று சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீணாய் போனவர்கள் என்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பூராசாமி அவர்கள் வீணாய் போனவர்கள் என்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை அப்படி வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாம். திரு. கோடி மாரி.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனளத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என் உரையை ஆரம்பிக்கின்றேன். தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும், முடிவில் தர்மமே வெற்றிகொள்ளும். சத்திய வேள்வியில் வென்று, எழுந்து நித்தம் நூறு நிகரில்லா சாதனை நிகழ்த்தி, சித்திரை முழு நிலவாய், ஒளிவெள்ளம் பொழிந்திடும் மாண்புமிகு தமிழக நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பூமிக்கு வந்த புது வசந்தமே, எங்கள் வாழ்க்கை வானத்தின் பௌர்ணமி நிலவே, புரட்டலை எல்லாம் புழுதி மேட்டிலே புரட்டி அடிக்கும் புறநானூற்று வீரத்தின் புதுக்கவிதையே, எங்கள் தலைமுறையே, தலையெடுக்க வைத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெண்ணரசியே, ஈடு இணையில்லா சாதனைகள் செய்து ஏடுகள் சரித்திரம் படைத்து வரும் சகாப்த நாயகியே, நான் வணங்கும் தெய்வமே, உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மீனவர்களில் பலர் வங்கிகளில் கடன் பெற்று, அரசு மானியத் தொகைப் பெற்று விசைப்படகுகளைக் கட்டி மீன் பிடி தொழில்கள் செய்து வருகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில், இந்த வருடம், 1995–96–ல் மீன் பிடி விசைப்படகுகளுக்கு அரசு மானியம் இல்லை என அரசு அறிவித்துள்ளதாக அறிகிறேன். பல ஏழை மீனவர்கள் ஏற்கெனவே வங்கிகளில் கடன் பெற்று விசைப்படகுகள் கட்டி முடித்து, மீன்பிடி தொழிலுக்கு செல்லத் தயாராக உள்ள இந்த நேரத்தில்...

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய, 1989 ஆம் ஆண்டு, 1990 ஆம் ஆண்டு, 1991ஆம் ஆண்டு, 1992ஆம் ஆண்டு, அப்பொழுது வங்கிகளிலே கடனுக்கு வாங்கிய அந்த விசைப்படகுகளுக்கு எல்லாம் மானியம் தந்த ஒரே தலைவி நம்முடைய இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறக்குறைய 67 லட்சம் ரூபாய் அளவுக்கு விசைப்படகுகள் வாங்குவதற்கு மானியமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அளித்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கையை படித்துவிட்டுப் பேச வேண்டும்.

பிற்பகல் 7.40

கொள்கை விளக்கம் குறிப்பை சரியாகப் படித்துவிட்டுப் பேச வேண்டும். அதே நேரத்தில் இன்றைக்கு விசைப்படகுகளுக்கு மானியம் வழங்குகின்ற திட்டம் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து மானியம் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகவே மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, அதெல்லாம் தொகுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு விண்ணப்பங்கள் வரும்போது, நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் சொல்லி, நிச்சயம் அந்த மானியம் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்ளே, நான் அந்தப் பகுதியைப் படிக்கவில்லை. என்று சொன்னார்கள். நான் படித்தேன். அதாவது 50 பேர் அளவுக்கு அந்த மானியம் தருவதாகக் கூறுகிறார்கள். அதை அவர்கள் ஓர் அறிக்கையாக விட்டிருக்க வேண்டும். 30 பேர்களுக்குத்தான் முதலில் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். இப்போது 50 பேர்களுக்குத் தருவதாக இருந்தால்தான் மானியம் தருவதாக இருக்கிறார்கள். இருந்த போதிலும், நான் வணங்கும் தெய்வம் டாக்டர் முதல்வர் அவர்கள் ஏழை எளிய பாமர மீன் பிடிக்கின்ற மக்களுக்கு நிறைய சலுகைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற நோக்கத்தோடுதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

அடுத்து அரசு மானிய விலையின்றி விசைப் படகுகள் என்ற அறிவிப்பு மிகுந்த வேதனையை அளித்துள்ளது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மேற்படி உத்தரவை ரத்து செய்து, எப்போதும்போல் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மானியம் வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

நாகைப் பகுதி மீனவர்கள் ஆழ் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கச் செல்வதால் தற்போது வழங்கும் டீசல் 300 லிட்டர் போதுமானதாக இல்லை. ஆகவே ஒரு மீன்பிடி விசைப் படகுக்கு 600 லிட்டர் டீசல் வழங்க உத்தரவிடும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர் பயிற்சி நிலைய., மீனவர்களுக்கு மீனவர் பயிற்சி நிலையம் தமிழ்நாட்டில் பல இடங்களில் உள்ளன. மேற்படி பயிற்சி நிலையத்தில் பாடத் திட்டம் மிகவும் பழமையாக உள்ளது. நான் கடந்த 20

ஆண்டுகளுக்கு முன்பாகப் படித்த மீன்பிடி முறையையே தற்போதும் சொல்லித் தருகின்றார்கள். உலகம் விஞ்ஞானத் துறையில் மிகவும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மீன்பிடி முறையிலும் நவீனப் பயிற்சிகள் தர வேண்டும். வெளிநாட்டில், குறிப்பாக இலங்கையில்கூட நவீன மீன்பிடிப்பு முறையில் நிறைய மீன்களைப் பிடிக்கின்றனர். நாமும் அதைப்போன்ற முறையை வெளிநாடுகளிலிருந்து பெற்று, பாரம்பரிய மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மீன்வள பயிற்சிக் கல்லூரி தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ளதுபோல, நாகையிலும் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு அரசுத் துறையில் தனி இட ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் நாகையில், அதாவது எனது தொகுதியில் நாகூரில் உள்ள மீனவர்கள் கடந்த ஆண்டு 3 விசைப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். இலங்கை கடல் படையினர் அவர்களைப் பிடித்து கொடுமைப்படுத்திய செய்தியைக் கேள்விப்பட்டதும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக அவர்களைப் பத்திரமாக மீட்டுத் தந்தும், அவர்களுடைய நல்வாழ்வுக்கு-- 12 பேர்களுக்கும் தலா 3 இலட்சம் வீதம் 36 இலட்சம் வாரி வழங்கிய தெய்வத்தை உயிர் உள்ளவரை மீனவச் சமுதாய மக்கள் மறக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாகையில் மீன் பிடிக்கச் செல்லும்போது, அங்கே இருக்கின்ற நேவியைச் சேர்ந்த அதிகாரி--அவருக்குத் தமிழ் தெரியவில்லை, அவர் இந்தி பேசுகிறார்--நம்முடைய மீனவப் பெருங்குடி மக்கள் தமிழில் பேசும் போது, அவர்களுடைய உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், சமீபத்தில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு 6 விசைப் படகுகளை அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். மேலும் அவர்களைச் சித்திரவதைப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நாகைத் துறைமுகத்தில் இருக்கின்ற நேவி அதிகாரி தமிழ் பேசும் அதிகாரியாக இருக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, ரன்னிங் டைம்--போவதற்கு மட்டும் 36 மணி நேரம் ஆகிறது. அப் அண்டு டவுன் போய் வருவதற்கு டீசல் போதவில்லை. ஆகவே நான்

வணங்கும் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 600 லிட்டர் டீசலை அவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

பிற்பகல் 7-45

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு டீசல் வழங்குவதைப் பொறுத்தவரையில் மாவட்டத்தில் குழு ஒன்று இருக்கிறது. கோவார்டினேஷன் கமிட்டி இருக்கிறது. அதிலே கோஸ்ட் கார்ட், நேவல் அதாரிட்டி ஆகியோர் இருந்து, கலெக்டர் தலைமையில் அந்தக் குழு இயங்குகிறது. அந்தக் குழு ஒவ்வொரு விசைப் படகுக்கும் எவ்வளவு டீசல் தேவை என்பதை நிர்ணயிக்கும். ஏனென்றால், 1983 ஆம் ஆண்டிலிருந்து, இந்த இலங்கை இனப் பிரச்சினை காரணமாகத்தான் டீசல் கடத்துவதைத் தடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்தக் குழு அங்கேயிருந்து நிர்ணயம் செய்கிறது.

திரு. ஆர். கோடிமாரி: இந்தக் குழு நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரையில் சுமார் 3, 4 ஆண்டுகளாக மீனவர்கள் பல காரணங்களால் சித்திரவதை செயயப்பட்டு வருகிறார்கள். நானும் அந்த மீனவ சமுதாய மக்களும் அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. அதாவது 300 லிட்டர் என்பதை 500 லிட்டராகக் கொடுத்தால் ஆழ்கடலில் போயும் மீன் பிடிக்க ஏதுவாக இருக்கும். பெரும்பாலும் மீனவர்கள் கடன் வாங்கித்தான் படகுகள் வாங்கி மீன் பிடிக்கச் செல்கிறார்கள். முதல் ஏராளமாகப் போட வேண்டியிருக்கிறது. ஆனால் அதற்கு டீசல் போதுமானதாக இல்லை. சில சமயங்களில் கயிறு கட்டி இழுத்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இப்போது கொடுக்கிற டீசல் அளவை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை எனது இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாகையிலிருந்து அக்கரைப்பேட்டை வழியாக வேளாங்கன்னி செல்லும் சாலையின் குறுக்கே கடிகையாற்றுப் பாலம் ஒன்று இருக்கிறது. அந்தப் பாலம் 35 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இந்தப் பாலத்தின் வழியாகத்தான் நாகையிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் வெளியிடங்களுக்குச் செல்கின்றன. தினமும் ஆயிரக்கணக்கான

வாகனங்களும் பல்லாயிரக்கணக்கான மக்களும் அதன் வழியாகத்தான் செல்கிறார்கள். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பாலம் தற்போது இடிந்து விழும் அபாயத்தில் இருக்கிறது. என்றைக்கு இடிந்து விழுமோ என்ற அச்சம் நாகை மக்களிடம் உள்ளது. நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் இதைப்பற்றி பேசியிருக்கிறேன். இதில் தனி கவனம் செலுத்தி அந்தப் பாலத்தைக் கட்டித் தருமாறு நான் வணங்கும் தெய்வத்தைக் கேட்டு, அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். நாகையை ஒவ்வொரு ஆண்டும் ஒரு புயலாவது தாக்கும். அந்தச் சூழ்நிலையில் கடல் அருகில் உள்ள மீனவர் கிராமங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டு ஒவ்வொரு வருடமும் 100 வீடுகளாவது கடலரிப்பால் அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால் ஏழை மீனவர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர். நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நாகை கடற்கரைப் பகுதியில் கடலரிப்பு ஏற்படாத வண்ணம் தடுப்புச் சுவர் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மீன் பிடி விசைப் படகுகள் இருக்கின்றன. நாகை துறைமுகம் நீண்டகாலமாக எந்தவித அபிவிருத்திப் பணிகளும் இல்லாமல் இருப்பதால் நாகை துறைமுகத்திலிருந்து அந்த விசைப் படகுகள் மீன் பிடிக்கச் செல்லமுடியாத நிலை இருக்கிறது. அதாவது கடல் வடியும் நேரங்களில்...

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை மீன்பிடித் துறைமுகத்திற்கு நானே நேரில் சென்று பார்வையிட்டேன். அங்கே பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், 1 கோடியே 2 லட்சம் ரூபாய் செலவில் நாகை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசு அதிலே சில விளக்கங்களைக் கேட்டது. அந்த அடிப்படையில் தகவல்கள் சேர்த்து, ஒரு திருத்திய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு, தற்போது அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கிருந்து ஒப்புதல் கிடைக்கவில்லை. ஒப்புதல் கிடைத்தபிறகு அங்கே பணிகள் தொடங்கப்படும்.

திரு. ஆர். கோடிமாரி: நன்றி. இருந்தபோதிலும் 3 வருடங்களுக்கு முன்னால் அங்கே 16 படகுகள் சேதமுற்று கடலில் அடித்துச் செல்லப்பட்டன. கடல் வடிவு நேரங்களில் விசைப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றால், துறைமுக துவாரத்தில் கரை தட்டி, பல லட்சக்

கணக்கான ரூபாய் அளவுக்கு அங்கே இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நாகை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மீன் பிடிக்க ஏதுவாக அமைத்துத்தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வேளாங்கன்னி, சேத்தூர், மீனவர் காலனி, இணைப்புப்பாலம், நாகூர் பாலம், காங்கேஸ்வரம் பாலம் போன்றவைகளைக் கட்டித்தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாகை மாவட்டத்தில் தற்போது ஏராளமான இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இறால் பண்ணைகள் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்படுவதால் ஏராளமான மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். நாகை, பாப்பாகோயில், அக்கரைப் பேட்டை, கீழச்சாமம் போன்ற பகுதியில் இறால் பண்ணைகள் அமைக்கப்படுவதால் அந்தப் பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சிலர் இறால் குஞ்சுகளை வாங்கி விற்கிறார்கள். இறால் குட்டையில் இருக்கிற இறால்களை தடவி விற்றுவிடுகிறார்கள். மழைக் காலங்களில் ஆறுகளிலும் குட்டைகளிலும் உள்ள இறால்கள் கடலுக்குள் சென்றால்தான் ஒன்று நூறாகி, பல லட்சமாகப் பெருகும். அந்த இறாலை இங்கேயே பிடித்து விடுகிறார்கள். ஆகவே சமீப காலமாக கழக்கு இறால், வண் இறால், நெத்தி இறால் போன்ற இறால்கள் இரண்டு வருட காலங்களில் அற்றுப்போய் விட்டன. இதனால் மீனவ மக்கள் துயரமடைந்திருக்கிறார்கள். இந்த இறால் பண்ணைகள் வளர்க்கிற உரிமையாளர்கள் குஞ்சுகளை.....

பிற்பகல் 7-50

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இந்த மாமன்றத்தில் முறைப்படுத்துதல் குறித்த சட்டத்தை தெளிவுபடுத்தி இருக்கிறேன். மீண்டும் அதற்குள்ளாக நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் ஒரு கருத்தை, தாய் இறால் பிடிக்கப்படுவதால் இறால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொன்னார்கள். உண்மையில் ஒரு தாய் இறாலிருந்து கோடிக்கணக்கில், மில்லியன்ஸ் அண்ட் பில்லியன்ஸ் என்று அந்த அளவுக்கு இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியும். ஒரு தாய் இறாலிலிருந்து, மதர் புருடர் என்று சொல்லக்கூடிய அந்தத் தாய் இறாலிலிருந்து கோடிக்கணக்கில் குஞ்சுகளை உற்பத்தி செய்கிற வகையில் தான், ஹேச்சரிஸ் அதாவது பிரைவேட் ஹேச்சரிஸ் வைத்திருப்பவர்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இந்தக் குஞ்சு பொரிப்பகங்களை வைத்திருப்பவர்கள், ஒரு தாய் இறாலை பிடித்து, அந்த அடிப்படையில் அவர்கள் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோடிமாரி, உரையை சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து, ஒரு தாய் இறாலைப் பிடித்து பல இலட்சக்கணக்கான குஞ்சுகளைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். தாய் இறாலைப் பிடிப்பதற்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்று நன்றாக தெரியும். ஏனென்றால்--நான் ஒரு மீனவன் என்ற முறையில்--ஒரு தாய் இறாலைப் பிடிப்பது கஷ்டம். அது ரொம்பவும் அபூர்வமாகத்தான் கிடைக்கும். அந்த இறாலை தண்ணீரில் உயிரோடு கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அப்படி வந்தால்தான் அது உயிர் பிழைத்து, அந்த இறால் மூலமாக, ஒரு ஆண் இறாலை சேர்க்கை முறையில் சேர்த்து பல குஞ்சுகளைப் பெருக்க வாய்ப்பு இருக்கும். நான் சொல்வது அதல்ல. கரையோரமாக இருக்கிற சிறு குஞ்சுகள் மழைக் காலங்களில் ஆறுகள் உடைத்து கடலுக்குள் செல்கிறபோது பல கோடிக்கணக்கான, சொல்ல முடியாத அளவுக்கு இறால் குஞ்சுகள் கடலுக்குள் போவதால், கடலுக்குள் செல்கிறபோது தகுந்த சீதோஷ்ண நிலை இருப்பதன் காரணமாக இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான குஞ்சுகள் பொரிக்க வாய்ப்பாக இருக்கிறது. அந்தக் குஞ்சுகளை, கரையோரத்தில் இருக்கிற அந்த இறால் பிடிப்பவர்கள் பிடித்து இறால் பண்ணைகளில் இருப்பவர்களிடம் விற்று விடுகிறார்கள். இந்தக் குறையைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உயிர் தமிழுக்கு தஞ்சையில் உன்னத புகழ் சேர்த்து
அண்டவெளியில் காணும் அறிவியல் அனைத்தையும் அறிவியல்

தமிழாக்கி
அகிலத்தில் உச்சியில் தமிழ்ச் சிறந்திட
அரும்பணி செய்திட்ட அன்னையே (மேசையைத் தட்டும் ஒலி)
அரசியல் வானில் பலபல புருட்டஸ்களை முறியடித்த
ஆற்றல் மிக்க நம்முடைய தலைவிக்கு (மேசையைத் தட்டும் ஒலி)
சிட்டுக் குருவிகளை விரட்டுவதற்கு
சுண்டு விரல் அசைவே போதாதா? (மேசையைத் தட்டும் ஒலி)
ஆழம் மிகுந்த அலைகடல் பகுதியில்
அமைதி தவழ்ந்து அற்புதங்கள் நேர்கிறது.
அதைப்போல நம்முடைய அன்னையின் ஆழம் செறிந்த
அறிவும், ஆற்றலும், அமைதியும் தமிழகத்தில்
வளம் சேர்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)
ஆழம் இல்லாத கடற்கரை பகுதியில்
அலைகளின் ஆர்ப்பாட்டம் அமைதியை குலைக்கிறது.
அதைப்போல அறிவில் குறைந்தோர் செயல்கள்
அலைபோல ஆர்பரித்து அடங்கிடும் இறுதியில்.
எங்களுடைய நிரந்தர முதலவரே,
உங்களது ஆற்றல், அன்பு தான் சக்தி.
அன்னை தெரசாவின் அருள் உள்ளத்தில் ஆன்மநேயம் மிகுந்து
ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும்,
சமுதாயத்தின் கடைகோடியில் தத்தளிப்பவர்களுக்கும்
உதவிக்கரம் நீட்டி உய்விக்கும்
உன்னதமான உதவியை செய்து வருகிறார்.
தாங்களும் தங்கத் தமிழ் நாட்டில்
அன்னை தெரசாவாக திகழ்ந்து வருகிறீர்கள்.

The hands that help are holier than the lips that pray.

இந்த மனித நேயம் மிக்க செயல்கள் தமிழக மக்களுக்கு மக்கள் நலத் திட்டங்களாக மனமுவந்து செயல்படுத்திவரும் தங்களுடைய திருக்கரங்களில் தமிழும், தமிழகமும், தமிழக மக்களும் பாதுகாப்பாகவும், வளமாகவும் இருப்பது உலகறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தனை புகழுக்கும் உரியவராக தங்களது பாத மலர்களைப் பணிந்து என்னுடைய பதிலுரையை ஆரம்பிக்கிறேன்.

நாட்டுப் படகுகளை இயந்திரமாக்குதல். நம்முடைய கட்டுமர மீனவர்கள் நீண்ட தூரம் சென்று அவர்கள் தொழில் செய்யவேண்டும் என்பதற்காகவே, எதிலும் ஆற்றல் மிக்க நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் புதிய விஞ்ஞான நுட்பங்களை, மதி நுட்பங்களைப் புகுத்தி, இன்றைக்கு ஒரு சரித்திரத்தை செய்து கொடுத்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் ஏறக்குறைய 7,905 இயந்திரங்கள் இதுநாள் வரையிலும் வழங்கப்பட வேண்டும். ஆனால் சில வங்கிகள் கடன் தர மறுக்கிற காரணத்தால், இதுவரையில் 4,895--அவுட் போர்ட் மெஷின்ஸ்--வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் நம்முடைய கட்டுமர மற்றும் வல்லங்கள் வைத்திருக்கிற மீனவர்களுக்கு ஆற்றல் மிக்க தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் வழங்கப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 7–55

இந்த ஆண்டு ஏறக்குறைய நம்முடைய ஆற்றல்மிகு புரட்சித் தலைவி அவர்கள், 1995–96 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில், 2 ஆயிரம் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை, நம்முடைய கட்டுமரம், வல்லம் வைத்திருக்கிற மீனவர்களுக்கு வழங்குவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இந்த ஆண்டு இரண்டு ஆயிரமும், மீதியிருக்கின்ற 3010–ம் சேர்ந்து, 5,010 இயந்திரங்களும் இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் மீனவர்கள் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் நம்முடைய ஆற்றல்மிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீனவர்களுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, இன்றைக்கு மீனவர்கள் பிரிமியம் என்று சொல்லக்கூடிய அந்தத் தொகையை அவர்கள் செலுத்துவதற்கு கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில், இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 2 லட்சத்து 48 ஆயிரத்து 404 மீனவர்கள் பயன் அடைகின்ற வகையில், 26 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை பிரிமியமாக நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு, மீனவர்கள் சார்பாக செலுத்தி, அதன் மூலம 2,48,404 மீனர்களுக்கு பாதுகாப்பை, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே

இந்த மீனவர்கள் விபத்து காப்புறுதித் திட்டத்தின் மூலம் மீனவர்கள் தொழில் செய்யும்போது இறந்துவிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் உதவி வழங்கப்படுகிறது. எனவே, மீனவர்கள் தொழில் ஆற்றும்போது இறந்தால், 50 ஆயிரம் ரூபாயாக உதவித் தொகையை உயர்த்தவேண்டும் என்ற ஒரு கருத்துரு ஏற்கனவே மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படடு, மத்திய அரசினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுடைய ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன், மீனவர்கள் தொழில் ஆற்றும்போது இறந்தால், 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், ஊனமுற்றால், அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஏறக்குறைய 12 ஆண்டுகளாக 1,353 மீனவர்கள் தொழிலாற்றும்போது இறந்ததன் காரணமாக, இதுவரையிலும் 2 கோடியே 5 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சேமிப்பு நிவாரணத் திட்டம். இந்த சேமிப்பு நிவாரணத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர்,இதய தெயவம் டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள், மீனவர்கள் தொழில் செய்யாத அந்த 4 மாத காலத்திற்கு, அவர்கள் குடும்பம் வறுமையிலே வாடக்கூடாது, அவர்கள் வறுமையிலே வாடக்கூடாது என்ற அந்தச் சூழ்நிலையினை முற்றிலுமாக அகற்றவேண்டும் என்பதற்காகவே, மீனவர்கள் சேமிப்பு நிவாரணத் திட்டத்தை, ஒரு புதிய பொலிவோடு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

1982 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் துவங்கப்பட்டது. அப்போது ஏறக்குறைய இந்தத் திட்டத்திலே உறுப்பினர்களாக இருந்த மீனவர்கள் என்று பார்க்கும்போது, 1,847 மீனவர்கள்தான். அதிலே அவர்கள் மாதந்தோறும் 10 ரூபாய் வீதம் 9 மாதத்திற்குச் செலுத்தி, அவர்கள் செலுத்துகின்ற அந்தத் தொகையோடு மாநில அரசும் அதே அளவு தொகையைச் செலுத்தி, மொத்தமுள்ள 180 ரூபாயை 3 மாதத்திற்கு 60 ரூபாய் வீதம் அப்போது பிரித்துக் கொடுக்கப்பட்டது. நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அப்படிப்பட்ட குறைந்த உதவியை வழங்கவேண்டியதில்லை, அதை அதிகப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கட்டளையிட்டதற்கு இணங்க, ஏறக்குறைய 1992-93 ஆம்

ஆண்டைப் பொறுத்தமட்டில், 45 ரூபாய் மாதந்தோறும் வசூலித்து, 8 மாதங்களுக்கு, அதற்கு ஈடாக மத்திய அரசும், மாநில அரசும் ஒட்டுமொத்த ஈடாக அந்தத் தொகையைச் செலுத்தி, ஏறக்குறைய அதிலே வருகின்ற 1080 ரூபாயை 4 மாதத்திற்கு 270 ரூபாய் வீதம் பிரித்துக் கொடுப்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவியின் அரசு உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே 1992-93 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலும் 76,610 மீனவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். 1993-94 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலும், 83,873 மீனவர்கள் பயன் அடைந்து, அவர்களுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய தொகை 6 கோடியே 2 லட்சம் ரூபாய். 1994-95 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், 1 லட்சத்து 12 ஆயிரத்து 979 மீனவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய தொகை 8 கோடியே 13 லட்சம் ரூபாய் 1995-ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில், 1,35,284 மீனவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய தொகை 9 கோடியே 74 லட்சம். இந்த ஆண்டில் மட்டும், 1995-96 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1,65,000 மீனவர்கள் பயன் அடைகிற வகையிலே 11 கோடியே 88 லட்சம் ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இதற்காக ஒதுக்கியுள்ளார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 8-00

ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய நம்முடைய கரையோர வளம் என்று பார்க்கும்போது, ஒரு புள்ளி விவரம் 3.7 லட்சம் டன் அளவிற்கு கரையோரத்திலே அந்த வளம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வளத்தைக் கரையோர பிடிப்பின் மூலம் ஏறக்குறைய 3.7 லட்சம் டன் மீனகளைப் பிடித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நாம் எதிர்காலத்திலே ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிப்பது மிக மிக அவசியம். அதுமட்டுமல்லாமல் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும்போது நாம் ஒன்றை இங்கே சிந்தித்தாக வேண்டும். ஏற்கெனவே நம்முடைய ஆற்றல் மிகு புரட்சித் தலைவி அவர்கள் 'சென்ட்ரல் போர்டு ஆப் ஃபிஷரீஸ் மீட்டிங்கிற்கு' என்னை அனுப்பி வைத்தபோது அப்போது

நம்முடைய புரட்சித் தலைவியின் கருத்தாக அன்னிய நாட்டுக் கப்பல்களை நம்முடைய இந்தியப் பெருங்கடலுக்குள் அனுமதிப்பதில்லை என்ற ஒரு தெளிவான கருத்து அங்கே எடுத்து வைக்கப்பட்டது. ஏனென்னறு சொன்னால், எங்களுடைய அரசும் விரும்பவில்லை. அதே நேரத்தில் எங்களுடைய மீனவர்களும் விரும்பவில்லை. ஆனால் இந்த மாமன்றத்தில் நான் ஏற்கெனவே எடுத்து வைத்தது போன்று எங்களிடத்திலே ஆற்றல் இருக்கிறது, அறிவு இருக்கிறது, அனைத்தும் இருக்கிறது. ஆனால் நிதியில்லை. அந்த அடிப்படையிலே தேவையான அளவிற்கு உங்களுக்கு திட்டங்கள் தயாரித்து நாங்கள் தருகின்றோம். ஆழ்கடல் மீனபிடிப்பு திட்டத்தில் நீங்கள் அங்கேயிருக்கின்ற மீனைப் பிடிக்கவேண்டுமென்றால் அதற்குத் தேவையான திட்டத்தைத் தருகின்றோம். ஆனால் நிதியுதவியை நீங்கள் அளித்தால், அந்த அடிப்படையிலே உங்களுக்கு உதவுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி ஒரு திட்டத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கிறோம் என்று சொன்னோம். அந்த அடிப்படையிலே இன்னும் மத்திய அரசு அதற்கும் ஒப்புதலே கொடுக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே ஆழ்கடலில் ஏறக்குறைய 3 லட்சம் டன் மீன் பிடிக்கலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அந்த 3 லட்சம் டன் மீன் பிடிப்பதற்கு இன்றைக்கு நம்முடைய ஆற்றல்மிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏறக்குறைய 'லோ ஹார்ஸ் பவர்' 25 லிருந்து 30 ஹார்ஸ் பவருக்குள்ளே கண்ணாடி இழைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பை ஊக்குவிப்பதற்காக இன்றைக்கு ஒரு திட்டம் தயாராக்கப்பட்டு ஏறக்குறைய முதல் கட்டமாக 70,000 டன் மீன்பிடிப்பதற்கு நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டம் தீட்டி மைய அரசுக்கு அனுப்பியுள்ளார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்–தலைமை)

அதேபோன்று நம்முடைய கடற்கரை மாவட்டங்களைப் பொறுத்தமட்டிலே நம்முடைய மீனவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருப்பது அங்கே கடல் அரிப்பு ஏற்படும்போது மீனவ கிராமங்கள் பாதிக்கப்படுவது. அதுமட்டுமல்லாமல் மீனவ கிராமங்கள் பாதிக்கப்படும்போது மீனவர்கள் தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே அங்கே அந்த கிராமங்கள் பாதிக்கப்படக்கூடாது என்கின்ற வகையிலே நாம் அங்கே

கற்களைப் போட்டால், கற்களைப் போடுவதன் மூலம் அவர்கள் கட்டுமரத்தை வைத்து அங்கே தொழில் செய்யமுடியாத சூழ்நிலை. உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தப் பிரச்சினை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே 'ரஃப் பீட்டன்சீ' என்று சொல்வார்கள். அதாவது அலையினுடைய வேகம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த அலையிலே சிக்கித் தவிக்கின்ற அந்தக் கட்டுமரம் ஓங்கி அடிக்கும்போது அந்தக் கல்லிலே பட்டு கட்டுமரம் உடைந்து ஆளும் பலத்த சேதம் அடைகின்ற ஒரு சூழ்நிலை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை மாற்றவேண்டும் என்பதற்காகவே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எங்கெங்கெல்லாம் கற்களுக்குப் பதில் கடல் அரிப்புச் சுவர் கட்ட முடியுமோ, அந்த அளவிற்கு கடல் அரிப்புச் சுவரைக் கட்டித் தருவதற்கு இன்றைக்குப் பொதுப்பணித் துறையின் மூலமாக உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பொதுப்பணித் துறையும் இந்த வருடம் நீரோடை கிராமத்திலே 20 லட்சம் ரூபாய் அளவிற்கு கடல் அரிப்புச் சுவரை இன்றைக்கு எழுப்புவதற்கு ஏற்பாடு பொதுப்பணித் துறையின் மூலமாக செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே கற்களை போட்டு கடல் அரிப்புச் சுவரை எழுப்பினாலும்கூட இன்றைக்கு ஒரு மாற்று யோசனையாக தூண்டில் வளைவு என்று சொல்லக்கூடிய ஒரு 'ஜெட்டி' தூண்டில் வளைவு தற்போது கேரள மாநிலத்திலே அமைக்கப்பட்டிருப்பதாக சிலபேர் சொன்னார்கள். அது எப்படி இருக்கவேண்டும் என்கின்ற அந்தக் கருத்தை அறிந்து வருவதற்காக நம்முடைய அரசினுடைய அதிகாரிகள் அங்கே அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே பார்த்துவிட்டு வந்த பிறகு பெங்களூரில் இதற்கென்று ஒரு நிறுவனம் இருக்கிறது. கோஸ்டல் இன்ஸ்டிட்யூட் ஆப் சென்ரல் இன்சினியரிங் என்ற ஒரு விங் இருக்கிறது.

அதேபோன்று கோவாவிலே 'நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் ஓஷியானோகிராபி' என்ற விங்கும் இருக்கிறது. அவர்களுடைய கருத்தையும் பெற்று எங்கெல்லாம் தூண்டில் வளைவு எதிர்காலத்திலே அமைக்கப்படமுடியுமோ அங்கெல்லாம் தூண்டில் வளைவு அமைப்பதற்கு வேண்டிய அளவிற்கு ஒரு சர்வே செய்து நடவடிக்கை எடுக்கப்படும் எனபதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த புதிய மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் தங்குதளம் அமைப்பது குறித்து ஏற்கெனவே இந்த மீன்பிடி துறைமுகங்கள்

பொறுத்தவரையில் 12 இடங்களில் கடற்கரை மாவட்டங்களில் தற்போது இயங்கிவருகின்றது. சின்னமுட்டத்திலே பெரும்பகுதி அந்த மீன்பிடி துறைமுகம் முடிவடைந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்போது மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கருத்து இராமேஸ்வரம் பகுதியிலிருந்தும், பாம்பன் பகுதியிலிருந்தும், பாலக்குடி, குளச்சல், தேங்காய்ப்பட்டினம் மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருக்கின்ற காரணத்தினாலே இதுவும் பெங்களூரில் இருக்கின்ற அந்த மையத்திற்கும் கோவாவில் இருக்கின்ற மையத்திற்கும் அனுப்பப்பட்டு அங்கே அவர்கள் கொடுக்கின்ற அந்தத் தகவலின் பேரிலே எதிர்காலத்திலே இங்கு உண்மையாக அங்கே அமைக்கப்படும் அளவிற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால் அமைக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மீனவர்கள் அவர்களுடைய அந்தத் திறமையை வெளிப்படுத்துகின்ற வகையிலே அவர்களுக்கு நீச்சல் போட்டி மற்றும் கட்டுமரப் போட்டியை ஒவ்வொரு வருடமும் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்தநாள் விழாவிலே நடத்தவேண்டும் என்கின்ற வகையிலே இந்த வருடம் நம்முடைய ஆற்றல்மிகு புரட்சித் தலைவி பிறந்தநாளிலே நடத்தப்பட்டது. எதிர்காலத்திலே ஒவ்வொரு வருடமும் நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவியினுடைய பிறந்த நாள் விழாவிலே நம்முடைய மீனவர்களுடைய அந்தத் திறமையை வெளிப்படுத்துகின்ற வகையிலே பல்வேறு நீச்சல்போட்டி மற்றும் கட்டுமரப்போட்டி மாவட்ட அளவிலே நடந்தது. இப்போது மாநில அளவிலே நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். இதற்கு வருடத்திற்கு 5 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 8-05

ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேம்பாடு திட்டம். எதையுமே நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு பார்ப்பார்கள். கடந்த காலத்திலே எவ்வளவோ ஆட்சியாளர்கள் இருந்தார்கள். ஆனால் ஒரு குறுகிய காலத்திலேயே எல்லா வசதிகளையும் மக்கள் உடனடியாக பெற வேண்டும் எனகிற ஒரு சிந்தனையை எந்த ஒரு தலைவரும் பெற்றது இல்லை. உதாரணத்திற்கு இன்றைககு மெட்ராஸ் சிட்டியை எடுத்துக் கொணடால், மெட்ராஸ் விஷன் 2000. அதைப்போல ஒவ்வொரு கிராமமும் இன்றைக்கு அடிப்படை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காகவே எண்ணற்ற வசதிகளை புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மீன்வளத்துறையிலே தொலைநோக்கு பார்வையோடு ஒருங்கிணைந்த கடல் ஓரப் பகுதி மேம்பாடு திட்டம். Integrated Coastal Area Development Programme என்று சொல்லக்கூடிய இந்தத் திட்டம் ஒவ்வொரு மீனவ கிராமமும்--தமிழகத்தில் மீனவர் கிராமம் என்று பார்த்தால் வடக்கு பக்கம் கூளங்குப்பத்திலிருந்து தெற்கு பக்கம் நீரோடை வரையிலே இருக்கிற கன்னியாகுமரி மாவட்டம். ஏறக்குறைய 500 கிராமங்கள். இந்த 500 கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கு--ஒவ்வொரு மீனவ கிராமம் என்றால் அந்த கிராமத்திலே வீடுகள் இருக்கவேண்டும். இலவசமாக அரசால் கட்டி கொடுக்கப்பட்ட வீடுகள் இருக்கவேண்டும். புயல் பாதுகாப்பு இல்லம் இருக்கவேணடும். சத்துணவுக் கூடம் இருக்க வேண்டும். சமுதாயக் கூடம் இருக்க வேண்டும். மற்றும் சாலை வசதி இருக்க வேண்டும். மின்சார வசதி இருக்க வேண்டும். குடிநீர் வசதி இருக்க வேண்டும். இதுபோன்ற அனைத்து வசதிகளும் இருக்கக்கூடிய ஒரு முன்மாதிரியான கிராமமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், அங்கு வாழுகின்ற மீனவர்களுடைய பொருளாதாரமும் முன்னேற்றம் பெறுகின்ற வகையிலே பல்வேறு திட்டங்களை அமல்படுத்தப்படவேண்டும் என்பதற்காகவே நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் அதனைப்பற்றி ஆராய்வதற்காகவே எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, அதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள்--நம்முடைய மீன்வளத் துறையினுடைய செயலாளர் அவர்கள் நோடல் ஆபீசராக இருக்கிறார்கள். அதனுடைய நோடல் ஆபீசராக இருந்த சுவாமிநாதன் தலைமையிலே ஒரு குழு போடப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கை தற்போது அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்கள் கடலோர பகுதியைச் சார்ந்த தொழில்களுக்கு 20 கோடி ரூபாய் செலவாகும் என்றும், மனித குடியேற்றத்திற்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்றும் போக்குவரத்து மற்றும் தகவல்களுக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்றும், விபத்துக்கள் தடுப்புக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்றும், சுற்றுலாவுக்கு 5 கோடி ரூபாய் செலவாகும் என்றும், பயிற்சிக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்றும், சில்லரை செலவினங்களுக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்றும் மற்ற இனங்களுக்கு 25 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தை பொறுத்தமட்டிலே நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சி தலைவியினுடைய கனவை--அந்தக் கனவை நனவாக்குகின்ற வகையிலே 1995-96 ஆம் ஆண்டிலிருந்து பத்து

ஆண்டு காலத்திலே இந்த திட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு உலக வங்கி, ஆசிய வங்கி சிடா போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியைப் பெற்று இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் மீனவர்களுக்கு மீன் பிடி சாதனங்கள், நம்முடைய புரட்சி தலைவி அவர்கள், ஆற்றல் மிக்க புரட்சி தலைவி அவர்களால் தான் இன்றைக்கு விசைப்படகுகள் நீண்டதூரம் சென்று தொழில் செய்கிறார்கள். ஆனால் கட்டுமர மீனவர்களுக்கு நீண்டதூரம் சென்று தொழில் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களும் நீண்ட தூரம் சென்று தொழில் செய்ய வேண்டும் என்பதற்காகவே, அவுட்போட் மெஷின் இன்போட் மெஷின் என்று சொல்லக்கூடிய, வெளிப் பொருத்தல் இயந்திரம், உட்பொருத்தல் இயந்திரம் போன்றவைகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்குவதற்கு உத்தரவிட்டு அந்த அடிப்படையிலே வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்த அவுட் போட் மெஷின், இன்போட் மெஷின் வழங்கினாலும் கூட 'gear component' என்று சொல்லக்கூடிய மீன் பிடி சாதனங்கள், இவற்றைக்கூட நீங்கள் வழங்கவேண்டும் என்று சொல்லி, மீன்பிடிப்பதற்கு வேண்டிய வலை போன்ற உப சாதனங்கள் எல்லாம்கூட வழங்க வேண்டும் என்று சொல்லி நம்முடைய புரட்சி தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு மட்டும் நம்முடைய புரட்சி தலைவி அவர்கள் ஒதுக்கியுள்ள தொகை ஏறக்குறைய மத்திய அரசினுடைய அந்தத் தொகையைப் பார்க்கிறபோது ஒரு கோடி ரூபாய் இன்றைக்கு புரட்சி தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களுக்கு குழு அடிப்படையிலே காப்புறுதித் திட்டம்.. ஏற்கெனவே மீனவர் விபத்து காப்புறுதி திட்டம் மூலமாக ஒரு திட்டம் மீனவர்களுக்கு மிகுந்த பாதுகாப்பை அளித்துக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கின்றேன். அதைத் தவிர மீனவர்களுக்கு குழு அடிப்படையிலே ஒரு காப்புறுதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இன்றைக்கு நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் உத்திரவிட்டு இருக்கின்றார்கள்.

பிற்பகல் 8-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குப்பனும், திரு. கோடிமாரியும் இதை மிக கவனமாகக் கவனிக்க வேண்டும். நீங்கள் இரண்டு பேரும்

என்ன பேசிக் கொண்டு இருப்பீர்கள் என்பது எனக்கும், அமைச்சருக்கும் தெரியும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஏறக்குறைய தமிழகத்தில் வள்ளங்கள் என்று பார்த்தால் 13 ஆயிரம் வள்ளங்கள் இருக்கின்றன. கட்டுமரங்கள் என்று பார்த்தால், 25 ஆயிரம் கட்டுமரங்கள் இருக்கின்றன. விசைப் படகுகள் என்று பார்த்தால் 7,500 விசைப் படகுகள் இருக்கின்றன. இப்பொழுது மீனவர்கள் தொழில் ஆற்றும்போது இறந்தால் அவர்களுக்கு இன்றைக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகின்றது. எதிர்காலத்திலே மத்திய அரசு ஒப்புதலைக் கேட்கும்பொழுது 50 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க வழியிருக்கின்றது. இதைத் தவிர, இந்தத் திட்டத்தின் மூலம் தற்போது 1 லட்சம் ரூபாய் அளவிற்கு கொடுப்பதற்கு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் விசைப்படகு உரிமையாளர்களாக இருக்கின்றவர்கள், அவர்களுடைய படகிலே 5 அல்லது 6 பேர் வேலை செய்வார்கள். இவர்களுக்கு வேண்டிய அந்த பிரிமியம் தொகையை விசைப்படகு உரிமையாளர்களே செலுத்தி விடுவார்கள். அதே போல வள்ளங்களிலே பணிபுரிகின்றவர்கள் கட்டுமரங்களிலே பணிபுரிகின்றவர்கள், ஏற்கனவே அவர்கள் மீனவர் கூட்டுச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் பிரிமியம் தொகையை கூட்டுறவுச் சங்கத்திலே இன்ஷூரன்சுக்கு செலுத்திவிட்டால், அவர்கள் பயப்படவேத் தேவையில்லை. அவர்கள் மீன்பிடித் தொழிலை ஆற்றும்போது இறந்தாலும்கூட, இல்லையென்றால், எந்த ஒரு விபத்திலே இறந்தால்கூட அவர்கள் 1 லட்சம் ரூபாய் பெறுவதற்கு இன்றைக்கு நம்முடைய ஆற்றல்மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழிவகை செய்து, அந்த அடிப்படையிலே பாதுகாப்பை நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்து இருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில் ஏறக்குறைய 1½ லட்சம் மீனவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, பாரம்பரிய மீனவர்களுக்கு கண்ணாடி இழை கட்டுமரங்கள் வழங்குகின்ற ஒரு திட்டம். நம்முடைய மீனவர்களை பொறுத்தமட்டில் மிகவும் அறிவானவர்கள், ஆற்றல்மிக்கவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள வேண்டும். ஏன் என்று சொன்னால், அல்பீசியா முல்கானா என்று சொல்லக்கூடிய ஒரு வகை மரம் இருக்கின்றது. மற்ற

எத்தனையோ மரங்கள் கடலில் போட்டால் உள்ளே போய்விடும். மேலே வரும். ஆனால், அல்பீசியா முல்கானா என்ற மரம் மட்டும் உள்ளேயும் போகாது, அது அதிகமான அளவிற்கும் அமிழ்ந்து விடாது. அந்தக் காலத்திலே இந்த மரம்தான் கடலுக்கு ஏற்ற மரம் என்று நம்முடைய மீனவ முன்னோர்கள் அல்பீசியா முல்கானா மரத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த அடிப்படையிலே இன்றைக்கு அதிலே கட்டுமரம் செய்து, ஆண்டாண்டு காலம் தொழில் செய்து வருகின்றார்கள். இந்த அல்பீசியா முல்கானாவை பொறுத்தமட்டிலே, இந்த வகையான மரம் கன்னியாகுரி மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது. எதிர்காலத்திலே இதற்கு தட்டுபாடு ஏற்படும்போது, நம்முடைய மீனவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காகவே, எதிலேயும் ஒரு புதுமையைப் புகுத்தி புரட்சி செய்கின்ற நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் (மேஜையைத் தட்டும் ஒலி) அந்தக் கட்டுமரத்திற்குப் பதில் இன்றைக்கு கண்ணாடி இழை கட்டுமரங்கள் பைஃபர் ரீஇன்போர்ஸ்டு பிளாஸ்டிக் என்று சொல்லக்கூடிய கண்ணாடி இழைக் கட்டுமரங்களை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்துவதற்கு உத்தரவிட்டு, அந்தக் கட்டுமரங்கள் விலை ஒவ்வொன்றும் ரூபாய் 50 ஆயிரம் இருக்கும். அப்படி 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு ஏழை மீனவனால் அந்தக் கட்டுமரத்தை வாங்கமுடியாது என்ற காரணத்தினால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், அதை ஆராய்ந்து, 50 சதவிகிதம் மானியத்திலே 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும் மீதி 25 ஆயிரத்தை நாங்கள் மானியமாகத் தருகிறோம் என்று சொல்லி அதற்காக இந்த ஆண்டு 100 கட்டுமரங்களை வாங்குவதற்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று, கரை ஓரத்திலேயிருந்து கடல்வரை தொடர்பு கொள்கின்றத் திட்டம். இந்தத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியோடு செயல்படுத்துகின்ற ஒரு திட்டம்.

இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலமும் செயல்படுத்தப்படமுடியாத சூழ்நிலையில் நம்முடைய ஆற்றல்மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் இன்றைக்கு முதல் முதலாக தூத்துக்குடியிலும், நாகைப்பட்டினத்திலும், ஒரு உயர்ந்த கோபுரம் அமைக்கப்பட்டு கடலிலே மீன்பிடிக்கச் செல்கின்ற விசைப்படகுகள், கட்டுமரங்கள், கரை ஓரத்திலே தொடர்புகொள்கின்ற ஒரு சூழ்நிலை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஏற்படுத்தப்பட்டு, Save our Souls, S.O.S. கால் அந்த அளவிற்கு, ஒரு ஆபத்திலே உதவக் கூடிய

அளவிற்கு, நன்றாக பயன்தரக்கூடிய அளவிற்கு, இந்த வயர்லெஸ் சாதனங்கள் இருக்கின்றன என்ற காரணத்தினால் மீனவர்கள் மத்தியிலே நல்ல வரவேற்பு கிடைத்துவிட்ட காரணத்தை மையமாக வைத்து, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துக் கடலோரப்பகுதி மாவட்டங்களிலும் வழங்கப்பட நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் யோசித்து வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், சமுதாயக் கூடங்களைப் பொறுத்தமட்டில் பொதுவாக நம்முடைய மீனவர்கள் கடற்கரை ஓரமாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் ஒரு நகரத்திற்கு வரவேண்டும் என்றால்கூட அதிகதூரம் என்கின்ற காரணத்தினால் திருமணம் மற்றும் பல்வேறு நல்ல நிகழ்ச்சிகள் நடக்க இருந்தால்கூட அவர்களுக்கு மிகப்பெரிய கஷ்டமாக இருக்கின்ற சூழ்நிலையில் அப்படிப்பட்ட இடர்பாடுகளை போக்க வேண்டும் என்பதற்காகவே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த வருடம் 2 சமுதாயக் கூடங்களை நிறுவுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 8-15

அந்த அடிப்படையிலே வள்ளலார் மாவட்டத்தில் உள்ள பெரியகுப்பம் கிராமத்தில் 6 இலட்சம் ரூபாயில் ஒரு சமுதாயக் கூடமும் அதேபோல் வள்ளலார் மாவட்டத்தில் தேவனாம்பட்டினம் கிராமத்தில் 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சமுதாயக் கூடமும் இந்த ஆண்டு அமைப்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதே போன்று இன்றைக்கு அந்த இலங்கை பிரச்சினை காரணமாக நம்முடைய மீனவர்கள் பாதிப்பு அடையக்கூடாது என்பதற்காகவே இன்றைக்கு அரசின் மூலமாக அவர்களுக்கு இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு 1,69,944 மீனவர்களுக்கு இலவசமாக அடையாள அட்டை வழங்கியிருக்கிறது. இந்த அட்டைகள் வழங்கியதன் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களிலே நம்முடைய மீனவர்கள் தொழில் செய்யும்போது இலங்கை கடற்படையினர் பிடிக்கும்போது இந்த அட்டைகள் காண்பிக்கப்படுவதால் நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கு எந்த ஒரு இடையூறும் ஏற்படாத வகையிலே கடந்த காலங்களிலே இருந்தது. அந்த அடிப்படையில் 1,69,944 அட்டைகள் இதுவரையிலே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டைகள் வழங்குகின்ற

இடம் பொதுவாக ஒரு ஒப்பன் ஸ்பேஸாக-திறந்தவெளியாக இருப்பதன் காரணமாக அங்கே வழங்குகின்ற அதிகாரிகள் இன்னல்படுகிறார்கள் என்பதை அறிந்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் 6 குடியிருப்புகளை ரூபாய் 6,84,000 செலவில் கட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டும் அல்ல 3 டோக்கன் நிலையம் கட்டுவதற்கும் தொண்ணூறாயிரத்திற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று மீனவர்கள் பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்காகவே இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு வீடும் கடந்த காலத்திலே 17,000 ரூபாய்க்கு கட்டித்தரப்பட்டது. அப்படி 17,000 ரூபாய்க்கு கட்டப்பட்ட வீடுகள் சரியாக இல்லாத சூழ்நிலையில் அதனை உயர்த்த வேண்டும் என்று ஒரு கோரிக்கையும் வராதபட்சத்தில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மனிதாபிமானத்தோடு ஒவ்வொரு வீடும் தரமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே 26,000 ரூபாய் செலவில் மீனவர்கள் வீடுகளை அவர்களாகவே கட்டிக்கொள்ள வேண்டும்-இன்றைக்கு எங்களிடத்திலே ஒரு பொறியியல் விங் இருக்கிறது. அவர்கள்கூட கட்டவில்லை--அவர்களாகவே அவர்களுக்குத் தேவையான வீடுகளை அவர்களுக்கு ஏற்ற வகையிலே கட்டிக்கொள்ளலாம் என்கின்ற உத்தரவை இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் பிறப்பிக்காத உத்தரவை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய மாநிலமான தமிழகத்திலேதான் இன்றைக்கு பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையிலே இன்றைக்கு பல்வேறு கிராமங்களில் மீனவர்கள் 26,000 ரூபாய் செலவில் அவர்களுக்கு ஏற்றவகையிலே அழகாக வீடுகளை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டும்கூட நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்கள் 2,000 வீடுகளை ரூபாய் ஐந்து கோடியே இருபது இலட்சம் செலவில் கட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலே 25,846 வீடுகள் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசின் மூலமாக கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்முடைய மீனவர்களுடைய பிரச்சினையை அறிந்து அந்த மாவட்டத்திலே தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவியினுடைய உத்தரவின் பேரிலே மாவட்ட மீனவர் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அந்த அடிப்படையிலே 6 மாவட்டங்களிலே கன்னியாகுமரி,

நாகப்பட்டினம், செங்கை-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலே மீனவர் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அந்த மீனவர் கருத்தரங்கத்திலே பல்வேறு பிரச்சினைகள் குறித்து நம்முடைய மீனவர்கள் நேரடியாக தெரிவிக்கின்றபோது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அனைவருமே அங்கே வந்திருப்பார்கள். உடனடியாக அந்தப் பிரச்சினை அவர்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்திலே அந்த கருத்தரங்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதற்காகவே ஏறக்குறைய ஒரு முறை கருத்தரங்கம் நடத்தப்பட வேண்டும் என்றால் கூட 25,000 ரூபாய் அதற்கு உத்தேசமாக செலவாகிறது. அந்த அடிப்படையிலே அடுத்த ஆண்டு தொடர்ந்து இது நடைபெறுவதற்காக ஏறக்குறைய 5 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி உதவி பெறுவதற்கு வழிவகை செய்யப்படவிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று பணியாளர் பெயர் மாற்றம். கடலோர மாவட்டங்களில் இருக்கின்ற மீனவர்கள் பொதுவாக மீன் பிடிக்க செல்லுகின்றவர்கள் அந்த கிராமங்களிலே இருப்பதோடு சரி. அவர்கள் நகரங்களிலே மற்ற எதற்கும் வருவதே கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் ஒரு அலுவலகத்திற்கு சென்று தங்களுடைய குறையை தெரிவிக்க முடியாத சூழ்நிலையில், இந்த நிலைமையை முற்றிலும் மாற்ற வேண்டும் என்பதற்காகவே எதிர்வரும் காலத்தில் மீன்வள துறை ஆய்வாளர் அவர்கள் தற்போது துறையிலே இருக்கிறார்கள். அவர்கள் இனிமேல் மீனவ நல ஆய்வாளராக கருதப்பட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று ஒவ்வொரு நாள் அவர்கள் தங்கி அந்த மீனவர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை கண்டறிந்து அதை உடனடியாக அரசாங்க அலுவலகத்திற்கு தேவையான அளவுக்கு தகவலைக் கொடுத்து அந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு மீனவ நல ஆய்வாளர் மற்றும் மீனவ நல உதவி ஆய்வாளர் உதவி புரிவார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனால் அரசுக்கு எந்தவித ஒரு செலவும் இல்லை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8-20

அதேபோல் நம்முடைய பழவேற்காடு ஏரியைப் பொறுத்தவரையில் நீண்ட நெடிய ஒரு வரலாற்று சிறப்பு மிக்க ஏரி. அந்த ஏரியை சுற்றி

ஏறக்குறைய 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவர்கள் தொழில் செய்கிறார்கள். மீன்பிடி தொழில் செய்கின்ற அந்த மீனவர்கள் அவர்கள் பிடிக்கின்ற அந்த இறாலை விற்பனை செய்யவேண்டும் என்றால் ஏற்கனவே அந்த வியாபாரிகள் அவர்களிடம் 10 சதவீதம் கமிஷனாக அந்தப் பணத்தைப் பெற்றதன் காரணமாக அவர்கள் ஒரு சுரண்டலுக்கு ஆளாவதை தடுக்கும் பொருட்டு வியாபாரிகளுக்கு அவர்கள் 10 ஆயிரம் ரூபாய் முன் பணம் கொடுத்து 10 சதவீதம் கமிஷனை அந்த சுரண்டலை தடுக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு ஒரு பிரத்யோகமாக ஒரு திட்டம் 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட அரசு கருதி இருக்கிறது. அந்த அடிப்படையில் 10 மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஆயிரம் மீனவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்குவதற்கு அரசு உதவிட கருதியுள்ளது எனபதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் 1721 மீனவர்கள் ஏறக்குறைய 572 வெளிப்பொருத்தும் இயந்திரங்களை வைத்து பழவேற்காடு ஏரியில் தொழில் செய்கிறார்கள். இவர்கள் 15 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் டீசலைக் கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை தவிர்க்க வேண்டும்,. அவர்களுக்கு கஷ்டம் கொடுக்கக்கூடாது என்ற சூழ்நிலையில் பழவேற்காடு பகுதியில் இருக்கின்ற அந்த ஏரிப் பகுதியில் பெடரேஷன் மூலமாக, ஒரு மார்க்கெட்டிங் பெடரேஷன் ஒன்று பழவேற்காடு பிஷரீஸ் மார்க்கெட்டிங் பெடரேஷன் ஒன்று அங்கே இயங்குகிறது. அதன் மூலமாக டீசலை சப்ளை செய்வதற்கு அரசு கருதி அந்த அடிப்படையில் மார்ஜின் மனியாக 5 லட்சம் ரூபாய் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மூலமாக நிதி பெற்று இந்த திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல் உள்நாட்டு மீன் விற்பனைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு இடத்திலே பிடிக்கப்படுகின்ற மீனை இன்னொரு இடத்திலே தாராளமாக கிடைக்கவேண்டும் என்பதற்காகவே இன்றைக்கு நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மீன் விற்பனை திட்டம் என்ற இந்தத் திட்டத்தின் மூலம் ஏறக்குறைய மீன் விற்பனையை வலிமைப்படுத்திவிட மட்டும் 48 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கிருஷ்ணகிரி மற்றும் பழனி வட்டத்திலே இருக்கின்ற மீனவர்கள்

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 18 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு 3 கொட்டகைகள்; 3 டன் குளிர்பதன ஊர்திகள் இரண்டும்; சில்லரை மீன் விற்பனை அங்காடிகள் ஐந்தும்; குளிர்பதன பெட்டியுடன் இரண்டு சக்கர மிதி வண்டிகள் 32; மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைக்கு மிதி வண்டிகள் 15–ம், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல் ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தி திட்டத்தைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுகளில் 16 கோடி ரூபாய் செலவில் 34 கிராமத்தில் அங்கே இருக்கின்ற மீனவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தேவையான கட்டுமரம், வலை, வள்ளம் போன்றவைகள் வாங்குவதற்கு கடனாக வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் முதல் வருடம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய தொகை 2 கோடியே 92 லட்சம் ரூபாய். இரண்டாவது வருடம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய தொகை 2 கோடியே 65 லட்சம் ரூபாய். இந்த வருடம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்க இருக்கின்ற தொகை 2 கோடியே 49 லட்சம் ரூபாய் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதிலே இன்னொரு மகிழ்ச்சியான செய்தி என்ன என்றால் இந்தத் திட்டத்திற்கு நம்முடைய மீனவர்கள் அமோகமாக நல்ல ஒரு ஆதரவைக் காட்டி வருகிறார்கள். பொதுவாக மீனவர்கள் மத்தியில் வாங்கிய கடனை கட்டவேண்டும் என்ற எண்ணம் கடந்த காலத்தில் அவர்களுக்கு கிடையாது. ஆனால் இப்போது இருக்கின்ற மீனவர்கள் வாங்கிய கடனை கட்டவேண்டும், மீண்டும் கடன் பெறவேண்டும் என்ற அந்த விழிப்புணர்வு நம்முடைய மீனவர்களுக்கு ஏற்பட்டு விட்டதன் காரணமாக முதல் கட்டத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் நல்ல சிறப்புடன் செயல்பட்டதன் காரணமாக இரண்டாவது கட்டமாக 48 கோடி ரூபாய் செலவில் ஏறக்குறைய 11 கடல் ஓர மாவட்டங்களில் 100 மீனவ கிராமங்களைத் தத்து எடுத்து அந்த கிராமத்தில் உள்ள மீனவர்களுக்குத் தேவையான வலை, கட்டுமரம், வள்ளம் போன்றவைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8–25

அதே போல் செராங்-கம்-ஓட்டுநர் பயிற்சி. இந்தப் பயிற்சியைப் பொறுத்தமட்டிலே இன்றைக்குத் தமிழகத்திலே விசைப்படகுகள் என்று பார்த்தால் ஏறக்குறைய 7000–க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் இருக்கின்றன. இதிலே ஒரு விசைப்படகுக்கு ஒரு டிரைவர், ஒரு மாற்று டிரைவர் என்று பார்த்தால்கூட 2 பேர் வருவார்கள். இவர்கள் ஒரு அசாதாரண சம்பவத்திலே ஒரு விபத்து ஏற்படும்போது அதற்காக இன்ஷூரன்ஸை அவர்கள் கிளெயிம் செய்யும்பொழுது அப்பொழுது அவர்கள் கேட்பது, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் விசைப்படகு ஓட்டுநர்கள் அவர்கள் சர்ட்டிபிகேட் வைத்திருக்கிறார்களா என்று கேட்பார்கள். சர்ட்டிபிகேட் இல்லை என்று சொல்லும்பொழுது அவர்களுக்கு அந்த இன்ஷ்யூரன்ஸ் பணம் கிடைப்பதில் காலதாமதம் அல்லது கிடைக்காமல் போகின்ற ஒரு சூழ்நிலையை அரசு கருதி இன்றைக்கு நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ரெஃப்ரஷர் கோர்ஸ் ஒன்று ஏற்பாடு செய்து, அந்த ரெஃப்ஷர் கோர்ஸ் மூலமாக இரண்டு மாதம் டிரெயினிங் கொடுத்து ஏறக்குறைய 15,000 விசைப்படகு ஓட்டுநர்கள் இதனால் இந்த டிரெயினிங் பெற்று அவர்கள் பயன்பெற இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த விசைப்படகு உரிமையாளர்களுக்கும் இதிலே நன்மை இருக்கின்றது; விசைப் படகு ஓட்டுநர்களுக்கும்–அவர்களுக்கும் Practice makes perfect என்று சொல்லுவார்கள்; Education is horse; experience is jockey என்று சொல்லுவார்கள். அதைவிட அனுபவத்திலே அவர்கள் ஏறக்குறைய 15 வருஷங்களாக அவர்கள் பல்வேறு அனுபவம் பெற்றதன் காரணமாக அவர்களுக்கு இரண்டு மாதம் டிரெயினிங் கொடுக்கப்பட்டு அந்த அடிப்படையிலே இந்த சர்ட்டிபிகேட் கொடுப்பதன் காரணமாக இந்த 15,000 விசைப் படகு மீனவர்கள் பயன் பெறுகின்ற ஒரு சூழ்நிலையை இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திற்கு மிகவும் சுவையானதும் மற்றும் உண்மையானதுமான தகவலைத் தர விரும்புகிறேன்.

மவுத் புருடர் என்பது ஒருவகை மீன். இந்த வகை மீன்கள் தங்களது குஞ்சுகளை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாக உள்ளன. இவ்வகை மீன் குஞ்சுகள் பெற்றோரின் அருகிலேயே நீந்துகின்றன. இக்குஞ்சுகளுக்கு ஆபத்து ஏதாவது ஏற்படும் நிலை உருவானால் இவ்வகை மீன்கள் தங்களது குஞ்சுகளை வாய்க்குள்

நுழைத்துக் கொள்ளும். இக்குஞ்சுகளும் பெற்றோரின் வாய்க்குள் பத்திரமாக இருக்கும். பெரிய மீன்கள் மறந்தும் குஞ்சுகளை விழுங்கி விடுவது இல்லை. ஆபத்து விலகியதும் இக்குஞ்சுகளைப் பெரிய மீன்கள் வெளியேவிடும்.

இதேபோல ஆப்ரிக்கக் கடல்களில் சிக்–லிப் என்ற ஒருவகை மீன், தான் இடும் முட்டைகளைத் தனது வாய்க்குள்ளே வைத்துக் கொண்டு குஞ்சு பொரிக்கும். பொரித்த குஞ்சுகளைத் தண்ணீரில் நீந்த வைத்துப் பார்க்கும். ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் தனது மீன் குஞ்சுகளை வாய்க்குள் இழுத்துக்கொண்டு ஆபத்து விலகியதும் மீன் குஞ்சுகளை மீண்டும் தண்ணீருக்குள் விடும்.

இந்த சிக்–லிப் மற்றும் மவுத் புருடர் போன்ற மீன்களைப் போல நமது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் தமிழக மக்களைக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்து மக்கள் வாழ (மேசையைத் தட்டும் ஒலி) ஆபத்தற்ற அமைதியான சூழ்நிலையை உருவாக்கி வளமாக வாழ வைத்துக் கொண்டுள்ளார். அவருக்கும் தமிழக மக்களுக்கும் எதிரிகளால் ஆபத்து இருக்கும் என்ற நிலை தெரிந்தும் ஆபத்துக்களைத் தானே சந்தித்து, தமிழக மக்களுக்கு அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்த வகையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் மேற்கூறிய மவுத் புரூடர் மற்றும் சிக்–லிப் போன்ற மீன் வகைகளைப் போல தமிழகத்தையும், தமிழக மக்களையும் பாதுகாத்து வருகிறார் என்று தெள்ளத் தெளிவாகக் கூறலாம்.

இதைப்போல சக்கர் மீன்–சக்கர் ஃபிஷ் என்ற ஒருவகை மீன் உள்ளது. இந்த மீன்கள் சுயமாகக் கடலில் பல இடங்களுக்கு வேகமாகச் சென்று உணவைத் தேடித் திரிய முடியாது. தான் உழைக்காமல் அடுத்தவர் உழைப்பில் பிழைப்பு நடத்தும் இந்த மீன்கள், வேகமாகச் செல்லக்கூடிய சுறா மீனின் முதுகில் ஒட்டிக்கொண்டு சவாரி செய்யும். அவ்வாறு சவாரி செய்யும்பொழுது அக்கம் பக்கத்தில் சென்று தனது இரையை எடுத்து உண்ணும். உடனே சுறா மீனின் உடலில் மீண்டும் வந்து ஒட்டிக் கொள்ளும். இந்த வகை சந்தர்ப்பவாதி மீன்கள் சுயமாக உழைக்கத் தெரியவிட்டாலும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர் முதுகில் சவாரி செய்து வாழ்க்கை நடத்தும்.

நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுறா மீனைப் போன்று அரசியல் கடலில் வேகமாகச் சென்று எதையும் சாதிக்கும் திறன் படைத்தவர். சக்கர் மீன்களைப்போல சில அரசியல்வாதிகள் நமது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உதவியால் அரசியல் கடலில் சவாரி செய்து வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்கள் எங்கேயாவது, யாரிடமாவது ஒட்டிக்கொண்டுதான் பிழைப்பு நடத்த முடியும். அவர்களால் சுறா மீனை என்ன செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீன் பாஷையிலேயே அமைச்சர் சொல்லுகிற பதில் அபாரம். (குறுக்கீடு) பாராட்டத்தான் செய்தேன். மீன் பாஷையிலேயே பதில் சொல்லுகிறீர்கள். பரவாயில்லை என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 8-30

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் கவிதையிலேயே சொன்னார்கள். நான் இவ்வாறு சொல்கிறேன்.

மகாபாரத சகுனியின் தாயக்கட்டை சூழ்ச்சியில் தர்மம் புதுப்பொலிவு பெற்று வெற்றி கொண்டது. அதுபோலத்தான் இன்றைய சகுனியும் கைத்தடி துணை கொண்டு சூழ்ச்சி செய்யப் பார்க்கிறார். இருப்பினும் தர்மத் தேவதையாக திகழும் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சூழ்ச்சியை கவ்வச் செய்து, தர்மத்தை நிலைநாட்டுவார்கள் என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய கோட்டையையும் பிடித்துக் காட்டப் போகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நமது முதல்வர் தமிழக மக்களின் மகா சக்தியாக, மக்கள் பலம் கொண்ட நிரந்தர தலைவியாக திகழ்கிறார். நல்லவர்களுக்கு தெளிந்த நீரோடையாக, அமைதியாக காட்சி தருகிறார். தீயவர்களுக்கு ஆர்ப்பரிக்கும் அலைகடல் போல் காட்சி தருகிறார். கருணை காட்டும்போது உயரத்தில் இருந்து பொழியும் அருவி ஆகிறார். துரோகிகளுக்கு சுட்டெரிக்கும் நெருப்பாக காட்சி தருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டர்களுக்கு தென்றலாய் வந்து துயர் துடைக்கிறார், மக்களுக்கு தேன் அமுதை பொழிகிறார். மீனவர்களுக்கு குல விளக்காய் திகழ்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

இதுவரையில் கூறிய தகவல்கள், மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனைகளுக்கும், வெட்டுத் தீர்மானங்களுக்கும், கோரிக்கைகளுக்கும், திருப்தி அளிக்கும் வகையில் பதிலுரையாக

அமையும் எனக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் ஒரு சில ஆலோசனைகளோ, அல்லது கருத்துக்களோ அல்லது வெட்டுத் தீர்மானங்களோ பதில் அளிக்காமல் விடுபட்டிருந்தால் அவை மாமன்ற குறிப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கை எண் 21–மீனளம் என்ற மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலசுப்பிரமணியன்.

திரு. வெ. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலை பகுதியிலே கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவ மக்கள் வாழ்கிறார்கள். இவர்களிலே பெரும்பாலானவர்கள் நொச்சிக்குப்பம், நொச்சி நகர், சீனிவாசபுரம், ஊரூர் குப்பம் ஆகிய பகுதிகளிலே வாழ்கிறார்கள். இவர்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பல பகுதிகளிலே அந்தக் கட்டிடங்கள் வாழ்வதற்கு பாதுகாப்பு இல்லாத நிலையிலே பழுதடைந்து உள்ளன. ஒரு சில இடங்களிலே அவை பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு வீட்டுவசதி திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இந்த வீட்டுவசதி திட்டங்கள் என் பகுதியிலே இருக்கின்ற இந்த மீனவர்களுக்கு ஏதேனும் வகையில் பயன்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைப் பொறுத்தமட்டில் சென்னைக்கு அந்தத் திட்டம் இல்லை. சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில்தான் அந்தத் திட்டம் செயல்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வியா? திரு. பாலசுப்பிரமணியன்.

திரு. வெ. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடியிருப்புகளின் நிலைமைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, அந்தப் பகுதியிலே சிறப்புக் கவனம்

செலுத்தி, அந்த மீனவர்கள் வாழ்கின்ற வீட்டுவசதி வாரியக் கட்டிடங்களை பழுது பார்ப்பதிலே தனிக் கவனம் செலுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் கட்டப்பட்டிருக்கின்ற அந்த வீடுகள் எல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள். குடிசை மாற்று வாரியத்திலே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளை பழுது பார்க்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். மீன்வளத் துறையின் மூலமாக குடிசை மாற்று வாரியத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில நீண்டநெடிய கடற்கரை இருப்பதால் அநேக மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்படையாலும், விடுதலைப் புலிகளாலும் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களைப் பாதுகாக்கின்ற முகமாக, நிரந்தரத் தீர்வு காணுகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு கலந்து பேசி, பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிரந்தரமாக, மத்திய அரசினுடைய திட்டத்தையும் பெற்று, மாநில அரசும் கொடுக்கின்ற அளவுக்கு equal-ஆக அவர்களும் கொடுத்ததையும் முன்நிறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரந்தரமாக இந்த மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் ஏதேனும் மத்திய அரசிடமிருந்து வாக்குறுதியை பெற்றுத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து, போற்றுதலுக்குரிய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 6 முறை பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்றால், என்னென்ன நடவடிக்கைகள் மத்திய அரசு எடுக்க வேண்டுமென்ற கருத்தையும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சுதந்திர தினத்தன்று கோட்டையிலே கொடி ஏற்றி வைத்தபோது, இதற்கு ஒரு தீர்வு இலங்கை கச்சத் தீவை மீட்பதுதான் என்றார்கள். அதுமட்டுமல்ல, கச்சத் தீவை மீட்பதற்கு

இந்த மாமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். இதுவரையிலும் பதில் இல்லை. அதுமட்டுமல்ல. இன்றைக்கு நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்கள் மீனவர்கள் தாக்கப்படும்போது போர்க் குரல் எழுப்பியதன் காரணமாக இன்றைக்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, அந்தக் குழுவிலே மத்திய அரசினுடைய அதிகாரிகள் இருக்கின்றார்கள்.

பிற்பகல் *8–35*

அந்த அடிப்படையில் இன்னொரு கருத்தை நமது புரட்சித் தலைவி அவர்கள் பாரதப் பிரதமருக்கு விரைவில் தெரிவிப்பார்கள். ஏற்கனவே 27–ஆம் தேதி சென்னை கோட்டையில் ஒரு கூட்டத்தை நடத்தி அந்தக் கூட்டத்திற்கு நேவி, கோஸ்ட் கார்ட் மற்றும் எல்லோரையும் அழைத்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற ஒரு கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக அதிகமான மீனவர்கள் கிராமங்களில் பிடிக்கின்ற மீன்களை நகர்ப்பகுதிக்கு எடுத்துச் செல்கிறபோது போக்குவரத்துப் பிரச்சினை ஏற்படுகிறது. அவற்றை ஏற்றுவதற்கு மிகுந்த கஷ்டமான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குறிப்பிட்ட நேரங்களில் தனியார் பேருந்துகளிலோ, நகரப் பேருந்துகளிலோ அவற்றை ஏற்றிச் செல்கிற வகையில் வசதி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் பேசும்போது மீனவர்களுக்கென்று தனியாக ஒரு பேருந்து விடவேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்தவுடன் மீன்வளத்துறை மூலமாக போக்குவரத்துத் துறையின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டு அறிவுரைகள் அந்த எம்.டீ.களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. அதாவது பேருந்தில் பின் சீட்டிலே மட்டும் மீனவ மகளிர் மீன்களை

எடுத்துச் செல்லக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்ய போக்குவரத்துத் துறையின் மூலமாக அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இவ்வாறு மீன்வளத்துறையின் மூலமாக போக்குவரத்துத் துறைக்கு இது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்நாட்டு மீனவர்கள் பற்றி திருமதி சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக நிரந்தர முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடற்கரையோரங்களில் இருக்கின்ற மீனவர்களுக்கு இலவச வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறார்கள். அதுபோல் உள்நாட்டு மீனவர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்படுமா? எனது தொகுதியில் மேட்டூர் அணையிலிருந்து ஊத்துமலை வரை 2000-க்கும் மேற்பட்ட நபர்கள் மீன்பிடிப்பதற்கான லைசன்ஸ் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இலவச வீடு கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உள்நாட்டு மீனவர்களாக இருந்தாலும் சரி, கடலோர மீனவர்களாக இருந்தாலும் சரி அரசு அவர்களை ஒரேமாதிரியான மீனவர்களாகத்தான் கருதுகிறது. ஆனால் உள்நாட்டு மீனவர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் கடலோர மீனவர்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். கடலோர கிராமங்களில் இருக்கின்ற மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கடல் தொழிலை மட்டுமே நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழில் இல்லை என்றால் சும்மா வீட்டிலேயே இருப்பார்கள். ஆனால் உள்நாட்டு மீனவர்கள் அப்படி இல்லை. அவர்களுக்கு பலதரப்பட்ட தொழில்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் கடலோர மீனவர்களுக்குப் பிரச்சினைகள் அதிகமாக இருப்பதால் அந்த அளவுக்கு அவர்களுக்குச் செய்யவேண்டும் என்ற அந்தக் கருத்தை வைத்துத்தான் இன்றைக்கு அவர்களுக்காக இலவச வீடுகளைக் கட்டுவதற்காக நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வோராண்டும் 5,20,00,000 ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொரு தகவலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் இந்திரா அவாஸ் யோஜனா என்று

சொல்லக்கூடிய திட்டங்களின் கீழ் ஓ.பி.சிஸ் என்று சொல்லக்கூடிய 'அதர் பேக்வர்ட் கம்யூனிட்டிஸ்'-க்கும் கூட இன்றைக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆங்காங்கே அப்படிப்பட்ட உள்நாட்டு மீனவர்கள் இருந்தால், அவர்கள் மீன்வளத்துறைக்கு மனுக்களைத் தந்தால் உள்ளாட்சித் துறையின் மூலமாக அந்த உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோடிமாரி மற்றும் திரு. குப்பன் நீங்கள் இருவரும் நாள்தோறும் அமைச்சரைக் கஷ்டப்படுத்துகிறீர்கள். இரண்டுபேரும் பேசியிருக்கிறீர்கள். அமைச்சரிடம் இருக்கிற குறிப்பு பூராவும் உங்களிடம் வந்தால்தான் திருப்தி அடைவீர்கள் போல் தெரிகிறது. திரு. க. குப்பன்.

திரு. க. குப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியபோதே இந்தக் கோரிக்கையை வைத்தேன். என்னுடைய தொகுதியில் கடலரிப்பு அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கே காசிவிசுவநாத குப்பம் மற்றும் நல்லதண்ணீர்ஓடைக்குப்பம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இப்போது தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் குடியேறி இருக்கிறார்கள். மீனவர்களைக் காப்பாற்றக்கூடிய சூழ்நிலையில் இருப்பது மீன்வளத்துறைதான். எனவே அந்தத் துறையின் மூலம் மீனவர்களுக்கு அந்த இடத்தைப் பெற்றுத் தந்து பட்டா கொடுக்கிற வகையில் மீன்வளத்துறை ஏற்பாடு செய்யுமா? அது எவ்வளவு விரைவில் முடித்துக்கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத்துறையின் மூலமாக நிலம் கையகப்படுத்துவதில்லை. ஆனால் மிகப் பிற்பட்டவர்களாக மீனவர்கள் இருக்கின்ற காரணத்தால் பிற்பட்டோர் நலத்துறை மூலமாக அந்த வேலையைச் செய்வதற்கு நம்முடைய மீன்வளத்துறை ஏற்பாடுகள் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருடத்திற்கு இரண்டாயிரம் வீடுகள் கட்டித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் நாகப்பட்டினத்தில் மீனவர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அதுவும் வருடத்திற்கு ஒருமுறை புயல் அடிக்கின்ற ஊராக இருக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சரிடம் கடந்த நான்கு வருடங்களாக என்னுடைய தொகுதியில் லாகூர், ஆதிநாயுடுத் தெரு, கிச்சான்குப்பம், கல்லார் போன்ற ஊர்களில் இதுவரைக்கும் மீனவர் குடியிருப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் கேட்ட பட்டாக்களும் கொடுத்திருக்கிறேன். இதுவரைக்கும் என்னுடைய தொகுதிக்கு அவர் ஏன் கட்டித் தரமாட்டேன் என்கிறார் என்று தெரியவில்லை. ஆகவே இந்த ஆண்டு இந்த கிராமங்களுக்கு வீடு கட்டித் தரவேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பட்டா இல்லை என்று திரும்பி வந்திருக்கிறது. அப்பொழுது உண்மையிலேயே எல்லா கிராமங்களுக்கும் பட்டா வாங்கவில்லை. ஆனால் இந்த வருடம்தான் அந்த குறிப்பிட்ட கிராமங்களுக்கு பட்டா வாங்கி என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதுவும் ஒவ்வொரு கிராமத்திற்கும் 200, 300 வீடுகள் என்று ஒரே நேரத்திலே அக்கரைப்பேட்டைக்கோ அல்லது நாகப்பட்டினத்திற்கோ செய்துவிட முடியாது. இந்த இரண்டாயிரம் வீடுகளை அந்த கிராமங்களில் உள்ளவர்களுக்கு பிரித்துக் கொடுக்க முடியும். அந்த அடிப்படையிலே தேவையைக் கருதி அவர் சொல்கின்ற கிராமங்களிலே ஆய்வு செய்து பட்டா இருந்தால் அந்த இடங்களிலே மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்கின்ற அடிப்படையிலே இந்தத் தொகுதியும் கருதப்பட்டு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை ஏதாவது திருப்திப்படுத்தி விடுங்கள். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுக் கப்பல்கள் தமிழ்நாட்டு எல்லைக்குள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்ததை எதிர்த்து ஆட்சேபனை செய்து, மீனவர்கள் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்துகிறார்கள். இதைப் போக்குவதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆழ்கடலில் மீன் பிடிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு தெளிவாக இருக்கிறது. அதை விரும்பவில்லை, எதிர்க்கின்றோம். அதேநேரத்தில் மீனவர்கள் மத்தியிலும் பலத்த எதிர்ப்பு இருக்கின்றது. நான் ஏற்கனவே சொல்லியபடி நம்முடைய மீனவர்களிடத்திலே நல்ல அறிவும் ஆற்றலும் இருக்கின்றன. நீண்டதூரம் சென்று எப்படிப்பட்ட மீன்களையெல்லாம் பிடிக்கின்ற வல்லமை இருக்கின்றது. ஆனால் போதுமான அளவுக்கு நிதி இல்லை. அதற்குத் தேவையான திட்டங்களை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி தேவையான அளவு நிதி கொடுங்கள் இங்கே மீனவர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் நீண்டதூரம் சென்று மீன் பிடித்து வருவார்கள் என்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பில் நான் டெல்லி சென்று அங்கே சென்ட்ரல் போர்டு ஆப் பிஷரீஸ் கூட்டத்தில் கலந்து கொண்டபோது நம்முடைய கருத்தை ஆணித்தரமாக அங்கே எடுத்து வைத்துள்ளோம். எனவே, வெளிநாட்டுக் கப்பல்கள் இந்திய எல்லைக்குள் மீன் பிடிப்பதை நமது அரசு விரும்பவில்லை என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 21-மீனளம்.

(இ) கோரிக்கை எண் 21-மீனளம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மீனளம் பற்றி 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.28,49,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும நாளை (4–5–1995) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

121. 1993–94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். (1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

160. மானியக் கோரிக்கை எண் 23–கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கம், 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

161. மானியக் கோரிக்கை எண் 46––செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

162. மானியக் கோரிக்கை எண் 21––மீனளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

163. மீனளத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

164. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

தலைவி அவர்கள் அந்தக் கோப்பிலே கையொப்பம் இட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னாலே நிதி ஒதுக்கீடு செய்தும் இதுவரையிலும் செயல்படுத்தாமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதனையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பன்னெடுங்காலமாக குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்த மணவாளன் நகர் பகுதிக்கு *35* லட்ச ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கப்பட்டு அங்கு குடிநீர்ப் பணிகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மணவாளன் நகர் பேரூராட்சி போன்ற ஒரு பெரிய நகரம். அந்த நகரத்திலே ஒரே ஒரு கூட்டுறவுக் கடைதான் இயங்கி வருகிறது. எனவே, அந்தக் கூட்டுறவுக் கடையை இரண்டாகப் பிரித்து மணவாளன் நகரிலிருந்து கபிலர் நகருக்கு ஒரு கூட்டுறவு அங்காடியை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த இனிய வாய்ப்பினை தந்தமைக்காக பேரவைத் தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்.

8. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32-ஐ தளர்த்துதல்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ *4-5-1995* அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகின்றேன்.

மறுப்போரே இல்லை

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு இவ்வாறு செய்வது போல் தோன்றுகிறதே . திரு. செ.து. வரதராஜன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு--தொடர்ச்சி

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகின்ற வாய்ப்பு கிடைக்குமா என்ற ஒரு ஐயம் இருந்தது. இருப்பினும் நான் பேசுவதற்கு காங்கிரஸ் கட்சித் தோழர்கள் மிகத் தடையாக இருந்தார்கள் என்று நினைத்தபோது, அவர்கள் வெளியில் சென்ற பிறகு கூட மைக்கை கையிலே எடுத்துக் கொண்டு சென்றதால்-- அந்த அவல நிலையை பார்த்த பிறகு நமக்கு பேச வாய்ப்பு கிடைக்குமா என்ற ஐயம் இருந்தது. உடனே என்னுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் எப்படியும் எத்தனை தங்கு தடைகள் வந்தாலும் அதை உடனே தீர்த்து விடுகின்ற வகையில் செயல்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் நான் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு என்னுடைய தலைவிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள், எதிர்க்கட்சித் தோழர்கள், தமிழக அரசு ஏழை மக்கள் பயன்படுத்தும் அரிசி விலையை உயர்த்தி, பின்பு அரிசி விலையை குறைத்தது ஒன்றும் சாதனையில்லை என்கிறார்கள். மத்திய அரசு பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் டீசல், பெட்ரோல், கிரோஸின், சர்க்கரை, இரும்பு, சிமெண்டு, தபால், டெலிபோன், ரயில் பயண டிக்கெட்டுகள், பிளாட்பார்ம் டிக்கெட்டுகள், உரம் போன்ற பொருள்கள் விலையை உயர்த்தி உள்ளார்களே, இந்த விலையை இவர்கள் குறைப்பதற்குத் தயாரா என அறிய விரும்புகிறேன்.

விவசாயப் பொருட்கள் நல்ல உற்பத்தியும் ஜனபெருக்கம் இல்லாத முன் காலத்தில், முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எலிக் கறியையும், கடலை பிண்ணாக்கையும் சாப்பிடச் சொன்னார்கள். அது

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும நாளை (4–5–1995) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

121. 1993–94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். (1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

160. மானியக் கோரிக்கை எண் 23–கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கம், 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

161. மானியக் கோரிக்கை எண் 46––செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

162. மானியக் கோரிக்கை எண் 21––மீனளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

163. மீனளத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

164. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும நாளை (4–5–1995) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

121. 1993–94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். (1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

160. மானியக் கோரிக்கை எண் 23–கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கம், 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

161. மானியக் கோரிக்கை எண் 46––செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

162. மானியக் கோரிக்கை எண் 21––மீனளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

163. மீனளத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1995–96. (தமிழ், ஆங்கிலம்).

164. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

இணைப்பு-I

(102 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கூட்டுறவுத்துறையின் கொள்கை விளக்கம்

1995-96

அத்தியாயம் 1

மனித நாகரீகத்தின் அடிப்படையாக விளங்குவது கூட்டுறவாகும். சமுதாய வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமே ஒருவரையொருவர் சார்ந்து வாழ்தலும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ்தலுமேயாகும்.

பலதரப்பட்ட மக்கள் வாழும் சமுதாயத்திலிருந்து எந்த ஒரு சக்தியின் தூண்டுதல் இல்லாமலும், அவரவரிடையேயிருந்து இயற்கையாக, தானாக எழும் ஒருமித்த உணர்வு மற்றும் கூட்டுறவு முயற்சியே கூட்டுறவின் வித்தாகும்.

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கூட்டுறவு பெரிதும் உதவி புரிகிறது. கூட்டுறவு நிறுவனத்தின் நோக்கமே பல்வேறு தரப்பட்ட மக்களின் பொருளாதார தேவைகளை அவர்களின் ஒட்டுமொத்த முயற்சியின் மூலம் பெற வழிகாட்டியாக விளங்குவதேயாகும். பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் செல்வம், வருமானம் ஒருசிலரிடமே சென்று சேருதல், ஏழை எளியவரைப் பணக்கார வர்க்கத்தினர் சுரண்டுதல், ஏமாற்றுதல் போன்ற செயல்களை முறியடித்து தீர்வு காண்பது என்பது கூட்டுறவு என்ற ஒரு இயக்கத்தினால் மட்டுமே முடியக் கூடிய செயலாகும். சமபகிர்வு பங்கீடு நியதியை உயர்த்துவதுடன், உற்பத்திக்குத் தேவையான நிலம், மனித உழைப்பு, மூலதனம் மற்றும் நிர்வாகம் போன்றவற்றிடையே சம வாய்ப்புப் பெற ஒன்றுக்கொன்று எந்தவிதத்திலும் ஏற்றத்தாழ்வு காணாத வகையில் சீரான பொருளாதார உறவுகளை நிலை நிறுத்த கூட்டுறவு பாடுபடுகிறது.

கூட்டுறவு என்பது ஒரு புனிதமான கொள்கையாகும். எனவே இதன் மூலம் நியாயமான, அறிவுபூர்வமான நாகரீகமிக்க சமுதாயத்தை ஏற்படுத்த தூண்டுகோலாக உள்ளது. அனைத்து மக்களும்

அமைதியுடனும், அறநெறியுடன் கூடிய வளமும் பொருந்திய வாழ்வு பெற வழிவகை செய்கிறது.

மேற்கூறிய இவ்வெண்ணங்களைக் கருத்திற்கொண்டு தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் வளமான வாழ்க்கை நெறியை நோக்கிப் பீடு நடை போடுகின்றன.

தமிழ்நாடு, இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்திற்கு ஈடுஇணையற்ற முன்னோடியாக விளங்கும் சிறப்பு பெற்றது. தமிழகத்தில் கூட்டுறவு இயக்கமானது தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாகவும், மக்களின் பெரும்பாலும் கிராமப்பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கியமான பங்கினையும் ஆற்றி வருகின்றது. நம் மாநிலத்தில் உள்ள பல்வகை கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்கு ஏற்ற உதவிகள் செய்து வருகின்றன. நடைமுறையில் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவு இயக்கம் பரவாத முக்கிய இனங்கள் ஏதுமில்லையெனுமளவிற்கு அதன் வளர்ச்சி தெளிவாகப் புலப்படுகிறது.

2. 1955-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இருந்தன. 1956-57 ஆம் ஆண்டு முதல் சிலவகையான சங்கங்கள் பிற துறைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் அத்துறைகளின் தலைவர்கள் கூட்டுறவு சங்கங்களின் சட்டத்திலுள்ள பதிவாளரது அதிகாரங்களை மேற்கொண்டு செயல்பட மாற்றப்பட்டன. தற்போது கூட்டுறவு சங்க பதிவாளரைத் தவிர 13 இதர பதிவாளர்கள் உள்ளனர்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இயங்கும் சங்கங்களின் பெரும்பான்மையான நடவடிக்கைகள், கடன் வழங்குதல், நுகர்பொருள் விற்பனை மற்றும் விளைபொருள் கொள்முதல் மற்றும் இதர நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களின் மொத்த ஆண்டு வியாபாரத் தொகை ரூ. 7606.55 கோடியாகும். இத்தொகையானது உண்மையிலே வியக்கத்தக்கதொன்றாகும். பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய எண்ணிக்கை விவரங்களும், அச்சங்கங்களின் ஆண்டு வியாபார அளவு விவரங்களும் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

வ.எண்.	சங்கங்களின் வகைகள்	சங்கங்களின் எண்ணிக்கை	ஆண்டு வியாபார அளவு (ரூ. லட்சத்தில்)
1.	தலைமை கூட்டுறவு நிறுவனங்கள்	6	2,53,012.16
2.	மத்திய கூட்டுறவு வங்கிகள்	20	2,22,756.87
3.	மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்	29	58,700.00
4.	தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்	1	3,858.00
5.	மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள்	17	85.94
6.	கூட்டுறவு அச்சகங்கள்	18	252.79
7.	கூட்டுறவு பயிற்சி நிலையங்கள்	9	41.05
8.	தொடக்க கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்	113	28,973.00
9.	தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவை சங்கங்கள் மற்றும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களையும் சேர்த்து)	4655	63,543.00
10.	தொடக்க நிலவளவங்கிகள்	181	11,285.00
11.	கூட்டுறவு நகர வங்கிகள்	125	48,097.00
12.	பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள் (பல மாவட்டங்களை உள்ளடக்கிய பணியாளர்கள் கூட்டுறவு சங்கங்களையும் சேர்த்து)	1707	40,002.00
13.	தொடக்க மற்றும் மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலைகள்.	3712	26,434,28
14.	தொழிலாளர் ஒப்பந்த மற்றும் கட்டுமான கூட்டுறவு சங்கங்கள்	213	314.71
15.	ஊரக மின்சாரக் கூட்டுறவு சங்கங்கள்	3	341.59
16.	இதரவகை கூட்டுறவு சங்கங்கள்	482	2,957.84
		11,291	7,60,655.23 இலட்சங்கள் அல்லது 7606.55 கோடிகள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்கு மூலதனத்தின் 31-3-94-ல் நிலுவையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	31-3-94-ல் நிலுவை (ரூபாயில்)
1.	தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி	14,28,21,830
2.	தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி	1,26,00,000
3.	தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்	4,41,05,532
4.	தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்	1,20,08,284
5.	தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்	15,29,152
6.	மத்தியக் கூட்டுறவு வங்கிகள்	20,62,43,840
7.	நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்	5,98,83,214
8.	பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்	85,04,980
9.	தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவு பண்டகசாலைகள்	2,87,200
10.	பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவு சங்கங்கள்	3,68,000
11.	ஊரக மின்சாரக் கூட்டுறவு சங்கங்கள்	1,03,00,000
12.	கட்டுமானக் கூட்டுறவு சங்கங்கள்	3,80,000
13.	உப்புத் தயாரிப்போர் கூட்டுறவு சங்கங்கள்	36,850
14.	உடல் ஊனமுற்றோர் கூட்டுறவு சங்கங்கள்	1,40,000
15.	கூட்டுறவு அச்சகங்கள்	46,790
16.	வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வேளாண்மை கூட்டுறவு வங்கிகளையும் சேர்த்து.	30,84,63,878
17.	தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை களையும் சேர்த்து.	91,18,642
18.	கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்	14,55,47,113
19.	நகரக் கூட்டுறவு வங்கிகள்	18,73,809
20.	தொடக்கக் கூட்டுறவு நிலவளவங்கிகள்	1,68,46,671
21.	காமராஜர் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் ஐசிடிபி. திட்டம்	4,19,79,305
	மொத்தம்	**1,02,30,85,110**

(அ) ரூ. **102.31** கோடிகள்.

2. பொது முன்னேற்றம்:

கூட்டுறவுத்துறையில் 10 பெரும் குறிக்கோள்களான விவசாயக் கடன்கள் வழங்குதல், வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல், உரங்கள் விநியோகித்தல், நுகர்பொருட்கள் விநியோகித்தல் போன்ற இனங்களில் 1994-95 ஆம் ஆண்டில் அடைந்த முன்னேற்றம் மற்றும் 1995-96 ஆம் ஆண்டிற்கு குறியீடு கீழே குறிக்கப்பட்டுள்ளன.

வ. எண். (1)	விவரம் (2)	அலகு (3)	1994-95 ம் ஆண்டுக் கான திட்டம் (4)	ஏப்ரல் '94 முதல் டிசம்பர் '94 வரை அடைந்த முன்னேற்றம் (5)	1995-96 ம் ஆண்டுக் கான உத் தேசிக்கப் பட்டுள்ள திட்டம் (6)
1.	குறுகிய காலவேளாண்மைக் கடன்கள் வழங்குதல்.	(ரூ. கோடியில்)	450.00	446.50	470.00
2.	நடுத்தர கால வேளாண்மைக் கடன் வழங்குதல்.	,,	55.00	34.83	60.00
3.	குறுகிய கால மற்றும் நடுத்தர கால வேளாண்மைக் கடன் களை வழங்கியதில் மொத் தத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டவை.	சத வீதம்	70%	64.6%	70%
4.	நீண்டகால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல்	(ரூபாய் கோடியில்)	130.00	67.16	150.00
5.	நகையீட்டுக் கடன்கள் வழங்குதல்.	,,	1390.00	1321.32	1450.00
6.	சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாரா பிரிவுக் கடன்கள் வழங்குதல்.	,,	20.00	36.50	21.00
7.	இரசாயன உரங்கள் வழங்குதல்	,,	202.11	170.30	220.00
8.	வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்தல்.	,,	375.00	353.95	400.00
9.	31-3-94/31-3-95-ல் கிடங்கு வசதியின் திரண்ட கொள்திறன்.	ஆயிரம் டன்னில்	709.00	709.00	709.00
10.	நுகர்பொருட்கள் சில்லரை விற்பனை செய்தல்.	(ரூபாய் கோடியில்)	1450.00	1144.92	1700.00

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு:

கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு 1994-95-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1994-95 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு மற்றும் 1995-96 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

திட்டங்களின் விவரம்	1993-94-ம் ஆண்டிற்கான செலவு	1994-95-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்)	1994-95-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு	1995-96-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)	(5)
அ. மாநில திட்டப்பணிகள் :				
1. நெறிப்படுத்தலும் நிர்வாகமும்	0.0226	0.0269	0.0068	0.0068
2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் பாதுகாப்புறுதி மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களில் முதலீடு சேர்ந்தது)	8.3422	3.5707	3.7752	3.7672
3. ஏனைய கூட்டுறவு சங்கங்கள்	0.6360	0.7631	0.7188	0.2283
4. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி	0.0528	0.0200	0.0200	0.0200
5. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்	0.7911	0.7898	0.7898	0.9000
மொத்தம்	9.8447	5.1705	5.3106	4.9223

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திட்டங்களின் விவரம்	1993-94-ம் ஆண்டிற்கான செலவு	1994-95-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்)	1994-95-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு	1995-96-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)	(5)
ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும் தன்னாட்சி நிறுவனங்கள் நிதியுதவி பெறும் திட்டங்களும் (தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் கிராமிய மின்வசதிக் கழகம்) திட்டப்பணிகள்	9.8422	1.4448	3.0510	3.3170
மொத்தம்	**19.6869**	**6.6153**	**8.3616**	**8.2393**
இ. திட்டத்தில் சேராதது	66.4636	58.9739	61.9245	51.1742
மொத்தக்கூடுதல்	**86.1505**	**65.5892**	**70.2861**	**59.4135**

4. *1995-96-ம் ஆண்டின் புதிய திட்டங்கள்.*

1. *விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி.*

வேளாண் மக்கள், தங்கள் வேளாண் விளைபொருட்களை விற்பனை சங்கங்களின் விற்பனை மையத்திற்குக் கொண்டு வந்து நல்ல விலைக்கு விற்க அவர்களுக்கு உதவும்பொருட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவி புரிவதில் பெரும் பணியாற்றுகின்றன. இத்திட்டத்தின்கீழ் அரசு இரண்டு கூட்டுறவு சங்கங்களுக்கு அவைகளின் நடவடிகைகளை மேம்படுத்த ரூ. 4.30 இலட்சம் அளவிற்கு (ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கும்) ஏலகொட்டகையுடன் கூடிய விற்பனைக் கூடம் கட்டவும், உலர்தளம், பயிரிடுவோர் ஓய்வறை, மாட்டுவண்டி, கொட்டகை, லாரிகள் நிறுத்துமிடம் கட்டவும், தரம் பிரிக்கும் இயந்திரங்கள், மற்றும் லாரிகள் வாங்குவதற்கும் 1995-96-ம் ஆண்டிற்கு நிதி உதவி அளிக்க ஆணை வழங்கியுள்ளது. இதற்காக ரூ. 8.60 லட்சம் 1995-96-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கடன் பெறும் திறனை அதிகரிக்க, கூடுதல் பங்குத்தொகை செலுத்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் நிதி உதவி அளித்தல்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வங்கிகளில் போதிய கடன்பெற, தேவையான பங்கு மூலதனம் செலுத்த சிரமப்படுகிறார்கள், என்பதால் அரசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன் பெறும் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கும் பங்கு தொகை செலுத்தும் வகையில் நிதி உதவி அளிக்க திட்டமிட்டுள்ளது. 1995-96-ம் ஆண்டில் 16,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.250 வீதம் ஐந்து ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 50/- வீதம் திரும்பச் செலுத்தும் வகையில், வட்டியில்லா கடனாக அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1995-96 ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 40/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. கூட்டுறவு நகர வங்கிகளில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கூடுதல் பங்குத் தொகை நிதி உதவி அளித்தல் தொடர்பாக.

மாநிலத்தில் மொத்தம் 125 நகர கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. இவைகள் சிறு வணிகர்கள், கைவினைஞர்கள், தனித்தொழில் நடத்துபவர்கள் மற்றும் வீடுகள் விரிவுபடுத்தல், சிறுதொழில் மற்றும்குடிசைத் தொழில்கள் நடத்தல் ஆகிய இனங்களுக்குக் கடன் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளில் 2,40,000 ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கூட்டுறவு நகர வங்கிகளில் ஆதிதிராவிட வகுப்பு உறுப்பினர்கள் கூடுதலாக பங்குத் தொகை செலுத்த வட்டியில்லாக் கடனாக 4000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன்பெறும் சக்தியினை உயர்த்த தலா ரூ. 500/- வீதம் 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 100/- வீதம் திரும்ப செலுத்தும் வகையில் நிதி உதவி அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. எனவே இத்திட்டத்தின்கீழ் ரூ. 20 இலட்சம் 1995-96 ம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம் 2

கூட்டுறவு கடன்

(அ) குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்:

1. அமைப்பு:

தமிழகத்தில் குறுகிய கால மற்றும் நடுத்தரக்கால கடன் வழங்குதலுக்கான கூட்டுறவு கடன் அமைப்பானது (1) மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி (2) மாவட்ட அளவில் மத்திய கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மைத் தவிர பிற காரியங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக) மற்றும் (3) கிராம அளவில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் என மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும்.

2. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்.

மாநிலத்தில் 4655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவை, பயிர் சாகுபடி செலவிற்கான குறுகிய காலக் கடன்களையும், பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை முதலிய வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்கள் மேற்கொள்ள நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. அது மட்டுமின்றி, அவை குத்தகை சாகுபடியாளர்களுக்கு பயிர்க்கடன்களையும், நிலமில்லா விவசாயிகளுக்குத் துணை தொழில்களுக்கான கடன்களையும் வழங்கி வருகின்றன. கடன்கள் தேவையின் அடிப்படையில் ரூ. 65,000/- வரை (அதில் நபர் ஜாமீன் பேரில் ரூ. 45,000/- வரை) வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களில் ரொக்கம் ஒரு பகுதியாகவும், உரம், பூச்சிக்கொல்லிகள், விதை உட்பட இடுபொருட்கள் ஒரு பகுதியாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. குறுகிய காலப் பயிர் சாகுபடி கடன்கள், பயிர் அறுவடை முடிவுற்ற பின்னர் மகசூல் தொகையிலிருந்து அதிக பட்சமாக 15 மாத காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். துணைத் தொழில்களை மேற்கொள்வதற்கான நடுத்தரக் காலக் கடன்கள் 3 முதல் 5 ஆண்டு காலத்திற்குள் முதலீட்டின் மூலமாக பெற்ற

வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களது வைப்பு நிதியைத் திரட்டுவதிலும் கடன் வழங்கலைப் பரவலாக்கி பன் முகப்படுத்துவதிலும் பெருமளவில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. அதிக வைப்புத் தொகைகளை கவரும் நோக்குடன், வைப்புத் தொகைகளுக்கு வணிக வங்கிகள் அளிக்கும் வட்டியை விட 1.5 விழுக்காடு கூடுதலாக வட்டி வழங்க அவை அனுமதிக்கப்பட்டுளளன.

3. மத்திய கூட்டுறவு வங்கிகள்.

மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை தங்களது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மூலமாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஒப்பளிக்கும் கடன் அளவு வரம்புகளிலிருந்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிக்கின்றன. 31-12-1994-ஆம் நாளன்று அரசு வழங்கியுள்ள ரூ. 24.23 கோடி உள்பட, மத்திய கூட்டுறவு வங்கிகளின் மொத்த பங்கு மூலதனம் ரூ. 133.21 கோடியாகும். 31-12-1994-ஆம் நாளன்று இவ்வங்கிகளின் ஒதுக்கிய நிதிகள் ரூ. 157.43 கோடியும், வைப்பு தொகை ரூ.1792.01 கோடியும் ஆகும். 31-12-1994 ஆம் நாளன்று அவை வழங்கிய மொத்த கடன்கள் ரூ. 1777.38 கோடியாகும். மத்திய கூட்டுறவு வங்கிகள் அவற்றின் எல்லைக்குள் செயல்படும் அனைத்து வகையான கூட்டுறவுகளுக்கும் நிதி வசதி அளிக்கின்றன. தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தவிர இதர மத்திய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் 1993-94-ஆம் ஆண்டில் இலாபத்தில் செயல்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றுடன் இணைத்துள்ள சங்கங்களுக்கு அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து வாங்கிய கடன்களிலிருந்தும் நிதி உதவி அளிக்கின்றன. மாநிலத்தில், வேளாண்மைத் தொழிலுக்கு வழங்கப்படும் மொத்தக் கடனில் தோராயமாக மூன்றில் ஒரு பகுதியைக் கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அது போன்றே தமிழகத்தில் வங்கியியல் பிரிவிலுள்ள மொத்த வைப்புத் தொகைகளில் தோராயமாக ஐந்தில் ஒரு பகுதியைக் கூட்டுறவு வங்கிகள் பெற்றுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1995 மே 3]

4. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி:

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905-ஆம் ஆண்டு முதல் வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராக் கடன் வழங்குவதில் முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது. இவ்வங்கி வேளாண்மைக்கான குறுகிய காலக் கடன்கள், வேளாண்மை முதலீட்டிற்கான நடுத்தரக் காலக் கடன்கள், நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள், நெசவுத் தொழிலுக்கான நிதி உதவி மற்றும் விளைபொருள் அடமானக் கடன்கள் (Produce Pledge loan) முதலியவற்றிற்குத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் நிதியுதவியைப் பெற்று வழங்குகிறது. இவ்வங்கி, உர வியாபாரம், அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம், பொதுவான வியாபாரப்பணி, சர்க்கரை ஆலைகள், நூற்பாலைக்கான நடைமுறை மூலதனம், காலக் கடன்கள் (Term loans) போன்றவற்றிற்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கும் நிதி வசதிகளுக்கு ஈடு செய்யும் காசுக் கடன் (Cash credit) ஒப்பளிப்பு செய்வதில் முக்கிய பணி ஆற்றுகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியல் தேவைகளுக்கு அவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள, அரசுக் கடன் பத்திரங்கள், நிலை வைப்பு (Fixed deposit) ஆகியவற்றின் பேரில், அதிகப்பற்று (Over draft) வசதிகளையும், அனுமதிக்கிறது. இவ்வங்கி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (கோ-ஆப்டெக்ஸ்) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து சாகுபடியாளர் இணையம் போன்ற பிற தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரிடையாக நிதி வசதி அளித்து வருகிறது. தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம், கிடங்குகளின் சேமித்து வைக்கும் திறனை அதிகரிக்க உலக வங்கியின் சேமித்து வைக்கும் திட்டம் -3-ன் உதவியின் (World Bank Storage Project-III Assistance)ன் கீழ் திட்டத்தினை செயல்படுத்தும் முகமையாக, தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களாக கூட்டுறவு நூற்பாலைகள்/ கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோ ஆப்டெக்ஸ், சாகோசெர்வ், இன்கோசெர்வ்,

134 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் ஆகியவை இந்த உதவியால் பெருமளவு பயன்பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31-12-1994 அன்றுள்ளபடி, தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திலிருந்து பெறப்பட்ட கடன் ரூ. 9.62 கோடியாகும்.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்பெறச் செய்வதற்குத் தொடக்க கூட்டுறவு மேம்பாட்டு நிதி (Primary Co-operative development fund) மாநில வங்கி அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தங்களது நிகர இலாபத்திலிருந்து 5 விழுக்காடு அளவிற்கு, இந்த மேம்பாட்டு நிதிக்கு என அளிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் 31-12-1994 வரை செலுத்தியுள்ள தொகை ரூ. 244.69 இலட்சமாகும். தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, அதன் கடன் திட்டங்களைப் பங்கு மூலதனம், ஒதுக்கீடுகள், மற்றும் வைப்புக்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. 31-12-1994 ஆம் நாளன்று, தலைமை வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 11.53 கோடி, (இதில் அரசின் பங்கு ரூ. 1.26 கோடி) வைப்புத் தொகை ரூ. 723 கோடி) ஒதுக்கிய தொகை (Reserve Fund) ரூ. 46.78 கோடி மற்றும் பெற்ற கடன்கள் ரூ. 685.78 கோடி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI) சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெறும் மறு நிதி வசதியைக் கொண்டு இவ்வங்கி 31-12-1994 ஆம் நாளன்று வழங்கிய கடன்களின் அளவு ரூ. 1284.40 கோடியாகும். 31-12-1994 ஆம் நாளன்று இவ்வங்கியின் நடைமுறை மூலதனம் ரூ. 1594.01 கோடியாகும். இவ்வங்கி 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 8.10 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 1992-93 ஆம் ஆண்டிற்கு 14 விழுக்காட்டளவிற்கு ஈவுத் தொகை வழங்கியுள்ளது.

தேசிய மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பிலிருந்து (NAFSCOB) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அதன் அனைத்து செயல்பாடுகளுக்கும் 1985-86-ஆம் ஆண்டு முதல் 1990-91 வரை (1989-90 ஆம் ஆண்டு தவிர) தொடர்ந்து பரிசு பெற்றுள்ளது பெருமை படக்கூடியதாகும். 1989-90ஆம் ஆண்டு சமூக மேம்பாட்டிற்கான இலக்கினை (Social Goal Development) அடைந்ததற்கான பரிசினைப் பெற்றுள்ளது.

1995 மே 3]

5. கடன் வழங்குதல்.

ஏழாவது ஐந்தாண்டுத்திட்ட காலம் 1990-91 - 1991-92, 1992-93, 1993-94 மற்றும் 1994-95 ஆம் ஆண்டுகளில் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக்கடன்கள் வழங்குதலில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:-

(ரூ. கோடியில்)

ஆண்டு	குறுகிய காலப் பயிர் சாகுபடிக் கடன்கள்		துணைத் தொழில்களுக் கான நடுத்தரக்கால வேளாண்மைக கடன்கள்		வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய காலம் மற்றும் நடுத்தரக் காலம்)
	திட்டம்	முன்னேற்றம்	திட்டம்	முன்னேற்றம்	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1985-86	135.00	130.88	20.00	20.14	151.02
1986-87	160.00	162.45	20.00	25.32	187.77
1987-88	185.00	186.82	22.00	34.03	220.85
1988-89	215.00	205.04	30.00	40.14	245.18
1989-90	250.00	233.84	37.55	41.11	274.95
1990-91	260.00	243.98	40.00	40.02	284.00
1991-92	275.00	278.52	50.00	44.71	323.23
1992-93	300.00	340.86	55.00	45.75	386.61
1993-94	350.00	439.54	50.00	52.65	492.19
1994-95 (31-12-94 வரை)	450.00	446.50	55.00	34.83	481.33

மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் வேளாண்மைக் கடன் வழங்கல் சீராக அதிகரித்து வருவதும், 1993-94 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் மிகவும் அதிகமென்பதும்

குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். 1995-96 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூ. 470/- கோடியும் நடுத்தரக் காலக் கடனாக ரூ. 60 கோடியும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

6. நில உடமைதாரர்களை கூட்டுறவில் சேர்த்தல் :

ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, அதன் எல்லையிலுள்ள இரண்டு அல்லது மூன்று வருவாய் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களையும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளடக்கியுள்ளன. மாநிலத்திலுள்ள மொத்த நில உடமை விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 77.06 இலட்சம் ஆகும். இதில், சிறு மற்றும் மிகச்சிறு விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 67.58 இலட்சம் ஆகும். 31-12-1994-ஆம் நாள் வரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 87.70 விழுக்காட்டினரும் சிறு மற்றும் விவசாய குடும்பங்களில் 85.40% தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. உடனடி கடன் வழங்கும் திட்டம்.

உடனடி கடன் வழங்கும் திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் ஒன்று 1991-92-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டம் 4482 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 31-12-1994 வரை 3.31 இலட்சம் கடன்தாரர்களுக்குப் பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டுள்ளது. கடன் வழங்கல் முறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறாத உறுப்பினர்களுக்குப் பயிர்க்கடன்களைத் துரிதமாக வழங்குவதை உறுதிப்படுத்தவும், இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

8. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) வழிமுறைகளின்படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன.

1995 மே 3]

1993-94 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய மற்றும் நடுத்தரக்காலக் கடனின் அளவும், 1994-95 ஆம் ஆண்டுக்கான திட்டமும், அதில் 1994-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் வரை எய்திய முன்னேற்றமும் பின்வருமாறு:

வ.எண்.	விவரங்கள்		ஆண்டு திட்டம் (விழுக்காடு)	நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.கோடியில்)	வழங்கப்பட்ட மொத்த கடனில் இதன் விழுக்காடு
1.	குறுகிய காலக் கடன்	1993-94	65	272.89	62.1
		1994-95 (1994 டிசம்பர் 31 வரை)	67	280.38	62.8
2.	நடுத்தர காலக் கடன்	1993-94	95	47.62	90.1
		1994-95 (1994 டிசம்பர் 31 வரை)	95	31.80	91.3

1995-96 ஆம் ஆண்டில், நலிந்த பிரிவினருக்கு குறுகிய காலக் கடனும், நடுத்தரக்காலக் கடனும் 70% வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்:

வேளாண்மைத் தொழிலுக்கான குறுகிய காலக் கடன் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தர காலக் கடன் பெற்று, பொருளாதார நிலையை மேம்படுத்த ஆதிதிராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் திட்டத்தை அரசு 1981-82-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. அரசு ஒவ்வொரு நபருக்கும் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக ரூ. 100 மான்யமாக வழங்கி வருகிறது. அரசு அளித்துள்ள ரூ. 110.00 இலட்சம் மானியத்தில் இதுவரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1.10 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தைத் தற்சமயம் மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1988-89 முதல் 1992-93 வரைக்கான காலத்தில் 85,092 ஆதிதிராவிடர் வகுப்பினரை உறுப்பினராக்க மைய அரசு ரூ. 85.092 இலட்சம் மான்யம் வழங்கியுள்ளது. இவ்வாறு 31-3-1993-ஆம் நாள் வரை மாநில மற்றும் மையஅரசு திட்டங்களின் கீழ் 1.95 இலட்சம் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் உதவி பெற்றுள்ளனர்.

1993-94 ஆம் ஆண்டில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் குறுகிய காலக் கடனில் 10.1 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 24.9 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 13 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 24 விழுக்காடும் கடன்கள் வழங்க திட்டமிட்டதில் 1994-ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை முறையே 11.5 விழுக்காடும் 28.4 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 13 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 24 விழுக்காடும் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

10. கூட்டுறவு கடனமைப்பை வலுப்படுத்த வளர்ச்சி செயல் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

கடன் வழங்கும் நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்குடன், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின் அடிப்படையில். குறுகிய மற்றும் நீண்டகாலக் கடனமைப்பின்கீழ்வரும் கூட்டுறவு வங்கிகள் வளர்ச்சிச் செயல் திட்டங்களைத் தீட்டியுள்ளன. இந்த வளர்ச்சிச் செயல் திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டியவையாகும். இத்திட்டங்களின்கீழ் தெரிவு செய்யப்பட்ட குறுகிய கால கடனமைப்பிற்கு உட்பட்ட கூட்டுறவு வங்கிகள் 1994-95 முதல் 1998-99 வரை இடைப்பட்ட காலத்திலும் நீண்டகால கடனமைப்பிற்குட்பட்ட வங்கிகள் 1994-95 முதல் 1997-98 வரை இடைப்பட்ட காலத்திலும் வாழ்திறன் எய்தப்பெறும். திட்டச் செயல்பாடுகளில் குறிப்பாக முக்கிய அம்சங்களை மனநிறைவளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுவது மற்றும் கூட்டுறவுகளுக்கு நிதி மற்றும் இதர வகை ஆதரவுகளைத் தொடர்ந்து அளிப்பது ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொள்ள மாநில அரசு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி ஆகியவற்றுடன் தனித்தனியாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக

வளர்ச்சி வங்கி உடன்பாட்டு ஒப்பந்தம் (Memarandum of Understanding) ஏற்படுத்திக் கொண்டுள்ளது. உடன்பாட்டுக் குறிப்பில் குறிப்பிட்டதற்கிணங்க வளர்ச்சிச் செயல் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, தேசிய வங்கி (நாபார்டு) பராமரித்து வரும் தேசிய ஊரகக் கடன் நிதி (நீண்டகால இயக்கம்)-யிலிருந்து ரூ. 113.31 கோடி அளவுக்கு பங்கு மூலதன உதவியும், குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடனமைப்பில் உள்ள வங்கிகளின் திரண்ட நட்டத்தை ஈடுகட்டவும், வாராக்கடன் மற்றும் சந்தேகக் கடன்களைத் தள்ளுபடி செய்யவும் தொடக்க நிலை வங்கிகளுக்கும், நிதிஉதவி அளிக்கும் வங்கிகளுக்கும் இடையே நிலவும் மாறுபட்ட நிலுவையை சமன்படுத்தவும் ரூ. 264.25 கோடி அளவிற்குத் தேசிய வங்கி மூலமாக மைய அரசின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சிச் செயல் திட்ட கால இறுதிக்குள் அனைத்து கூட்டுறவு வங்கிகளும் வாழ்திறனை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

11. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான உள்ளமைப்பு வசதி ஏற்படுத்துதல்:

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், நகைக்கடன் வழங்கும் பணியினை மேற்கொள்ள இரும்புப் பெட்டகம் வாங்குவதற்கு, அரசு இதுவரையில், 895 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 100.95 இலட்சம் கடனுதவி வழங்கியுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் மேலும் 150 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம் வாங்குவதற்கு, வங்கி ஒன்றுக்கு ரூ. 20,000 வீதம் ரூ. 30.00 இலட்சத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிமூலம் 1992-93 முதல் 1994-95 ஆம் ஆண்டு வரை 350 இரும்புப் பெட்டகங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலம் 1992-93 முதல் 1994-95 வரை 300 இரும்பு பெட்டகங்களும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், பொலிவான வங்கிகளாகத் திகழ ஏதுவாக நவீன வங்கி முகப்பு அமைத்திட தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி, 650 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 37.25 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.

[1995 மே 3

12. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வைப்புத் தொகை உத்திரவாதத் திட்டம் செயல்படுத்துதல்:.

தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் செயல்பாட்டுகுழு (Working Group) இறுதியாக்கப்பட்ட வைப்புத் தொகை உத்திரவாதத் திட்டம் 1-4-1992 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலுள்ள வைப்புத் தொகைகளுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கியின் உத்திரவாதம் வழங்குவதன்மூலம், வைப்புத் தொகையை முதலீடு செய்பவர்களின் மனதில் தங்களது தொகைக்கு பாதுகாப்பு உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாகும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அதிக அளவு வைப்புத் தொகை கிடைப்பதற்கு இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இத்திட்டம், கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தன்னிறைவினைப் பெற்ற வங்கிகளில் செயல்படுத்தப்படுகிறது.

(1) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆண்டு இறுதியில், கடைசி தேதியன்று 6 மாதங்களுக்கு மேல் தவணை கொண்ட வைப்புத் தொகை நிலுவை ரூ. 25,000-ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும்.

(2) வங்கிகளின் கணக்குகள் நன்கு முறையாக பராமரித்திடல் வேண்டும்.

வைப்பு உத்திரவாத திட்டத்தின்கீழ் எழும் கோரிக்கைகளை நிறைவு செய்ய ஏதுவாக ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலும் உத்திரவாத நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உத்திரவாதம் வழங்கப்படவேண்டிய வைப்புத் தொகை நிலுவைக்குக் கீழ்கண்டவாறு உத்திரவாத நிதிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(1)	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ..	0.15%
(2)	மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ..	0.10%
(3)	மாநிலக் கூட்டுறவு வங்கி ..	0.05%

மேற்கூறிய உத்திரவாத நிதி, வைப்பு உத்திரவாதத்தின் அடிப்படையில், பெறப்படும் கோரிக்கைளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படக்கூடாது. 1993-94 ஆம் ஆண்டு வரையில், 2766

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. எஞ்சியுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம்:

இத்திட்டம், நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களைத் தவிர்த்து இதர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வந்தது. மைய அரசின் ஆதரவிலான இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்கும் வங்கிகள் நெற்பயிர் சாகுபடிக்காகப் பயிர்க் கடன்கள் அளிப்பது மட்டுமின்றி தேவையான இடுபொருட்களையும் வழங்கும். இத்திட்டத்திற்கு பதிலாக, 1994-95 ஆம் ஆண்டு முதல் மைய அரசு ஒருங்கிணைந்த சிறு தானியப் பெருக்குத் திட்டத்தை (Integrated Cereals Development Programme) அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டம், 13 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லைகளில், 140 தெரிவு செய்யப்பட்ட வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம் செயல்பட துவக்கிய 1988-89 ஆம் ஆண்டிலிருந்து, நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மற்றும் அதில் எய்தப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:-

ஆண்டு	திட்டக்குறியீடு	அடைந்த முன்னேற்றம் (ரூபாய் கோடியில்)
1988-89	52.45	55.87
1989-90	63.10	69.30
1990-91	68.90	75.46
1991-92	85.26	86.49
1992-93	102.94	122.65
1993-94	134.50	136.65
1994-95	132.40	111.78
(31-12-1994 வரை)		

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

14. எண்ணெய் வித்துக்கள் பெருக்குத் திட்டம்:

இத்திட்டம் கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவியுடன் எண்ணெய் வித்துக்கள் பயிர் சாகுபடி செய்யக் கூட்டுறவுகள் பிரத்தியேகக் கடன் வழங்குகின்றன. 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 57.36 கோடி வழங்க திட்டமிடப்பட்டதில், ரூ. 62.33 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் குறியீடு ரூ. 63.00 கோடி ஆகும். அதில் 31-12-1994 வரை ரூ. 53.73 கோடி அளவிற்கு முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது.

15. கடன்கள் வசூல்:

இன்று கூட்டுறவுகளை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று பெருகி வரும் தவணை தவறிய கடன் நிலுவையாகும். இது கூட்டுறவு கடன்களைத் தங்கு தடையின்றி வழங்குவதற்குப் பெரும் தடையாக உள்ளது. தவணை தவறிய கடன் நிலுவைக் கேட்பில் 40 விழுக்காடிற்கு குறைவில்லாமல், மத்திய கூட்டுறவு வங்கிகள் வசூல் செய்தாலன்றி வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி மறு நிதி வசதி அளிக்காது. கூட்டுறவுகளில் பெருகிவரும் தவணை தவறிய கடன் நிலுவைக்கு முக்கியக் காரணம் கடன் தாரர்களிடையே கடனைத் திரும்பச் செலுத்தும் எண்ணம் ஆகும். கடன் திரும்பச் செலுத்தாதவர்களில் பெரும்பாலானோர் வேண்டுமென்றே அவ்வாறு செய்பவர்களாவர். தவணை தவறிய கடன் நிலுவையைக் குறைக்கும் பொருட்டு கடனைத் திரும்பச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து கடனை வசூல் செய்வதை முனைப்பாக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறு கடன் வசூல் செய்தால் தான் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தேசிய வங்கியிடமிருந்து மறு நிதி பெறும் தகுதியை அடைய இயலும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன் நிலுவை கடந்த எட்டு ஆண்டுகளில் பின்வருமாறு உள்ளது.

தேதியன்று	தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அளவில்		
	நிலுவைத் தொகை	தவணை தவறிய நிலுவைத் தொகை	கேட்பில் தவணை தவறிய நிலுவையின் சதவீதம்
	(ரூ. கோடியில்)		
30-6-1987	420.53	147.23	33.7
30-6-1988	545.40	179.03	41.2
30-6-1989	710.58	227.50	36.3
30-6-1990	941.31	398.34	55.6
30-6-1991	1091.85	404.63	43.7
30-6-1992	1114.32	444.06	41.4
30-6-1993	1435.79	398.71	31.8
30-6-1994	1533.63	397.62	27.5

மேற்காணும் புள்ளி விபரங்களிலிருந்து, தவணை தவறிய கடன் வசூல் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், பயன் தந்துள்ளதையும் நிலுவையின் விழுக்காடு பாராட்டத்தக்க அளவிற்குக் குறைந்துள்ளதையும் அறியலாம்.

16. வேளாண் மற்றும் கடன் நிவாரணத் திட்டம் 1990.

1990 ஆம் ஆண்டில், வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டத்தை மைய அரசு அறிவித்தபோது, தங்கள் மாநிலங்களிலுள்ள கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களுக்குப் பொருந்தும் வகையில், இத்திட்டத்திற்கு இணையான திட்டங்களைத் தயாரிக்கும்படி மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

இத்திட்டத்தின்படி கோரும் தொகையில் 50 விழுக்காடு மைய அரசு மானியமாக வழங்கும். கடன் நிவாரணத் திட்டத்திற்கு உட்பட்ட மொத்தமுள்ள தொகையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினை மாநில அரசு வழங்கும். மாநில அரசால் அளிக்கப்பட வேண்டிய இத்தொகை நாபார்டு நிறுவனத்தின் மூலம் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப்படும். இக்கடன் 10 விழுக்காடு வட்டியுடன் மூன்று சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டியதாகும்.

கூட்டுறவுத்துறையின் வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டம் செயல்படுத்துமாறு 25-6-1990 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் 571 எண்ணிட்ட அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியும், தொடக்க வங்கிகளால் அளிக்கப்பட்ட நிவாரணத் தொகையினை கோரி, உரிமை கோரிக்கைகள் அனுப்பி வைத்தன.

31-3-1991 ஆம் நாளன்று, பெறத் தகுதியான ரூ. 284.8180 கோடியில், நாபார்டு நிறுவனம் 5% பிடித்தம் (Standard deduction) செய்து மீதமுள்ள மொத்தத் தொகை ரூ. 271.5067 கோடியை பல்வேறு கட்டங்களில் மார்ச் 95 வரை வழங்கியுள்ளது.

17. **நகைக் கடன்:**

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து, கடன் கிடைப்பதற்கரிய நிலையில், கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் மாநிலம் முழுவதும், கடன் வழங்கி மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் குறிப்பிடத் தக்க பணி ஆற்றி வருகின்றன. தற்போது, 4813 கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன்கள் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் 24.02 இலட்சம் நபர்களுக்கு ரூ. 1363.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டு, ரூ. 1390.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன் வழங்க திட்டமிட்டதில் 31-12-1994 வரையில் ரூ. 1312.32 கோடி வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர்களின் அவசர நிதித் தேவைகளை நிறைவு செய்து, அவர்கள் தனியார் கடன் வழங்குபவர்களின் பிடியில் சிக்காமல் பாதுகாக்கின்றன. நகையீட்டின் பேரில் வழங்கப்படும் கடன் சவரன் ஒன்றுக்கு ரூ. 2,400 ஆகும். தனி நபர்களுக்கு அளிக்கப்படும் அதிகபட்ச கடன் அளவு ரூ. 40,000 ஆகும். இது 1-4-1994 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

18. **சிறு வியாபாரிகளுக்கும் குறிப்பாக பெண்களுக்கு தேவையின் அடிப்படையில் சிறு கடன்கள் வழங்குதல்:.**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தேவையின் அடிப்படையில் சிறு வியாபாரிகளுக்குச் சிறு கடன்களை தனி நபர் ஒருவருக்கு அதிக பட்சமாக ரூ. 750 வரை வழங்கி வருகின்றன. 1993-94 ஆம் ஆண்டில்,

2785 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ. 21.39 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1994-95-ல் 31-12-1994 வரை மத்திய கூட்டுறவு வங்கிகள் 2872 மகளிருக்கு ரூ. 19.28 இலட்சம் கடனுதவி வழங்கியுள்ளன.

19. ஒழுங்குபடுத்தும் குழு அமைத்தல்:

மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதங்கள் குறித்து பரிசீலனை செய்து சீரமைக்க 7-10-1994 நாளிட்ட 2(டி) 71 எண்ணிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் அரசாணையில் அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இச்சீரமைப்புக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

20. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்:

இயற்கைச் சீற்றங்களின் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பாதுகாப்பு பெற்று பயனடைய சரியான ஒரு சாதனமான விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் 1985-86 ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. மைய அரசும், மாநில அரசும் பிரிமியத் தொகை பகிர்ந்து கொள்வதிலும் ஈட்டுறுதித் தொகையை வழங்குவதிலும் 2:1 என்ற விகிதாசாரத்தில் ஏற்கின்றன. பொது காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியும் முறையே மைய அரசு மற்றும் மாநில அரசின் முகவர்களாகச் செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு நிறுவனங்கள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், நெல், கோதுமை, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கு வழங்கப்படும் பயிர்க் கடன்கள் முழுவதும், ஒரு விவசாயிக்கு ரூ. 10,000-க்கு மிகாமல் கட்டாய அடிப்படையில் ஈட்டுறுதி செய்யப்படுகிறது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில் இரு சதவீதம் நெல், கோதுமை மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கும் ஒரு சதவீதம் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கும் பிரிமியக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீகிதம் மானியமாக அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மைய அரசும் மாநில அரசும் சம அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

நமது மாநிலத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரிய காந்திப் பயிர்களுக்கு இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டு காலத்தில் திட்டம் செயலாக்கப்பட்ட விவரம் கீழே குறி

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்.	பருவ காலம்	விவசாயிகள் எண்ணிக்கை	பரப்பளவு (ஹெக்டேரில்)	ஈட்டுறுதி செய்த தொகை	வசூலித்த பிரிமியம்	வழங்கிய ஈட்டுத் தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	காரிப் 1990	46419	87092	1648.23	32.14	21.72
2.	ராபி 90-91	200807	254743	6426.52	114.52	227.08
3.	காரிப் 1991	99844	156129	3934.00	75.84	28.56
4.	ராபி 91-92	117594	159466	5191.75	88.85	117.93
5.	காரிப் 1992	133765	292425	5670.07	110.52	195.12
6.	ராபி 92-93	110455	161228	5781.38	97.30	111.82
7.	காரிப் 1993	129548	217279	6359.06	126.46	571.37
8.	ராபி 93-94	98264	150000	5698.98	101.69	666.19

இத்திட்டம் தற்போது (ராபி 1994-95 பருவ காலத்தில்)கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் செயலாக்கப்படுகிறது.

வ.எண்.	பயிர்	அறிவிக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1.	நெல்	243
2.	சோளம்	65
3.	கம்பு	54
4.	கேழ்வரகு	85
5.	நிலக்கடலை	139
6.	எள்	60

1995 மே 3]

முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டம் :

புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதி திட்டத்தினை உருவாக்க பொது காப்பீட்டுக் கழகத்தை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாவட்டத்தைத் தெரிவு செய்து அனைத்து விவசாயிகளுக்கும் அனைத்து இடையூறுகளுக்கும் அனைத்து பயிர்களுக்கும் (Actuarial) பிரிமியக் கட்டணம் வசூலித்து இத்திட்டம் செயல்படுத்துவதாகும்.

பயிர் ஈட்டுறுதி நிதிக்குழு புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதி திட்டத்தை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயலாக்க பொது காப்பீட்டுக் கழகத்துடன் கலந்து மாதிரி படிவம் தயாரித்து வருகிறது.

(ஆ) நீண்ட காலக் கடன் :

1. அமைப்பு :

நீண்ட காலக் கடன் அமைப்பானது மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி மற்றும் வட்டம்/வட்டார அளவில் 181 பிரதம நிலவள வங்கிகள் என இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகும். பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு 5 முதல் 15 ஆண்டுகள் வரையில் திருப்பிச் செலுத்துமளவில் நீண்ட காலக் கடன்களைத் திட்ட அடிப்படையில் சிறுபாசனம், தோட்டப் பயிர்கள் சாகுபடி முதலிய மேம்பாட்டுப் பணிகளுக்கும் மற்றும் கோழி வளர்ப்பு, பால்பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டிகள் வாங்குதல், பட்டுப்புழு வளர்ப்பு முதலிய பல்வேறு நோக்கங்களுக்கும் வழங்குகின்றன. பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் அவற்றின் சாதாரண கடன் வழங்கும் திட்டங்களின் கீழ் கிணறுகளைப் பழுதுபார்த்தல், நீர்க் குழாய்கள் அமைத்தல், டிராக்டர் விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல், நிலச் சீர்திருத்தம், நிலம் வாங்குதல், பண்ணை வீடு கட்டுதல் கால்நடை தொழுவம் அமைத்தல், முதலிய நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்குகின்றன.

பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி 'நாபார்டு' நிர்ணயித்துள்ள நெறிமுறைகளின்படி, அதிலும் முக்கியமாக அவற்றின் கடன் வசூல் செயல்பாட்டினை தொடர்புறுத்தி

நிர்ணயிக்கப்படுகிறது. 1-4-1991 ஆம் நாள் முதல் கடன் வழங்கும் தகுதியை 'நாபார்டு' கீழ்க்கண்டபடி திருத்தி அமைத்துள்ளது :-

முந்தைய ஆண்டில் சூன் 30 ஆம் நாளன்று நிலவிய கடன் வசூல் விழுக்காடு. (1)	பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி. (2)
(அ) வகை - 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் ..	வரையறையற்றது.
(ஆ) வகை - 60 விழுக்காட்டிற்குள் குறைவாக ..	கடந்த ஆண்டு சூன் 30 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் வசூலித்த தொகை (அல்லது) மார்ச் 31 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் வழங்கிய கடன் (அல்லது) முந்தைய 3 ஆண்டுகளில் வசூலித்த கடன் தொகை/ வழங்கப்பட்ட கடன் இவற்றில் எது அதிகமோ அந்த அளவு மறுநிதி பெற தகுதி பெறுகிறது.

1994-95 ஆம் ஆண்டில், மேலே குறிப்பிட்ட வரன்முறைகளின்படி 181 தொடக்க கூட்டுறவு நிலவள வங்கிகளில் 142 வங்கிகள் வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெற்றுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 1990-91 மற்றும் 1991-92 ஆம் ஆண்டு திட்ட காலம் மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1992-93, 1993-94 மற்றும் 1994-95 (31-12-1994 வரை) ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீண்டக் காலக் கடன்களின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டு (1)	குறியீடு (2)	எய்திய முன்னேற்றம் (3)
		(ரூபாய் கோடியில்.)
ஏழாவது திட்டக் காலம் :		
1985-86	20.00	24.19
1986-87	20.00	20.52
1987-88	26.00	30.60
1988-89	27.00	28.94
1989-90	30.00	25.97
ஆண்டுத் திட்டக் காலம் :		
1990-91	25.00	31.31
1991-92	32.00	41.71
எட்டாவது திட்டக் காலம் :		
1992-93	41.00	64.21
1993-94	49.50	112.85
1994-95	130.00	67.16 (31-12-1994 வரை)

திட்ட வரைவின்படி 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 59 கோடி நீண்ட காலக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த இரண்டு ஆண்டுகளில் சாதனையைக் கருத்தில் கொண்டு 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 150 கோடி வரை கடன்களை உயர்த்தி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி.

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகிறது. மத்திய, மாநில அரசுகள் ஆயுள் காப்பீட்டுக் கழகம், ப்ாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வர்த்தக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் இதர மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள், சாதாரணக்

கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. நாபார்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஆகியவை சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. சிறிய நீர்ப்பாசனம் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் அல்லாத திட்டங்களின் கீழ் நிதியுதவி செய்யும் நோக்கத்தோடு, பகுதி முன்னேற்றத் திட்டங்கள் பலவற்றை மாநில நிலவள வங்கி தீட்டியுள்ளது. 31-12-1994 அன்று சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முறையே ரூ. 53.89 கோடி மற்றும் ரூ. 266.46 கோடி நிலுவையில் உள்ளது. 31-12-1994 அன்று வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூ. 43.48 கோடியாகும். ஒவ்வொரு சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களுக்கான காலம் முடிவடையும்போது பத்திரங்களுக்குரிய தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான "கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி" (Debenture Redemption Fund) ஒன்றினை வங்கி பராமரித்து வருகிறது. இந்த நிதியில் 31-12-1994-ந் தேதியில் ரூ. 21.34 கோடி உள்ளது.

பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களை கண்காணிக்கவும் (Monitoring) திட்டத்தினால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயனைக் கணிப்பாய்வு (Evaluation) செய்யவும், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக்குழு ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியில் செயல்பட்டு வருகிறது. 385 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் இதுவரை செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகட்கு விரிவாக்க பணியாக 'நிலவளம்' என்ற மாதாந்திர இதழை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடுகிறது. சென்னையில் நாபார்டின் உதவியுடன் நடைபெறும் இளநிலை பணியாளர் பயிற்சித் திட்டத்தின் மூலம் வங்கி தன் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

3. பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கு கடன் வழங்குவதற்கான புதிய வழிகள் :

பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் இதுகாறும் 'நாபார்டு' உதவியுடன் கூடிய சிறப்புத் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி பெருக்குத் திட்டம் (அரிசி) போன்ற பிரத்தியேகத் திட்டங்கள் மற்றும் பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை முதலிய பலதரப்பட்ட காரியங்களுக்கு கடன்கள் வழங்கி வந்தன. இருப்பினும், நிதி வசதி அடிப்படையில் கடன் அளிப்பதில் இதர நிதி நிறுவனங்கள் அளவில் ஏற்பட்டுள்ள மாறி வரும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் கீழே விவரித்தபடி பிற பகுதிகளிலும் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

(1) பண்ணை சாரா பகுதிக்கு நிதி வசதி அளித்தல் :

"நாபார்டு" வங்கியால் தீட்டப்பட்டுள்ள மறுநிதி உதவித் திட்டத்தைத் தொடர்ந்து, கிராமக் கைவினைஞர்கள் சிறு கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில் செய்பவர்கட்குப் பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டு முதல் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் நிதி உதவி வழங்கி வருகின்றன. இவ்வகை நிதி உதவி கிராம மக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புக்களை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவி பெருகிடச் செய்யவும் உதவுகிறது. நாபார்டு வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கும் தகுதிக்கு நிர்ணயித்துள்ள வரன்முறைகளைப் பின்பற்றும் தேவையின்றி நிலவள வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு மறுநிதி வசதி பெற்று கடன்கள் வழங்கலாம் என்பது இதன் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ் தனி நபர் ஒருவருக்கு அதிகப்படியாக ரூ. 50,000 கூட்டுக் கடனாகவும், ரூ. 10 இலட்சம் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கலாம் என கடனளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 48 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் டிசம்பர் 1994 திங்கள் வரை ரூ. 21.66 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 58 கோடி அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(2) கிராமங்களில் வீடு கட்ட நிதிவசதி அளித்தல் :

1989-90 ஆம் ஆண்டுகளில் வரவு செலவு கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தேசீயக் கொள்கைக்கு ஏற்ப, தேசிய வீட்டுவசதி வங்கியின் மறு நிதி உதவியுடன் கிராமப் புறங்களில் வீடுகள் கட்ட நிதி உதவி அளிக்க பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒரு விவசாயி உச்சக் கடன் பெறும் தகுதி ஒரு இலட்ச ரூபாயாகும். தேசிய வீட்டு வசதி வங்கியிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்ற பின்னர் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் 1995-96 ஆம் ஆண்டில் கடன்கள் வழங்கும்.

(3) கிராமப் புறங்களில் சாலைப் போக்குவரத்து சிறு ஊர்தி இயக்குநர்களுக்கு கடன் வழங்குதல் :

பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் சாலைப் போக்குவரத்து சிறு ஊர்தி இயக்குபவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், கிராமப்

புறங்களில் உள்ள தனி நபர்கள் மற்றும் தனி நபர் குழுக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கு விவசாய விளை பொருட்கள் மற்றும் தொழிலியல் உற்பத்திகள் போக்குவரத்துக்காக மூன்று சக்கர வண்டிகள், டெம்போக்கள், வேன்கள் முதலிய போக்குவரத்து வாகனங்களை வாங்க வண்டியின் அமைப்புச் சட்டம், கட்டுமானச் செலவு, வரிகள், வட்டி உள்ளிட்ட அலகு விலையில் 85 விழுக்காட்டளவிற்குக் கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

(4) நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி :

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான கடன் தேவைகளை முழுமையாக நிறைவு செய்வதற்காக கடன் வழங்கும் திட்டம் தீட்டும்பொழுது சாதாரணத் திட்டத்தின் கீழ் 20 விழுக்காட்டு அளவிற்கும், திட்ட அடிப்படையில் 60 விழுக்காட்டு அளவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கிய கடன் மற்றும் அதில் நலிவுற்ற பிரிவினர்க்கு வழங்கப்பட்ட கடன் விழுக்காடு குறித்த விவரம் பின்வருமாறு :-

ஆண்டு	வழங்கப்பட்ட மொத்த கடன்	நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன்	வழங்கிய மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் விழுக்காடு
	(ரூபாய் கோடியில்.)		
(1)	(2)	(3)	(4)
1992-93	64.21	17.52	27.3
1993-94	112.85	25.41	22.5
1994-95 (டிசம்பர் 1994 திங்கள் வரை)	67.16	13.56	20.2

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ள ரூ. 265 கோடியில் நலிவுற்ற பிரிவினருக்கு 50.15 விழுக்காடான ரூ. 132.92 கோடி அளவிற்கு கடன் வழங்க

திட்டமிடப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் கடன் வழங்க நிர்ணயித்துள்ள குறியீடான ரூ. 59 கோடியில் 52 விழுக்காடான ரூ. 30.07 கோடி அளவிற்கு நலிவுற்ற பிரிவினருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், 1995-96 ஆம் ஆண்டில் அதிகரித்து வழங்க திட்டமிடப்பட்டுள்ள ரூ. 150 கோடியில் 52 விழுக்காட்டளவிற்கு அதாவது ரூ. 78 கோடி ரூபாய் அளவிற்கு நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) கடன்கள் வசூல் :

இன்று கூட்டுறவு கடன் அமைப்பை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளில், வசூல் பிரச்சனை ஒன்றாகும். தவணை தவறிய கடன்களில் நிலுவை பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் திறன், நிதிநிலை, இலாபம் மற்றும் இறுதியாக அவற்றின் பொருளாதார நிலைத் தன்மைக்குப் பெருந்தடையாக உள்ளது. பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி அவற்றின் கடன் வசூல் செயல்பாட்டுடன் இணைந்ததாகும். கடன் கேட்பில் 60 விழுக்காட்டிற்குக் குறைவில்லாமல் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் கடன் வசூல் செய்தாலொழிய அவை வரையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெறமாட்டா. அதிகரித்து வரும் தவணை தவறிய கடன் நிலுவைக்கு முக்கியக் காரணம் கடன்தாரர்களிடையே கடனைத் திருப்பிச் செலுத்தும் எண்ணம் இல்லாமல் இருப்பதே ஆகும். எனவே வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்த தவறிய ஆறு வகைக் கடன்தாரர்களிடம் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள கூட்டுறவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையே மொத்த கிளை 181 பிரதம நிலவள வங்கிகளில் 161 வங்கிகள் 1995-96 ஆம் ஆண்டில் வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியை எய்தியுள்ளன. இது பெருமிதப்படக்கூடிய செயல்பாடாகும்.

பிரதம நிலவள வங்கிகளைப் பொறுத்த மட்டில், கடந்த ஆறு ஆண்டுகளில் தவணை தவறிய கடன் நிலவரம் பின்வருமாறு :

நாளது வரை	கடன் நிலுவைத் தொகை	தவணைத் தவறிய கடன் தொகை	கேட்பில் தவணைத் தவறிய கடன் விழுக்காடு
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் கோடியில்.)	
1989 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	175.93	64.34	78.3
1990 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	193.11	87.61	88.1
1991 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	196.39	66.27	54.8
1992 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	211.79	65.90	64.3
1993 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	246.49	42.37	39.8
1994 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	316.31	26.92	28.7

(6) பொய்த்த கிணறுகள் நிதி :

தமிழ்நாடு தொடக்க நிலவள வங்கிகளில் கடன் பெற்று தோண்டப்படும் கிணறுகளில் தண்ணீர் இன்றி பொய்த்துப் போய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கான பொய்த்த கிணறுகள் நிதி என்ற ஒரு நிதியை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி நிர்வகித்து வருகிறது. சிறு விவசாயிகட்கும், பெரிய விவசாயிகட்கும், முறையே 90 சதவீதமும் 75 சதவீதமும் அசல் மற்றும் வட்டி பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன சிறு விவசாயிகட்கு அவர்களின் சொந்த உழைப்பாக அளித்த பங்கு நீங்கலாக, முழுத் தொகையும், மான்யமாக அளிக்கப்படுகிறது. 3207 பொய்த்த கிணறுகட்கு ரூ. 2.22 கோடி 31-12-1994 வரை உதவி வழங்கப்பட்டது.

எல்லா மாநிலங்கட்கும், மான்யம் அளிப்பதில் பொதுவான நெறிமுறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடன், பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி ஒன்றினை நாபார்டு அறிவித்துள்ளது. மேற்படி பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதித் திட்டத்தினை 1-7-1986 முதல் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்படி தொடக்க கூட்டுறவு வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகட்கு 100 சதவீத அளவிற்கு மான்யம் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி கடன் தொகையில் அசல் பகுதிக்கான மான்யத் தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். வட்டிப் பகுதியைப் பொறுத்த வரையில் நாபார்டு திட்டங்கள் தொடர்பான கடன்களாக இருந்தால், நாபார்டும் சம்பந்தப்பட்ட வங்கியும், சரி சமமான அளவிலும் இதர சாதாரணத் திட்டம் பற்றிய கடன்களாக இருந்தால், முழு வட்டித் தொகையும் சம்பந்தப்பட்ட வங்கி தள்ளுபடி செய்து தன் சொந்த நிதியிலிருந்து ஏற்கும். 1993-94 ஆம் ஆண்டிலிருந்து இதில் மத்திய அரசின் பங்கு நிறுத்தப்பட்டுவிட்டது. இருப்பினும் மாநில அரசு தொடர்ந்து இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 80 பொய்த்த கிணறுகளுக்கு ரூபாய் 12.28 இலட்சம் 31-12-1994 வரை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

(7) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் :

நாட்டில் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சியை மேம்படுத்துவதற்கென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்றும் திட்டத்தை உருவாக்கி உள்ளது. பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை மீன்வளர்ப்பு, போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி கிராமக் கைத்தொழில் கைவினைஞர் தொழில் போன்ற பண்ணை சாரா பிரிவுகள் முதலியவற்றில் பன்முறைப்படுத்தி பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சமுதாய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப் படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

தற்போது தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ரூ. 862.51 இலட்சம் ஒதுக்கீட்டில் காமராசர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கு இத்தொகை முழுவதையும் காமராசர் மாவட்டத்திற்கு வழங்கியுள்ளது. இது போலவே 1992-93-ம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் ரூ. 1508.207 இலட்சம் ஒதுக்கீட்டில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு இதுவரை ரூ. 808.711 இலட்சம் இம்மாவட்டத்திற்கு வழங்கியுள்ளது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ. 1081.07 இலட்ச ஒதுக்கீட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு அமுல்படுத்த தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதைப் போலவே தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தர்மபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தை ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்த ரூ.1,160.25 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கண்ட இரு திட்டங்களையும் 1995 ஆம் ஆண்டு முதல் செயல் படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செயல்படுத்தும் பொருட்டு ரூ. 830.97 இலட்ச ஒதுக்கீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

(இ) நகர்ப்புறக் கடன்

(1) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள்:

நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, வங்கியியல் மற்றும் கடன் வசதிகளை செய்து தரும் நிதி நிறுவனங்களாக நகர கூட்டுறவு வங்கிகள் செயல் படுகின்றன. தமிழகத்தில் தற்போது 125 நகர கூட்டுறவு வங்கிகள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. இவைகள், நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் தரப்பு பிரிவினரிடமிருந்து வைப்புத் தொகைகளைச் சேகரித்து, அவற்றினை தெரிந்தெடுக்கப்பட்ட காரியங்களுக்குக் கடனாக வழங்கப்பயன்படுத்தி வருகின்றன. சிறு விவசாயிகள், கைவினைஞர்கள்,

நடுத்தர பிரிவினர் ஆகியோருக்கு வீட்டினை விரிவுப்படுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல், மிகச் சிறு வியாபாரம் செய்தல், குழந்தைகளுக்கான கல்விச் செலவு, முன்கடன் தீர்த்தல், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் செய்தல் ஆகிய காரியங்களுக்கு கடனுதவி செய்வது, இவ்வகையான வங்கிகளின் செயல்பாட்டில் அடங்குவனவாகும். நகர கூட்டுறவு வங்கிகள் 1993-94-ஆம் ஆண்டில் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடனாக ரூ. 480.97 கோடி அளவிற்குக் கடன்களை வழங்கியுள்ளன. 1993-1994-ஆம் ஆண்டின் இறுதியில் நகர கூட்டுறவு வங்கிகள் ரூ. 588.68 கோடி அளவிற்கு வைப்புத் தொகைகள் நிலுவையில் இருந்தது. இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி, இவ்வங்கிகள் வழங்கும் மொத்த கடன் தொகையில் 60 சதவீதத்திற்கு குறையாமல் முன்னுரிமைக் காரியங்களுக்கான கடனாகவும், அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில் 25 சதவீதத்திற்கு குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும், வழங்க வேண்டும்.

(2) அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்:

கடன் நிறுவனங்களில் அனுசரிக்கப்படும் நெறிமுறைகளைப் போலவே, நகர கூட்டுறவு வங்கிகளில் அங்கத்தினர்களின் கடனின் அளவு அவர்கள் செலுத்தும் பங்குத் தொகை அளவுடன் தொடர்பு உள்ளதாகும். நகர கூட்டுறவு வங்கிகளின் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களின் கடன் வழங்கும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லா கடனாக ரூ. 500/- வழங்கும் வகையில், சிறப்புத் திட்டம் ஒன்று எட்டாவது ஐந்தாண்டு திட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகை 5 ஆண்டுகளில் வசூலிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 1992-93 மற்றும் 93-94-ஆம் ஆண்டுகளில் நகர கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 4,017 நபர்களுக்கு ரூ. 20 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது. அதேபோன்று 1994-95-ஆம் ஆண்டின் பகுதி II திட்ட ஒதுக்கீட்டின் கீழ் இவ்வகை கடன்களாக 2,000 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு வழங்க ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 10.00 இலட்சமும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுவிட்டது.

1995-96-ஆம் ஆண்டில், நகர கூட்டுறவு வங்கிகளில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 4,000 அங்கத்தினர்களுக்கு ரூ.20 இலட்சம்

அளவிற்கு இவ்வகையான வட்டியில்லாக் கடன் தொகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) நகர்ப்புற வங்கிகளின் மூலம் விவசாய சார்பற்ற கடன்கள்:

விவசாய சார்பற்ற துறையில் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நகர கூட்டுறவு வங்கிகள் கடன்கள் வழங்கி வருகின்றன. 1994-95-ம் ஆண்டில் 20,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 20.00 கோடி அளவிற்கு குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு விவசாய சார்பற்ற கடன்களாக வழங்கத் திட்டமிடப்பட்டது. இவ்வகையில் டிசம்பர் 94 வரைக்கான காலத்தில் ரூ. 15.24 கோடி அளவிற்குக் கடன் வழங்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சார குறியீட்டிற்கெதிராக ரூ. 25.53 கோடி அளவிற்கு 30,703 நபர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

1995-96-ம் ஆண்டில் விவசாய சார்பற்ற கடன்களாக குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு ரூ. 21.00 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 3

அ. இடுபொருட்கள்.

தமிழ்நாட்டில் தமிழ்நாடுகூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுத் துறையில் இரசாயன உர விற்பனைக்கு மொத்த விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றன. 4,326 தொடக்க வேளாண்மை வங்கிகளால் நடத்தப்படும் 5,678 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும், 101 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும், அங்கத்தினர்களுக்கு பயிர்க் கடனின் பொருட் பகுதியாகவும், அங்கத்தினர் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்க்கு ரொக்கத்திற்கும் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1994-95-ம் ஆண்டில் இதுவரை (1994 டிசம்பர் முடிய) ரூ. 170.30 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இரசாயன உர விநியோகத்தில் 25-8-1992 முதல் ஒரு மாற்றத்தினை மத்திய அரசு அறிவித்தது. இப்புதிய கொள்கையின்படி பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் அடிப்படையிலான உரங்களின் மீது கட்டுப்பாடு நீக்கப்பட்டது. இதன் விளைவாக டை அமோனியம் பாஸ்பேட், முரியேட் ஆப் பொட்டாஷ் மற்றும் கலப்பு உரங்களின் விலைகள் வெகுவாக உயர்ந்தன. எனவே விவசாயிகளின் நன்மையைக் கருதி இந்திய அரசு உரச் சலுகைத் திட்டத்தினை அறிவித்தது. இந்த சலுகைத் திட்டம் 1994-95-ஆம் ஆண்டிலும் நீடிக்கப்பட்டது. ஆனால் இச் சலுகைத் தொகை நேரடியாக உரத்தயாரிப்பாளர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படுகிறது.

(ஆ) விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண் கருவிகள் வழங்கல்.

தமிழ்நாடு கூட்டுறவு, விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் இதர இடுபொருட்களான விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண் கருவிகள் வழங்குவதற்கு மொத்த விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 14.73 கோடி மதிப்புள்ள இடுபொருட்களை விநியோகம்

செய்யத் திட்டமிடப்பட்டது. அதில் இதுவரை (1994 டிசம்பர் வரை) ரூ. 8.66 கோடி ரூபாய் அளவிற்கு இடுபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1995-96-ம் ஆண்டிற்கு ரூ. 15.00 கோடி மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட உள்ளது.

துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவா நிறுவனம் பூச்சி மருந்து உற்பத்தி அலகு ஒன்றையும், வேளாண் கருவிகள் தயாரிக்கும் அலகு ஒன்றையும் நடத்தி வருகிறது. 1994-95-இல் (1994 டிசம்பர் முடிய) இந்நிறுவனம் ரூ. 184.55 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளையும் ரூ. 39.96 இலட்சம் மதிப்புள்ள வேளாண் கருவிகளையும் விநியோகித்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

அத்தியாயம் 4

கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி.

1. கூட்டுறவு விற்பனை: அமைப்பு

தமிழ்நாட்டில் 113 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே-மில்லத், மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலம் முழுமைக்கும் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் அச்சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே-மில்லத் மாவட்டங்களுக்காக திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்திற்காக உதகமண்டலத்திலுள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் செயல்பட்டு வருகின்றன. “டான்பெட்” என்று பரவலாக அறியப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, வேளாண் விளை பொருள் விற்பனையில் முக்கிய பங்கு ஆற்றி மாநில அளவிலான விவசாயிகள் நிறுவனமாக செயலாற்றி வருகின்றது. இரசாயன உரங்கள் வழங்குதலில் “டான்பெட்” ஒரு மொத்த விற்பனையாளராக செயல்படுகிறது. உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக வினியோகிக்கப்பட்டு வருகின்றன. அப்பணி “டான்பெட்டின்” 17 மண்டல அலுவலகங்கள் மூலமாக மாவட்ட அளவில் கண்காணிக்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு சராசரி 120 டன் என்.ப்பி.கே. உரக்கலவைகளை தயாரிக்கும் திறனில், நாகப்பட்டினம், காயிதே-மில்லத் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் “ பாமினி” என்ற இடத்தில் “டான்பெட்”, 1970-ஆம் ஆண்டில் ஓர் உர ஆலையை துவக்கி செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் 10 இடங்களில் உரக்கலவை மையங்களை டான்பெட் நடத்தி வருகிறது. அது பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளை பொருட்களை கொள்முதல் செய்து வருகிறது. அது விளைபொருட்களுக்கு ஆதரவு விலைகளை வழங்குதலில் நேபெட், (தேசீய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம்) நிறுவனத்தின் முகவராக செயல் படுகிறது. 1976-ஆம் ஆண்டிலிருந்து பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதில் ஒரு மொத்த வியாபாரியாக அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 25,460 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 34 கிடங்குகளை அது வைத்திருக்கிறது. அவை தவிர 23,795

மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 38 கிடங்குகளை வாடகைக்கு பயன்படுத்தி வருகிறது. அது, சென்னையில் 1,250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஓர் குளிர் பதன அலகை நடத்திவருகிறது. 1993-94-ஆம் ஆண்டில் அந்த அலகு ரூ. 13.56 இலட்சம் வருமானத்தை ஈட்டியுள்ளது. சென்னை புறநகர் பகுதியிலுள்ள கோயம்பேடு என்னும் இடத்தில் 2,500 மெட்ரிக் டன் கொள்திறனில் ரூ. 162 இலட்சம் செலவில் மற்றுமோர் குளிர்பதனக் கிடங்கு கட்டப்பட்டு முடியும் நிலையில் உள்ளது. திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் எரியோடு என்னும் கிராமத்தில் ஒவ்வொன்றும் 320 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள 3 வெங்காய கிடங்குகளை வைத்துள்ளது.

1994-95-ஆம் ஆண்டின் "டான்பெட்" நடத்திய வியாபாரத்தின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

விவரம்	1994-95 (டிசம்பர் '94 முடிய)	
	அளவு (மெ.டன்)	மதிப்பு (ரூ.கோடியில்)
1. உரங்கள்	2,85,303	133.12
2. பாமினி உரம் உற்பத்தி	14,874	15.97
3. பாமினி உரம் விற்பனை	19,612	11.95
4. வேளாண்விளைபொருள் விற்பனை	21,330	29.89
5. விதைகள் வழங்கியது	-	0.17
6. பூச்சிக்கொல்லிகள் வழங்கியது	-	2.52
7. கருவிகள் வழங்கியது	-	0.02
8. மண்ணெண்ணெய் வழங்கியது	2,272 கி.லி.	0.56

2. வேளாண் விளை பொருள் விற்பனை.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், அவற்றின் உழவர் உறுப்பினர்கள் வேளாண்விளை பொருட்களுக்கு நியாயமான விலைபெற உதவுகின்றன. மாநிலத்தில் 113 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 375 கோடி அளவிற்கு வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டதில், டிசம்பர் '94 திங்கள் முடிய ரூ 353.95 கோடி அளவிற்கு விற்பனை செய்யப் பட்டுள்ளன. 1995-96-ஆம் ஆண்டில் வேளாண் விளைபொருள்

விற்பனையை அதிகமாக்கி ரூ. 400 கோடிக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

3. விற்பனையுடன் கூடிய கடன் திட்டம்.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், விற்பனையுடன் கூடிய கடன்திட்டம் என்பது ஓர் முக்கிய பணியாகும். இத்திட்டத்தின்படி, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் கடன் பெறும் உறுப்பினர்கள், விற்பனைச் சங்க உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். கூட்டுறவு விற்பனைச்சங்கங்களுக்கு கடன்பெற்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் வேளாண் விளை பொருட்களை உற்பத்தியாளர்கள் அதிக லாபம் பெறும் வகையில் அவர்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய விலைக்குப் பகிரங்க ஏலம் மூலம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்வித விற்பனைத் தொகையிலிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச்சேர வேண்டிய தொகைகளைப் பிடித்தம் செய்துத் தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தி வருகின்றன.

(ii) ஒருபுறம் உற்பத்தியாளர்களுடைய விளைபொருட்களுக்கு நியாயமான வகையில் வருவாய் தரத்தக்க விலையை நிர்ணயம் செய்யவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கவும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கச்செய்கின்றன. 1993-94-ல் வேளாண் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ததின் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உற்பத்திக்கான கடன் தொகை ரூ. 38.56 இலட்சம் வசூல் செய்துள்ளது. இக்கடன் வசூல் 1994-95-ல் ரூ. 50.00 இலட்சமாகவும், 1995-96-ல் ரூ. 60.00 இலட்சமாகவும் உயர்தப்பட உள்ளது.

(iii) விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருட்களை ஈடாக வைத்து கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கம், அளித்து வருகின்றன. அதனால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு பின்னர் நல்ல விலையைப் பெற முடியும். 1993-94-ம் ஆண்டில் சரக்கீடு கடானாக ரூ. 490.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ம் மற்றும் 1995-96-ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.600.00 இலட்சம் மற்றும் ரூ. 650.00 இலட்சம் சரக்கீடு கடனாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

4. பதப்படுத்தும் அலகுகள்:

விவசாயிகளுக்குப் பதப்படுத்தும் வசதிகளைக் குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டு கூட்டுறவு சங்கங்கள் பலவகையான பதப்படுத்தும் அலகுகளை நிறுவியுள்ளது. இந்த பதப்படுத்தும் அலகுகளை நிறுவ தேசீய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் பங்கு மூலதனமாகவும், கடனாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. தற்போது 29 அரிசி ஆலைகள், 16 பருத்தி அரைவை ஆலைகள், 11 கடலை உடைக்கும் இயந்திரங்கள், 9 எண்ணெய் ஆலைகள், 1 எண்ணெய் ஆலைத் தொகுப்பு, 2 பழம் பதப்படுத்தும் அலகுகள், 2 காபி அரைவை ஆலைகள், 1 காபி பதப்படுத்தும் அலகு, 1 குளிர்பதன அலகு, 1 மரவள்ளிக் கிழங்கு ஆலை, 1 மஞ்சள் அரைவை ஆலை, 4 மாவு ஆலைகள், 2 பருப்பு ஆலைகள், 2 சேமியா பதப்படுத்தும் அலகுகள், 2 விதை பதப்படுத்தும் அலகுகள், 1 புளி பதப்படுத்தும் அலகு மற்றும் 1 சிகைக்காய் அரைவை ஆலை, ஆக 86 பதப்படுத்தும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

5. கிராமிய மற்றும் விற்பனைச் சங்கக் கிடங்குகள்:

கிராமங்களில் உற்பத்தியாகும் வேளாண் விளை பொருள்களை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்காக கிராம அளவிலும், நகர அளவிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கிடங்குகள் கட்டப்படுகின்றன. அரசு, கிடங்கு கட்ட ஆகும் செலவில், 45 விழுக்காடு அரசு பங்கு மூலதனமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் மீதம் உள்ள 5 விழுக்காடு நிதியை சங்கத்தின் சொந்த மூலதனத்திலிருந்தும் முதலீடு செய்து கிடங்குகள் கட்டப்படுகின்றன. 1000 மெ.டன், 500 மெ.டன் மற்றும் 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கான வரைபடம் மற்றும் திட்டச் செலவு தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் 1995-96 ஆம் ஆண்டில் கிடங்குகள் கட்ட நிதி உதவி அளிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும். 7.09 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 5098 கிடங்குகள் செயல்படுகின்றன.

அத்தியாயம் 5

நுகர்வோர் கூட்டுறவு

1. அமைப்பு:

தமிழ்நாட்டில் தற்பொழுது நுகர்வோர் கூட்டுறவு தொடக்க நிலையில் 3712 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடனும் (மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட) மாவட்ட நிலையில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடனும், மாநில நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் கொண்டு செயற்படுகின்றது.

நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை அமைப்பான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 1966 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டுள்ளது. இறக்குமதி மூலமாகவும், மொத்தக் கொள்முதல் மூலமாகவும், அத்தியாவசிய நுகர்பொருட்களை கிடைக்கச் செய்தலும், தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட மற்றும் தொடக்க நிலை நுகர்வோர் கூட்டுறவுகளின் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தலும், இந்த இணையத்தின் தலையாய நோக்கமாகும். தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பாட நூல்களை விநியோகிப்பதில் ஒருங்கிணைப்பு முகவராகச் செயல்படுகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் நிலுவையில் உள்ள பெருங்கடன் தொகையினை தீர்க்கும் வகையிலும் இணையத்தை சிறந்த வழியில் செயல்படுத்தவும், கீழ்க்குறித்த புனரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் நிலுவையிலிருந்த இணையத்தின் கடன் நிலை ரூ.312 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. இணையத்தின் நடைமுறை மூலதனமாக ரூ. 60 இலட்சம் காசுக் கடனாக (ஆதாரம் இல்லாமல்) மாநில வங்கி அனுமதித்துள்ளது.

(ஆ) இணையம் அதன் வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் கூட்டுறவு அச்சகங்களுக்கு அச்சுத்தாள் விநியோகிப்பதற்காக காகித ஆலைகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி உரிய

ஏற்பாடுகள் செய்துள்ளது. இத்தகைய வியாபாரத்தில் கிடைக்கின்ற இலாபத்தினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தில் ரூ. 5.00 இலட்சம் காப்புத் தொகையாக செலுத்தி கூட்டுறவுகளுக்குத் தேவைப்பட்டியலைப் பூர்த்தி செய்ய முன் வந்துள்ளது. அதிக அளவில் நுகர்பொருட்களை வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(இ) பணியாளர்களின் செலவினை குறைக்கும் நோக்குடன் இணையத்தின் '101 உபரி பணியாளர்கள் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி பல்வேறு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதனை சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஈ) பிற மாநிலங்களில் கிடைக்கும் பருவ கால வேளாண் பொருட்களை பெருத்த அளவில் கொள்முதல் செய்து, அதன் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க இணையம் ஏற்பாடு செய்து வருகிறது.

2. நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை:

1993-94 ஆம் ஆண்டில் எல்லா வகை நுகர்வோர் கூட்டுறவுகளும் செய்த நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை மதிப்பு ரூ. 1403.17 கோடி ஆகும். 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 1450 கோடி அளவிற்கும் 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 1700 கோடி அளவிற்கும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

3. வெளிச்சந்தை விலைகளை கட்டுப்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகளின் தலையீடு (Market Intervention)

விழாக்கால விற்பனை:

வெளிச்சந்தை விலைக் குறிப்பில் ஒரு உத்தியாகவும், சாதாரண மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட நுகர் பொருட்களை, வெளிச்சந்தை விலையைவிடக் குறைவான விலையில் கிடைக்கச் செய்யும் பொருட்டும், 1994 தீபாவளி பண்டிகையின் போது நுகர்வோர் கூட்டுறவுகள் கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டன:

1995 மே 3]

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட 27 நுகர்பொருட்களை வெளிச்சந்தை விலையைவிட 10 விழுக்காடு குறைவாக விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்தல். இத்திட்டம் நுகர்வோர் கூட்டுறவுகளால் 12-10-1994 முதல் 2-11-1994 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

(ஆ) சாதாரண மக்களும் தீபாவளியைக் உற்சாகத்துடனும் அதேசமயம் அதிக செலவின்றியும் கொண்டாடும் பொருட்டு ஒரு 'பேண்ட் பிட்' மற்றும் சட்டைத் துணி 'பிட்' அல்லது ஒரு வேட்டி மற்றும் "சட்டைத் துணி பிட்" அல்லது ஒரு புடவை மற்றும் ரவிக்கைத் துணி கொண்ட வசதியான பாக்கெட்டுகளில் பாக்கெட் ஒன்று ரூ. 99 வீதம் நுகர்வோர் கூட்டுறவுகள் மூலம் விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டம் துணி வகைகள் விற்பனை செய்யும் கூட்டுறவு பண்டகசாலைகளால் 17-10-94 முதல் 2-11-94 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தவிர ஆயத்த ஆடைகளும் இவை மூலம் விற்பனை செய்யப்பட்டன.

(இ) சாதாரண மக்களும் தீபாவளிப் பண்டிகையை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாட வகை செய்யும் பொருட்டு, பிரபலமான கம்பெனிகளின் பலவகைப் பட்டாசுகளை ரூ. 45 மற்றும் ரூ. 99 விலையுள்ள வசதியான பாக்கெட்டுகளாக நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இது தவிர, சிறுவர்களுக்கே உரித்தான சிறப்பான பட்டாசு வகைகளும் மேற்கண்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்டன.

(ஈ) நலிவுற்ற மக்களும் பயனுறும் வண்ணம், குறைந்தது மூன்று வகைகள் கொண்ட 200 கிராம் எடையுள்ள இனிப்பு வகைப் பாக்கெட்டுகள், பாக்கெட் ஒன்று ரூ. 9 வீதம் விற்பனை செய்ய நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் நடவடிக்கை மேற்கொண்டன.

4. சிறப்பங்காடிகள் மற்றும் சிறு சிறப்பங்காடிகள்:

மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் 34 பல்பொருள் சிறப்பங்காடிகளையும், 234 சிறு சிறப்பங்காடிகளையும் (நவீன சில்லறை விற்பனை நிலையங்களும், பெரிய அளவு சில்லறை விற்பனை கடைகளும்) நடத்தி வருகின்றன. 1994-95 ஆம் ஆண்டில்

இப்பண்டக சாலைகள் நடத்த எந்தவித நிதி உதவியும் மத்திய அரசிடம் இருந்து பெறப்படவில்லை. மேலும் இந்த மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கும் திட்டம் மாநில அரசுக்கு 1-4-92 முதல் மாற்றப்பட்டு விட்டது. தமிழக அரசு 1994-95 ஆம் ஆண்டில் 5 தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தலா ரூ. 2 இலட்சம் வீதம் கடனாக நவீன சில்லறை சிறப்பங்காடி அமைக்க நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு, பெண்களே நடத்தும் 5 நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளுக்குத் தலா ரூ. 1.00 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. (அதில் பங்குத் தொகை 0.40 லட்சம் நடைமுறை மூலதனம் ரூ. 0.40 லட்சம் மற்றும் மேலாண் ஊக்குதவித் தொகை ரூ. 0.20 லட்சம் ஆகியவை உள்ளடக்கியது.)

5. சுயசேவைப் பிரிவு ஆரம்பித்தல்:

வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் நுகர்பொருட்களின் தரம் மற்றும் விலைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு வசதி மற்றும் விருப்பத்திற்கேற்ப பொருட்களை அவர்களே தேர்ந்தெடுத்து வாங்குவதற்காக சுயசேவைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய சுயசேவைப் பிரிவுகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், கூர்ந்து கவனிக்கும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் ஏற்படுத்தப்பட்ட நவீன உத்திகளில் ஒன்றாகும். இம்முயற்சிக்கு நல்ல ஆதரவு மக்களிடமிருந்து கிடைத்து அதனால் நுகர்வோர் கூட்டுறவுகளில் வியாபாரம் பெருகியுள்ளது. மாநிலத்தில் இப்போது 65 சுயசேவைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச்சங்கத்தினால் தேனாம்பேட்டையில் சுமார் 6,000 சதுர அடி பரப்பளவில் நடத்தப்பட்டு வரும் புதிய காமதேனு சுய சேவைப் பிரிவு இந்தியாவில் உள்ள மிகப் பெரிய சுய சேவைப் பிரிவுகளில் ஒன்றாகும்.

6. அரிசி விற்பனை:

வரப்போகின்ற மாதங்களில், வெளிச்சந்தையில் அரிசிவிலை உயர்வை எதிர்நோக்கி, பொது வகையான அரிசியை மிக அதிக அளவில் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்து, அதனைப் பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கின்ற வகையில் விற்பனை மேற்கொள்வதன் மூலம், விலை உயர்வினைக் கட்டுப்படுத்துமாறு நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தியாயம் 6

பொது விநியோகத் திட்டம்:

சமுதாய நீதிகளைப் போற்றி பாதுகாத்து வளர்க்கும் சீரிய நோக்கத்துடனும், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை முன்னிட்டும், இப்பிரிவினருக்கு சமுதாயத்தில் தகுதி நிலை வழங்க வேண்டி, ஒரு பாதுகாப்பு வளையமாக தமிழக அரசு குறிப்பிட்ட கவனத்துடன் பொது விநியோகத் திட்டத்தை மிகவும் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. 1994 ஆம் ஆண்டு பொது விநியோகத் திட்டத்தின் பொன் விழா ஆண்டு ஆகும்.

1964-ஆம் ஆண்டு முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் சிறப்பான திட்டம் தமிழ்நாட்டில செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1993-ஆம் ஆண்டு குடும்ப அட்டைகள் 1998 ஆம் ஆண்டு வரை செல்லத்தக்கவைகளாக புதுப்பிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பழங்காலத்திலிருந்தே, தமிழகத்தில் இயங்கும் கூட்டுறவு அமைப்புகள் அரசு பொது விநியோகத்திட்ட செயலாக்கத்தின் சிறப்பான அங்கம் வகித்து அரசுக்கு சிறப்பான உதவிகள் புரிந்து வருகின்றன. நாளது தேதியில் மாநிலத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் சிறந்த விநியோக அமைப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. தமிழக பொது விநியோகத்திட்டத்தின் சிறப்பு என்னவென்றால் இத்திட்டம் முழுக்க முழுக்க கூட்டுறவு சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் நியாயவிலைக் கடைகள் நடத்த அனுமதிக்கப்படுவதில்லை.

1. நியாயவிலைக் கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட்கள் விநியோகித்தல்:

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது 137.42 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 75 முதன்மை சங்கங்கள் மற்றும் 4915 இணைப்புச் சங்கங்கள் வழியாக 20,912 நியாயவிலைக் கடைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டம் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 84 கோடி அளவிற்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் பாமாயில் விநியோகம் செய்யப்படுகின்றன.

நகர்ப்புற மற்றும் ஊரக நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

		கடைகளின் எண்ணிக்கை.
நகரம்	..	4,394
ஊரகம்	..	16,528
மொத்தம்		20,912

29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 111 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 4,360 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 18 பெரிய அளவு பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் 359 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் 38 பிற வகைச் சங்கங்கள் இணைப்புச் சங்கங்களில் அடங்கும். இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரம் செய்யும் பணியை பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அளவு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வரிசை எண்.	பண்டங்களின் பெயர்	1993-94 ஆம் ஆண்டில் (1-4-93 முதல் 31-3-94 வரை) விநியோகிக் கப்பட்ட அளவு.	மதிப்பு (ரூபாய் கோடியில்)	1994-95-ம் ஆண்டில் (1-4-94 முதல் 31-12-94 வரை) விநியோகிக் கப்பட்ட அளவு	மதிப்பு (ரூபாய் கோடி யில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		மெ.டன்னில்		மெ.டன்னில்	
1.	அரிசி	1253650	457.70	867582	412.10
2.	சர்க்கரை	267573	225.23	195178	176.64
3.	கோதுமை	125566	45.40	63176	28.42
4.	மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்)	600924	170.33	473333	142.00
5.	பாமாயில் (மெ.டன்னில்)	1346	3.57	6243	18.10
	மொத்தம்		902.23		777.26

2. பொது விநியோகத் திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்:

(i) மாநில அளவில் செயல்படும் பொது விநியோகத் திட்டம் ஒவ்வொரு மாதம் இரண்டாவது செவ்வாய்க்கிழமை அன்று அரசுச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் பொதுவிநியோகத் திட்டத்தினை ஆய்வு செய்யும் பொருட்டு தேவையான போது இவ்வாறான மாதாந்திர கூட்டமும் கூட்டப்படுகிறது. மாதந்தோறும் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டினை ஆய்வு செய்கின்றனர். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் நடத்தப்படும் மண்டல இணைப்பதிவாளர் ஆய்வுக் கூட்டத்தின்போதும், பொது விநியோகத் திட்டம் பற்றிய செயல்பாட்டினை கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர் திறனாய்வு செய்கின்றார்.

(ii) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் ஆலோசனைக் குழு கூட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கலந்து கொண்டு, பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதில் தோன்றும் இடர்பாடுகளை களைவது தொடர்பாக விவாதித்து அவைகளைத் தீர்வு செய்ய நடவடிக்கையும் மேற்கொள்கின்றனர்.

(iii) அனைத்து மாவட்டங்களிலும் வட்டம் மற்றும் கடை அளவில் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. மேலும் கண்காணிப்புக் குழுவை மாதம் ஒருமுறை கூடுவதை உறுதி செய்ய கிராமம் மற்றும் வட்ட அளவில் கண்காணிப்புக் குழுவைக் கூட்டுவதற்கு அதன் கூட்ட அழைப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் 5-11-93-ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் அரசு ஆணை எண்.616-ல் ஏற்கனவே மாவட்ட அளவில் உள்ள கண்காணிப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்களை கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவானது நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பொது விநியோகத் திட்டம் தொடர்பான பொருட்களை விவாதித்து அதனை மேம்படுத்துவதற்கான கருத்துருக்களைத் தெரிவிக்கும்.

(iv) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்கள் செய்யும் முறைகேடுகளுக்கு அவர்கள் மீது தொடரப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளை தீர்வு செய்ய "ஒழுங்கு நடவடிக்கை ஆய்வுக் குழு" ஒன்றை அரசு மாவட்டந்தோறும் அமைத்துள்ளது. இந்த ஒழுங்கு நடவடிக்கை ஆய்வுக் குழுவானது நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை நிலுவை இனங்கள் குறித்து ஆய்வு செய்யும்.

(v) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் ஏற்படும் விற்பனையாளர்களின் காலியிடப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாவட்டந்தோறும் ஒரு " மாவட்டத் தேர்வுக் குழு" ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இம்மாவட்டத் தேர்வுக்குழுவானது தேவையான கூட்டுறவு நியாயவிலைக் கடைப் பணியாளர்களைத் தேர்வு செய்யும்.

(vi) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்தல்: [illegible] உள்ள பல்வேறு அதிகாரிகள் ஆய்வு செய்ய

வேண்டிய கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

வரிசை எண்.	பதவி	மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை	
1.	இணைப்பதிவாளர் (பொ.வி.தி)		40
2.	மண்டல இணைப்பதிவாளர்கள்		10
3.	சரகத் துணைப்பதிவாளர்கள்		10
4.	துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) சென்னை நகரம்		60
5.	துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) மாவட்டங்களில்		50
6.	கூட்டுறவு சார் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) சென்னை நகரம்		
		முறையாக	மேலோட்டமாக
		இவருக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்	வாரத்திற்கு இரு முறை இவருக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்
7.	கூட்டுறவு சார் பதிவாளர் (பொ.வி.தி) மாவட்டங்களில்	25	15

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அயற்பணி அடிப்படையில் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு அவர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் நடத்தும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்ய வேண்டும்.

வரிசை எண்.	பதவி	மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை
1.	முதன்மை அலுவலர்களாகப் பணிபுரியும் இணைப்பதிவாளர்/துணைப் பதிவாளர்	20
2.	பொது மேலாளர்/செயலாளர்/ வணிக மேலாளராக பணியாற்றும் துணைப்பதிவாளர்கள்	25
3.	முதன்மை அலுவலர்களாகப் பணிபுரியும் கூட்டுறவு சார் பதிவாளர்கள்	30

(vii) *பறக்கும் படை*

மண்டல இணைப்பதிவாளர் மற்றும் இணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் அலுவலர்களைக் கொண்டு கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்ய ஒரு “சிறப்பு பறக்கும் படை” அமைக்கின்றனர். இச்சிறப்புப் பறக்கும் படையானது மாதந்தோறும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்யும். மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களில் உள்ள கிடங்குகளிலிருந்து உணவுப்பொருட்களை எடுத்துச் செல்லும்போது ஏற்படும் முறைகேடுகளைக் கண்டுபிடிக்க ஆய்வு செய்யும் பொருட்டு சிறப்பு பறக்கும்படை மண்டல இணைப்பதிவாளர் மற்றும் இணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) களால் அமைக்கப்படுகிறது.

(viii) சென்னை நகரிலுள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் காணப்படும் சமூக விரோதிகளின் தொல்லைகளைக் களைவதற்கு அது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையினை ஆய்வு செய்யவும் சென்னை நகர காவல் ஆணையாளர் நடத்தும் மாதாந்திரக் கூட்டத்தில்

இப்பொருள் தொடர்பாக ஆய்வு செய்யவும், சென்னை நகர காவல் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இது போலவே புறநகர்ப் பகுதியில் செயல்படும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் காணப்படும் சமூக விரோதிகளின் தொல்லை குறித்து, ஆய்வு செய்ய காவல்துறைக் கண்காணிப்பாளர் செங்கற்பட்டு (கிழக்கு) கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

(ix) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் சரியான அளவில் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்ல முடிந்த அளவிற்கு தரப் படுத்தப்பட்ட கோணிப்பைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

(x) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து எடுத்துச் செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்கள் எடை மாறுப்பட்டு இருப்புக் குறைவு இன்றி சரியான எடையுடன் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லாரியுடன் செல்வதற்குக் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் தனியாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

3. சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம்.

நாட்டின் பிற பகுதிகளில் உள்ளபடி, தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் 1-1-1992 முதல் சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் செயல்பாட்டிலுள்ளது. தமிழ்நாட்டில் 68 ஊராட்சி ஒன்றியங்கள் சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வருகின்றன. இச்செயல்பாட்டு பகுதியில் 2,259 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் 11,48,188 குடும்ப அட்டைதாரர்களுக்கு சேவை புரிகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒரு நியாயவிலைக் கடைக்கு இணைக்கப்பட்ட சராசரி குடும்ப அட்டைகள் 508 ஆகும். மத்திய தொகுப்பிலிருந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் வழங்கும் விலைக்குக் குறைவாக இந்திய அரசு அரிசி வழங்குகிறது. ஆனால் நமது மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் விலை, மைய அரசால் குறைக்கப்பட்ட விலையை விட குறைவாக உள்ளது. 1995 ஏப்ரல் மாதம் முதல் 22,860 மெ.டன் அரிசியை இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டப் பகுதிகளுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கும்

கூடுதல் ஒதுக்கீடு, தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டப் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இக்கூடுதல் ஒதுக்கீட்டில் தற்போது ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மற்றும் மலைப்பகுதி முன்னேற்றத் திட்டங்கள் செயல்படும் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குக் கூடுதலாக 4 கிலோ வீதம் வழங்கப்படுகிறது.

சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விநியோகிக்கப்பட்ட அரிசியின்அளவு பின்வருமாறு:

வரிசை எண்.	காலம்	விநியோகிக்கப்பட்ட அளவு மெ.டன்னில்
1.	ஜுன் '92 முதல் டிசம்பர் '92	2527.375
2.	ஜனவரி '93 முதல் டிசம்பர் '93	7490.742
3.	ஜனவரி '94 முதல் நவம்பர் '94	7855.897

4. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ஊரக வளர்ச்சித் துறையால் நிருவகிக்கப்படுகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு மனித நாளுக்கு 2 கிலோ வீதம் உணவுப் பொருட்கள் கட்டாயமாக வழங்க வேண்டுமென இந்திய அரசு ஆணையிட்டுள்ளது. பணியாளர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மட்டுமே அரிசி வழங்க வேண்டுமென இந்திய அரசு தெரிவித்துள்ளது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்குரிய அரிசியை, இந்திய உணவுக் கார்ப்பரேஷனிடமிருந்து எடுத்துச் செல்ல அவற்றை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் முதன்மை/இணைப்புச் சங்கங்கள் வழியாக நியாயவிலைக் கடைகளில் விநியோகம் செய்ய வேண்டுமென மாநில அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் இத்திட்டம் 1993 ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு நிதியுதவி

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும், நட்டத்தில் இயங்கும் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற நியாயவிலைக் கடைகளுக்கு அரசு

மான்யம் வழங்குகிறது. கிராமப்புற நியாயவிலைக் கடைகளுக்கு 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 2.50 கோடி மானியமாக அரசு வழங்கியுள்ளது. நகர்ப்புற நியாயவிலைக் கடைகளுக்கு மானியம் வழங்கும் கருத்துருக்கள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

6. நடமாடும் நியாயவிலைக் கடைகளை நடத்த கூண்டு உந்துகள் (வேன்கள்) வாங்க அரசு நிதியுதவி

மலைப்பகுதிகள் மற்றும் அணுகமுடியாத இடங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலைவாழ் மக்களின் மேன்மைக்காக நடமாடும் நியாயவிலைக் கடைகளை நடத்த கூண்டு உந்துகள் வாங்க அரசு, நிதியுதவி செய்து வருகிறது. 26 கூட்டுறவு சங்கங்களுக்கு 27 கூண்டு உந்துகள் வாங்க ரூ. 91.50 இலட்சங்கள் இது வரை அரசு வழங்கியுள்ளது. இக்கூண்டு உந்துகள் மலைப்பகுதி மற்றும் மலைவாழ் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நடமாடும் நியாயவிலைக் கடைகளாக செயல்பட்டு வருகின்றன.

அத்தியாயம் 7

தனி வகை கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு

(1) தனி வகை கூட்டுறவுகள்:

நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சில சமுதாய பிரிவினரான தொழிலாளர்கள், சலவையாளர்கள், முடி திருத்துவோர், உப்புத் தொழிலாளர் மற்றும் மலைவாழ் இனத்தவரின் நலனுக்கென சிறப்பினமாக சிலவகை கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெற்று அதன் மூலம் தனது உறுப்பினர்கட்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. 18 கூட்டுறவு அச்சகங்கள் தமது உறுப்பினர் சங்கங்கள் மற்றும் பிற கூட்டுறவுச் சங்கங்களின் அச்சுப் பணிகளை ஏற்று நியாயமான விலையில் பணியாற்றி வருகின்றன. பிற சங்கங்கள் தமது உறுப்பினர்கட்கு கடன் (அல்லது) சேவையை அளித்து வருகின்றன. அரசு மான்யம், அரசு மூலதனம், கடன் மற்றும் துறைப் பணியாளர்களின் இலவச சேவை ஆகியவை இத்தனிவகை சங்கங்கட்கு அளிக்கப்படுகின்றன.

(2) கூட்டுறவு துறையில் இயற்கை மருந்து தயாரித்தல்:

இம்ப்காப்ஸ் (IMPCOPS) எனப்படும் இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்து செய் நிலையம் மற்றும் பண்டகசாலை, சித்த, ஆயுர் வேத மற்றும் யுனானி மருத்துவ முறையில், இயற்கை மருந்துகளை தயாரித்து வழங்கி வருகிறது. 1944-ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட இந்த கூட்டுறவுச் சங்கம் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவத் துறையில் பதிவு பெற்ற 11,000-க்கும் மேற்பட்ட மருத்துவர்களை 31-12-1994 அன்று உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களுடைய தேவைக்கேற்ப மருந்துகளைச் செய்து வழங்கிவருகிறது. இச் சங்கம் 1993-94-ம் ஆண்டில், ரூ. 4.59 கோடி மதிப்புக்கு விற்பனை செய்துள்ளது.

உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக, தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும், இச் சங்கத்தின் மருந்து விற்பனை நிலையங்கள், ஹைதராபாத், விசாகப்பட்டினம்,பெங்களூர் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஆந்திர மாநிலத்தில் தடப்பள்ளி என்ற இடத்தில் ஒரு மருந்து செய் நிலையத்தையும், விஜயவாடவில் மண்டல அலுவலகத்தையும் தற்போது நிறுவி இச்சங்கம் இயங்கி வருகிறது.

(3) பழங்குடியினர் மேம்பாடு:.

தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 68,252 மலைவாழ் மக்களை உறுப்பினர்களாகக் கொண்டும் 6,934 பழங்குடியினரல்லாதாரை உறுப்பினர்களாகக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களில் பழங்குடியினர் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பழங்குடியினரின் ஏழ்மையான பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, அரசு அச்சங்கங்களுக்கு தொடர்ந்து நிதியுதவிகளைத் தாராளமாக வழங்கி வருகிறது. இச் சங்கங்கள் பயிரிடுதல் மற்றும் உற்பத்தி காரியங்களுக்காக வட்டியில்லாக் கடன்கள் வழங்கி வருகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டப் பகுதி மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சி திட்டமில்லாத பகுதிகளுக்கு உறுப்பினர் பங்கு மூலதன மான்யம், வட்டி மான்யம் போக்குவரத்து மான்யம், துறை அலுவலர் மான்யம், வாகன பராமரிப்பு மற்றும் ஓட்டுநர் ஊதிய மான்யம், நிர்வாக மான்யம், போன்ற பலதரப்பட்ட திட்டங்களின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 76.96 இலட்சம் நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 முதல் இச் சங்கங்கள் எய்திய முன்னேற்ற விவரம் வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு (1)	வழங்கிய கடன் (2)	வேளாண் விளை பொருள் கொள்முதல் (3)	வேளாண் இடுபொருள் வழங்கியது (4)	சிறுவனப் பொருள் கொள் முதல் (5)	நுகர் பொருள் விநி யோகம் (6)
1985-86	98.48	11.00	26.41	22.15	95.90
1986-87	120.26	14.27	29.20	34.15	104.39
1987-88	166.52	13.85	32.15	54.39	136.20
1988-89	228.29	16.48	35.66	45.05	167.43
1989-90	273.17	29.54	47.26	45.04	194.93
1990-91	321.00	30.89	52.97	50.16	239.34
1991-92	406.43	79.30	73.89	87.20	268.60
1992-93	409.88	71.65	93.52	87.23	309.67
1993-94	492.04	90.04	105.07	92.26	415.07
1994-95 31-12-1994 வரை	395.06	68.32	61.68	41.14	352.77

அத்தியாயம் 8

கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

(1) கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரம்:.

'கூட்டுறவு சங்கங்களை அமைக்கும் முன் கூட்டுறவாளர்களை உருவாக்கு' என்பது கூட்டுறவு இயக்கத்தின் மரபு மொழி. கூட்டுறவாளர்கள் பொதுமக்களிடமிருந்து உருவாகிறார்கள். எனவே, கூட்டுறவு பற்றிய விளம்பரமும், கல்வியும் அவசியமாகிறது. விளம்பரத்தின் நோக்கமே, பொது மக்களிடையே கூட்டுறவு பற்றிய அறிவினைப் புகுத்தி, மக்களின் கருத்தினை அதில் செலுத்தி, கூட்டுறவு இயக்கத்தினை வளர்ப்பதே ஆகும். எனவே, உறுப்பினர்களுக்கும் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளித்தல், விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புவதற்காக 1914-ல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவிலான சங்கமாக அமைக்கப்பட்டது. இது தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புதல் ஆகிய பணிகளையும் கண்காணிப்பதோடு, ஆராய்ச்சி மற்றும் கல்விக்கும் பொறுப்பேற்று நல்ல பல ஆக்கப் பணிகளை ஆற்றி வருகிறது.

மாவட்ட அளவில் 17 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மேற்கூறிய பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் எல்லா தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிலையங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. அதனுடைய நிதி, அங்கத்தினர்களாக உள்ள சங்கங்களிடமிருந்து பெறும் சந்தா கட்டணங்கள், வெளியீடு, விற்பனை மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி வசூல் ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது.

மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் செயல்பாட்டு எல்லையில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் அனைத்தும் கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் தவிர மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன.

1995 மே 3]

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதி என்ற இரண்டு நிதிகளை நிர்வகித்து வருகிறது. ஒவ்வொரு உறுப்பினர் சங்கமும் தங்களது நிகர இலாபத் தொகையிலிருந்து முறையே 3 சதவீதமும் 2 சதவீதமும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு சந்தா செலுத்த வேண்டும். வசூல் தொகையில் 10 சதவீதத்தினை தங்களது செலவிற்காக மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் வைத்துக் கொள்கின்றன. இந்த இரண்டு நிதிகளும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 90 மற்றும் 91-ன் படி அமைக்கப்பட்ட குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் இக் குழுக்களுக்குப்பதவி வழித் தலைவராவார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இதழ்கள் வெளியிட்டும் பொருட்காட்சிகள் நடத்தியும், சுவரொட்டிகள், படக்காட்சிகள் மற்றும் சினிமாப் படங்கள் மூலமும் கூட்டுறவுக் கொள்கைகளை பரப்பி வருகின்றது. இது உறுப்பினர்களுக்கு கல்வித் திட்டமும் நடத்தி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கூட்டுறவு வார விழாவினை நடத்தி கூட்டுறவு கொள்கைகளை மக்களிடையே பரப்பி வருகின்றது.

தற்போது மாணவர்களிடையே கூட்டுறவுக் கல்வியைப் போதிக்க, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன. இவ்வகை நிகழ்ச்சிகள் 27-1-1995-லிருந்து நடைபெற்று வருகின்றன.

(2) கூட்டுறவுப் பயிற்சி:

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, சேலம், காஞ்சிபுரம், வேலூர், திருநெல்வேலி, சாத்தூர் மற்றும் கடலூர் ஆகிய 9 இடங்களில் கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் இளநிலையாளருக்கு பயிற்சி அளித்து வருகின்றது. இப் பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களில் பணியில் சேர விரும்புவோர்க்கும் 2 முதல் 42 வாரங்கள் வரையிலான பல்வேறு பொது அடிப்படை பயிற்சிகளை அளித்து வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் வழிமுறைகளின் படி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அஞ்சல் வழி கூட்டுறவு பட்டயப் பயிற்சியும், 1992-93 முதல் இந்தப் பயிற்சி நிலையங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இடைநிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியும் மதுரையில் ஒரு கூட்டுறவு பயிற்சி கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக 3வது திட்டத்தின் கீழ் மாதவரத்தில் ரூ. 2.22 கோடி செலவில் ஒரு வேளாண்மைக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையம் 1992-ல் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தை உருவமைத்து நிறுவி பயிற்சி திட்டங்களைச் செயல்முறைப்படுத்தும் பணியினை தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி செய்துள்ளது. இப் பயிற்சி நிலயத்தில் கூட்டுறவு வங்கிப் பணியாள்ர்களுக்கு அவர்கள் வேலைக்கு தொடர்புடைய மற்றும் தேவையான குறுகிய காலப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 9

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்

பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு கட்டங்களில் முறையே 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் திங்களில் தேர்தல் நடத்த அரசாணை (நிலை) எண் 286, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 11-6-92ல் அரசு ஆணை இட்டிருந்தது. மேற்படி அரசாணைப்படி தேர்தல் பணிகள் துவங்கப்பட்ட போது, உறுப்பினர்கள் சேர்க்கை, நீக்கம் மற்றும் வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் பல நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்படி நீதிப்பேராணை மனுக்களின் பேரில் சென்னை உயர்நீதி மன்றம், பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 31-10-92 க்குள் தேர்தல் நடத்துவதற்கு அனுமதி அளிக்குமாறு அரசு உச்ச நீதி மன்றத்திடம் கொடுத்துள்ள விண்ணப்பத்தின் பேரில் உச்சநீதிமன்றம் அரசுக்கு அனுமதி ஏதும் வழங்காத நிலை உள்ளதால், பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெற இருந்த தேர்தலை ஒத்திவைக்குமாறு WMP 14985/1992 மற்றும் WP No.10375/92 ல் அரசுக்கு 7-8-92 ல் உத்திரவிட்டது. மேலும் மேற்படி நீதிப்பேராணைகளின் தொகுப்பை நீதி ஈராயத்தின் (Division Bench) விசாரணைக்கு அனுப்பியது. இருந்த போதிலும், நாளது தேதி வரையில், மேற்படி நீதிப்பேராணை மனுக்கள் சென்னை உயர்நீதி மன்ற ஈராயத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக, பொதுவான எதிர் உறுதி ஆவணத்தை அரசு ஏற்கெனவே தாக்கல் செய்துள்ளது. மேற்கண்டவாறு சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனு எண்.758/91ல், மனுதாரர் பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது தொடர்பாக உச்ச நீதி மன்றத்தில் வழக்கிடை விண்ணப்பம் (I.A.) 4/92 தாக்கல் செய்துள்ளதற்கு அரசு எதிர் ஆணையுறுதிப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது. தற்போது இவ்வழக்கிடை விண்ணப்பம் உச்ச நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ளது.

இச் சூழ்நிலையில், உச்ச நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் முடிவுற்ற பின்னரே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த இயலும்.

அத்தியாயம் 10

ஏப்ரல் 1994-ல் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட உறுதி மொழிகளும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

(1) தனிநபர்க்கு வழங்கப்படும் நகைக்கடனில் உச்ச வரம்பினை அதிகரித்தல் தொடர்பாக:

நகை அடமானத்தின் பேரில் ஒருவருக்கு வழங்கப்படும் உயர்ந்த அளவு கடன் தொகையினை ரூ. 25000/- லிருந்து ரூ. 40000/- எனவும், இது போன்றே சவரன் ஒன்றுக்கு வழங்கப்படும் உச்ச பட்ச கடன் தொகையினை ரூ.2200/- லிருந்து ரூ. 2400/- ஆகவும் கூட்டுறவு சங்கங்கள் உயர்த்தியுள்ளன.

(2) சிறு வியாபாரிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையினை அதிகரித்தல்:

மத்திய கூட்டுறவு வங்கிகள் சிறு வியாபாரிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையினை ரூ. 500/- லிருந்து ரூ. 750/- க்கு உயர்த்தியும் இதுபோன்றே இத் திட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தினை 16% லிருந்து 14% ஆக குறைத்தும் உள்ளது.

(3) மகளிர்களாலேயே நிர்வகிக்கப்படும் மகளிர் வங்கிக் கிளைகள் திறப்பது தொடர்பாக:

ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கிக்கும் ஒரு மகளிர் வங்கிக் கிளை திறப்பது என முடிவெடுக்கப்பட்டது. இவ்வறிவிப்பிற்கு முன்னதாக 16 மகளிர் கிளைகள் செயல்பட்டுக் கொண்டிருந்தது. 1994-95-ம் ஆண்டில் 7 மகளிர் வங்கிக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு 31-1-95ல் மொத்தம் 23 மகளிர் கிளைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் 9 மகளிர் வங்கிக் கிளைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

(4) புதியதாக கட்டப்பட்ட காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடத்திற்குப் பெயரிடுதல்:

புதியதாக கட்டப்பட்ட காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி கட்டிடத்திற்கு " புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மாளிகை" என பெயரிடப்பட்டுள்ளது.

(5) புதியதாக கட்டப்பட்ட திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடத்திற்கு பெயரிடுதல்:

புதியதாக கட்டப்பட்ட திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடத்திற்கு "டாக்டர் எம்.ஜி.ஆர். மாளிகை" என 15-11-1994 ல் பெயரிடப்பட்டுள்ளது.

(6) நகைக் கடன் வழங்கும் 450 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம் வழங்குதல்:

1994-95 ம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின் கீழ் 150 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம் வாங்க அரசு ரூ. 30/- இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் 200 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியால் நிர்வகிக்கப்படும், தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து வாங்கி வழங்கப்படும். இதையடுத்து தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிதிக்குழுவின் பரிந்துரையின்படி அந்நிதியிலிருந்து 150 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுககு இரும்புப் பெட்டகம் வழங்கும்.

(7) விளையாட்டுப்போட்டிகள் நடத்துதல்:

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 1995 ம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் சென்னையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தினால் நடத்தப்பட்டது.

(8) கூட்டுற்வு பற்றி சினிமா தயாரித்தல்:

இது தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய வரவு செலவு திட்டத்தில் ரூ. 20/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கதை மற்றும் இதர பணிகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

30 நிமிடங்கள் திரையிடக் கூடிய அதாவது கூட்டுறவு வரலாறு வளர்ச்சி மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் பணிகள் குறித்த ஒரு திரைப்படமும், கூட்டுறவு கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பாகவும், வைப்பு தொகை திரட்டுதல் தொடர்பாகவும், இரண்டு சிறிய திரைப்படங்கள் நடப்பு கூட்டுறவு ஆண்டில் தயாரிக்கப்படும்.

(9) கூட்டுறவு பயிற்சி நிலையங்களுக்கு பெயரிடுதல்:

காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சாத்தூர் கூட்டுறவு பயிற்சி நிலையங்களுக்கு முறையே பேரறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., மற்றும் தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் பெயரிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(179 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண். 46

செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் கொள்கை விளக்கக் குறிப்பு 1995-96

முன்னுரை

மக்களாட்சியின் அடிப்படை நோக்கமும் தத்துவமும் வெற்றிபெறுவதற்கு ஆட்சி நடத்தும் அரசின் செயல்பாடுகள் பற்றி மக்களிடம் விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்தி, அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு கிடைக்க வழிவகுப்பது இன்றியமையாததாகும். அரசின் கொள்கைகள், கோட்பாடுகள், செயல் பாடுகள், ஆற்றிவரும் பல்வேறு நலத்திட்டங்கள், துறைகள் தோறும் நிகழ்த்தப்படும் சாதனைகள், ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு சலுகைகள் ஆகியன பற்றி, பொது மக்களுக்கு பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் எடுத்துக்கூறி அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இடையே வலுவான பாலமாக அமைந்து நல்லெண்ணத் தொடர்புகளையும் நட்புணர்வையும் ஏற்படுத்தும் அரிய பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறை செவ்வனே செய்து வருகிறது.

தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், ஏழை எளியவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், சிறுபான்மையினர், திரைப்படத்துறையினர், அரசு ஊழியர்கள் என அனைத்துப் பிரிவினரது நலன்களையும் மேலோங்கச் செய்வது என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் நடைபெற்று வரும் ஆற்றல் மிக்க நல்லாட்சியில், பல்வேறு துறைகள்

மூலமாகத் தொலைநோக்குடன் ஆற்றப்படும் செயல் திட்டங்களையும் நலத்திட்டங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி, பயன்பெறச்செய்வதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரும்பணி ஆற்றி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் இத்துறை ஒரு புதிய பரிணாம வளர்ச்சியுடன் பீடுநடை போடுகிறது.

1995 மே 3]

அத்தியாயம் 1

பொருட்காட்சி

சுவரில் தொங்கும் சித்திரம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமமானது என்கிறது ஒரு சீனப்பழமொழி. 'கற்றலின் கேட்டலே நன்று; எனின் கேட்டலிற் காணலே நன்று.' நூல்கள் வாயிலாக அறிந்து கொள்வதைவிட, காட்சியின் வாயிலாக அறிந்து கொள்வது எளிதானது. விழித்திரையில் பட்டவை மனத்திரையில் மாறாத பசுமையுடன் பதிவது இயல்பு. எனவே அரசின் கொள்கைகளையும் நலத்திட்டங்களையும் அரும்பெரும் சாதனைகளையும் விளக்கும் வண்ணம் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் பொருட்காட்சிகள், மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில், நடத்தப்படுகின்றன. அரசுத் துறைகளும், அரசுச் சார்பு நிறுவனங்களும் அரங்கங்களை அமைக்கும் இந்தப் பொருட்காட்சிகள் அனைவருக்கும் மகிழ்வூட்டுவது மட்டுமல்லாமல், அறிவூட்டவும் பயன்படுகின்றன.

1978-ஆம் ஆண்டு முதல், இதுவரை இத்துறை 79 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. இப்பொருட்காட்சிகள் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதுடன், இதுவரை ரூ. 5.23 கோடி வருவாயையும் அரசுக்கு ஈட்டித் தந்துள்ளன.

மதுரை, சேலம், கோவை திருநெல்வேலி, திருச்சி ஆகிய பெருநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. சென்ற நிதி ஆண்டில் கூடுதலாக வேலூரிலும், தஞ்சாவூரிலும், பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமல்லாது, செய்திகளைத் தெரிவிக்கும் சாதனமாகவும் திகழ்கின்றன. இத்தகு பயன்பாட்டைக் கருத்திற்கொண்டு பெருநகரங்களில் வாழ்வோர் மட்டுமல்லாது, பிறமக்களும் பயன்பெறும் வண்ணம், சென்ற ஆண்டில் காரைக்குடி, தருமபுரி ஆகிய இடங்களில் சிறு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. வரும் 1995-96-ம் நிதி ஆண்டில் கூடுதலாக வேலூரிலும், கடலூரிலும் பெரிய அளவிலான பொருட்காட்சிகள் நடத்தப்பட உள்ளன.

சென்னையில் ஒவ்வொரு ஆண்டும், நடைபெறும் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்கிறது. புதுடெல்லியில் நடத்தப்படும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும்

கலந்து கொண்டு 'தமிழ்நாடு அரங்கில்' பல்வேறு அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொள்ளும் பொருட்காட்சியினை ஆண்டுதோறும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை நடத்துகிறது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் டெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் "மலர்ப் பேரணி விழாவிலும்" (PHOOL WALON-KI-SAIR) இத்துறை தொடர்ந்து பங்கேற்கிறது. கடந்த 1994-ம் ஆண்டு நடைபெற்ற மலர்ப் பேரணி விழாவில் கலந்து கொண்டமைக்காக, மலர் அலங்காரத்திற்காக ஒன்றும், சிறந்த கலை நிகழ்ச்சிக்காக ஒன்றும் ஆக இரு முதன்மை விருதுகள் இத்துறைக்கு வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள், கிராமிய நடனங்கள், விழா நிகழ்ச்சிகளுக்கான நேர்முக வர்ணனை ஏற்பாடு போன்ற முக்கியப் பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

2. டாக்டர் எம்.ஜி.ஆர்.ஒலி-ஒளிக்காட்சி

காலத்தை வென்ற காவிய நாயகராய், மறைந்தும் மறையாமல், இறந்தும் இறவாத புகழோடு விளங்குபவர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவரது வாழ்க்கை மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் ஒலி-ஒளிக் காட்சி, தந்தை பெரியார் அவர்கள் வாழ்க்கை மற்றும் அறிவுரைகளை விளக்கும் விதமாக நடத்தப்பட்ட ஒலி-ஒளிக் காட்சி நிகழ்ச்சிகளைப் போன்று நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவரது சீரிய கருத்துக்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் ஒலி-ஒளிக் காட்சிகள் நடத்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் 21 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு வழங்கிய பரிந்துரைக்கேற்ப பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். ஒலி-ஒளிக் காட்சி நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அத்தியாயம் 2

விழாக்கள்

இளைய தலைமுறைக்கு மகத்தான தலைவர்கள் பற்றியும், மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் உணர்த்த வேண்டியது நமது கடமை. பூக்களுக்கு வேர்களின் விலாசத்தை அறிமுகப்படுத்த வேண்டியது ஒரு சமூகப் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை நினைவுகூறும் விழாக்களையும், வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்களின் வாழ்வோடு தொடர்புடைய பிறந்தநாள் போன்ற விழாக்களையும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை செவ்வனே நடத்தி வருகிறது.

1. டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா (மாநில அளவில்)
2. சர் பிட்டி தியாகராயர் பிறந்தநாள் விழா (மாநில அளவில்)
3. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா (மாநிலம் மற்றும் மாவட்ட அளவில்)
4. காயிதே மில்லத் பிறந்த நாள் விழா (மாநில அளவில்)
5. கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா (மாநில அளவில்)
6. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
7. விடுதலை நாள் விழா (மாநில அளவில்)
8. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா (மாநில அளவில்)
9. பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
10. தந்தை பெரியார் பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
11. அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
12. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா (மாநில அளவில் மற்றும் இராமநாதபுரம், மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்கள் அளவில்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1995 மே 3

13. தேசிய மறுசமர்ப்பண நாள் (மாநில அளவில்)
14. தேசிய ஒருமைப்பாடு வார விழா (மாநில அளவில்)
15. மனித உரிமைநாள் விழா (மாநில அளவில்)
16. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
17. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
18. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா (மாநில மற்றும் மாவட்ட அளவில்)
19. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள் விழா (மாநிலம் மற்றும் மதுரை மாவட்ட அளவில்)

இவை தவிர கீழ்க்கண்ட விழாக்களும் மாவட்ட அளவில் கொண்டாடப்படுகின்றன.

1.	சித்திரை முழு நிலவு விழா ..	நாகப்பட்டினம் காயிதேமில்லத்
2.	வீரபாண்டிய கட்ட பொம்மன் விழா ..	சிதம்பரனார்
3.	புலவர் அதங்கோட் டாசான் விழா ..	கன்னியாகுமரி
4.	செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா ..	கன்னியாகுமரி
5.	வல்வில் ஓரி விழா ..	சேலம்
6.	கவிமணி தேசிய விநாயகம் பிறந்த நாள் விழா ..	கன்னியாகுமரி
7.	வேதநாயகம் பிறந்த நாள் விழா ..	நாகப்பட்டினம் காயிதே மில்லத்
8.	நாமக்கல் கவிஞர் இராம லிங்கம் பிறந்த நாள் விழா ..	சேலம்
9.	மருதுபாண்டியர் நினைவு நாள் விழா ..	இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டங்கள்
10	திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா ..	மதுரை

சென்ற மானியக் கோரிக்கையின்போது, கீழ்கண்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மாவட்ட அளவில் விழாக்கள் நடத்தப்படும் என அறிவிப்புகள் செய்யப்பட்டன.

1. புலித்தேவர்
2. ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி
3. தீரன் சின்னமலை
4. அழகுமுத்துக்கோன்

விழா நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து ஆணை வெளியிடப்பட்டு விழாக்கள் சிறப்புற நடத்தப் பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 மே 3

அத்தியாயம் 3

நினைவகங்கள்

நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாக்களுக்கு, தமிழகத்தின் நேசத்திற்கும் பாசத்திற்கும் உரிய பெருமக்களுக்கு, நினைவகங்கள் அமைத்து, அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பையும் இத்துறை திறம்பட நிறைவேற்றி வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பராமரிப்பில் 25 நினைவகங்கள் அடங்கியுள்ளன.

1. வள்ளுவர் கோட்டம், சென்னை
2. காந்தி மண்டபம், சென்னை
3. காந்தி மண்டபம், கன்னியாகுமரி
4. பெரியார் நினைவகம், வைக்கம், கேரளா
5. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு
6. அண்ணா சதுக்கம், சென்னை
7. அண்ணா நினைவகம், காஞ்சிபுரம்
8. இராஜாஜி நினைவகம், சென்னை
9. இராஜாஜி மண்டபம், சென்னை
10. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி
11. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம், சென்னை.
12. காமராசர் இல்லம், சென்னை
13. காமராசர் இல்லம், விருதுநகர்
14. காமராசர் நினைவகம், சென்னை
15. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், சென்னை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

16. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம்

17. பாரதி இல்லம், எட்டயபுரம்

18. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்

19. வ.வே. சுப்பிரமணியம் நினைவு இல்லம், திருச்சிராப்பள்ளி.

20. கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி.

21. மருது சகோதரர்கள் நினைவகம், திருப்பத்தூர்.

22. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்.

23. செய்குத்தம்பிப் பாவலர் நினைவகம், நாகர்கோயில்

24. வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி

25. இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூர்.

தந்தை பெரியார் நினைவகம்:

தமிழர்க்குத் தன்மான உணர்வூட்டி, தாழ்ந்த தமிழகத்தைத் தூக்கி நிறுத்தி, வீழ்ச்சியுற்ற உள்ளங்களுக்கு எழுச்சியை வழங்கிய வீரர், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்குரலாக விளங்கிய தந்தை பெரியார் அவர்கள் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நினைவாக கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவகம் எழுப்ப அரசு முடிவு செய்தது. இதற்கு கேரள அரசு வைக்கத்தில் 74 சென்ட் அளவுள்ள நிலத்தை இலவசமாக வழங்கியது. தமிழ்நாடு அரசு ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, நினைவகம் எழுப்பும் பணி நிறைவுற்று 31-1-1994 அன்று திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. மேலும் இந்நினைவகத்தில் நூலகம், தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி, பெரியாரின் திருவுருவச் சிலை மற்றும் திறந்த வெளிக் கலையரங்கம் ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன.

திருவல்லிக்கேணி மகாகவி பாரதியார் இல்லம்:

பாவுலகை ஆளவந்த வேந்தனாகவும், இந்தப் பார் முழுதுக்கும் உரிய மாந்தனாகவும் வாழ்ந்தவர் மகாகவி பாரதியார். சென்னை, திருவல்லிக்கேணியில் மகாகவி வாழ்ந்த இல்லத்தை ரூ. 5.70 இலட்சம்

செலவில் அரசு கையகப்படுத்தி ரூ. 6.75 இலட்சம் செலவில் அதைப் புதுப்பித்து நினைவகமாக்கியது தமிழக அரசு. இந் நினைவில்லம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2-10-1993 அன்று திறந்து வைக்கப்பட்டது. பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியும் இவ்வில்லத்தில் அமைக்கப்பட்டுள்ளது. விழித்த விழியில் மேதினிக்கு ஒளி செய்த பாரதியாரின் மார்பளவு வெண்கலச் சிலையும் இங்கு நிறுவப்பட்டுள்ளது. கல்வித்துறை மூலம் நூலகம் ஒன்றை அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாட்டுக்கொரு புலவன் பாரதி வாழ்ந்த இந்த இல்லத்தை நாள்தோறும் திரளான மக்கள் பார்வையிட்டுச் செல்கிறார்கள்.

மருது சகோதரர்கள் நினைவகம்:

தாயகத்தின் விடுதலைக்காக தம்மையே தந்தவர்கள் மருது சகோதரர்கள். அந்த மருது சகோதரர்கள் புதைக்கப்பட்ட இடம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சார்ந்த திருப்பத்தூர். திருப்பத்தூரில் மருது சகோதரர்களுக்கு நினைவு வளாகம் ஒன்றை எழுப்ப அரசு முடிவு செய்தது. நினைவு வளாகம் கட்டுவதற்கும் சிலை நிறுவுவதற்கும் ரூ. 5.46 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு 21-10-1992 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இவ்வளாகம் திறந்து வைக்கப்பட்டது. சிங்கம் நிகர் மருது சகோதரர்கள் சிலைகளும் அங்கு நிறுவப்பட்டுள்ளன.

டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம், அருங்காட்சியகம்:

கலையுலகின் பேரரசராய், தமிழகத்தின் முதலமைச்சராய், ஆட்சி செய்த பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீளாத்துயில் கொள்ளும் இடம் வங்கக் கடற்கரை. அண்ணாவும் அவரது இதயக்கனியும் அருகருகே மீளாத்துயிலில் ஆழ்ந்துள்ள காட்சியைக் காண அன்றாடம் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்களின் நெஞ்சில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் மகத்தான வள்ளலாம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம், அவரது அரிய பெயருக்கும், உரிய பெருமைக்கும் ஏற்ப மிகச் சிறப்பாக அமைந்திட வேண்டும் என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் ரூ. 2.265 கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கரங்களாலேயே 24-12-92 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதுமட்டுமின்றி பேரறிஞர் அண்ணா நினைவிடத்திற்கு

அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப் போன்றே, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவக வளாகத்தில் எம்.ஜி.ஆர் அருங்காட்சியகமும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அருங்காட்சியகம் அமைத்திட தோராயமாக ரூ. 54 இலட்சம் செலவினம் ஆகும் என்று பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை:

'எல்லாப் பொருள்களும் இதன்கண் உள. இதன்கண் இல்லாதது இல்லை' என்னும் படிக்கு எல்லோரும் போற்றும் சிறப்பினையுடைய ஒரு மறை—தமிழரின் திருமறை—உலகின் பொதுமறை திருக்குறள்! பொதுமறை தந்த வான்புகழ் வள்ளுவர் பெருந்தகைக்கு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறியபாறை மீது 133 அடி உயரச் சிலை நிறுவ முடிவு செய்யப்பட்டது. இப்பணிக்காக இதுவரை ரூ. 2.315 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளுவர் சிலை அமையும் அடிப்பீடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 266 குறட்பாக்கள் பொறிக்கவும், சிலையைச் சுற்றி ஒளிவிளக்குகள் அமைக்கவும் ரூ. 15.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி:

'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை-எந்த
நிலையிலும் எனக்கு மரணமில்லை'

என்று கவிதைப் பிரகடனம் செய்தவர் கவியரசு கண்ணதாசன். நாம் வாழும் காலத்தில் வாழ்ந்து மறைந்த கவியரசு கண்ணதாசனுக்கு ரூ. 55 இலட்சம் செலவில் ஒரு மணிமண்டபம் அமைக்க அரசு எடுத்த முடிவின்படி, நினைவு மண்டபம் கட்டும் பணி முடிவு பெற்று, 21-10-1992 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்மணிமண்டபத்தில் கவியரசு கண்ணதாசன் அவர்களின் வெண்கலத்திலான மார்பளவுச் சிலையும் நிறுவப்பட்டு 27-4-1994 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தியாகி சங்கரலிங்கனார் சிலை, சென்னை:

பண்டைப் பெருமையும் பாரம்பரியச் சிறப்பும் மிக்க செந்தமிழ் நாட்டுக்குச் சொந்தப் பெயரில்லாமல் 'மெட்ராஸ்' என்னும் எந்தப் பெயரோ இருந்தது கண்டு, தான் பிறந்த மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று

பெயர் சூட்டவேண்டுமென்று போராடி, உண்ணாநோன்பிருந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் சிலையைச் சென்னையில் நிறுவ அரசு முடிவு செய்து, இதற்காக ரூ. 1.25 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு சிலை செய்யும் பணி முடிவு பெறும் நிலையில் உள்ளது. விரைவில் சிலை நிறுவப்படும்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.சிலை, சென்னை:

'காலம் நமக்களித்த கனகமணிப் பெட்டகமாய்
ஞாலம் வியக்கவந்த நல்லறிஞர் திரு.வி.க.'

அவர் பெண்ணுரிமைப் போராட்ட வீரர்! விடுதலை வானத்தின் விடிவெள்ளி. தொழிலாளரின் தோழர்! மாசு மருவற்ற மணித்தமிழ் நடையை வழங்கியதால் மாநிலத்தார் மனங்கவர்ந்த மாத்தமிழர். அந்தத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் நினைவாகச் சிலை அமைக்க முடிவு செய்தது தமிழக அரசு. அதன்படி சிலை செய்யும் பணி முடிவுபெறும் நிலையில் உள்ளது. விரைவில் சிலை நிறுவப்பெறும்.

விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் சிலை, சென்னை:

சிந்தையிலும் மூச்சிலும் இந்தியத் தாயின் பெயரே கொண்டிருந்த தியாக வீரர் செண்பகராமன். தேசத்தார் தினந்தோறும் உச்சரிக்க, 'ஜெய்ஹிந்த்' என்னும் தேசிய முழக்கத்தைத் தந்த சிந்தனையாளர். அந்த விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமனுக்குச் சென்னையில் சிலை ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்து, சிலை செய்வதற்கும் சிலையில் பீடம் அமைப்பதற்கும் ரூ. 2.20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சிலை அமைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முன்னாள் மேயர் சிவராஜ் சிலை, சென்னை:

நாடு, மொழி, இனம் என்று நாளெல்லாம் சிந்தித்து வாழ்ந்த செம்மல்களுக்குச் சிலைவைத்துப் போற்றும் செந்தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், அடித்தளத்து மக்களின் அரும்பெரும் தலைவர்களை, அவர்களுடைய அரிய பணிகளை, நினைவு கூர்வதிலும், நாட்டுக்கு நினைவுபடுத்துவதிலும் முன்னிற்பவர். அந்த வகையில் தாழ்த்தப்பட்ட இனத்து மக்களின் மேம்பாட்டுக்குப் பாடுபட்டவரும், சென்னையின் முன்னாள் மேயருமான சிவராஜுக்குச் சிலை ஒன்று

அமைக்க முடிவுசெய்யப்பட்டு, சிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6-12-94 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவகம், நாமக்கல்:

திலகர் சகாப்தத்தின் தேசியக் கவிஞர் பாரதி என்றால் காந்தியுகத்தின் தேசியக் கவிஞர் நாமக்கல் தந்த நற்றமிழ்க் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை. சிறந்த கவிஞராகவும், உரைநடையாளராகவும் ஓவியராகவும் விளங்கி, "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என சுதந்திர கீதம் முழங்கிய நாமக்கல் கவிஞர் திரு. வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், நாமக்கல் நகரில் அவர் வாழ்ந்த இல்லம் அரசுடமையாக்கப்பட்டு நினைவு இல்லமாகப் பாதுகாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கிணங்க நிலம் கையகப்படுத்தும் விதியின் கீழ் 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவகம், பட்டுக்கோட்டை:

சின்னச்சின்ன இழை பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச் சேலைகள் போல்-தம்
எண்ணத் தறிகளில் வண்ணக் கவிதைகள்
பாருக்கு நெய்தவர் பட்டுக்கோட்டை!

பட்டுக்கோட்டை என்றாலே ஒரு பாட்டுக்கோட்டை நினைவுக்கு வரும்படி வாழ்ந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவாக, அவருடைய ஊரான பட்டுக்கோட்டையில் நினைவகம் ஒன்று நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவகம் கட்டுவதற்காக, பட்டுக்கோட்டை வட்டம் நாடியம்மாள்புரம் கிராமத்தில் புல எண்.131-ல் 0.42 ஏக்கர் பரப்பளவு நிலத்தை கையகப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சர் பிட்டி தியாகராயர் நினைவிடம், வண்ணாரப்பேட்டை:

சான்றோர் நினைவைப் போற்றும் சால்புடையவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். "திராவிட இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரும், நீதிக்கட்சியில் முக்கிய

அங்கம் வகித்தவருமான சர் பிட்டி தியாகராயர் அவர்களின் நினைவிடத்தை அரசு ஏற்று புதுப்பிக்க முடிவு செய்துள்ளது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளார்கள். இதற்கிணங்க நினைவிடத்தைக் கையகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பத்தினிக் கோட்டம், திருச்செங்கோடு:

கடவுள் வழிபாடு மட்டுமே கண்டிருந்த உலகிற்கு 'பத்தினி வழிபாடு' என்னும் புதிய வரலாற்றை அறிமுகப்படுத்தியவன் சேரன் செங்குட்டுவன். அந்த வழிபாட்டுத் தெய்வம், கொங்குச் செல்வி 'குடமலையாட்டி' கண்ணகியாவாள். அவள் நீதி கேட்கும் பெண்மையின் நெருப்பு வடிவம் ! அந்தக் கண்ணகித் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யும் வகையில் திருச்செங்கோட்டில் "கண்ணகிக் கோட்டம்" அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தோழர் ஜீவானந்தம் நினைவகம், கன்னியாகுமரி:

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்னும் இலட்சியத்தை உயிர் மூச்சாய்க்கொண்டு நாளெல்லாம் நாட்டுக்காகவும், மொழிக்காகவும், உழைப்பாளர்களுக்காகவும் உழைத்தவர் தியாகி தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள். கன்னியாகுமரி மாவட்டம் பூதப் பாண்டியிலுள்ள தோழர் ஜீவானந்தம் அவர்களின் இல்லத்தை நினைவகமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கன்னியாகுமரியில் தோழர் ஜீவானந்தம் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளார்கள். அதற்கிணங்க நினைவகம் கட்டுவதற்கான இடத்தை கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

திருமுருக கிருபானந்த வாரியார் நினைவகம், காங்கேயநல்லூர்:

ஞானத்தின் திருவுருவாய், நான்மறையின் தமிழ்வடிவாய், நாம் வாழும் காலத்தில் வாழ்ந்தவர் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள். பாமரரையும் படித்தவரையும் ஈர்த்த தமிழ் அவரது இனிய தமிழ். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு அவர் பிறந்த காங்கேயநல்லூரில் நினைவு மண்டபம் அரசு சார்பில் எழுப்பப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச்

செய்துள்ளார்கள். அதற்கிணங்க நினைவு மண்டபம் கட்டுவதற்கு ஏற்றதொரு இடத்தைக் காங்கேயநல்லூரில் தெரிவு செய்து கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவகம், பசும்பொன்:

தேசியமும் தெய்விகமும் இரு கண்களாகக் கொண்ட மாமனிதர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். விடுதலைப் போராட்ட வீரராகவும் ஒப்பற்ற பேச்சாளராகவும் விளங்கிய தேவர் திருமகன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பசும்பொன் கிராமத்தில் வாழ்ந்த வீட்டை அரசு நினைவகமாக்கிப் பராமரிப்புச் செய்திட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கிணங்க கையப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அறக்கட்டளை அலுவல்களை மேற்பார்வையிட, ஐ.ஏ.எஸ். அலுவலர், தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வள்ளுவர் கோட்டம், சென்னை:

வள்ளுவர் கோட்டம், செப்பனிடும் பணிகளுக்கு ரூ. 26.61 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராஜாஜி மண்டபம்:

சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள இராஜாஜி மண்டபம் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1802) கட்டப்பட்டது. 193 ஆண்டுகளாகியும், இம்மண்டபம் தொன்மை வாய்ந்த இந்திய மற்றும் கிரேக்கக் கட்டடக் கலையின் உன்னதத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. புதிய அமைச்சரவை பதவியேற்பு விழா இங்கு நடப்பது தொடர்ந்து மரபாக இருந்து வருவதுடன், முக்கிய அரசு விழாக்களும் இம்மண்டபத்தில் நடைபெற்று வந்தன. இம்மண்டபம் பழுதடைந்தமை காரணமாக, தற்போது, பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. தமிழ்நாட்டின் தொன்மையானதும், பிரம்மாண்டமானதுமான இந்த இராஜாஜி மண்டபத்தைப் பழுது நீக்கிப் பாதுகாக்க ரூ. 17.97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

நினைவகங்களைப் பராமரித்தல்:

தற்போது மாவட்டங்களில் 16 நினைவகங்கள் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நினைவகங்களைப் பழுது பார்க்கும் அவசியம் கருதி உடனடி பராமரிப்புத் தேவைப்படுகிறது. இதற்காக

ரூ. 5 இலட்சம் செய்தி மற்றும் சுற்றுலாத் துறையிடம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. நினைவகங்களைப் பொலிவுடன் வைத்திருக்கும் வகையில் இன்றியமையாப் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ள இந்தத் தொகை பயன்படுத்தப்படும். 1994-95-க்கான நிதியாண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையிலிருந்து தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், பாரதி இல்லம், எட்டயபுரம் மற்றும் வேலூரிலுள்ள முத்து மண்டபம் ஆகிய நினைவகங்களில் மராமத்து மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற உள்ளன.

1995 மே 3]

அத்தியாயம் 4

தமிழரசு மற்றும் தமிழரசு அச்சகம்

"பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே!" என்று பத்திரிகையைப் பாராட்டினார் பாவேந்தர் பாரதிதாசன். அந்த வகையில் பிச்சிப்பூ மணம் கமழும் அச்சுப் பூக்களைத் தமிழ்நாடு அரசின் சார்பில் ஏந்தி வருவது 'தமிழரசு'. 'தமிழரசு' என்பது 'தமிழ்நாடு அரசின் குரல்!' தமிழ் நாடும் அரசின் குரல்! இது அரசுக்கும் மக்களுக்கும் இடையே அமைந்த அச்சுப் பாலம். இந்தப் பாலத்தின் மீது பயணிக்கும் கருத்துக்கள் பல்லாயிரம்! அரசின் கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சகல துறைகளிலும் மலர்ந்த சாதனைகள் ஆகியவற்றை ஏந்திச் செல்லும் எழுத்துத் தூதுவனாக இயங்கி வருகிறது தமிழரசு. அரசு விழாக்களின் நிகழ்ச்சித் தொகுப்புகளையும், அங்கு 'மேடையில் வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக மிதந்து வரும் மேன்மக்களின் உரைகளையும் தாங்கிவருவது 'தமிழரசு'. வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி, சமூகநலம் போன்ற பல்வேறு வளர்ச்சித் துறைகள் பற்றிய கட்டுரைகளோடு அறிஞர்தம் இதயவோடை ஆழத்திலிருந்து மொண்டுதரும் அரிய கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வரலாறுகளும் வண்ணத்தமிழில் இடம்பெறும் வாழ்வியல் தகவல் களஞ்சியமாய் வனப்போடு வெளிவருகிறது 'தமிழரசு'.

தமிழில் திங்கள் இருமுறை இதழாகவும், ஆங்கிலத்தில் மாத இதழாகவும் 'தமிழரசு' வெளிவந்து கொண்டிருக்கிறது.

தற்போது தமிழில் 36,000 பிரதிகளும் ஆங்கிலத்தில் 3,500 பிரதிகளும் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. தமிழரசு இதழில் வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி போன்ற பல்வேறு வளர்ச்சித் துறைகள் பற்றிய கட்டுரைகளும் மற்றும் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், அறிஞர்களின் படைப்புகளும் இடம் பெறுகின்றன.

'தமிழரசு' சிறப்பு வெளியீட்டுப் பிரிவின் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பல்வேறு உரைகள் தொகுக்கப்பட்டு தமிழில் **"புரட்சித் தலைவியின் முழக்கம்"** என்றும், ஆங்கிலத்தில் **'Jayalalitha Speaks'** என்றும் மூன்று தொகுதிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும்

அச்சிட்டு, நூல்வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழக அரசின் மூன்றாண்டுச் சாதனைகளை விளக்கும் நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழரசு அச்சகம்:

"தமிழரசு" அச்சகத்தில் கீழ்க்காணும் இதழ்கள் அச்சிடப்படுகின்றன.

1.	தமிழரசு (தமிழ்)		மாதமிருமுறை
2.	தமிழரசு (ஆங்கிலம்)		மாதம் ஒருமுறை
3.	திருக்கோயில் (தமிழ்) (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை)		மாத இதழ்

மேலும், அரசின் சாதனைகளையும், திட்டங்களையும், விளக்கிடும் கையேடு, மடிப்பேடு, சுவரொட்டிகள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் அச்சிடப்படுகின்றன.

தமிழரசு இதழின் அச்சுத் திறனை மேம்படுத்தவும், துரிதமாக அச்சிடவும் இரு வண்ண ஆப்செட் இயந்திரம் ஒன்று ரூ. 30 இலட்சம் செலவில் 1995-96-ஆம் நிதியாண்டில் தமிழரசு அச்சகத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 5

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்

திரைப்படம் என்பது கலையும் தொழில் நுட்பமும் இணைந்து படைத்த இணையிலாச் சாதனம். அந்தத் திரைத்துறையில் இளைய பிரம்மாக்களைப் படைத்து வருவது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிலையம். இது 1947-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, இந்தியாவிலேயே மாநில அரசால் நடத்தப்படும் ஒரே நிறுவனமாக விளங்குகிறது. ஆற்றல்மிக்க மக்கள் தொடர்புச் சாதனமான திரைப்படம் மற்றும் தொலைக்காட்சியின் தொழில் நுட்ப வளர்ச்சியினை மாணவர்களுக்குக் கற்பிப்பதும், அதன் மூலம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்புக்களங்களில் செயல்திறன் கொண்டவர்களை உருவாக்குவதும் இதன் பணியாகும்.

இந்நிறுவனத்தில் பயின்று பட்டயம் பெற்ற மாணவர்கள் இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் பணியமர்ந்து தொழில்நுட்ப வல்லுநர்களாகப் புகழுடன் விளங்குகிறார்கள். தற்போது திரைப்படம் மற்றும் வீடியோ நிகழ்ச்சிகள் கிராம மக்களையும் கவர்ந்துவிட்டதைத் தொடர்ந்து இந்நிறுவனத்தில் மாணவர்கள் சேர்க்கைக்கு ஆண்டுதோறும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன.நாட்டிலேயே இந்தப் பயிற்சி நிலையத்தில் மட்டும்தான் படச்சுருள் கழுவுதல் செயற்பாட்டுத்துறையில் (Film Processing) டிப்ளமோ பயிற்சியளிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் ஒளிப்பதிவு (3 ஆண்டுகள்), இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் (3 ஆண்டுகள்), ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல் (3 ஆண்டுகள்), படம் கழுவுதல் செயற்பாங்கு (3 ஆண்டுகள்), படத்தொகுப்பு (3 ஆண்டுகள்), ஆகியவற்றில் டிப்ளமோ வகுப்பும், நடிப்புக்கலையில் ஓராண்டுச் சான்றிதழ் வகுப்பும் நடத்தப்படுகின்றன. நடிப்புப் பயிற்சித் துறை நீங்கலாக பிறதுறைகளில் பிற மாநில மாணவர்களுக்கு ஓரிடமும், திரைப்படத் தொழில்துறையில் பணிபுரிந்து வருபவர்களுடைய பிள்ளைகளுக்காக டிப்ளமோ மற்றும் நடிப்புப் பயிற்சிகளில் ஓரிடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டு வரும் இக்காலத்தில் பாடத் திட்டங்களும் மாற வேண்டிய கட்டாயத்தால் இப்பயிற்சி நிலையப் பாடங்களும் மாற்றப்பட்டு அதற்காக நவீனக்

கருவிகள் வாங்கும் முயற்சிகள் ஆண்டுதோறும் தொடரப்பட்டு வருகின்றன. 1994-95-ம் ஆண்டு, பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன முன்னேற்றத்திற்காகவும் ரூ. 11 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டு முதல் வண்ண நெகட்டிவ் படச்சுருள் பதனிடும் இயந்திரம் அதன் பணியை துவக்க உள்ளதால், மேற்படி வண்ண நெகட்டிவ் படச்சுருள் பதனிடும் தொழில் நுட்ப நுணுக்கங்களை கற்றுத் தெரிந்து கொள்ளவும், பயிற்சி முடிந்த பிறகு வெளியே உள்ள தனியார் ஆய்வுக்கூடங்களில் பணிபுரியவும் இந்நிறுவன மாணவர்கள் ஒரு அரிய வாய்ப்பை பெறுகிறார்கள்.

நூல் நிலையத்தை நவீனப்படுத்துதல்

திரைப்படக் கல்லூரியிலுள்ள நூலகத்தில் அனைத்துப் பிரிவுகளைப் பற்றிய நூல்களும் உள்ளன. வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தில் நாள்தோறும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியும், புதிய புத்தகங்களும் வந்த வண்ணம் உள்ளன. எனவே, மாணவர் பயனுக்கு மேற்கூறிய புத்தகங்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது. நூலகத்திற்கு 1994-95 ஆம் ஆண்டில் புதிய புத்தகங்கள் வாங்குவதற்கும் மரச் சாமான்கள் வாங்குவதற்கும்., நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குவதற்கும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ரூ. 5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 6

ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்

ஒரு நூற்றாண்டு காலத்தை எட்டிப் பிடிக்கும் திரைப்படத் துறைக்கு, நூறாண்டை அடைவதற்கு முன்னரே அதை வரவேற்றுச் சூட்டிய மணிமகுடமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரில் "ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்" சென்னை தரமணியில் 86 ஏக்கர் நிலப்பரப்பில் அனைத்து வசதிகளும் நிரம்பப் பெற்றதாக உருவாக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 31-8-94 அன்று திறந்து வைக்கப்பட்டது.

உலகத் திரைப்பட வரைபடத்தில் சென்னைக்குச் சிறப்பிடம் பெற்றுத் தரும் கலைச் சோலை "ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்" ஆகும். திரை உலகின் தேவைகளை ஒரே இடத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் அளவுக்கு நவீனவசதிகள் அமைந்த கலைக்கோட்டமாக இது விளங்குகிறது.

இந்தத் திரைப்பட நகரில் குறைந்த செலவில் சிறந்த படங்களை உருவாக்க விரும்பும் திரைப்பட மற்றும் வீடியோ படத்தயாரிப்பாளருக்குத் தேவையான ஏராளமான படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நகரில் படப்பிடிப்பிற்குத் தேவையான வெளிப்புறக் காட்சிகள், கிராமியக் காட்சிகள், வயல்வெளிகள், கடைத்தெருக்கள், பள்ளிக்கூடம், குளக்கரை, பஞ்சாயத்து போன்ற திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குத் தேவையான படப்பிடிப்பு இடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

திரைப்பட நகரத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் கோயில், கிருத்துவ ஆலயம், மசூதி மற்றும் பேருந்து நிறுத்துமிடம், வகுப்பறை, அறுவைசிகிச்சைக் கூடத்துடன் கூடிய மருத்துவமனை, காவல்நிலையம், சிறைச்சாலை, நீதிமன்றம், தீயணைப்பு நிலையம் என படப்பிடிப்பிற்குத் தேவையான ஒவ்வொரு அங்கமும் மிகுந்த கவனத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

ஊட்டி, கொடைக்கானலில் உள்ளதுபோல் பெரிய புல்வெளிகளும், காஷ்மீர், டெல்லியில் உள்ள தோட்டங்களைப்போல் மொகலாயத் தோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டு கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஜப்பானியத் தோட்டம், ஜப்பானிய வீடு மற்றும் ஜப்பானியக் கோயில்களும் இங்கே உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் சிறப்பு அம்சமாக திரைப்பட மற்றும் வீடியோ படத் தயாரிப்பாளர்கள், திரைப்படக் கல்லூரி மாணவர்கள், திரைப்பட ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள் மற்றும் திரைப்பட விமர்சகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திரைப்பட ஆவணக் காப்பகமும், ஒரு நூல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன.

திரைப்பட நகரில் மற்றுமொரு சிறப்பு அம்சமாக ஐந்து நட்சத்திர விடுதிகளுக்கு இணையான தங்கும் வசதிகள், இயற்கைச் சூழ்நிலையில் எல்லா நவீன வசதிகளையும் கொண்ட குடில்கள், பில்லியட்ஸ் ஆடும் அறை, சொற்பொழிவுக்கூடம், நீச்சல்குளம், உணவகம், உடற்பயிற்சி அரங்குகள் போன்ற எல்லாவசதிகளும் உள்ளமையாகும். திரைப்படத்தயாரிப்பாளர்கள் தங்கி, திரைக்கதை ஆலோசனை செய்யவும், தொழில் ரீதியாக கலந்துரையாடல்களுக்கும், படத்தயாரிப்பு செய்யவும் இவை வசதியாக உள்ளன.

இத்திரைப்பட நகரில் படப்பிடிப்பு முடிந்த பிறகு படத்தயாரிப்புக்குத் தேவையான ரீ-ரிகார்டிங் தியேட்டர், டப்பிங் தியேட்டர், வீடியோ ஸ்டுடியோ, செட்டிங் மற்றும் பிராசசிங் ஆகியவையும் உலகத் தரத்திற்கு ஈடாக அமைக்கப்பட்டுள்ளன. படத்தயாரிப்பாளர் தமது படப்பிடிப்புக்கு வேண்டிய பணம், கதை வசனத்துடன் திரைப்பட நகருக்கு வந்து தங்கி, குறைந்த செலவில் படத்தைத் தயாரித்து முழுத் திரைப்படமாகக் கொண்டு போகலாம்.

இத் திரைப்பட நகர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 7

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு

செய்தி மலர் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மாநிலம் முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், சிறப்பாக, தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களையும், படமாக்குகிறது. அவ்வாறு எடுக்கப்பட்ட படத்தினைத் தொகுத்து மாதம் ஒருமுறை பத்து நிமிடம் ஓடக்கூடிய செய்தி மலர் வெளியிடுகிறது. 1986-ஆம் ஆண்டு முதல் செய்தி மலர்கள் வண்ணத்தில் தயாரித்து 147 பிரதிகள் எடுக்கப்பட்டு மத்திய அரசு திரைப்படப் பிரிவிற்குக் கொடுக்கப்படுகின்றன.

மத்திய அரசு திரைப்படப் பிரிவு இந்தப் பிரதிகளை மாநிலம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியிடுகிறது. இந்த 147 பிரதிகளும் அனைத்துத் திரையரங்குகளையும் சுற்றி வருவதற்கு சுமார் 4 முதல் 6 மாதம் வரை ஆகிறது.

செய்தி மலர்களைக் கள விளம்பரத்திற்காகப் பயன்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வி.எச்.எஸ். ஒளிநாடா பிரதி ஏற்கெனவே அனுப்பப்பட்டு வருகிறது. கள விளம்பரம் மேலும் சிறந்தமுறையில் நடைபெற செய்தி மலர்களின் 16 மி.மீ. பிரதிகளும் மாவட்டங்களுக்கு மீண்டும் அனுப்ப வேண்டும் என்று அரசு கடந்த ஆண்டில் முடிவு செய்தது. அதன்படி எல்லா மாவட்டத்திற்கும் 16 மி.மீ. பிரதிகள், ஒவ்வொரு செய்தி மலரிலும் அனுப்பப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 395 செய்திமலர்களைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் எழில்மிகு நிகழ்ச்சிகள், காணாதாரும் கண்டுகளிக்கும் வகையில் 20 நிமிடங்கள் ஓடும் செய்தி மலர்களாகத் தயாரிக்கப்பட்டு நாடெங்கும் திரையரங்குகளில் திரையிடப்பட்டன. திரையிடப்பட்ட இடமெல்லாம் இந்தத் திரைமலர்கள் மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த உலகத்தமிழ் மாநாட்டுச் செய்தி மலர்கள் ஒளிநாடாக்களாகவும், 16 மி.மீ. பிரதிகளாகவும் தயாரிக்கப்பட்டுக் கள விளம்பரப்பணிகளுக்காக மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

[1995 மே 3

விளக்கப்படத் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மக்கள் பயனடையும் வகையில் பொதுவான பொருட்கள் (அதாவது குடும்ப நலம், சமூகக் காடுகள், வேளாண்மை, சுகாதாரம், வனப்பாதுகாப்பு, கூட்டுறவு) குறித்து விளக்கப் படங்களும் தயாரித்து வருகிறது. விளக்கப் படங்களிலும் சம்பந்தப்பட்ட துறை அளிக்கும் நிதிக்கு ஏற்றாற்போல் 35 மி.மீ. மற்றும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்படுகின்றன. செய்தி மலர்கள் போலவே விளக்கப் படங்களும், மத்திய அரசு திரைப்படப் பிரிவின் மூலம், வெளியிடப்படுகின்றன. விளக்கப்படம் தயாரிப்புக்காக தொழில் நுட்ப வல்லுநர்கள்/கலைஞர்கள்/தனியார் தயாரிப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்றை அரசு அங்கீகரித்துள்ளது. தமிழ்நாடு திரைப்படப்பிரிவு இதுவரை 122 விளக்கப்படங்கள் தயாரித்து வெளியிட்டுள்ளது.

ஒளிநாடா செய்தி மலர்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் ஒளி நாடாப் பிரிவு 1988 ஆம் ஆண்டு முதல் சிறிய அளவில் செயல்பட ஆரம்பித்து, 1989 ஆம் ஆண்டு முதல் ஒளிநாடா செய்தி மலர்கள் தயாரிக்கத் தொடங்கியது. 60 முதல் 90 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த மலர்களில் அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சிறுகதைகள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைக் காட்சிகள் மூலமாக மிகவும் சுவையாகத் தயாரித்து வழங்கப்படுகின்றன. இந்த மலர்கள் மாவட்டங்களில் கள விளம்பரப் பணிக்காக அனுப்பியிருக்கும் 20 ஒளிநாடா ஊர்திகள் மூலமாகவும் திரையிடப்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 11 மலர்களைத் தயாரித்துள்ளது.

ஒளிநாடா விளக்கப் படங்கள்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு குடும்ப நலம், உடல் நலம், காடு வளர்ப்பு, சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்து போன்ற பொருட்களில் ஒளிநாடா விளக்கப் படங்கள் தயாரித்துள்ளது. இதுவரை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 180 ஒளிநாடா விளக்கப்படங்கள் தயாரித்துள்ளது. சம்பந்தப்பட்ட துறையின் ஒத்துழைப்போடு அத்துறையின் தேவைக்கேற்ப படமெடுத்துத் தரப்படுகின்றது. படப்பிடிப்புக் காட்சிகளுக்கு ஏற்றாற்போல் தமிழ்நாடு முழுவதும் நடத்த வாய்ப்புகள் உள்ளன. தற்சமயம் சுமார் 20 ஒளிநாடா விளக்கப்படங்கள் தயாரிப்பில் உள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

அரசுத்துறைகள், அரசுச் சார்பு நிறுவனங்கள் இரண்டு நோக்கத்துடன் விளக்கப்படங்கள் தயாரிக்க முற்படுகின்றன. முதலாவதாக, அத்துறையில் கள விளம்பர பணிக்காக விளக்கப்படங்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். இரண்டாவதாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் நோக்குடன் தயாரிக்க விரும்புகிறார்கள். பல விளக்கப் படங்கள் சென்னைத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு திரைப்படப்பிரிவு வி.எச்.எஸ். ஒளி நாடாவின் பிரதிகளும் எடுத்து மாவட்டங்களுக்கு விநியோகம் செய்கிறது.

ஒளிநாடா செய்தி மலர்கள் படப்பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை ஒளி நாடாவில் படம் எடுக்கிறது. இவை ஒளிநாடா செய்தி மலர் தயாரிப்புக்கு பயன்படுவது போக, சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினருக்குத் தருவதற்கும் பயன்படுகிறது. இதுவரை சுமார் 1800 நிகழ்ச்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. அரசு தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கென ரூ. 56,27,000 செலவில் நவீன ஒளிநாடாக் கருவிகள் வாங்க நிதி அளித்து கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் மூலம் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கப் போகும் ஒளிநாடாச் செய்திமலர்கள், பல்வேறு அரசுத் துறைகளுக்காக தயாரிக்கப் போகும் ஒளிநாடா விளக்கப்படங்கள், விளம்பரங்கள் முதலியவற்றில் மிகவும் சிறந்த முறையில் பல்வேறு விதமான சிறப்புக் காட்சிகளை (Special effects) இணைத்துத் தயாரிக்க முடியும்.

செயற்கைக்கோள் ஒளிபரப்பு

உலகெங்கிலும் செயற்கைக்கோள் மூலம் ஒளிநாடா நிகழ்ச்சிகள் 24 மணி நேரமும் ஒளிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளை இந்தியாவிலும் மக்கள் டிஷ் ஆண்டெனா/கேபிள் டிவி மூலம் பார்க்கிறார்கள். எனவே இந்த நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைவிட அதிக பிரபலமாகி வருகின்றன.

செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகளை இந்தியா முழுவதும் மட்டும் அல்லாமல், சுமார் 80 வெளிநாடுகளிலும் உள்ள மக்கள் காண வாய்ப்பு உள்ளது. இவ்வாறு ஒளிபரப்புவதற்காக நிகழ்ச்சிகள் மிகவும் சிறந்த தொழில்நுட்பத் தரம் வாய்ந்ததாக அமைய வேண்டும். தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, புதிய கருவிகளைக் கொண்டு இத்தகைய தரமான நிகழ்ச்சிகளைத் தயாரிக்க இயலும்.

செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பு செய்யப்படுவதற்கான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு திரைப்படப்பிரிவு தயாரித்து வழங்கலாம் என்று கருதப்படுகிறது. இந்நிகழ்ச்சிகள் தொடர் நிகழ்ச்சிகளாக அமையலாம். தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், சுற்றுலா மையங்கள், அரசின் கொள்கைகள் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகள் தயாரிக்கலாம்.

1990-91 மற்றும் 1991-92-ஆம் ஆண்டுகளுக்கான மாநில திரைப்பட விருதுகள் வழங்கும் விழாக்களைப் படமெடுத்து, விளம்பரதாரர்கள் வழங்கும் நிகழ்ச்சியாக திரைப்படப் பிரிவு ஏற்கெனவே நிகழ்ச்சியினைத் தயார் செய்தது. இந்த நிகழ்ச்சி விளம்பரதாரர்கள் மூலம் சென்னைத் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது. இதன் மூலம் கணிசமான வருவாய் அரசிற்குக் கிடைத்தது. சென்னைத் தொலைக் காட்சி நிறுவனம் 1994-ஆம் ஆண்டு மே திங்களில் புதிய விளம்பரதாரர்கள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் மூலம் தயாரிப்பாளர்கள் பலதரப்பட்ட பொருள் பற்றிய நிகழ்ச்சிகளை 7 முதல் 13 பாகங்களாகத் தயார் செய்து வழங்கலாம். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி காவல்துறையின் குறிப்பேடுகளிலிருந்து உண்மையான சம்பவங்களின் அடிப்படையில் 13 பாகங்களைக் கொண்ட தொடராக தொலைக்காட்சி நிகழ்ச்சி தயார் செய்ய திரைப்படப் பிரிவிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. தொலைக்காட்சி நிறுவனத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்தும், அரசின் வளர்ச்சிப் பணிகள் குறித்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு விளம்பரதாரர் வழங்கும் தொடர் நிகழ்ச்சியாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 8

சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம்.

சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை 1968 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. விருதுக்குரிய சிறந்த திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களைத் தெரிவு செய்வதற்கென ஒரு குழுவை ஒவ்வொரு ஆண்டும் அரசு ஏற்படுத்துகிறது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி நல்ல திரைப்படங்கள் மூன்றிற்குப் பரிசுகளும், சிறப்புப் பரிசு ஒன்றும் ஆக நான்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1993 ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுத்தொகையை அரசு பின்வருமாறு வழங்க ஆணையிட்டுள்ளது.

சிறந்த தமிழ்த் திரைப்படம்

1. முதல் பரிசு	ரூ. 1,25,000	மற்றும் கேடயம்
2. இரண்டாவது பரிசு	ரூ. 75,000	மற்றும் கேடயம்
3. மூன்றாவது பரிசு	ரூ. 50,000	மற்றும் கேடயம்
4. சிறப்புப் பரிசு	ரூ. 50,000	மற்றும் கேடயம்

மேலும் 19 நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களும் தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப்பரிசு வழங்கப்படும்.

கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள்:

அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர். ஆகியோரின் பெயரால் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வித்தகர்

விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 1993-ஆம் ஆண்டிற்கு கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏனைய விருதுகளோடு வழங்கப்படவுள்ளன.

ஜெயலலிதா விருது

திரைப்படத்துறைக்கு ஊக்கமளித்து வருபவரும், கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் திரைப்படத்துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருபவருமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரால் 'ஜெயலலிதா விருது' எனும் சிறப்பு விருது 1993-ஆம் ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. திரைப்படத்துறையில் நீண்ட காலம் சிறந்த முறையில் தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு அவர்களின் சேவையைப் பாராட்டி இவ்விருது வழங்கப்படுகிறது. 1992-ஆம் ஆண்டுக்கான "ஜெயலலிதா விருது" மூவருக்கு வழங்கப்பட்டது. 1993-ஆம் ஆண்டுக்கான இவ்விருது சிறந்த கலை வித்தகர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

சிவாஜி கணேசன் விருது

நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் பெயரில், திரைப்படத் துறைக்கு அருந்தொண்டாற்றிய சிறந்த கலைஞர்களுக்கு 'சிவாஜி கணேசன் விருது' வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இவ்வாண்டு முதல் இவ்விருது வழங்கப்படும்.

சிறந்த திரைப்பட ஒப்பனைக் கலைஞர் மற்றும் தையற் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள்

ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர் திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பினைத் தொடர்ந்து இவ்வாண்டிலிருந்து சிறந்த திரைப்பட ஒப்பனைக் கலைஞர்கள் ஒருவருக்கும், சிறந்த திரைப்படத் தையற் கலைஞர் ஒருவருக்கும் விருது வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

1994-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

1994-ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் கலை வித்தகர்களுக்கான விருதுகள் வழங்கும் திட்டம், 1993-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கிய பின், இந்த நிதியாண்டில் அமல்படுத்தப் படும்.

1995 மே 3]

தமிழ்த்திரைப்படங்களுக்கு உதவித் தொகை (Subsidy) வழங்கும் திட்டம்

குறைந்த செலவில் சமுதாய நோக்குடன் கூடிய நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்குடன், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆதரவு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசால் அமைக்கப்படும் தேர்வுக்குழு தரமான தமிழ்ப் படங்களைத் தேர்ந்தெடுத்து உதவித் தொகை வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்ற ஆண்டு போன்று, இந்த ஆண்டும் ஒரு திரைப்படத்திற்கு ரூ. 3 லட்சம் வீதம் 75 திரைப்படங்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரைப்படப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தை

தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. சென்னையில் உள்ள தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கும், தெலுங்குப் படத்தயாரிப்பாளர்களுக்கும் இடையே சென்ற ஆண்டு சிக்கலான பிரச்சினை எழுந்தது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பினை இழந்தார்கள். இப்பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் தெலுங்குத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பிரதிநிதிகள் ஆகியோருடன் 1994-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11 ஆம் நாள் பேச்சு வார்த்தை நடத்தி, சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைத்து, திரைப்படத் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கும், திரைப்படத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கும் உறுதுணையாகத் திகழ்ந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி தமிழ்நாட்டில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் திரைப்பட விநியோகஸ்தர்களுக்கும் இடையே வீடியோ உரிமை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளையும் விரைவில் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரைப்படத் துறையினருக்கான சலுகைகள்

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படத்தயாரிப்பாளர்கள் படப்பிடிப்பு நடத்த முன்பு கட்டணம் ஒரு இடத்திற்கு ஒரு நாளைக்கு

ரூ. 5000 என்றும், காப்புத் தொகை ரூ. 5000 என்றும் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின் அடிப்படையில் இந்தக் கட்டண விகிதம், புராதனச் சின்னங்கள், மற்றும் அதுபோன்ற இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 5000 ஆகவும், ஏனைய இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 2500 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம்

திரைப்படத்துறை அரசுக்கு அதிக அளவில் வருவாயை ஈட்டித் தரும் ஒன்றாகும். மக்களுக்கு ஒரு மாபெரும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் உள்ளது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். திரைப்படத் தொழிலாளர்களின் நலனில் அக்கறைக் கொண்டு அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே பல சலுகைகளை அளித்துள்ளார்கள். ஆயினும், எல்லாவற்றிற்கும் மேலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம் வேண்டிக் கொண்டதற்கிணங்க திரைப்படத் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக சென்னை அருகே வேளச்சேரி-பள்ளிக்கரணையில் ரூ. 10 கோடி மதிப்புள்ள 85 ஏக்கர் நிலத்தினை தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்திற்கு 20-4-95 அன்று இலவசமாக வழங்கினார்கள்.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தைச் சேர்ந்த 60 வயது முடிந்த திரைப்படத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 300 ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசால் தோற்றுவிக்கப்பட்டு 1-4-95 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. உடனடியாக 1000 தொழிலாளர்கள் இத்திட்டத்தால் பயன்பெறுவர். இத்திட்டத்திற்காக முதல் 3 மாதங்களுக்கு ரூ. 9 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து காப்புறுதித் திட்டம்

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் விபத்து காப்புறுதித் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 14-4-95 முதல் அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலாளரும் ரூ. 50,000-க்கு காப்புறுதி

செய்யப்படுவர். விபத்தில் இறந்தால் இந்தத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும். விபத்தில் உடல் ஊனமுற்றால் அதற்குத் தகுந்தாற்போல் தொகை வழங்கப்படும். அரசு இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

திரைப்படத் தொழிலாளர்கள் நல நிதி.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி 'திரைப்படத் தொழிலாளர்கள் நல நிதி' ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இதன்படி ஒவ்வொரு திரைப்பட தொழிலாளரும் மாதம் ரூ. 25 அல்லது ஆண்டிற்கு ரூ. 300 இந்த நல நிதிக்கு சந்தாவாக செலுத்தவேண்டும். இந்த நலநிதிக்கு நிலுவை இல்லாமல் சந்தா செலுத்தும் திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்திலும், விபத்து காப்புறுதி திட்டத்திலும் சேர்க்கப்படுவர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 9

செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி வெளியீடு :

செய்தித்துறையில் மிக இன்றியமையாத பிரிவுகளுள் ஒன்று செய்தி வெளியீட்டுப் பிரிவு. நாளிதழ்களுக்கு அரசின் தகவல்களை வழங்கும் நரம்பு மையம் என்று இதனை நவிலலாம். செய்தி வெளியீட்டுப் பிரிவினால் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள், மக்கள் நலத்திட்டங்கள், சாதனைகள் ஆகியவை குறித்து வெளியீடுகள் பெறப்பட்டு அனைத்து நாளிதழ்களிலும் வெளியிடப்படுகின்றன. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் செய்திக் குறிப்புகள், அறிக்கைகள் ஆகியவைகளும் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பெறப்பட்டு அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. முக்கியமான செய்தி வெளியீடுகள், பேக்ஸ் செய்வதின் மூலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்குள்ள செய்தி நிறுவனங்கள், நாளிதழ்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு உடனுக்குடன் அரசின் செய்திகளும், அறிவிப்புகளும் தெரியப்படுத்தப்படுகின்றன.

செய்தியாளர் சுற்றுப் பயணம் :

அரசின் ஆக்கப்பணிகளையும் நலத்திட்டங்களையும், பல்வேறு திட்டப் பணிகளையும் மக்களுக்கு எடுத்து இயம்பும் வகையில், இத்துறை அவ்வப்போது செய்தியாளர் சுற்றுப்பயணங்களுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. மாவட்டங்களிலிருந்தும் பத்திரிகையாளர்கள் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

செய்தியாளர்களுக்கு வசதிகள் :

சென்னை மற்றும் மாவட்டங்களில் பணிபுரியும் சுமார் 250 பத்திரிகையாளர்களுக்கு அரசு அங்கீகார அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பத்திரிகையாளர்களுக்கு இலவச பஸ் பாஸ், 50% ரயில்வே கட்டணச் சலுகை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக்

குடியிருப்புகள் மற்றும் மாதாந்திரத் தவணைத் திட்டத்தில் வீடுகள் வாங்குதல் ஆகியவற்றில் முன்னுரிமை, வீட்டிற்குத் தொலைபேசி பெறுவதில் முன்னுரிமை ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதி :

சென்னை பத்திரிகையாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொள்ள திருவான்மியூரை அடுத்துள்ள கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலமும், ரூ. 20 லட்சம் அரசு மானியமும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு ஒரு சதுர அடிக்கு ரூ. 50 வீதம் அதிகபட்சமாக ரூ. 40,000 வரை மானியமாக வழங்கியுள்ளார்கள். இதனால் அரசுக்கு ரூ. 50 இலட்சத்திற்கு மேல் செலவாகும். முடியும் தருவாயில் உள்ள இக்குடியிருப்புகளால் 136 பத்திரிகையாளர்கள் பயன் அடைய உள்ளார்கள்.

புகைப்படப் பிரிவு :

தலைமைச் செயலகத்தில் உள்ள தலைமைப் புகைப்படப் பிரிவும், பல்வேறு மாவட்டங்களில் உள்ள புகைப்படப் பிரிவும் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் அரசு விழாக்கள், நிகழ்ச்சிகள், நலத்திட்டப் பணிகள் ஆகியவைகளைப் படம் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பி விளம்பரப்படுத்துகின்றன.

பத்திரிகையாளர் கூட்டம் :

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அரசின் பல்வேறு துறைச் செயலர்கள் பங்கேற்கும் பத்திரிகையாளர் கூட்டங்கள் கடந்த ஆண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் இத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

பத்திரிகையாளர் ஓய்வூதியம் :

பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை இத்துறை 1987-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற, ஏழ்மை நிலையில் உள்ள 41 ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் தற்போது மாதம் ரூ. 500 வீதம் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். மாதம் ரூ. 400 ஆக பெற்றுவந்த பத்திரிகையாளர் ஓய்வூதியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டு 1992-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அத்தியாயம் 10

செய்தி நிலையம்

தற்போது டெல்லி, சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசின் நலத்திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து, பொது மக்களுக்குச் செய்தி நிலையங்கள் எடுத்துரைக்கின்றன. செய்தி நிலையங்களிலுள்ள நூலகங்களை ஆய்வாளர்களும், மாணவர்களும், பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றனர். பொதுமக்கள் நாடோறும் நடப்புச் செய்திகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் நாளிதழ்கள் இங்கு வாங்கி வைக்கப்பட்டு வாசகர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

செய்தி நிலையம், டெல்லி :

டெல்லியில் உள்ள செய்தி நிலையம் செய்தித் தாள்கள் வாயிலாகவும், மற்ற மக்கள் தொடர்புச் சாதனங்களின் மூலமாகவும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப்படுத்த மிகவும் உதவியாக இருக்கிறது. தமிழ்நாட்டின் கலை, பண்பாடு மற்றும் சுற்றுலா மையங்கள், விடுமுறைக் கால ஓய்விடங்கள் ஆகியவைகளைப் பற்றிய தகவல்களை முழுமையாக வழங்குவதன் மூலமாகவும் டெல்லியில் தமிழ் மாநிலத்தைப் பற்றிச் செவ்வனே அறிந்து கொள்ள வழிவகை செய்கிறது. தமிழ்நாடு பற்றிய முக்கிய செய்திகளை டெல்லியிலுள்ள செய்தியாளர்கள் வேறு வழிகளில் பெற ஏற்படுகின்ற கால தாமதத்தைத் தவிர்க்கின்ற வகையில், இச்செய்தி நிலையம் உடனுக்குடன் செய்திகளை நேரடியாக வழங்குகின்ற மையமாகவும் செயல்படுகிறது.

மாநிலச் செய்தி நிலையம் :

இந்நிலையம் மக்களுக்கான செய்தித் தொடர்பு மையமாக மட்டுமின்றி, பத்திரிகையாளர், கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோர்க்கும் உரிய விவரங்களைத் தந்து உதவுகின்றது.

இம்மையத்தில் அமைந்துள்ள நூலகத்தில் 15,000 நூல்கள் உள்ளன. அதில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, சரித்திரம், கலை மற்றும் இலக்கியம் தொடர்பான நூல்களும் அடங்கும். இங்கு பல்வேறு பருவ வெளியீடுகளும், நாளிதழ்களும் மக்களின் பயனுக்காக வைக்கப்பட்டுள்ளன.

இம்மையத்தில் படச்சுருள் நூலகமும் உள்ளது. இங்கு கல்வி மற்றும் தகவல் தொடர்பான 500-க்கும் மேற்பட்ட 16 மி.மீ. படச்சுருள்கள் உள்ளன. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் கோரும் போது இந்நிலையத்தின் மூலம் படக்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 மே 3

அத்தியாயம் 11

எட்டாவது உலகத் தமிழ்நாடு

எண் திசைத் தமிழர்களும் தஞ்சைத் திசை நோக்கி தமிழ் உலா வந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த ஐந்து நாட்களிலும் அற்புதங்கள் அரங்கேற்றமாயின. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இலக்கியக் காட்சிகள் நிறைந்த ஊர்வலம், 1200 அறிஞர்கள் அகிலமெங்கிலும் இருந்து திரண்டு வந்து தமிழாய்வு நடத்திய ஆய்வரங்கம், 'நெல் விளைகின்ற தஞ்சையில் இனி சொல் விளையும்' என்று பார்த்தோர் பாராட்டும் வகையில் நடைபெற்ற கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள், கலைமகள் குடிகொள்வது இங்குதானோ என்று கருதும் வண்ணம் இடம் பெற்ற கலைநிகழ்ச்சிகள், குடியரசுத் துணைத் தலைவர் கலந்துகொண்ட தொடக்க விழா, பாரதப்பிரதமர் பங்கேற்ற நிறைவு விழா இவையெல்லாம் வரலாற்றின் வைரமணிப் பக்கங்களில் இடம் பெற்றுவிட்ட அற்புதங்களாகும்.

"தொண்டு செய்வோம் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித் தெழுந்தே"

என்று உணர்ச்சிப் பிழம்பாய்ப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கிய முழக்கம் செயலிலே சிலிர்த்தெழுந்த மாநாடுதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் படைத்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு.

உலகமே வியந்து பாராட்டும் வகையில் தஞ்சைத்தரணியில் எட்டாவது உலகத்தமிழ்மாநாட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடத்திக் காட்டினார்கள். தமிழ்நிலம், தமிழ்மொழி, தமிழ் வரலாறு, தமிழர் வீரம், தமிழர் வள்ளல் தன்மை, அருள் உள்ளம், தமிழ் வளர்த்த அரசர்கள் மற்றும் அறிஞர்களின் சிறப்பினைச் செப்பும் விதமாக வரலாறு காணாத வகையில் 54 அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு அழகுற நடத்தப்பட்டது. தமிழகத்தின் பழம் பெருமை பேசும் கலைகளான கரகாட்டம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், மயிலாட்டம், நையாண்டி மேளம், தாரை தப்பட்டை, கும்மி, கோலாட்டம், கொக்கலிக்கட்டை, ஓதுவார் பண்ணிசை, குதிரை வீரர்களின் அணிவகுப்பு என 27 கலைநிகழ்ச்சிகளும் காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க வகையில் அலங்கார

ஊர்திகளின் பின்னால் நிகழ்த்திக் காட்டப்பட்டன. கலைநிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிற்கும் கருத்துமிக்க பாடல்கள் இனிய இசையில் தயாரிக்கப்பட்டு இசைக்கப்பட்டன. தமிழகம், பிற மாநிலங்கள், மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கண்டு, கேட்டு, களிக்கும் வண்ணம் ஐந்து நாட்களிலும் சிறப்புமிகு இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பங்குபெற்ற நடனம், பாட்டு மற்றும் நாடக நிகழ்ச்சிகள் தஞ்சைநகரின் பல்வேறு பகுதிகளிலும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டன. குறிப்பாகத் தமிழக நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் தஞ்சைநகரின் பல்வேறு பகுதிகளிலும் தெருமுனைக் கலைநிகழ்ச்சிகளாகச் இத்துறையால் நடத்தப்பட்டு, பொது மக்களை வெகுவாக ஈர்த்தன.

தமிழர்தம் வீரம், காதல், ஈகை, மொழிப்பற்று ஆகியவற்றை விளக்கும் விதமாக தமிழகத்தின் முன்னனி நடிகர், நடிகைகள் பங்குபெற்ற, இளம் இயக்குநர் உதயகுமார் இயக்கத்தில் உருவான 'இலக்கியச் சோலை' என்னும் வண்ணத்திரைப்படத்தினை இத்துறை தயாரித்து வெளியிட்டது. இத்திரைப்படத்தில் தமிழ் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் கருப்பொருள்கள் இடம் பெற்றன.

1. பேரரசன் ராஜராஜன் பன்னிருதிருமுறை ஓலைச்சுவடிகளை மீட்டல்.

2. தந்தையையும் கணவனையும் முதல்நாள் போரில் பறிகொடுத்து, தனது நாட்டைக் காப்பதற்கு தனது ஒரே மகனாகிய சிறுவனையும் போருக்கு அனுப்பத் துணிந்த வீரத்தாய்.

3. முரசுக்கட்டிலில் துஞ்சிய புலவருக்குத் தலைவணங்கும் பேரரசன்.

4. இளம் வயதிலேயே அறிவுத் திறனும் நீதி வழங்கும் திறனும் பெற்ற இளைய மன்னன் கரிகாலன்.

5. தமிழுக்காகத்தன் உயிரையே மனம் உவந்து ஈந்த நந்திவர்மனின் துணிச்சலும் வீரமும்.

6. பகைவர்களுடைய மாபெரும் படையைப் போரில் வெற்றிபெற்ற போதிலும், ஒரு சிற்றுயிருக்கும் துயர் வரக்கூடாது என்று நினைத்த மன்னனின் ஈரநெஞ்சம்.

உலகத்தமிழ் மாநாடு தொடர்பான செய்திகள், புகைப் படங்கள் வாயிலாக உலக மக்களுக்குத் தெரிவிக்கும் பணியைச் இத்துறை திறம்படச்செய்தது. இதற்காகத் தொலைபேசி வசதி, பேக்ஸ் மற்றும் சென்னைக்குப் புகைப்படங்களைத் தொலைபேசி இணைப்பு மூலம்

விரைவான முறையில் அனுப்புவதற்கான நவீன இயந்திர வசதிகளைக் கொண்ட செய்தி மையம் ஒன்றை இத்துறை தஞ்சையில் அமைத்திருந்தது. பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்களுக்குச் செய்திகளை அனுப்ப பத்திரிகையாளர்களுக்கு இம்மையம் பெரிதும் உதவியாக இருந்தது. மேலும் மாநாட்டில் அனைத்து நிகழ்ச்சிகளையும் சீராகப் பதிவு செய்து உடனுக்குடன் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. நிறைவு விழா நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளிபரப்பி மாநாட்டிற்கு வராத மக்களும் நிகழ்ச்சிகளைக் காண இத்துறை ஏற்பாடு செய்திருந்தது.

மாநாட்டிற்கு வந்திருந்த லட்சக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நன்கு கண்டுகளிப்பதற்காக உள்ளிணைப்புத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் ஆங்காங்கு வைத்து ஒளிபரப்பப்பட்டது.

உலகத்தமிழ் மாநாட்டின் தொடக்க நாள் நிகழ்ச்சி முதல், நிறைவு நாள் நிகழ்ச்சி வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் திறமை வாய்ந்த பேச்சாளர்கள், புலவர்களைக் கொண்டு பாங்குறத் தொகுத்து வழங்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 12

விளம்பரம் :

மாநில அரசின் அனைத்துத் துறைகள், அரசுச் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாக, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயங்கி வருகின்றது. அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின் கீழ், சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிக்கைகளுக்கும் விளம்பரங்களை அளிப்பதன் மூலம் அவை ஊக்குவிக்கப்படுகின்றன.

அரசின் நலத்திட்டங்களைப் பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக விளக்கும் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் :

அரசின் வளர்ச்சிப் பணிகள், சாதனைகளை மக்கள் அறியவும், அதன் பயனைத் துய்க்கவும் பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் திட்டமிட்டுச் செயலாக்குவதுதான் பல்துறைப் பணி விளக்க முகாம்களாகும். இப்பணியில் மாநில அரசின் பல்வேறு துறைகளும், குறிப்பாக செய்தி-மக்கள் தொடர்புத் துறையும் சிறப்பாகப் பங்கேற்கின்றன.

அரசின் பல்வேறு வளர்ச்சிப்பணிகள், சாதனைகளைக் கிராம மக்களும் அறிந்து பயனடையும் வகையில் இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்களின் பல்வேறு விளம்பர முறைகள், மரபு வழி பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகள், முன்னேறிய தொழில் நுட்ப ஊடகங்கள் வாயிலாக அரசின் நலத் திட்டங்கள் விளக்கப்படுவதோடு மட்டுமின்றி, மக்கள் வசிக்கும் இடங்களிலேயே ஒரே நேரத்தில் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் உதவிகளும் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்ப நலத்திட்டம், சிறுசேமிப்பு, சட்டம் ஒழுங்கு, வரதட்சணை ஒழிப்பு, பெண்கல்வி, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல் போன்றவை பற்றி புரிதல் பெறும் வகையில் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள், கலைநிகழ்ச்சிகள் முதலியனவும் இந்த முகாம்களில் நடத்தப்படுகின்றன.

இத்தகைய பல்துறைப் பணி விளக்க முகாம்கள் கடந்த ஆண்டு சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

அனைத்து அரசுத் துறைகளும், அரசுத் துறை நிறுவனங்களும், இம் முகாமில் பங்கு கொண்டன. பல்துறைப்பணி விளக்க முகாம்களையொட்டி சிறு பொருட்காட்சியொன்றும் இம்மாவட்டங்களில் நடத்தப்பட்டன. ஏராளமான மக்கள் இப்பல்துறைப் பணி விளக்க முகாமின் மூலம் பயன் அடைந்துள்ளனர். இம்முகாம்களுக்கு மக்களிடையே கிடைத்த வரவேற்பினைக் கணக்கில் கொண்டு 1994-95-ஆம் நிதியாண்டில் நான்கு மாவட்டங்களில் நடத்த முடிவு செய்து, 22.10.94 முதல் 28.10.94 வரை திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலும், 30.1.95 முதல் 5.2.95 வரை திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலும், 22.2.95 முதல் 28.2.95 வரை விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலும், 25.3.95 முதல் 31.3.95 வரை பசும்பொன்- முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலும் சிறப்பாக நடத்தப்பெற்றன.

மாவட்டம் முழுவதுமாக அனைத்துப் பகுதி மக்களும் அரசின் திட்டங்கள், சாதனைகள், நலப் பணிகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பினை இம்முகாம்கள் உருவாக்கித் தந்துள்ளன. இம்முகாமின் போது கலைநிகழ்ச்சிகளின் மூலம் அரசின் திட்டப் பிரச்சாரப் பணிகள் நடத்தப்பட்டன. குழந்தைகளுக்கு இலவச மருத்துவம், பரிசோதனை மற்றும் தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குதல், கால்நடைகளுக்கு மருத்துவம், இலவசக் கண் பரிசோதனை, மகளிர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல், மரக்கன்றுகள் வழங்குதல், குடும்ப நலம், சிறுசேமிப்பு பற்றித் தக்க ஆலோசனைகள் வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பல்துறைப் பணி விளக்கப் பொருட்காட்சி ஒன்றும் இம்முகாம்களின் போது ஏற்பாடு செய்யப்பட்டு, பல்வேறு கலை நிகழ்ச்சிகள், துறை விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பெருவாரியான மக்கள் இப்பொருட்காட்சியினைப் பார்வையிட்டுப் பயன் பெற்றுள்ளனர்.

வீடியோ வாகனங்கள்:

அரசின் சாதனைகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலப்பணிகள் குறித்து வீடியோ வாகனம் மூலமாக நடத்தப்படும் படக்காட்சிகள் நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன. அரசின்

செயல் திட்டங்கள் பற்றிய செய்திகள் உடனுக்குடன் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று சேரும் வகையில் மின்னணு தொழில் நுட்பச் சாதனம் அரும்பணியாற்றுகிறது. கள விளம்பரப் பணிகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு வீடியோ வாகனம் வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டு, இதுவரை 20 வீடியோ வாகனங்கள் சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1995-96 ஆம் நிதியாண்டில் ரூ. 12 இலட்சம் செலவில் புதிதாக இரண்டு வீடியோ வாகனங்கள் வாங்கி நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட உள்ளது. கள விளம்பரப் பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு, பத்திரிகையாளர்கள் பயணம், முக்கிய அரசு விழாக்கள், முக்கிய நகரங்களில் பொருட்காட்சிகள் நடத்துதல் போன்ற பணிகளைக் கவனிக்க இத்துறையில் தற்போது மிகவும் பழுதடைந்துள்ள வாகனங்களில் சிலவற்றை ஒப்படைப்புச் செய்து, அவற்றிற்குப் பதிலாக ரூ.19.02 இலட்சம் செலவில் 8 புதிய டிராக்ஸ் வாகனங்கள் 1995-96-ஆம் நிதியாண்டில் வாங்கி, மாவட்டங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 13

1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) விதிகள்.

திரைப்படங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு நிதி ஆதாரமாக இருப்பதுடன் தமிழ் நாட்டு மக்களுக்கு, அதிலும் குறிப்பாக ஏழை மக்களுக்கும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கும் முக்கியமான பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாகவும் தொடர்ந்து இருந்து வருகின்றன. திரைப்படத் தொழில் மேம்படுவதையும், புதிய திரையரங்குகள் அமைப்பதையும் ஊக்குவிக்கும் வகையில், அரசு அவ்வப்போது விதிகளையும் நெறிமுறைகளையும் எளிதாக்கி வருகின்றது. இதனால், திரையரங்குகளின் எண்ணிக்கை, குறிப்பாக இம்மாநிலத்திலுள்ள முக்கியமான நகர்களிலும் மாநகர்களிலும் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 2,510 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1466 திரையரங்குகள் நிரந்தரத் திரையரங்குகளாகும். 215 திரையரங்குகள் அரை நிரந்தரத் திரையரங்குகளாகும். 13 திரையரங்குகள் திறந்த வெளித் திரையரங்குகளாகும். 816 திரையரங்குகள் நடமாடும் திரையரங்குகளாகும்.

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) விதிகளில் காணப்படும் ஏற்பாடுகளைக் கண்டிப்பாகக் பின்பற்றுவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொது மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகள் அளிக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன், அரசு 'குளு குளு' வசதி உள்ள திரையரங்குகளில் டிக்கெட் ஒன்றுக்கு 50 காசும், ஏனைய திரையங்குகளில் டிக்கெட் ஒன்றுக்கு 25 காசும் (இத்தொகைக்குக் கேளிக்கை வரி வசூலிக்கப் படமாட்டாது) பராமரிப்புக் கட்டணமாக வசூலிக்கப்பட அனுமதி அளித்துள்ளது. இந்த வசதிகளை அமைத்துத் தரும் வகையில்

செலவிடப்பட்ட தொகையை சரிபார்ப்பதற்காக, இதன் பொருட்டு தனிப் பதிவேடு ஒன்றைப் பராமரிப்பது குறித்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசு, இவ்வகையிலான சட்டம் மற்றும் விதிமுறைகளைத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. இது குறித்து, உரிமம் வழங்கும் அதிகாரிகள், திரைப்படங்களை வெளியிடுவோரிடமிருந்து கிடைக்கின்ற தகவல்கள், கருத்துக்களின் அடிப்படையில் நடைமுறைகளை எளிதாக்குவதில் அரசு அதிகக் கவனம் செலுத்தி வருகின்றது.

திரையரங்குகளில் நுழைவுச் சீட்டுகள் கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் பொருட்டும், சில திரையரங்குகளின் நிர்வாகங்கள், உரிமம் வழங்கும் அதிகாரி நிர்ணயித்த நுழைவுக் கட்டண வீதத்தின்படி கட்டணம் வசூலிக்காமல் எல்லா வகுப்புகளுக்கும் ஒரே மாதிரியான கட்டணம் வசூலிக்கின்ற போக்கைத் தடுக்கும் பொருட்டும், உரிமம் வழங்கும் அதிகாரி மற்றும் வணிக வரி அதிகாரிக்கும் உரியபடி தகவலளித்து, கடைசி வகுப்பு தவிர, பிற வகுப்புகள் அனைத்திற்கும் நுழைவுக் கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்ள (அதாவது அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ) அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட நாளன்று நடைமுறையிலிருந்து நுழைவுக் கட்டண வீதத்திற்குக் குறைவாக நுழைவுக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படலாகாது என்கிற கட்டாய நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய சில மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிற நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை மாநிலக் கருவூலத்திற்கு அதிக வருவாயை ஈட்டித் தருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திரைப்படத்திற்குச் செல்கிற ஏழை எளிய மக்களின் நலன் பாதிக்கப்படாமலிருப்பதனை உறுதி செய்யும் நோக்கத்துடன், திரையரங்குகளிலுள்ள மொத்த இருக்கைகளில் 20 சதவீதத்திற்கு குறையாமல் இறுதி வகுப்பிற்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. இறுதி வகுப்பிற்கான நுழைவுகட்டணம், அரசின் முன் அனுமதியின்றி திருத்தியமைக்கப்படக்கூடாது என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

வீடியோ தொடர்பான சட்டமும் விதிகளும் :

தமிழ்நாடு மாநிலத்தில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைபடுத்துவதற்காகவும், இதற்கு இடை நிகழ்வாகவும்,

தொடர்புடையதாகவும் உள்ள விஷயங்களுக்காகவும், தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம், வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும் 'வீடியோ நூலகங்கள்' நடத்துவதற்கும் தனியாருக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்டங்கள் மட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டுப் பயனுக்காக, வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படம் போட்டுப் பார்ப்பதற்கு உரிமம் எதுவும் அவசியமில்லை. இம்மாநிலத்தில், தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற 2931 வீடியோ நூலகங்களும், ஒரு வீடியோ திரையரங்கும் உள்ளன.

வீடியோ திருட்டு :

வீடியோ திருட்டைத் தடைசெய்வதற்காக தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலமும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு மூலமும் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தின் கீழ் வீடியோ நூலகங்கள், வீடியோ திரையரங்குகள் ஆகியவை உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து உரிமம் பெறவேண்டும் உரிமத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளை மீறுபவர்களுக்குத் தண்டனைகள் விதிப்பதற்காக, வீடியோ தொடர்பான சட்டம் மற்றும் விதிகளில் போதிய விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் 9 (2) பிரிவின்படி, வீடியோ நூலகம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்கும்போது, அவரிடம் உள்ள திரைப்படம் ஒவ்வொன்றின் தொடர்பாக, 1957-ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் அத்திரைப்படத்திற்கு முதலில் பதிப்புரிமை பெற்றவர்களிடமிருந்து அல்லது அச்சட்டத்தின் கீழ் உரிமை மாற்றம் பெற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட அனுமதி கடிதத்தைக் காண்பிக்க வேண்டும். பொது மக்களுக்குத் திரையிடுவதற்கு ஏற்றது என 1952-ஆம் ஆண்டு திரைப்படத்

தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரியினால் சான்றளிக்கப்படாததும் அல்லது வரையறுக்கப்பட்ட முத்திரை இல்லாததும் அல்லது முத்திரை இருப்பின், முத்திரை பதிக்கப்பட்ட பின் அத்திரைப்படம் திருத்தப்படவில்லை அல்லது மாற்றப்படவில்லை என்று சான்றளிக்கப்படாததுமான திரைப்படத்தை வீடியோ நூலகம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் விற்பனை செய்ய, வாடகைக்கு விட, விநியோகம் செய்ய, பரிமாற்றம் செய்ய அல்லது சுற்றோட்டத்தில் விடக்கூடாதென்று மேற்சொன்ன சட்டத்தின் 10 (2) பிரிவு கூறுகின்றது. உச்ச நீதிமன்றம் 16-12-1994-ஆம் நாளிட்ட அதன் தீர்ப்பில், மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் சட்டப்படியான செயல் திறனை உறுதி செய்துள்ளது. இது தொடர்பாக, செயல்திறன் மிக்க வகையில் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு இத்தீர்ப்புப் பற்றி உரிமம் வழங்கும் அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

திருட்டு வீடியோக்களை கட்டுப்படுத்துவதற்காக மாநிலக் காவல்துறை இயக்குநர் (குற்றப்பிரிவு) கட்டுப்பாட்டின் கீழ், தனிப்பிரிவு ஒன்றினை உருவாக்கிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பிரிவு, வீடியோ கேசட்டுகள் மூலமாகத் திரைப்படப் பதிப்பு உரிமைகளை மீறுதல், ஏனைய பதிப்பு உரிமை மீறுதல்கள் தொடர்பான புகார்களைப் புலனாய்வு செய்யும். இத்தனிப் பிரிவு சென்னை நகரத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையின் கீழும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் காவல் ஆய்வாளர்கள் தலைமையின் கீழும் செயல்படும்.

கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை :

அதிவிரைவான தொழில் நுட்ப மேம்பாடு காரணமாக, கேபிள் தொலைக்காட்சி மிகவும் பிரபலமாகியுள்ளது. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தில் கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கட்டமைப்பை முறைப்படுத்த திட்டவட்டமான விதிமுறை எதுவுமில்லை. கேபிள் தொலைக்காட்சி மூலமாக, திரைப்படங்களைத் திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1991-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது.

[1995 மே 3

தமிழ்நாடு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள், கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கட்டமைப்பு மூலமாகத் தொலைக்காட்சிகளில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) விதிகளில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்திருத்தங்களின்படி, கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கட்டமைப்பு, உரிமம் வழங்கும் ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரும், சென்னை மாநகரில் காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். இம்மாநிலத்தில் உரிமை வழங்கப்பட்டுள்ள கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கட்டமைப்புகளின் எண்ணிக்கை 2055 ஆகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-III

(230 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன்வளத்துறை
கொள்கை விளக்கக் குறிப்பு
1995-96

1. முன்னுரை :

இந்தியா, ஒரு தீபகற்ப நாடாக இருப்பதால், அதற்கு மிகுதியான மீன்பிடி ஆதாரங்கள் மிகுந்துள்ளன. 1960 ம் ஆண்டு தொடக்கம் வரையிலும் பாரம்பரிய மீன்பிடி கலன்களைக் கொண்டு மீன்பிடிப்பு நடத்தப்பட்டது. கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி கலன்கள் மூலம் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி உரிமைகளை புறக்கணிக்காமல் நவீன மீன்பிடி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமே மீன்வளத்தை முழுமையாக பயன்படுத்த இயலும் என்பதை அரசு அறிந்துள்ளது. இந்த அரசு கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தை பெருக்குவதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மீனவ சமுதாயத்தை முன்னேற்றுவதற்காக பல நலவாழ்வுத் திட்டங்களையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்காணும் பத்திகளில் அளிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்குதல், மீன் உற்பத்தியை பெருக்குதல், மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டுதல் ஆகியவற்றில் மீன்வளத்துறை பெரும்பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் கடல் மீன்பிடிப்பு பிரதான பங்கு வகிக்கிறது. நாம் 1000 கி.மீ. நீளமுள்ள கடற்கரையை பெற்றுள்ளோம். இதனை கீழ்க்கண்ட நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

அ. வடக்கே கூனங்குப்பம் முதல் தெற்கே கோடியக்கரை வரை 350 கி.மீ. தூரம் நீண்டிருக்கும் கோர மண்டல கடற்கரை.

ஆ. கோடி முனையிலிருந்து தொடங்கி தெற்கே தனுஷ்கோடி வரையில் 270 கி.மீ. தூரம் நீண்டிருக்கும் பாக்ஜலசந்தி.

இ. தனுஷ்கோடியிலிருந்து கன்னியாகுமரி வரையில் 320 கி.மீ. நீண்டிருக்கும் மன்னார் வளைகுடா.

ஈ. மேற்கு கடற்கரைப் பகுதியில் அரபிக்கடலில் 60 கி.மீ. உள்ள சிறிய கடற்பகுதி.

[1995 மே 3

தமிழ்நாட்டில், 442 கடல் மீனவ கிராமங்கள் உள்ளன. மீனவ சமுதாயத்தின் மக்கள் தொகை சுமார் 5.22 இலட்சம். இதில் மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை 2.26 இலட்சம் ஆகும். உள்நாட்டு மீனவர்களின் எண்ணிக்கை 41,580 ஆகும்.

தமிழ்நாட்டின் கடற்கரை 41,412 கி.மீ. கடற்படுகை பகுதியை கொண்டுள்ளது. இப்பகுதியில் மீன்வளம் மிகுதியாக உள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் உள்நாட்டு மற்றும் கடல்மீன் உற்பத்தியை பெருக்கிடவும், மீனவ சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நிலை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை பெருக்கிடவும், கிராமப்புறம் மற்றும் தேசிய பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்திடவும், மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் 50 விழுக்காடு நிதியுதவி பெற்ற திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த நோக்கங்களை அடைந்திட கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன :

அ. மீன்வளப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மூலம் விரிவான மற்றும் பகுதி அளவிலான செறிவான இறால் வளர்ப்பு, தீவிர மீன்வளர்ப்பு ஆகியவற்றில் தனியார் பங்கேற்பினை ஊக்கமளித்திடும் வகையில் சலுகைகள் அளித்தல்.

ஆ. தரமான மீன்/இறால் குஞ்சுகள் அதிகமாக கிடைப்பதற்கு தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் வசதிகளை புதியதாக உருவாக்குதல்.

இ. மீன் இறங்குதளங்கள், மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் கரையோர வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் பாரம்பரிய மீன்பிடி கலங்களை இயந்திரமயமாக்குதல்.

ஈ. கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கான 'மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்' கடல் மீனவர்களுக்கான 'சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்' மற்றும் மீனவர்களுக்கு 'இலவச வீட்டு வசதி திட்டம்' போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்துதல்.

மற்றும்

உ. மீனவர் கூட்டுறவு சங்கங்களை பலப்படுத்துதல், மீன்பிடி சாதனங்கள் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்கிட ஏழை, மீனவர்களுக்கு முதலீட்டுக் கடன்கள் மற்றும் மானியம் வழங்குதல்.

2. நிர்வாக அமைப்பு :

துறையின் வளர்ச்சித் திட்டங்களை தலைமையிடத்தில் உள்ள மூன்று மீன்துறை இணை இயக்குநர்கள் மற்றும் ஆறு மீன்துறை துணை இயக்குநர்களின் உதவியுடன் மீன்துறை ஆணையாளர் செயல்படுத்துகிறார். சென்னை மற்றும் தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்ட இரண்டு மீன்துறை இணை இயக்குநர்களும், நாகப்பட்டிணம், மதுரை மற்றும் கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்ட மூன்று மீன்துறை துணை இயக்குநர்களும் மண்டல மற்றும் செயலாக்க மீன்துறை உதவி இயக்குநர்களின் உதவியுடன் களப்பணிகளை நிறைவேற்றுகின்றனர். கண்காணிப்புப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும் மீன்துறை பொறியியல் பிரிவு துறையில் பல்வேறு கட்டுமானப் பணிகளை மேற்கொள்கிறது. நாகர்கோவில் மற்றும் தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்ட இரண்டு செயற் பொறியாளர்கள் கட்டுமானப் பணிகளில் கண்காணிப்பு பொறியாளருக்கு உதவுகின்றனர். குளம் குட்டைகளில் மிக நவீனமாக உத்திகளின் மூலம் கூட்டு மீன்வளர்ப்பு முறையை ஊக்குவித்து, உள்நாட்டு மீன்வளர்ப்பை அதிகரிக்க உதவும் பொருட்டு, 12 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இயங்கி வருகின்றன. உவர்நீரில் இறால் வளர்ப்பினை அதிகரிக்க செய்திட 5 உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

3. உள்நாட்டு மீன்வளம் :

3.1. நன்னீர் (உள்நாட்டு மீன்வளம்) :

நன்னீர் மீன்வளர்ப்பிற்கு தரமான மீன்குஞ்சுகளே மிகவும் இன்றியமையாததாகும். மீன்துறை, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் சுமார் 40 மில்லியன் மீன்குஞ்சுகளை (இருப்பு செய்யத்தக்க, நிலையில் உள்ளவற்றை) உற்பத்தி செய்கின்றன. 52,233 ஹெக்டேர் நீர்ப்பரப்பு கொண்ட 56 பெரும் நீர்த் தேக்கங்கள் மீன்வளர்ப்பிற்கென்று எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மீன்வளர்ப்பு மேற்கொள்ள 32,000

ஹெக்டேர் நீர்ப்பரப்பு கொண்ட பாசனக் குளங்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மூலமாக, ஏறத்தாழ 5900 ஹெக்டேர் பரப்பளவுள்ள கிராம குளங்கள்/குட்டைகள், மீன்வளர்ப்பிற்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

3.2. கடல் மீன்வளம் :

தமிழ்நாட்டு கடலோரத்தில், தற்சமயம் 12,090 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி கலன்கள் 34,630 இயந்திரமயமாக்கப்படாத பாரம்பரிய மீன்பிடி கலன்கள் கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் 362 மீன் இறங்குதளங்கள் உள்ளன. சுமார் 2.26 இலட்சம் மீனவர்கள் கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

4. நிதிநிலை :

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பல்வேறு திட்டப் பணிகளின் செயலாக்கத்திற்கு ரூ. 31.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டு திட்டத்தின் நான்காவது ஆண்டான 1995-96 ம் ஆண்டு திட்ட செயலாக்கத்திற்கு ரூ. 1,978.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (பகுதி இரண்டு திட்டச் செலவினமும் இதில் அடங்கும்) திட்டமில்லாத பணிகளுக்குரிய நிதி ஒதுக்கீடு ரூ. 944.73 இலட்சம் ஆகும். இந்த ஆண்டு திட்டத்தில் கடல், உள்நாட்டு மீனளம், கரையோர நீர் உயிரின வளர்ப்பு ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகளை நீக்குவதற்கும் மீனவ சமுதாயத்தின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும் அதிக கவனம் செலுத்தப்படும். 1995-96-ம் ஆண்டில் அமுலாக்கப்படவுள்ள திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

5. நீர்த்தேக்க மீன்வளம் :

5.1. தமிழ்நாட்டில் 56 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இதில் மேட்டூர் நீர்த்தேக்கம் மிகப் பெரியதாகும். நீர்த்தேக்கங்களின் மொத்த நீர்ப்பரப்பு (முழு நீர்த்தேக்க கொள்ளவு உள்ள நிலையில்) சுமார் 52,233 ஹெக்டேர் ஆகும். இந்த நீர்த் தேக்கங்களில் மீன்வளத் துறையும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமும் நல்ல தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, வளர்ந்த மீன்களை பிடிக்கின்றன. இந்த நீர்த்தேக்கங்களின் மீன்பிடிப்பு, நீர்த்தேக்கங்களில் உள்வரும், வெளிச்செல்லும் நீரின் கொள்ளளவு, நீர்ப்பரப்பின் பகுதி, நீர் இருக்கும் காலம், நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படாத மீனினங்கள் இருத்தல் மற்றும் மீன்களை உணவாகக்

கொள்ளும் மீனினங்கள் இருத்தல் போன்ற இயற்கை காரணங்களால் வருடத்திற்கு வருடம் மாறுபடும். 1994-95-ல் (ஜனவரி திங்கள் முடிய) உள்நாட்டு மீன்பிடிப்பு 1,239 டன்களாகும்.

5.2. தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம் :

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு வள்ளலார் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பெரும் மற்றும் சிறுபாசன நீர்நிலைகளில் தீவிர மீன்வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள 22,000 ஹெக்டேர் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள 10,000 ஹெக்டேர் நீர்பரப்புள்ள நீர் நிலைகளில் தீவிரமாக மீன்குஞ்சு இருப்பு செய்யப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் உள்ள மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், இருப்பு செய்யப்பட்டு வளர்ந்த மீன்களை பிடித்து துறையுடன் 50:50 விகித முறையில் மீன்பிடிப்பினை பகிர்ந்து கொள்கின்றனர். 1994-95 ஆம் ஆண்டில் ஜனவரி 1995 முடிய 15.42 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. 65.54 டன் மீன்கள் அறுவடை செய்யப்பட்டு, 32.77 டன் மீன்கள் மீனவர்களுக்கு அவர்களின் பங்காக வழங்கப்பட்டன.

5.3. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடிப்படையாக கொண்டு 12 மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இயங்கி வருகின்றன.

1. தற்போதுள்ள உள்நாட்டு மீன்வளர்ப்போர் மற்றும் சிறு குளங்களின் உரிமையாளர்கள் மத்தியில் நவீன மீன்வளர்ப்பு முறைகளை கையாள ஊக்குவித்து, மீன்பிடிப்பதையே குறிக்கோளாக கொண்டவர்களை சிறந்த மீன்வளர்ப்போர்களாக மாற்றி அமைக்க வழிவகை காணுதல்.

2. குளங்களில் மீன் உற்பத்தியை தீவிரப்படுத்துதல், அரசுத் துறைகளுக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும் நீர்நிலைகள், தூர்ந்துபோன குளங்கள், நீர்தேங்கும் பகுதிகள் மற்றும் கிராமிய குட்டைகள் ஆகியவற்றை தீவிர மீன்வளர்ப்பிற்கு உட்படுத்துதல்.

மேற்கூறிய நீர்ப்பரப்புகள் வெவ்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவற்றை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள், வருவாய்த்துறை

பொதுப்பணித்துறை அல்லது கோவில் குளங்களின் அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து முன்னுரிமை குத்தகை அடிப்படையில், முகமைகளுக்கு மாற்றி பெறுவதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீன்வளர்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. இந்த திட்டத்தின்படி, பஞ்சாயத்து மற்றும் இதர அரசுத் துறைகளிடமிருந்து குளங்கள் மற்றும் குட்டைகள் நீண்டகால குத்தகை முறையில் முகமைகளால் பெறப்பட்டு மீன்வளர்ப்போருக்கு அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போருக்கு கூட்டின மீன்வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. குளம் வெட்டுதல், சீர்ப்படுத்துதல் இடுபொருட்கள் வாங்குவது போன்றவைக்கான கடன் மற்றும் மானியம் ஆகிய நிதி உதவிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்த திட்டத்தின்கீழ் ஜனவரி 1995 முடிய 5,743 மீன்வளர்ப்போருக்கு 5,940 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர்நிலைகள் வழங்கப்பட்டுள்ளது. 5,743 மீன்வளர்ப்போரில் 1,284 நபர்கள் ஆதிதிராவிடர்களும், 25 நபர்கள் மலைஜாதி மக்களும் ஆவார்கள். இதுவரை உள்நாட்டு மீன்வளர்ப்பு முறைகளில் 6,852 மீன்வளர்ப்போருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மீன் உற்பத்தியில் தனியார் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முகத்தான் பட்டா நிலங்களில் புதிய மீன்பண்ணைகளை கட்டுவதற்காக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 20,000 மானியமாக அரசு வழங்குகிறது. மீன்வளர்ப்போருக்கு ரூ. 10.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

5.4. உள்நாட்டு மீன் விற்பனைத் திட்டம் :

தமிழ்நாட்டில் ரூ. 48.24 இலட்சம் செலவில் உள்நாட்டு மீன்விற்பனையை அமுல்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. 1994-95-ம் ஆண்டில் முதல் கட்டமாக கிருஷ்ணகிரி மற்றும் பழனி தாலுக்கா மீனவர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றிற்கு உள்நாட்டு மீன்விற்பனை திட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்காக மாநில அரசு ரூ. 18.48 இலட்சத்திற்கு செலவின அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் இதர விவரங்களாவன :

1.	மீன் இறங்கும் கூடங்கள் கட்டுதல்	3 எண்கள்
2.	குளிர்சாதன ஊர்திகள் (3 டன் வாங்குதல்)	2 எண்கள்
3.	மீன்விற்பனை நிலையங்கள், சிறுகடைகள்	5 எண்கள்

4. குளிர்சாதன பெட்டிகளுடன் கூடிய மிதிவண்டிகள் — 32 எண்கள்
5. மிதிவண்டிகள் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கு — 15 எண்கள்

6. கடல் மீன்வளம் :

6.1. நடுத்தரவகை படகுகள் வழங்குதல் :

கரையோரத்தில் அதிக மீன்பிடி படகுகள் மீன்பிடித்தலை தவிர்க்கும் பொருட்டும், மீனவர்களை ஆழ்கடலில் மீன்பிடித்திட ஊக்குவிக்கும் பொருட்டும் 15-19 மீட்டர் நீளமுள்ள நடுத்தர வகைப்படகு மீனவர்களுக்கு வழங்கும் திட்டம் ஒன்றினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு படகுக்கும் ரூ. 2.00 இலட்சம் வரை மத்திய அரசு மானியம் அளிக்கிறது. இந்த மான்யத் தொகையினை மத்திய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றது. படகின் மீதி விலையினை வங்கிகளின் மூலம் பயனடைவோர் கடனாக பெற வேண்டும். 1994-95-ம் ஆண்டில் அரசு 15 நடுத்தர வகை படகுகள் வாங்க மானியமாக ரூ. 30 இலட்சம் வழங்கியுள்ளது.

6.2. பாரம்பரிய மீனவர்களுக்கு கண்ணாடியிழைப் படகுகள் வழங்குதல் :

கோரமண்டலம் கடற்கரைப் பகுதியில் பாரம்பரிய மீன்பிடி கலனான கட்டுமரங்களைத்தான் பல நூற்றாண்டுகளாக மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த கட்டுமரங்கள் 'அல்பீசியா' என்ற மரத்துண்டுகளால் கட்டப்படுபவையாகும். இம்மரத்துண்டுகள் நீரினை உறிஞ்சி கடலில் நிலையாக மிதக்கும் மீன்பிடிப்பிற்கு பின் கரையேற்றியதும் நீரினை வெளிப்படுத்தி உலர்ந்துவிடும். இந்த தன்மையால் இம்மரக்கட்டைகள் கட்டுமரங்கள் செய்ய பெரும் அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அல்பீசியா மரத்தை தவிர வேறு எந்த மரமும் கட்டுமரம் செய்திட பயன்படுத்தப்படுவதில்லை. ஆதலின் அல்பீசியாவிற்கு மாற்றுப் பொருளை நிர்ணயித்தல் இன்றியமையாததாகும். இவ்வகை மரங்கள் சாதகமான தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் கேரள மாநிலத்தின் சில காடுகளில் மட்டும் வளர்கின்றன. எனவே அல்பீசியா மரக்கட்டைகளால் கட்டப்படும் கட்டுமரத்தின் விலை

ரூ. 25,000 ஆகும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை இந்த கட்டுமரம் மீன்பிடிப்பதற்கு பயன்படாமல் போகும் நிலை ஏற்படுவதால் மீனவர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதிய கட்டுமரம் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒரு கண்ணாடியிழையினால் ஆன கட்டுமரத்தின் ஆயுட்காலம் 15 ஆண்டுகளாக இருந்தாலும், 1 படகின் விலை ரூ. 50,000 என்ற விகிதத்தில் இருப்பதால், மீனவர்கள் கூடுதல் விலை கொடுத்து இப்படகினை வாங்கிட இயலவில்லை. சென்னையிலுள்ள தேசீய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) கண்ணாடியிழை நாட்டுப்படகு வாங்கிட ரூ. 2.5 இலட்சத்திற்கு செலவின அனுமதி அளித்துள்ளது. இவ்வகைப் படகுகளை வாங்கும் மீனவர்கலுக்கு உதவிடும் முகத்தான், முதற்படியாக, 100 படகுகள் வாங்கிட படகின் மொத்த விலையில் 50 சதவிகிதம் மானியத் தொகையாக ரூ. 2.5 இலட்சம் அளித்திட அரசு முன்வந்துள்ளது. நீண்டகால நன்மை பயக்கும் இத்திட்டத்தினால், 15 வருட காலத்தில் தனியொரு மீனவருக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ரூ. 25,000 செலவில் கட்டுமரம் வாங்கிட தேவையான பணம் மிச்சப்படுவதால் ரூ. 75,000 வரை லாபம் ஏற்படும்.

6.3. நாட்டுப் படகுகளை இயந்திர மயமாக்குதல் :

பாரம்பரிய மீனவர்கல் தங்கள் நாட்டுப் படகுகளில் உட்பொருத்தும் இயந்திரம்/வெளிப் பொருத்தும் இயந்திரங்களை வாங்கிட உதவிடும் திட்டம் பல ஆண்டுகளாக, அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உட்பொருத்தும் மற்றும் வெளிப் பொருத்தும் இயந்திரம் வாங்கிட முறையே ஒரு மீனவருக்கு ரூ. 12,000 மற்றும் ரூ. 10,000 வரை மானியமாக வழங்கப்படுகிறது. இந்த இயந்திரங்கள் பாரம்பரிய மீன்பிடி கலன்களான கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களில் பொருத்தப்படுகின்றன. 1987-88-ம் ஆண்டு முதல் 1993 94 வரை 3,889 இயந்திரங்களுக்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகை இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்களை கொண்டு மீனவர்கள் கடலில் அதிக தொலைவு செல்லவும், நீண்ட நேரம் தங்கி பிடித்த மீன்களை நல்ல நிலையில் காத்து கரையிறக்கவும் இயலுகிறது. இயந்திர சக்தியுடன் கூட காற்றின் சக்தியினையும் மீனவர்கள் பயன்படுத்துகின்றனர்.

1994-95 ல் வெளிப் பொருத்தும்/உட்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிட பாரம்பரிய மீனவர்களுக்கு மானியமாக அரசு ரூ. 250 இலட்சத்திற்கு செலவின அனுமதி வழங்கியுள்ளது. இதில் 503 வெளிப் பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரங்கள் பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

6.4. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்கு தளங்களும் :

கடந்த பல ஆண்டுகளாக, கடல் மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நங்கூரமிடவும், பிடித்துவரும் மீன்களை கரையிறக்கவும் ஏதுவாக தமிழ்நாட்டில் 12 இடங்களில் மீன்பிடி இறங்குதளங்கள், மீன்பிடி துறைமுகங்கள் ரூ. 1,733.17 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சென்னையிலுள்ள ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகமும் அடங்கும்.

க்ன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் முக்கிய பணிகளான கிழக்கு அலை தடுப்புச் சுவர் சுற்றுச்சுவர், சுற்றுச்சுவருக்கு உட்பட்ட பகுதியில் மண் நிரப்பும் பணி ஆகியவை முடிக்கப்பட்டுவிட்டன. மீன் ஏலமிடும் கூடம், வலை பழுதுபார்க்கும் கூடம் மற்றும் இதர உள்ளமைப்பு பணிகள் தான் அமைக்கப்பட வேண்டும். மண் நிரப்பிய பகுதியில் நல்லமுறையில் மண்படிமானம் ஆகியபின் மேற்கண்ட பணிகள் 1995-96-ல் எடுத்துக் கொள்ளப்படும். சுமார் 150 மீன்பிடி படகுகள் இத்துறைமுகத்தை பயன்படுத்தி வருகின்றன.

6.5. கன்னியாகுமரி மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் கரையோர வசதிகள் அமைத்தல் :

மீன் ஏலமிடும் மற்றும் சிப்பங்கட்டும் கூடம், வலை பழுதுபார்க்கும் கூடம், சமுதாயக் கூடம், கடல் மீன்படிப் படகுகள் பழுதுபார்க்கும் நிலையம், அணுகுசாலைகள், குடிநீர் மற்றும் மின்வசதி போன்ற கரையோர உள்ளமைப்பு வசதிகள் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகிறது. இத்தகைய வசதிகள் பழையாறு, வாலிநோக்கம், தொண்டி, முட்டம் மற்றும் ஏர்வாடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 1993-94-ம் நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பூம்புகார் மற்றும் வெள்ளப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோடிமுனை மற்றும் வள்ளவிளை ஆகிய இடங்களில் கரையோர வசதிகள் அமைத்திட ரூ. 30.01 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இடங்களில் கட்டுமானப் பணி விரைவில் முடிக்கப்படும்.

6.6. சமுதாயக் கூடங்கள் அமைத்தல் :

1995-96-ம் ஆண்டில் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள பெரியகுப்பம் மற்றும் தேவனாம்பட்டிணம் ஆகிய மீனவ கிராமங்களில்

மீனவர்களின் நன்மைக்காக ரூ. 12.00 இலட்சம் செலவில் 2 சமுதாயக் கூடங்கள் கட்டப்படவுள்ளன.

6.7. சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் வலை பழுதுபார்க்கும் கூடம் அமைத்தல் :

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ. 2.00 இலட்சம் செலவில், ஒரு வலை பழுதுபார்க்கும் கூடம் அமைத்திடும் பணியை சென்னை மீன்பிடி துறைமுக நிர்வாகக் குழு மேற்கொண்டது. இக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு 30 1 1995 அன்று திறக்கப்பட்டது.

6.8. சென்னை மீன்பிடி துறைமுகத்தில் இரண்டாம் நிலை கட்டுமானப் பணிகள் அமைத்தல் :

சென்னை மீன்பிடி துறைமுகத்தின் இரண்டாம் நிலை கட்டுமானப் பணிகளுக்கு மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.50 கோடியாகும். இத்தொகை முழுவதையும் மத்திய அரசே மானியமாக அளிக்கும்.

மூன்று படகு தளங்கள் (Finger Jetties) பாரம்பரிய மீனவர்களுக்கான வலை பின்னும் கூடங்கள் மற்றும் பழுதுபார்க்கும் நிலையங்கள் போன்ற கூடுதல் வசதிகள் இந்த இரண்டாம் நிலை திட்டத்தில் அடங்கும். சென்னை மீன்பிடி துறைமுகம், நிர்வாக பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ள சென்னை மீன்பிடி துறைமுக நிர்வாகக் குழுவே இரண்டாம் நிலைத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும்.

கட்டுமானப் பணி தொடங்கப்படுவதற்கு முன்பு மண் பரிசோதனை, வடிவமைப்பு உட்பட மாதிரி ஆய்வு, ஒப்பந்தப் புள்ளியை இறுதியாக்குதல் போன்ற ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டத்தின் பல்வேறு பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் படிப்படியாக பெறப்படும். 1995-96-ம் ஆண்டின் முதல் காலாண்டில் பணிகள் தொடங்கப்படும்.

இத்திட்டத்தில் அடங்கிய பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இப்பணிகள் அனுமதிக்கப்பட்ட நான்காண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

6.9. கரையிலிருந்து கடலுக்கு தகவல் தொடர்பு வசதி :

நான்கு கடலோர மாநிலங்களில், கரையோரத்திலிருந்து கடல் பகுதிக்கு தகவல் தொடர்பு வசதிகள் ஏற்படுத்த மத்திய நிதியுதவி திட்டங்களின்கீழ் 1.27 கோடி செலவுக்கான அனுமதியை மத்திய அரசின் பெருங்கடல் மேம்பாட்டுத்துறை வழங்கியுள்ளது. ஒவ்வொரு நிலையமும் வாக்கி டாக்கியும் திசை அறி கருவி கொண்ட 125 மீன்பிடி படகுகளுடன் தொடர்பு கொள்ள முடியும். தங்கள் படகுகளில் பொருத்தப்படும் இந்த சாதனங்களைக் கொண்டு மீனவர்களால் 25 கி.மீ. தூரத்திலுள்ள மற்ற படகுகளுடன் தொடர்பு கொள்ள இயலும். தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய இடங்களில் சில படகு உரிமையாளர்களுக்கு வாக்கி டாக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

6.10. பணியாளர் குடியிருப்பு கட்டுதல் மற்றும் மீன் பிடித்தலுக்கு தினசரி டோக்கன் வழங்கும் நிலையங்கள் கட்டுதல் :

மீனவர்களின் பாதுகாப்பிற்கும் மற்றும் அவர்களை எளிதில் அடையாளம் காண உதவிடும் வகையில் அவர்களுக்கு தினமும் மீன்பிடிக்க அனுமதி வழங்கிடும் டோக்கன்களை வெவ்வேறு கரையோரப் பகுதியில் வழங்கும் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது இந்த டோக்கன்கள் தற்காலிகமாக நிறுவப்பட்ட கூடங்களிலிருந்து வழங்கப்படுகிறது. 1995-96-ம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.6.84 இலட்சம் செலவில் ஆறு இடங்களில் அலுவலர் குடியிருப்புகளும், ரூ.0.90 இலட்சத்தில் 3 டோக்கன் வழங்கும் நிலையங்களும் கட்டப்படும்.

7. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு;

7.1. உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

8 மாவட்டங்களை உள்ளடக்கிய 5 உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் தமிழ்நாட்டில் உள்ளன. சனவரி 1995 வரையில் 251 கடன் விண்ணப்பங்கள், 727.73 ஹெக்டேருக்கான நிலப்பரப்பில் இரால் மீன்வளர்ப்பு மேற்கொள்ள கடன் வசதி வழங்கும் பொருட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் 153 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 248.41 இலட்சத்திற்கான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 174.81 ஹெக்டேரில் இரால்வளர்ப்பு மேற்கொள்ளப்படும்.

8. மீனவர் நலவாழ்வு திட்டங்கள்

8.1. மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்;

1975-76-ம் ஆண்டில் மீனவர்களின் துயர் துடைத்திட அவர்களுக்கு இலவச வீடுகள் கட்டி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. 1991-92-ம் ஆண்டிலிருந்து ஒரு வீடு கட்ட தேவைப்படும் தொகை ரூ.17,000/-லிருந்து ரூ.26,000/- ஆக உயர்த்தப்பட்டது. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் கட்டுமானப் பணியை மேற்கொள்ள விருப்பம் தெரிவிக்காத நிலையில், துறையின் பொறியியல் பிரிவு அல்லது அரசு சார்பில்லா நிறுவனங்கள் மூலமோ பணி முடிக்கப்படும். மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய திட்டத்தின் கீழ் 1993-94-ம் ஆண்டு 2000 வீடுகள், 88 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் 14 சமுதாயக் கூடங்கள் கட்ட அரசு ரூ.559.50 இலட்சத்திற்கு செலவின அனுமதி அளித்துள்ளது. 1994-95-ம் ஆண்டு 1853 வீடுகள் கட்ட அரசு மாநில நிதியிலிருந்து ரூ.481.78 இலட்சத்திற்கு செலவின அனுமதி வழங்கியுள்ளது. மிகவும் பிரபலமான இந்தக் திட்டம் 1995-96-ம் ஆண்டிலும் தொடரப்பட்டு 2000 வீடுகள் கட்டப்படவுள்ளன.

திருச்சினாங்குப்பத்தில் 492 வீடுகள் 15 பகுதிகளாக கட்டப்பட்டன. ஒவ்வொரு பகுதியிலும் 3 மாடிகள் தரைமட்டம் மற்றும் 2 மாடிகள் கட்டப்பட்டன. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.2.37 கோடி செலவிடப்பட்டது. இந்த மாடி வீடுகள் மீனவ பயனாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

8.2 மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்;

ஒரு மீனவருக்கு ரூ.10.50 வீதம் ஆண்டுதோறும் வருடாந்திர காப்புறுதி சந்தா, புதுடில்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு செலுத்தப்படுகிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டிற்கு வருடாந்திர காப்புறுதி சந்தாவில் ஒரு மீனவருக்கு 34 பைசா என்று சலுகைத்தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்களை சேர்த்தமையால் இந்தச் சலுகை கிட்டியது. சந்தா தொகை, மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாக ஏற்கப்படுகிறது. மீனவர்களிடமிருந்து எந்த தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. விபத்தினால் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால், தனி மீனவருக்கோ அல்லது அவருடைய வாரிசுதாரருக்கோ ரூ.25,000/- காப்பீட்டுத்தொகை வழங்கப்படுகிறது. பகுதி ஊனமாக கண்பார்வை, கால் அல்லது கை போன்ற உறுப்புகள் இழக்கப்படின், ரூ.12,500/- காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. 2,48,404

1995 மே 3]

கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் 1994-95-ம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 1353 மீனவ குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனடைந்துள்ளன. 31-1-1995 முடிய ரூ.2.05 கோடி காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 1990-1994 முடியவுள்ள ஐந்தாண்டு காலங்களில் 34 மீனவர்கள் இலங்கை கடற்படையினால் சுடப்பட்டு இறந்துள்ளனர். 164 படகுகள் தாக்கப்பட்டு, 17 படகுகள் கடலில் மூழ்கின. 127 மீனவர்கள் சுடப்பட்டு காயமடைந்தனர்.

1995-ம் ஆண்டில் மூன்று மீன்பிடி விசைப்படகுகள் தாக்கப்பட்டு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதனால் ஒரு மீனவர் இறந்தார். மற்ற நால்வர் குண்டடிப்பட்டு, இராமநாதபுரம், இராமேஸ்வரம் மற்றும் அறந்தாங்கியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். நமது மாண்புமிகு முதல் அமைச்சர், மீனவர்கள் கொடூரமான முறையில் சுட்டுக்கொல்லப்படுவதற்கு, மத்திய அரசிற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதன் விளைவாக, மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கை, அரசுடன் பேச்சு வார்த்தை தொடங்கியுள்ளது.

மத்திய அரசு மீனவர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு மீனவருக்கான விபத்து காப்புறுதித் தொகையினை ரூ.25,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்த உத்தேசித்துள்ளது. கூடுதல் சந்தாத் தொகைக்கான செலவினத்தை ஏற்க இயலுமா என்று மத்திய அரசு மாநில அரசின் கருத்தைக் கேட்டுள்ளது. இதற்கான இசைவை மாநில அரசு மத்திய அரசிற்கு மே 1994-ல் தெரிவித்துள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் பதில் கிடைக்கப்பெற்றவுடன் காப்புறுதித் தொகை ஒரு மீனவருக்கு ரூ.50,000/- ஆக உயர்த்தப்படும்.

இலங்கையில் இனக்கலவரம் தொடங்கி 1983-ம் ஆண்டிலிருந்து தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு வருகிறார்கள். சில தாக்குதல்களில் மீனவர் படகுகள் கைப்பற்றப்பட்டன. சில நிகழ்வுகளில் இலங்கை கடற்படையினால் மீனவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். இம்மாதிரியாக சிறைப்படுத்தப்பட்ட மீனவர்கள் அடையாளம் கண்டு, அவர்களை புதுடில்லியில் உள்ள இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகம் மற்றும் கொழும்பில் உள்ள இந்திய துதரகத்தின் மூலமாக இலங்கை கடற்படையினரிடமிருந்து மீட்டுவதற்கு துறை அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அவ்வாறு மீட்கப்பட்ட மீனவர்கள் வரவேற்கப்பட்டு அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவ்வாறு திரும்பும் மீனவர்கள் தாக்குதலில் குண்டடிப்பட்டால், அவர்கள் அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுகின்றனர். காயமடைந்த மீனவர்களுக்கு சிறப்பு சிகிச்சை தேவைப்படின் அவர்களை சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல துறை ஏற்பாடு செய்கிறது. மீனவர் இறக்க நேரிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு தகவல் அளித்து வருவாய்த்துறையிடமிருந்து சட்டபூர்வமான வாரிசுச் சான்றிதழை துரிதமாகப்பெற உதவுகிறது. இந்தச் சான்றிதழ் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகை பெறுவதற்கு மிகவும் தேவையான ஒன்றாகும். விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ்வராத மீனவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது. 1991 ஜனவரி முதல் 1995 ஜனவரி முடிய முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.40,37,500/ வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் ஆந்திர மீனவர்களிடையே தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுவதை தவிர்க்கும் பொருட்டு தமிழகத்தில், இரண்டு மாநில அலுவலர்களும் பங்கேற்கும் வகையில் இரண்டுக்கு குழுக்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதே போன்ற குழு ஆந்திர மாநிலத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்களாக இரண்டு மாநிலங்களையும் சேர்ந்த மீன்துறை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மீனவர் பிரதிநிகள் உள்ளனர். இக்குழுக்களைத் தவிர நஷ்ட ஈடு நிவாரண தீர்வுக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, தாக்குதல்களில் இறக்கும் மீனவர்களுக்கு அல்லது அவர்களின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு வழங்கப்படும் நஷ்ட ஈடு குறித்த விடயத்தை நிர்வகிக்கிறது.

8.3 சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீன்பிடிப்பு பருவகால தொழிலே, சாதகமான வானிலையுள்ள மாதங்களில் மட்டுமே கடலில் மீன்படிக்க இயலும். பருவ காற்று தீவிரமடைந்து கடல் கொந்தளிப்பு இருக்கும் மாதங்களில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிப்புக்கு செல்ல இயலாது. மீனவர் நலனை பேணுவதற்காக, தொழில் செய்ய இயலும் மற்ற எட்டு மாத காலங்களில் அவர்களிடமிருந்து சேமிப்புத் தொகையை பெற்று அந்த தொகைக்கு ஈடான தொகையை மாநில அரசும் மத்திய அரசும் வழங்கும் நிதியைக் கொண்டு தொழில் வாய்ப்பு இல்லாத நான்கு மாதங்களில் மீனவர்களுக்கு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்து ஒரு நாளைய சேமிப்பு ரூ.1.50 என்ற விகிதத்தில் மாதம் ஒன்றுக்கு, ஒரு நபருக்கு ரூ.45/- வீதம் வருடத்தில் 8 மாதங்களுக்கு வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ.360/ உடன், மத்திய மாநில அரசுகளால் அதே அளவு தொகை வழங்கப்படுகிறது. மொத்தத் தொகையான ரூ.1080/- (ரூ.360 X 3) இத்திட்டத்தில் சேர்ந்த ஒவ்வொரு மீனவருக்கும் மாதத்திற்கு ரூ.270/- வீதம் மீன்படி காலமில்லாத 4 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. 1994-95-ம் ஆண்டில் மீன்பிடி காலங்கள் இல்லாத 4 மாதங்களுக்கு நிவாரணத் தொகையாக 9.75 கோடி ரூபாய் 1,35,284 மீனவர்களுக்கு அரசு வழங்கியுள்ளது.

8.4 உயர் வேக டீசல் எரியெண்ணெய் மீதான மத்திய ஆய்த் தீர்வை திருப்பியளித்தல்

இத்திட்டத்திற்கு, மத்திய அரசு 80 சதவீதம் பங்குத்தொகையாக மத்திய அரசு ரூ.42.00 இலட்சத்திற்கு செலவிந ஒப்புதல் அளித்துள்ளது. 20 சதவீதம் மாநில அரசின் பங்காகும். மீன்படி விசைப்படகுகளில் பயன்படுத்தப்படும் டீசல் எரியெண்ணெயில் ஒரு லிட்டருக்கு 0.35 பைசா என்ற விகிதத்தில் மானியம் அளிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட டீசல் நிலையங்களிலிருந்து எரியெண்ணெய் பெறும் அனைத்து விசைப்படகுகளுக்கும் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது.

8.5 தமிழக கடலோர பகுதியில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டம்

21-3-1994 அன்று நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கடலோரப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை உருவாக்க அரசு முடிவெடுத்தது. இப்பணி அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

1. எல்லா பகுதிகளிலும் ஏற்புடைய சூழ்நிலையை ஏய்திட ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் முடிவு எடுக்கும் நடைமுறையை அளித்தல்.

2. கரையோர பகுதிகளில் பயன்படும்/பயன்படக் கூடிய பகுதிகளை கண்டறிதல்.

3. திட்டத்தை முறையாக, கூர்ந்து கவனித்தல் உட்பட திட்டமிடுதல் மற்றும் அமுலாக்கத்திற்கு தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அணுகுமுறைகளை கையாளுதல்.

4. இயற்கை வாய்ப்பு வளங்கள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் போன்றவற்றில் முன்னேற்ற நடைமுறைகளை ஏற்படுத்துதல்.

5. பெருங்கடல் செய்தி நிலையம் ஒன்றை அமைத்தல்.

6. சூழலியல் தாழ்வடைதலுக்கு முக்கிய காரணங்களை வறுமை மற்றும் வாழ்க்கை பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு வறுமையை நீக்கிட நீண்டகால முதலீடுகளை அதிகரித்தல்.

7. பெரும் விபத்து நிகழும் காலங்களில் அதனை திறம்பட சமாளித்திட உள்ளாட்சி அமைப்புகளின் திறமையை அதிகரித்தல்.

ஒருங்கிணைந்த கடலோர மேம்பாட்டுத் திட்டத்தின் செயலாக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை விவரம் பின்வருமாறு:

விவரங்கள்	ரூபாய் மில்லியனில்
கடலோர பகுதி சார்ந்த தொழில்கள்	200.00
மனித குடியேற்றம்	100.00
போக்குவரத்து மற்றும் தகவல்	100.00
விபத்துக்கள் தடுப்பு	100.00
சுற்றுலா	50.00
பயிற்சி	100.00
சில்லறைச் செலவினங்கள்	100.00
மற்ற இனங்கள்	250.00
மொத்தம்	1000.00

1995-96-ம் ஆண்டிலிருந்து, இத்திட்டம் 10 ஆண்டு காலத்திற்குள் அமுல்படுத்தப்படும். இத்திட்டம் பல்வேறு பகுதிகளில் நல்ல பயன்களை விளைவித்து. தமிழ்நாட்டின் கடலோர மண்டலங்களில் தன்னிறைவு நிலையை ஏற்படுத்தும்.

8.6 மீனவர் கூட்டுறவு சங்கங்கள்

மீனவர் கூட்டுறவு சங்கங்கள், மீனவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டில் தொடர்ந்து முக்கிய பங்கு வகித்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் 2,35,063 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களை உறுப்பினர்களாக கொண்ட 721 பதிவு செய்யப்பட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. 32,246 பெண் உறுப்பினர்களை கொண்ட 88 கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு நிதி உதவியாக பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு பங்கு மூலதன உதவியினை மீன்வர் கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் வசதி பெறுவதற்கான கொள்திறனை மேம்படுத்தும் நோக்கத்தில் வழங்கப்படுகின்றது.

9. தமிழ்நாடு மாநில முதன்மை மீனவர் கூட்டுறவு இணையம்;

9.1 மீன்துறை ஆணையாளரை தலைவராக கொண்ட தமிழ்நாடு மாநில முதன்மை மீனவர் கூட்டுறவு இணையம் மீன்வர் கூட்டுறவு சங்கங்கள் பலப்படுத்த உதவுகின்றது. இந்த இணையத்திற்கு ஒரு நிர்வாக குழு உண்டு. இணையத்தின் மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக 5 மேலாளர்கள் சென்னையை தலைமையிடமாக கொண்டு பணியாற்றுகின்றனர். மாவட்ட அளவில் நிர்வாக அலுவலர்களாக மீன்துறை உதவி இயக்குநர்களும், விரிவாக்க அலுவலர்களாக மீன்துறை ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர். இணையம் தற்போது தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திந் நிதியுதவியுடன் கடலோர ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துகிறது.

9.2 ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்.

1994-95-ம் ஆண்டில் 992 மீனவ பயனாளர்களைக் கொண்ட 305 குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1994-95-ல் இத்திட்ட செயலாக்கத்திற்கென அரசு முதன்மை மீன்வள கூட்டுறவு இணையத்திற்கு ரூ.282.252 இலட்சம் ஒப்பளித்துள்ளது. நாகை காயிதே மில்லத், இராமநாதபுரம் மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள 21 மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள், கட்டுமரிம், வள்ளம், இயந்திரங்கள், வலைகள் ஆகியவற்றை வாங்க கடன், மானியம் மற்றும் பங்கு மூலதனமாக அரசு ரூ.1,13,13,000/- வழங்கியுள்ளது.

1995-96-ல் 1125 பயனாளர்களுக்கு 375 மீன்படி உபகரணங்கள் வாங்கி உதவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள பகுதி I திட்டம் தவிர்த்து மற்றமொரு ஒருங்கிணைந்த கடல் மீனை மேம்பாட்டுத் திட்டத்தின் பகுதி ஐஐ திட்டம் ஒன்று ரூ.4822.90 இலட்சம் செலவில் 1995-96-ல் நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்த பகுதி II திட்டத்திற்கான நிதி ஆதாரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

ரூபாய் இலட்சத்தில்

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடம் கடன் வாங்குவது.	4419.00
தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு சில இனங்களுக்கு பெறப்படும் மானியம்	213.00
பங்கு மூலதனம் மற்றும் மானியத்திற்கு மாநில அரசின் பங்கு	190.90
மொத்தம்	4822.290

10. விரிவாக்க கல்வித் திட்டம்:

10.1 விரிவாக்க திட்டத்தின் கீழ் மாவட்ட மாநில அளவில் கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மீனவர்களுக்கு வெவ்வேறு திட்டங்களில் கீழ் உதவி வழங்கும் விவரங்கள் உள்ளிட்ட அனைத்து மீனளத்துறை செய்திகளும் விவரங்களும் அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

10.2 மீனவர் நலத்திற்கான மாவட்ட அளவிலான கருத்தரங்குகள்

கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமுதாயத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை கணிக்கவும் அவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்திடவும், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்களால் 1995 95கூஷீல் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாவட்டக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

1995 மே 3]

1. செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்	பொன்னேரி	06-09-1994
2. புதுக்கோட்டை மைவட்டம்	மணமேல் குடி	16-09- 1994
3. கன்னியாகுமரி மாவட்டம்	நாகர்கோவில்	20-09-1994
4. தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்.	கடலூர்	20-10-1994
5. நாகை காயிதே மில்லத் மாவட்டம்	மயிலாடுதுறை	05-11-1994
6. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்.	மரக்காணம்	17-11-1994

இக்கருத்தரங்களில் பங்கேற்றிட மீனவர்களுடன், மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளில் அலுவலர்கள் அழைக்கப்பட்டனர். மீனவர்களின் தேவைகளை கேட்டறிவதற்கும், அந்த இடத்திலேயே தகுந்த முடிவுகள் எடுக்கவும், மீனவர்களின் பிரச்சனைகளான வீடுகட்ட நிலத்திற்கு பட்டா வழங்குதல், போக்குவத்து வசதிகள் ஏற்படுத்துதல், நியாயவிலைக் கடைகள் அமைத்தல், பள்ளிகளை மேல்நிலை பள்ளிகளாக மாற்றுதல், தண்ணீர் வசதி, இணைப்புச்சாலைகள் அமைத்தல் மீன்வசதி ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து உடனடியாக முடிவுகளை அறிவிப்பதற்கு மாவட்ட கருத்தரங்குகள் பேருதவியாக அமைத்தன.

11. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

11.1 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், 1974ஆம் ஆண்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.500.00 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.435.52 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ள பணிகளும், அவற்றின் முன்னேற்றமும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

11.2 கடல் மீன்வளம்

ஆழ்கடல் மீன்படிப்பு:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. 1994-95-ம் ஆண்டு, ஜனவரி 1995 முடிய 43.56 டன் இறால் மற்றும் 126.00 டன் மீன்படிக்கப்பட்டு ரூ.135.52 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

11.3 உள்நாட்டு மீன்வளம்:

நீர்த்தேக்கங்கள்:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில் உள்ள 8 நீர்த்தேக்கங்களில் முறைப்படியாக மீன்குஞ்சிகள் இருப்பு செய்யப்பட்டு பங்கு மீன்பிடிப்பு முறையில் உள்ளூர் மீனவர்களை பணியமர்த்தி மூன்றில் ஒரு பங்கு மீன்களை அவர்களுடைய பங்காக அளித்து மீனிபிடிப்பு நடத்தப்படுகிறது. 1994-95-ம் ஆண்டு ஜனவரி 1995 திங்கள் முடிய 387.90 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.68.04 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

11.4. மீன்குஞ்சு உற்பத்தி

சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் ஆகிய இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளும் அமராவதி, ஆழியார், திருமூர்த்தி மஞ்சாளார், மற்றும் பாலார்-பொறந்தலார் ஆகிய ஐந்து இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளையும் இக்கழகம் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலல் இருப்பு செய்யப்படுவதுடன், மீன்துறை-மீன்வளர்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தனியார் மீன்வளர்போருக்கும் வழங்கப்படுகிறது.

11.5 குளங்களில் மீன்வளம்:

தீவிர மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தின்கீழ் 76 பெரிய சிறிய குளங்களை மீன்வளர்ச்சிக் கழகம் பராமரித்து வருகிறது 1994-95-ம் ஆண்டில் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.6.70 இலட்சம் வருவாய் ஈட்டுப்பட்டுள்ளது.

11.6 மீன் பதனிடுதல்:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் 6 பனிக்கட்டி நிலையங்களையும், 4 மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. பவானிசாகர் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் நீங்கலாக கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பனிக்கட்டி நிலையங்களையும் பதப்படுத்தும் நிலையங்களையும் தனியார் தொழில் முனைவோர்க்கு குத்தகைக்கு விடப்பட்டு ரூ.24.60 இலட்சம் குத்தகைத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

11.7 டீசல் விற்பனை நிலையங்கள்:

நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டுள்ள 5 கூடுதல் டீசல் சில்லரை விற்பனனை நிலையங்களையும் சேர்த்து, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மீனவர்கள் மற்றும் மீன்படி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் மீன்படி துறைமுக வளாகம் மற்றும் இறங்கு தளங்களிலல் 15 டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் இயக்கி வருகிறது. 1994-95-ம் ஆண்டு ஜனவரி 1995 முடிய 26697 கிலோ லிட்டர் டீசல் மற்றும் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.23.96 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

11.8. மீன் விற்பனை

இக்கழகம் சென்னை நகரம், மதுரை, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்களில் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் மற்றும் வறுத்த மீன் விற்பனை செய்து வருகிறது. 1995-95-ம் ஆண்டில் 1995 ஜனவரி திங்கள் முடிய 495 டன் மீன்கள் ரூ.143.69 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

11.9. மீன்வலை தயாரித்தல்:

இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன் வலை தயாரிக்கும் திறனுடன் மீன்வலை தயாரிப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 1994-95-ம் ஆண்டில் ஜனவரி 1995 திங்கள் முடிய 41.40 டன் நைலான் வலையும் எச்.டி.பி.இ. வலையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு ரூ.78.45 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

11.10 நீலங்கரை இறால் மீன்குஞ்சு பொறிப்பகம்:

இக்கழகம் சென்னைக்கு அருகில் உள்ள நீலங்கரையில் ஆண்டிற்கு 16 மில்லியன் உற்பத்தி திறன் உடைய இறால் மீந்குஞ்சு பொறிப்பகம் ஒன்றை நடத்தி வருகிறது. 1994-95-ம் ஆண்டில் ஜனவரி 1995 திங்கள் முடிய 4.10 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்திச் செய்யப்பட்டு ரூ.16.29 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

11.11 உலர் மீன் கிடங்கு, தூத்துக்குடி:

உலர் மீன் ஏற்றுமதியாளர்களின் நலன் கருதி, கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர் மின் கிடங்கை இக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வரிகுறது. 1994-95-ம் ஆண்டில் ஜனவரி 1995 திங்கள் முடிய ரூ. 0.80 இலட்சம் வாடகை வசூலிக்கப்பட்டுள்ளது.

11.12. வ.உ.சி. மாவட்டத்தில் தருவைக்குளத்தில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழிற்பேட்டை அமைத்தல்:

அரசிடமிருந்து அனுமதி பெற்று வல்லுநர்களால் அளவைப்பணி முடிக்கப்பட்டு விட்டது. வரைபடம் தயாரித்தல், மற்றுமி திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. புல், புதர் செடிகள் ஆகியவற்றை நிலத்திலிருந்து நீக்கும்பணி நடைபெற்று வருகிறது. மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

11.13 இறால் வளர்ப்பில் மீனவர்களுக்கு பயிற்சியளித்தல்:

விஞ்ஞான ரீதியில் இறால் வளர்ப்பு மேற்கொள்ள இறால் வளர்ப்போருக்கு பயிற்சியளிக்க தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மத்திய அரசின் முழு மானிய உதவியுடன் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காரங்காடு என்னுமிடத்தில் பயிற்சி நிலையத்தை நடத்துகிறது.

1994-95-ல் 2 குழுக்களில் 26 இறால் வளர்ப்போர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 80 இறால் வளர்ப்போருக்கு பயிற்சியளிக்கும் வகையில் இந்த பயிற்சி திட்டம் செயல்படும். பயிற்சிக்கான செலவினம் மத்திய, மாநில அரசினால் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

11.14. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிதி நிலை செயலாக்கம்:

1994-95-ம் நிதியாண்டில் 1995 ஜனவரி திங்கள் முடிய தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ரூ. 517.02 இலட்சம் மொத்த வருவாயாக ஈட்டியுள்ளது. அதில் ரூ. 511.71 இலட்சம் செலவினம் ஆகும். நிகர வருவாயாக ரூ. 5.31 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

1995-96-ம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டங்கள்:

1995-96ஆம் ஆண்டில் கீழ்காணும் புதிய திட்டங்கள் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர்	மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்)
1. பாரம்பரிய மீனவர்களுக்கு 100 கண்ணாடியிழை கட்டுமரங்கள் 50 விழுக்காடு மானியத்துடன் வழங்குதல்.	25.00
2. இராமநாதபுரம் மாவட்டத்தில் 6 பணியாளர் குடியிருப்புகளும் 3 தினசரி மீன்பிடித்தல் டோக்கன் வழங்கிட சிறு அறைகளும் கட்டுதல்.	7.74
3. ஒரு 'ப்பி.ஏ.சி.ட்டி' கணிப்பொறி மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox) வாங்குதல்	2.50
4 தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் பெரியகுப்பம் மற்றும் ரேவனாம்பட்டினம் கிராமங்களில் சமுதாயக்கூடங்கள் கட்டுதல்	12.00
மொத்தம்	47.24

தற்போதைய அரசு பதவி ஏற்றபின் மீனவர்களுக்கு வழங்கியுள்ள வசதிகளும், சலுகைகளும்.

மீன்வளத்தையும், மீனவர்கள் வாழ்க்கைத் தரத்தையும், மேம்படுத்திட மீன்வளத்துறையில் செயல் வேகம் முடுக்கி விடப்பட்டு மனிதாபிமான அணுகுமுறையில் பின்வரும் முக்கியமான வசதிகளும், சலுகைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

1. தனியார்கள் மீன்பண்ணை கட்டி மீன் குஞ்சு உற்பத்தி செய்ய மொத்தம் செலவினத்தில் 25 சதவீதம் அதாவது ரூ. 25,000-க்கு மிகாமல் மானியமாக வழங்கப்படுகிறது.

2. 1991-ம் ஆண்டில் தஞ்சாவூர், வ.உ. சிதம்பரனார் மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்களிலும், 1992ல் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலும், 1993-ல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் ஐந்து உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன.

3. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் வ.உ.சி. மாவட்டத்தில் தருவைக்குளத்தில் நீர் வாழ் உயிரின வளர்ப்பு தொழிற்பேட்டை அமைக்க 7.20 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

4. பாக் ஜலசந்தி கடற்பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு உவர் நீர் இறால் தொழிற்பேட்டை ரூ. 12.75 கோடி செலவில் அமைக்க திட்ட முதலீட்டுக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5. 64 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30,000 மூங்கில் கூடைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 10,000 மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு அலுமினியப் பாத்திரங்களி வழங்கப்படவுள்ளன.

6. மீனவ, அங்காடிக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய ஏதுவாக 2.5 டன் அளவுடைய சிறிய ஊர்தி ஒன்று சிகப்துல்லாமனை மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

7. மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கென பங்கு மூலதன உதவியாக ரூ. 30.00 இலட்சம் 90 மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

8. முகத்துவாரத்தின் அருகில் உள்ள 29 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் கடல் கூட்டுறவு சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் 6711 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

9. சென்னை அருகிலுள்ள இராயபுரத்தில் ரூ. 5.00 இலட்சத்தில் ஒரு சமுதாயக் கூடமும், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் பெரிய குப்பம் மற்றும் தேவனாம்பட்டினத்தில் இரு சமுதாய கூடமும் ரூ. 12.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

10. சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ. 2.00 இலட்சம் செலவில் ஒரு வலை பழுதுபார்க்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

11. சென்னை மீன்பிடி துறைமுகத்தில் இரண்டாம் நிலை விரிவாக்கப் பணி ரூ. 8.50 கோடி செலவில் அமைக்கப்படும்.

12. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திலும், கோட்டைப்பட்டினம், பூம்புகார், வெள்ளப்பள்ளம், கோடிமுனை மற்றும் வள்ளவினை கிராமங்களிலும் உள்ளமைப்பு வசதிகள் அமைக்க ரூ. 71.01 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

13. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினத்தில் ஓர் 'டி' ஜெட்டி ரூ. 54.00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

14. கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் முக்கிய பணிகள் முடிக்கப்பட்டது. தற்போது சுமார் 150 படகுகள் இத்துறைமுகத்தை பயன்படுத்தி வருகின்றன.

15. உள்நாட்டு மீன் விற்பனை திட்டத்திற்கு அரசு ரூ. 18.48 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

16. மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மீனவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் மாத உதவித் தொகையும், கடல் பயணப்படியும் முறையே ரூ. 100-லிருந்து ரூ. 150 ஆகவும் ரூ. 0.75 பைசாவிலிருந்து ரூ. 1.25 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

17. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் அரசு மூலம் வழங்கப்பட்ட மீன்பிடி படகுகளுக்குரிய நிலுவைத் தொகை ஆக மொத்தம் 735.42 இலட்சம் ரூபாயை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

18. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் க ழகம் வங்கிகள் மூலமாக மீன்பிடி படகுகள் வாங்க மீனவர்களுக்கு கடனாக வழங்கப்பட்ட 492.88 இலட்சம் ரூபாயை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

19. இலங்கை கடற்படையின் தாக்குதலுக்குட்பட்டு அல்லலுற்ற, ஆனால் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் வராத மீனவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து 1991 சனவரி முதல் 1995 சனவரி முடிய ரூ. 40,37,500 வழங்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

20. தமிழ்நாடு மற்றும் ஆந்திர மீனவர்களுக்கிடையே தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுவதை தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்திலும் ஆந்திரப்பிரதேசத்திலும் இரண்டடுக்கு குழுக்கள் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தற்போது மீனவர்களிடையே தாக்குதல்கள் குறைந்துள்ளதைக் காணலாம்.

21. ஆழ்கடல் மீன்பிடிப்பினா் ஊக்குவிக்கும் பொருட்டு அரசு 15 நடுத்தர வைகப் படகுகள் வாங்க மானியமாக ரூ. 30 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

22. 100 பிளைவுட்டினாலான கரையேறும் படகுகளுக்கு மானியமாக ரூ. 22.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

23. பாரம்பரிய மீனவர்களுக்கு 100 கண்ணாடியிழை கட்டுமரங்கள் வாங்கிட படகின் மொத்த விலையில் 50 சதவீதம் மானியத் தொகையாக ரூ. 25.00 இலட்சம் வழங்கிட அரசு உத்தேசித்துள்ளது.

24. ரூ. 4.50 கோடி செலவில் 5 ரோந்து படகுகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்திட அரசு இசைந்துள்ளது.

25. பாரம்பரிய மீனவர்கள் தங்கள் நாட்டுப் படகுகளில் 3893 உட்பொருத்தும்/வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானியமாக ரூ. 389.38 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்அளது.

26. தமிழ்நாடு பிற்பட்டோர் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மீன் விற்பனைக்கு தேவையான மூலதனத்தை 18,898 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ. 1,000 வீதம் ரூபாய் 56.65 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

27. செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள திருச்சினாங்குப்பத்தில் 492 தொகுப்பு வீடுகளை ரூ. 2.37 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயனாளர்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

28. மீனவர்களுக்கு ரூ. 1274.78 இலட்சம் செலவில் 4903 வீடுகள் இலவசமாக கட்டித் தர அரசு ஒப்புதல் தந்துள்ளது. ஒரு வீடு கட்டி தருவதற்கான செலவினத்தை வீடு ஒன்றுக்கு ரூ. 17,000 லிருந்து ரூ. 26,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

29. டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா மாதிரி மீனவர் கிராம அமைப்புத் திட்டத்தின் கீழ் 3,050 வீடுகளும் 95 ஆழ்கிணறு குழாய்கள், 20 சமுதாயக் கூடங்கள் அமைக்க அரசு ஒப்புதல் தந்துள்ளது.

30. கடலில் மீன்பிடிக்கச் செல்லும் ஒவ்வொரு மீனவரின் உயிருக்கும் பாதுகாப்பு அளிக்க ரூபாய் ஒரு இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

31. இராமேஸ்வரம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் தொடர்பு முனை (Nodal Points) மையங்களை ரூ. 2.26 இலட்சத்தில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

32. நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் இரு கரையோர நிலையங்கள் மிக உயரிந்த அலை வரிசை ரேடியோ தொலைபேசி ரூ. 3175 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இரு நிலையங்களுக்கும் வாக்கி டாக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்ற வசதியை சென்னையிலும் ஒரு நிலையம் அமைத்திட மைய அரசின ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

33. கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 1991-ம் ஆண்டு முடிய ஒவ்வொரு மீனவரிடமும் மாதம் ரூ. 10 வீதம் 9 மாதங்கள் வசூலிக்கப்பட்டு, அதற்கு இணையாக மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 90 ம் சேர்த்து மொத்தம் ரூ. 180-ஐ மாதம் ரூ. 60 வீதம் 3 மாதங்களுக்கு திருப்பித் தரப்பட்டது. இதுவரை 76,610 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

1992 முதல் மாதம் முதல் மீனவர் ஒருவருக்கு ரூ. 45 வீதம் மீனவரிடமிருந்து 8 மாதங்கள் வசூலிக்கப்பட்டு, இதற்கு ஈடாக மத்திய மாற்றும் மாநில அரசுகளால் ஈடான தொகை வழங்கப்படுகிறது. மொத்தம் ரூ. 1,080-ஐ மீன்பிடி இல்லாத 4 மாதங்களில் ரூ. 270 வீதம் ஒரு மீனவருக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில் 1,35,284 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

34. மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தில் கடலுக்குச் செல்லும் மீனவர் விபத்தினால் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால், முதலில் ரூ. 21,000 காப்புறுதி தொகையாக வழங்கப்பட்டது. அதன் பின் இத்தொகை ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டது. மேலும் இதனை ரூ. 50,000 ஆக உயர்த்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 2,48,404 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இதுவரை 1,353 மீனவ குடும்பங்களுக்கு ரூ. 2.05 கோடி காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

35. 20 மீட்டர் நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் டீசல் எரியெண்ணெய் மீதான மத்திய ஆயத் தீர்வையை திரும்பப் பெற்று ஈடுசெய்து கொள்ள ரூ. 52.00 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 1,683 படகுதாரர்கள் பயனடைந்துள்ளனர். 71,96,791 லிட்டர் டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

36. 1994-95-ம் ஆண்டு தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள தாண்டவராயகோழகன்பேட்டை மற்றும் கிள்ளை மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

37. பள்ளி இறுதி தேர்விலும் (10-ம் வகுப்பு), ப்ளஸ் 2 தேர்விலும் (12-ம் வகுப்பு) கூடுதல் மதிப்பெண்களை பெறுகின்ற மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்/மாணவியருக்கு தலா ரூ. 500 வீதம் 1985-86-ம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய அரசு அத்திட்டத்தை மறு பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா மீனவ மாணவ/மாணவிகளின் கல்வி-சிறப்பு பரிசு திட்டத்தின் கீழ், பள்ளி இறுதித் தேர்வில் (10-ம் வகுப்பு) கூடுதல் மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறும் மாணவர்/மாணவிகளுக்கு தலா ரூ. 3,000 வீதமும், ப்ளஸ் 2 (12-ம் வகுப்பு) தேர்வில் வெற்றி பெறும் மாணவர்/மாணவிகளுக்கு தலா ரூ. 5,000 வீதமும் ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது.

38. ஒருங்கிணைந்த கடல் மீன் வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இதுவரை செங்கை-எம்.ஜி.ஆர்., நாகை-காயிதே மில்லத், இராமநாதபுரம், வஉசி. மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச்

சார்ந்த 32 கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த மீன்பிடி உபகரணங்கள் இலாலாத 1,903 மீன்பிடி தொழிலாளர்களுக்கு 446 கட்டுமகம், 168 வள்ளம், 614 இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் வாங்க 25 சதவிகித மானியத்துடன் 403 இலட்சம் ரூபாய் இதுவரை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

39. இலங்கை கடற்படையின் தாக்குதலுக்கு உட்பட்டு, இதனால் அந்நாட்டின் பிணை வைக்கப்பட்ட இராமேஸ்வரம், நாகப்பட்டினம் மீனவர்களை இயந்திர பழுதின் காரணமாக அந்நாட்டு கடற்கரையில் ஒதுங்கிய மீன்பிடி விசைப்படகுகளையும், இலங்கையிலுள்ள இந்திய தூதுவரின் மூலம் படகுகளையும், மீனவர்களையும் தொடர் நடவடிக்கை எடுத்து தாயகம் திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

40. மீன் உற்பத்தியில் தனியார் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முகத்தான் பட்டா நிலங்களில் புதிய மீன் பண்ணைகளை கட்டுவதற்காக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 20,000 மானியமாக அரசு வழங்குகிறது. மீன் வளர்ப்போருக்கு ரூ. 10.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

41. கடலோர மாவட்ட மீனவர் கிராமங்களில் மீனவர்கள் கோரிக்கையின் அடிப்படையில் மீன்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பிற துறை அலுவலர்களை அணுகி தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

42. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கடலோர மீனவ 160 கிராமங்களில் 6.60 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS